2734

T. N. L. A. Debates

OFFICIAL REPORT
VOL: LIII NO: 2 and 3
October 31 and November
1983

C

D
V211,31' N83
N83.53.243
136059

2734

# தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT


திங்கட்கிழமை 1983 அக்டோபர் 31 - தொகுதி LIII எண். 2

**Monday 31st October 1983—Volume LIII No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

**Legislative Assembly Department, Fort st. George, Madras-600009**

விலை: ரூ. 3-50 காசுகள்)

(Price Rs. 3-50 paise)

D
Y211,31 N83
N83.53-243
136059

## உள்ளடக்கம்.

**31-10-1983.**

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்:
   - (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் — 133—.68
   - (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
2. தகவல் கோரல்:
   - உறுப்பினர் உண்ணாவிரதம் இருப்பது. — 168
3. ஒத்திவைப்புத் தீர்மானம்:
   - காவல் துறையினர் மதுரை ஆதீன மடத்தில் சோதனையிட்டது. — 168—182
4. அறிவிப்புகள்:
   - (அ) அமைச்சரவையின் மிது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம். — 182—183
   - (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், (ஆ.இ) — 190—191
   - (இ) நிதி ஒதுக்க (எண்.4) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ) — 192
   - (ஈ) நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ) — 193
   - (உ) நிதி ஒதுக்க (எண்.6) சட்ட முன்வடிவு 198 (ஆ.இ) — 194
   - (ஊ) முதல் துாணை நிதி அறிக்கை 1983-84 (ஆ. இ.) — 195
   - (எ) நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.) — 234
5. கவன ஈர்ப்புகள்:
   - (அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள். — 183
   - (ஆ) தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் திண்டுக்கல்லின் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்பெறுவது. — 187—190

128—179—i

பக்கங்கள்.

6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்:

(அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பு—1975-76. 191—192

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பு—1976-77. 192

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பு—1977-78. 194

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்:

(அ) நிதி ஒதுக்க (எண்.4) சட்ட முன்வடிவு 1983. 192

(ஆ) நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவு 1983. 194

(இ) நிதி ஒதுக்க (எண்.6) சட்ட முன்வடிவு 1983. 195

(ஈ) நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவு 1983. 234

8. முதல் துணை நிதி அறிக்கை 1983-84—வாக்கெடுப்பு:

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 195, 232—234

திரு. இல. பலராமன் 196—204

திரு. என். கிட்டப்பா 204—207

திரு. கெ. சொக்கலிங்கம் 207—212

திரு. மா. சின்னராசு 212—218

திரு. கு. ரமணி 218—225

திரு. பொ. உத்திராபதி 225—230

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 231—232

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 236


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1983, அக்டோபர் 31, திங்கட்கிழமை

ஐப்பசி 14, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்''.

தான் செய்யக் கருதியுள்ள பணியின் ஆற்றலையும், அதைச் செய்து முடிப்பதற்குரிய தனது வலிமையையும், தன் செயலைக் கெடுக்கக்கூடிய பகைவனுடைய வலிமையையும், தனக்குத் துணையாக இருந்து உதவக்கூடிய அனைவர் வலிமையையும் ஆராய்ந்து அதைச் செய்தல் வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**நியாய விலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் சரியாக வழங்கப்படுவதைக் கவனிக்க பறக்கும் படை அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 101—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கார்டுகளுக்கு உணவுப்பண்டங்கள் வழங்கும் நியாய விலைக்கடைகளில் உணவுப் பொருட்கள் சரியாக வழங்கப்படுவதைக் கவனிக்கப் பறக்கும் படை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நியாய விலைக் கடைகளை கண்காணிக்க சென்னை மாநகரில் நான்கு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒரு பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவரவர்களே, இந்த பறக்கும் படைக்கும், அதைப்போன்று அமைக்கப்பட்டிருக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் என்னென்ன அதிகாரங்கள்

வழங்கப்பட்டிருக்கின்றன? தவறுகள் நடப்பதைக் கண்டுபிடித்து பறக்கும் படையினரோ அல்லது கண்காணிப்புக் குழுவினரோ காவல் நிலையத்தில் நேரடியாகப் புகார் செய்தால், அதை காவல் துறையினர் பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த பறக்கும்படை போலி குடும்பக்கார்டுகளைக் கண்டு பிடித்தல். அடகு வைத்துள்ள குடும்பக்கார்டுகளைக் கைப்பற்று தல், நியாயவிலைக் கடைகளிலுள்ள பதிவேடுகளையும் கணக்கு களையும் சரிபார்த்தல், மற்றும் இன்றியமையாத பொருள்கள் கள்ளத்தனமாக வழங்கப்படுவதைக் கண்டுபிடித்தல், பொருள் களின் அளவையும் இருப்பையும் சரிபார்த்தல், தேவைப்பட்டியல் முறையாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறதா என்று பார்த்தல், கூட்டுறவுச் சங்கங்கள் முறையாகப் பொருள்களை விநியோகிக்கின்றனவா என்பதைப் பார்த்தல், பொருள்கள் சரியான விலையில் அளிக்கப்படுகிறதா என்பதையும் குறிப்பிட்ட அளவுக்குக் கொடுக்கப்படுகிறதா என்பதையும் சரிபார்த்தல், நியாயவிலைக் கடைகள் சரியான நேரத்தில் திறந்து வைக்கப்படு கின்றனவா என்பதைப் பார்த்தல், நியாயவிலைக் கடை எழுத்தர் விடுப்பில் இருந்தால் மாற்று எழுத்தர் உடனடியாக அந்தப் பணியைக் கவனிக்கின்றாரா என்பதைப் பார்த்தல், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், அல்லது மாவட்ட விநியோக அலுவலர் ஆகியோருக்கு வரும் குறிப்பிட்ட புகார்களை விசாரித்தல், வட்டார அளவிலுள்ள குழு ஒழுங்காக கூடுகின்றதா என்பதைப் பார்த்தல் போன்ற பல்வேறு பணிகளை இந்தப் பறக்கும் படையினர் செய்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாதம் இருமுறை இந்த பறக்கும் படையினர் செய்யும் பணிகளை ஆய்வு செய்கின்றனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் துணை ஆணையர்கள் பறக்கும்படையினர் தணிகளை ஆய்வு செய்கின்றனர். குற்றங்கள் கண்டுபிடிக்கப் பட்டு, காவல் துறையில் புகார் செய்யப்பட்டால் காவல் துறை யினர் அதை பதிவு செய்து, விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நியாயவிலைக் கடை களைக் கண்காணிக்க அரசாங்கம் கண்காணிப்பு கமிட்டிகளை அமைத்திருக்கிறது. சென்னை மாநகரில் மற்றும் பல்வேறு நகரங்களில் கண்காணிப்பு கமிட்டிகளை அமைத்திருக்கிறார்கள். ஆனால் பெருவாரியான கமிட்டிகள் ஒருதரம்கூட கூடவில்லை. கமிட்டி உறுப்பினர்களை அரசாங்கம் நாமினேட் செய்கிறது. ஜீ.ஓ.வில் அந்த கமிட்டிகளுக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஸ்டாக் அன்லோடு செய்யும்போதும், டிஸ்டிரிபியூஷன் போதும் கமிட்டி உறுப்பினர் கையெழுத்துப் போட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் ஸ்டாக் வரும் போது உறுப்பினர்களுக்கு 'இன்டிமேஷன்' கொடுக்கப்படுவ தில்லை. தகவல் கொடுக்கவில்லை என்றால் [illegible]



எப்படித் தெரியும்? டீச்சர்ஸ் ரோடு காலனியில் இதை நான் அனுபவப்பூர்வமாகப் பார்க்கிறேன். தங்களுக்கு இன்னின்ன அதிகாரம் இருக்கிறது என்று உறுப்பினர்கள் சொல்லும்போது நியாயவிலைக் கடைகளில் பொறுப்பு வகிக்கின்றவர்கள் அதைப் பற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே, அதிகாரம் பேப்பரில்தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் இல்லை. ஆகையால் கமிட்டி உறுப்பினர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு ஒழுங்காகக் கூட்டப்படு கின்றதா என்பதைப் பார்க்கின்ற பொறுப்பு அந்த ஆலுவலர் களுக்கு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று குழு ஒழுங்காகக் கூட்டப் படவேண்டும் என்பதும், அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற குறிப்புகளின் அடிப்படையில் பணியாற்றவேண்டும் என்பதும் என்ற முறையில் சரிவர நடை பெறாமல் இருப்பதை, நடைபெற வைப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகள் உரிய அதிகாரிகளால் எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததும் அதற்கு நான் பதில் சொல்லுகின்ற வகையையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்காணித்து நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். நடவடிக்கை எடுக்கவேண்டும என்று வற் புறுத்துகிறேன். அரசும் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயவிலைக் கடைகளில் பாமாயில் வருகின்ற அளவு இந்த உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை. அப்படி வருகின்ற இந்தப் பாமாயில் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் வெளியிலே உள்ள வியாபாரிகள் அங்கே இருக்கின்ற விற்பனை யாளர்களோடு தொடர்பு கொண்டு, பாமாயிலைப் பெற்றுக் கொண்டு அதிலே நல்லெண்ணெய், கடலை எண்ணெய் போன்ற வைகளைக் கலந்து விடுகிறார்கள். பொதுவாக இந்தப் பாமாயில் எந்த அளவுக்கு வருகிறது, எந்த அளவிற்கு விநியோகிக்கப்படு கின்றது என்ற விவரங்கள் இந்தக் கண்காணிப்புக் குழு உறுப்பி னர்களுக்குத் தரப்படுவதில்லை. எனவே இந்தக் கமிட்டி உறுப் பினர்கள் சென்று பார்ப்பதற்கும் இது எப்படி விநியோகிக்கப் படுகிறது என்பதைப் பார்ப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் நிகழக்கூடாது என்பதற் காக இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் அந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாத சூழ்நிலை இருக்கு மானால், அது பற்றித் தக்க நடவடிக்கையை மேலதிகாரிகளும்

கண்காணிப்பு அதிகாரிகளும், இந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆனால் இந்தக் குழுவின் நோக்கமே இப்படிப்பட்ட குறைபாடுகள் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி எங்காயினும் நடைபெறாமல் இருந்தால், அதிகாரிகள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் வரிசையிலே நிற்கும் மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் குண்டர்கள் இருந்து, வரிசையில் இருப்பவர்களை பின்னால் தள்ளிவிட்டு, தங்களுடைய ஆட்களை வைத்து வாங்கிக் கொள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருள்களின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த முறை ஓரளவுக்கு இருந்து கொண்டிருந்தது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் புதிய முறைகளைக் கையாண்டு வருகிறோம். நெரிசலைத் தவிர்ப்பதற்காக நீண்ட 'கியு' வரிசையைத் தவிர்ப்பதற்காகவும் பொருள்களை வழங்கும் முறைகள் வைக்கப்பட்டு, அது செம்மையாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அவர்களுக்குக் குறிப்பிட்ட, ஒதுக்கப்பட்ட நாட்களில் சென்று வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், கடைசியிலே பொதுவாக ஒரு நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதிலே வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது.

இப்போது கொடுக்கப்படுகின்ற அளவைப் பொறுத்தவரையிலே சில இடங்களிலே 8 கிலோ, 10 கிலோ என்று ஆங்காங்குள்ள நிலைமைக்கு ஏற்ப தருகிறார்கள். சிற்றூர்களில் 4 கிலோ, 5 கிலோ, 3 கிலோ என்று அளவுக்குத் தருகிறார்கள். நம்முடைய அரசின் இருப்பைப் பார்த்துப் பகிர்ந்து அளிக்கிறோம் அதைப் பொருத்து கார்டுகளை வழங்குகின்ற எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்றால் அதிக அரிசி வேண்டும் என்று மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம். இந்த மாதத்தில் இருந்து 30 ஆயிரம் டன்னிலிருந்து 40 ஆயிரம் டன்னாக உயர்த்தி இருக்கிறார்கள். கோதுமையைப் பொறுத்தவரையில் 30 ஆயிரம டன் கொடுக்கிறார்கள். கோதுமையை 10 கிலோ 12 கிலோ சில இடங்களில் 15 கிலோ என்றும் தருகிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிற்றூர்களிலே, கிராமப் பகுதிகளிலே 4, 5 கிலோ தருவதாக சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அப்படி கொடுக்கவில்லை. 2 கிலோ அல்லது 3 கிலோ



தான் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே கிராமங்களுக்கு குறைந்தபட்சம் 5 கிலோவாவது தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' பெரும்பாலான இடங்களில் மாதம் 3 கிலோ தரப்படுகிறது. சில இடங்களில் இருக்கின்ற வசதிகளைப் பொருத்து 4 கிலோ தரப்படுகிறது. அரசினுடைய நிலைமையும், நாம் கொள்முதல் செய்யும் அளவு உயர உயரத் தான் கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று 5, 6 கிலோ கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருந் தாலும், அரசின் இருப்பைக் கருதி ஒரு கட்டுப்பாட்டின் கீழ் நாம் வழங்கி வருகிறோம்.

(முற்பகல் 9–10)

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயவிலைக் கடைகளிலே சேல்ஸ்மேன்களாக வேலை பார்ப்பவர்களுக்கு குறைந்த சம்பளமாக 150 ரூபாய் கொடுக்கிறார்கள். அதனாலே அவர்கள் சில நேரங்களிலே இயற்கையாகவே தவறு செய்கின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே அவர்களுடைய சம்பளத்தை அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்ற முறையிலே தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் முழு நேர ஊழியர்களாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு எல்லாம் சம்பளம் முழு அளவிலே வழங்குவதாக ஏற்றுக்கொண்டால் ஏராளமான அளவு தர வேண்டும். இதற்காகத்தான் நாம் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். கிட்டத்தட்ட 4 கோடி, 4½ கோடி நிர்வாகச் செலவிற்கு மட்டும் ஆகிறது. இதிலே 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல் இந்தப் பொருள்கள் எல்லாம் மற்ற பொருள்களைப் போல் லாபம் ஈட்டும் பொருள்கள் அல்ல. சப்சிடி ரேட்டிலேதான் தருகிறோம். எனவே லாபம் தரக்கூடிய மற்றப் பொருள்களையும் இதிலே சேர்த்து விற்பதற்கு அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்றபோது அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை ஓரளவிற்கு கவனிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயவிலைக் கடைகளிலே அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களிலே 2 கிலோ அரிசி கூட கொடுக்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இப்போதுள்ள நிலைமையிலே

வெளியிலே 1 கிலோ அரிசி 5 ரூபாய், 6 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துவிட்டது. சாதாரண ஏழை எளியவர்கள் ஒரு நாளைக்கு 4 ரூபாய், 5 ரூபாய் என்று கூலிவேலை செய்கிறவர்கள் அரிசி வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் ஒரு மாதத்திற்கு 50 கிலோ அரிசி தேவைப்படுகிறது. ஆகவே குறைந்தது ஒரு தினத்திற்கு 1 கிலோ என்ற வீதத்தில் மாதம் 30 கிலோ அரிசி கொடுத்து, இந்த ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இப்போது ஆந்திராவிலே எல்லாம் விலை குறைந்திருக்கிறது. கேரளாவிலே வாங்கிக்கொண்டு செல்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே தமிழக அரசும் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லிய மாதிரி அரசின் இருப்பு கொஞ்சம் அதிகமாக வருகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அதை நாம் கொடுக்கலாம். கூடுமான வரையிலும் கிராமப்புறங்களில் 3 கிலோவிற்கு குறையாமல் கொடுக்க வேண்டும் என்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட நிலைமையிலேகூட 70 ஆயிரம், 80 ஆயிரம் டன் என்று மாதம் ஒன்றுக்கு விநியோகிக்க வேண்டி வருகிறது. மத்திய அரசினுடைய பங்கு அதிகமாகுமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்த நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறக்கூடும்.

## பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கான மானியம்.

* வினா எண் 102—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கும் நியாய விலைக் கடைகளுக்கு ஆகும் செலவில் பாதியை ஏற்கும் முறையில் மத்திய அரசிடம் மாநில அரசு மான்யம் கோரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

(இ) மத்திய அரசு என்ன பதில் கூறியுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடை



களுக்கு தமிழக அரசு கொடுக்கும் மான்யத்தில் 50 விழுக்காடு மத்திய அரசைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

(இ) பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கு மாநில அரசுகளுக்கு மான்யம் வழங்க வழிவகை இல்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அநேகமாக எல்லாப் பண்டங்களினுடைய விலைகளும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டு போகிறது. ஆகவே பொது விநியோக திட்டத்தின் கீழ் அவர்களுக்கு பண்டங்களை விநியோகிக்கும் கடமையும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நம்முடைய கூட்டுறவு மூலமாக அமுத அங்காடி மூலமாக விற்பனைக்குக் கொண்டு வருகின்றபோது சில பொருள்களுக்கு மானியம் வழங்கவேண்டியிருப்பதன் காரணமாக மத்திய அரசாங்கத்தை மாநிலம் அரசாங்கம் வற்புறுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா? என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற கருத்தினுடைய அடிப்படையிலேதான் முதலிலே நாம் வற்புறுத்தி பொது விநியோக முறையிலே நாம் அதிகமான அளவிற்கு மானியம் தந்து பொருள்களை விநியோகிப்பதற்கு நிர்வாகச் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தி வந்தோம். அல்லது 50 சதவீத மானியத்தையாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சில பல மாநிலங்களும் நம்மைப் போலவே வற்புறுத்தி வருகின்றன. மத்திய அரசு அந்தச் செலவை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வருகின்ற 7–ஆம் தேதிகூட டெல்லியிலே உணவு அமைச்சர்களுடைய மாநாட்டை மத்திய உணவு அமைச்சர் அவர்கள் கூட்ட இருக்கிறார்கள். இதிலேயும் மீண்டும் அதைப்பற்றி வற்புறுத்த தமிழ்நாடு அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 7–ஆம் தேதி நடைபெற இருக்கின்ற கூட்டத்தில் மீண்டும் வற்புறுத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் வற்புறுத்துவது என்று இல்லாமல் அனைத்துக் கட்சியினுடைய பிரதிநிதிகளைச் சேர்ந்த ஒரு தூது கோஷ்டியை அழைத்துச் சென்று மத்திய அரசிடம் இருந்து மான்யம் பெறுவதை வற்புறுத்துவதற்காக நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் கூடுமான வரையில் எல்லா மாநிலங்களும் மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டு

வருகிறார்கள். இதிலே யாரும் வேறுபாடு காட்டுவதில்லை. தமிழகத்தைப் போன்று மேற்கு வங்காளம், கேரளம், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் மத்திய அரசை வற்புறுத்தி வருகின்றன. அமைச்சர்களே இதை வற்புறுத்துகின்றபோது. தூதுகோஷ்டிக்கு எவ்வளவு தூரம் மதிப்பு கொடுக்கும் என்று தெரியவில்லை. இருந்தாலும் அதற்கான ஒரு அவசியம் ஏற்படுமானால் அதையும் அரசு ஆலோசிக்கும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கமும் இதற்கான நிதியை உதவியாகத் தர மறுக்கிற போது இங்குள்ள அரசுக்கு இருக்கிற நெருக்கடியின் காரண மாகவும் இதிலே உள்ள பெரும் பொருட்செலவை ஈடுகட்டுகிற முறையிலும் விநியோக முறையிலே நல்ல மாற்று முறையாக கூட்டுறவு பண்டகசாலை முறைதான் இருக்கிறது. கூட்டுறவு பண்டக சாலைக்கு ஷேர் கேபிடல் 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே மக்களே அதனை ஏற்றுக்கொள்கிற முறையிலே கூட்டுறவுச் சட்டத்திலே 'ரிலேக்சேஷன்' விதிவிலக்கு தந்து பொதுவிநியோகத்திற்காக துவக்கப்படுகிற பண்டகசாலைக்கான ஷேர் கேபிடலின் அளவைக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17,844 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அதிலே நுகர்பொருள் வாணிபக கழகத்தின் மூலமாக 5013 நியாய விலைக் கடைகளும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக 1276 கடைகளும் இயங்கி 'வருகின்றன. நடைமுறைப்படுத்துவதிலே அந்தத் துறைக்கு ஏதாவது சிக்கல் இருக்குமானால் அதைப்பற்றி ஆவன செய்ய அரசு முயற்சி செய்யும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாக சமீப காலத்திலே மத்திய அரசு வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்காக மாநில அரசுக்கு உணவுத் தேவைக்கு மானியங் களை அறவே விட்டுவிட்டார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கடுமையான விலையேற்றம் காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறிய தேங்காய்கூட 3 ரூபாய்க்கு விற்கிறது. ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை 26 ரூபாய்க்கு விற்கிறது. அரிசி விலையும் அதிகமாக உயர்ந்து விட்டது. விலையேறுகிறபோது, மக்கள் பாதிக்கப்படுகிறபோது அதைக் கவனிக்கிற பொறுப்பு மாநில அரசுகளுக்கு இருக்கிறது. ஆகவே மாநில அரசுகளுக்கு உதவுகிற முறையில் மத்திய அரசு இது சம்பந்தமாக முக்கிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துமா? சட்டமன்றத்திலே அதை வற் புறுத்துகின்ற முறையிலே தீர்மானம் கொண்டு வரப் படுமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது கட்டுப்பாட்டு விலையில் சப்ஸிடி கொடுக்கிற அளவுக்கு இருக்கிற பொருட்கள் அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாலின், மைதா ஆகியவைதான். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல தேங்காய், தேங்காய் எண்ணெய் போன்றவை எல்லாம் நம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் வரவில்லை. விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. எப்படியும் அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முயற்சியை மத்திய அரசு எடுத்து வருகிறது என்று மத்திய உணவுத் துறை அமைச்சரும் சொல்கிறார்கள், விநியோகத் துறை அமைச்சரும் அடிக்கடி சொல்கிறார்கள். அந்த வகையிலே அவைகளைக் குறைப்பதற்கு ஆலோசித்து வருவதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும். தேவைப்படுமானால் அதற்கான முயற்சியை சட்டமன்றத்திலே நாம் எடுக்கலாம்.

கூட்டுறவுத் துறை மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் திட்டம்.

*வினா எண் 103— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மண்ணெண்ணெய் விநியோகம் தனியாருக்குக் கொடுத்து உள்ளதை மாற்றி கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மண்ணெண் ணெய் விநியோகத்தை முழுமையாக கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கும் கருத்துரு இல்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விநியோகத்தை தனியார்களுக்குக் கொடுக்கிற காரணத்தினால் ஏழை எளிய மக்களுக்கு சீராக அது கிடைக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுத் துறை மூலமாக அதை விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் வழங்குகிறோம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் வழங்கப் படுகிறது. சில்லரை வியாபாரம் செய்ய உரிமம் பெற்றிருக்கிற வியாபாரிகள் — மனிதாபிமான அடிப்படையில் அதை நம்பி அவர்கள் வாழ்கிறார்கள் என்ற அடிப்படையில் — 2528 சில்லரை வியாபாரிகளும், கைவண்டிக்காரர்கள் என்ற முறையிலே 2 ஆயிரத்துச் சில்லரை பேர்களும் நடத்திக்கொண்டு வரு கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு, பிழைப்புத் தர வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு கட்டுக்கோப்புக்குள் அவர் களுக்கு அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

'குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் தருகிறீர்களே, எல்லோருக்கும் தரவேண்டும்' என்று 300 சில்லரை வியாபாரிகள் ரிட் மனு போட்டார்கள். நீதிமன்றம் எல்லோருக்கும் பாகுபாடு இல்லாமல்

வழங்க வேண்டுமென்று தீர்ப்பு அளித்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் தான் சில்லரை வியாபாரிகளுக்கும் கைவண்டிக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணையை விநியோகத்தில் உள்ள சில்லரை வியாபாரிகளையும், சாதாரண வியாபாரிகளையும் உடனே நீக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. அவர்களுக்கு கிடைக்கின்ற இந்த மண்ணெண்ணையை கோட்டா மாதக் கடைசியில் 2 நாட்கள் இருக்கும்போது அந்த கோட்டாவை பெறுகிறார்கள். அதற்கான காரணம் சப்ளை செய்கின்ற இடத்திலிருந்து வருகிறதா என்று புரியவில்லை. அவர்கள் கடைசியில் அதைப் பெற்றுக்கொண்டு கார்டு முழுவதற்கும் மண்ணெண்ணையை கொடுக்காமல் மிச்சப்படுகின்ற எண்ணெய் முழுவதையும் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்பது ஒரு உலகு அறிந்த உண்மையாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் டின் கணக்கிலும் பேரல் கணக்கிலும் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வருமானால் அதைத் தடுப்பதற்கு அந்த கோட்டா மாதம் இரண்டு தடவை என்றால் அதை மாதத்தின் மத்தியில் அவர்களுக்கு கிடைப்பதற்கு, அது அவர்களுக்கு போய்ச் சேருவதற்கு ஒரு உத்திரவாதம் செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணையை எடுப்பது பொறுத்தவரையில் காலத் தாழ்வு ஏற்படக் கூடாது என்று அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஒதுக்கீடு செய்தவுடன் உடனே வந்து எடுத்துக்கொள்ளும் வகையில் விநியோகம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். காலதாமதம் ஏற்படுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று மாத இறுதியில் கிடைப்பதால் அப்படிப்பட்ட தவறு நடைபெறுகின்றன. அதை அறிந்து அதிகாரிகளுக்கு இதுபற்றி அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. உடனுக்குடன் விநியோகம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதில் தவறுகள் நடந்தால் அதை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில பலஇடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் கூட அது முழுவதும் நீங்கிவிடவில்லை என்பதை நான் உணருகிறேன். அதற்கான தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட விநியோக அதிகாரி



களும், உணவு வழங்குத்துறை அதிகாரிகளும் வற்புறுத்தப்பட்டு வருகிறார்கள். மேலும் தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு கொடுக்கப்படுகிற விநியோக முறையில் அவர்கள் சரியாக விநியோகிக்கிறார்களா என்று கண்காணிக்கிற வகையில் ஒரு குழு அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு தனியாக குழுத் தேவையில்லை. அதற்கு பல மட்டங்களில் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதை கண்காணிக்கிறார்கள். அப்படி யாராவது தவறு செய்கிறார்கள் என்று புகார்கள் வருமானால் உடனே அவர்கள் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு வேறு ஒருவருக்கு அந்த உரிமங்கள் கொடுத்து நியமிக்கலாம் என்று நாம் அறிவுரைகள் வழங்கியிருக்கிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரையில் காலதாமதம் ஏற்படுவது அதேசமயத்தில் மாத கடைசியில் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிற பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அது சம்பந்தமாக புகார்கள் வந்தால் உடனே அதை பரிசீலனைச் செய்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இது பற்றி எந்தப் புகார்கள் வந்தாலும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளுக்கும், அவர்களுக்கு கீழ் உள்ள அதிகாரிகளுக்கும் நாம் அறிவுரைகள் வழங்கியிருக்கிறோம். யார் எந்த இடத்தில் எந்த தவறு செய்தாலும், அது கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு அவர்களுக்கு மறுபடியும் உரிமங்கள் வழங்கக் கூடாது என்றும் அதை மாற்றி அமைக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறோம்.

## தகட்டூர் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 104—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் வட்டம் தகட்டூர் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஏற்படுத்த கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் தகட்டூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஏற்படுத்த ஜுன், 1983—ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த புரட்சித் தலைவர் அரசுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இது இன்னும் துவங்காமல் இருக்கிறது. அதை விரைவில் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு நிர்வாகக் குழுவிற்கான தேர்தல் எப்போது நடத்தப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பு அற்றது.

**வேடசந்தூர் பழனி வட்டங்களில் வறட்சிப்பயிர் ஆராய்ச்சி நிலையம் தொடங்கும் திட்டம்**

*வினா எண் 105—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் மழை குறைவான வேட சந்தூர், பழனி ஆகிய வட்டங்களில் வறட்சிப்பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில் வேடசந்தூர் பகுதியில் உள்ள விவசாயிகளின் நலனுக்காக அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கைகள் யாவை?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) பழனியில் மானாவாரி தீவனப்பயிர் ஆராய்ச்சி திட்டமொன்றை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1981-ல் துவங்கியுள்ளது. இதில் வறட்சியை தாங்கும் தீவனப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. பழனி ஆராய்ச்சித் திட்டத்தின் கண்டுபிடிப்புகள் தக்க நேரத்தில் வேடசந்தூர் பகுதிகளிலும் மதிப்பீடு செய்யப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வறட்சிப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் துவக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மலேசியா போன்ற நாடுகளில் பாம் ஆயில் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஆயில் பாம், சீமை இலந்தை போன்ற பயிர்கள் வறட்சியில் சிறப்பான பயனைத் தருகிறது, நல்ல அதிகப்படியான வருவாயையும் தருகிறது என்று சொல் கிறார்கள். அப்படிப்பட்ட பயிர்களை நம் மாநிலத்தில், குறிப்பாக வறட்சியாக இருக்கிற வேடசந்தூர், பழனி போன்ற பகுதிகளில் பயிரிட ஆய்வு செய்திருந்தால் அந்த விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தில் அதுபற்றிய ஆராய்ச்சிப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அவைகளை இனிமேல் வறட்சிப் பகுதிகளிலும் செய்யும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியை மாநிலத்தினுடைய நிலத்தடி நீர் ஆய்வுப் பிரிவு கருப்புப் பகுதியாக அறிவித்திருக்கிறது. நாங்கள் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கிறோம். மாநிலத்தி லுள்ள வாய்க்கால் பாசன விவசாயிகளுக்கு பல்வேறு வகை களில் பல கோடி ரூபாயில் பல்வேறு வசதிகள் செய்து பயன் பெறும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் கிணற்றை நம்பியிருக்கிற வேடசந்தூர், பழனி போன்ற பகுதிகளில் கிணற்றுப் பாசன விவசாயிகளுக்கு எந்தவிதமான மானியமும் இல்லை. ஆகவே கிணற்றுப் பாசனத்தை நம்பிருக்கிற பகுதிகளில் கிணற்றுநீர் வளத்தைப் பெருக்கிக் கொள்ள அந்தப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க, வேளாண்மைத்துறை பொறியியல்துறை மூலம் ஆழ்துளை போடுவதற்காக பக்கவாட்டுத்துளை போடு வதற்காக மானியத்தொகை வழங்க வேளாண்மைத்துறை பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை. இனிமேல் அந்தவகையில் உதவி செய்யமுடியுமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே வேடசந்தூர், பழனி போன்ற தாலுகாக்களில் கடந்த பல ஆண்டுகளாகவே மழை பெய்வதில்லை. இந்த ஆண்டு கூட மழை இல்லை. சென்ற ஆண்டு கூட இல்லை. குடிக்கக்கூட தண்ணீர் இல்லை என்ற அளவில் அவை வறண்ட பிரதேசங்களாக இருக்கின்றன. இப்படிப்பட்டதொரு சூழ்நிலை இருப்பதால் அந்தப் பகுதிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பயிர்கள் பயிர் செய்த சில நாட்களிலேயே காய்ந்து விடுகின்றன. ஆகவே, அரசாங்கம் உடனடியாக அவைகளைப் பாதுகாப்பதற்காக, அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளை நேரடியாக அரசாங்கப் ( பாறுப்பில் விவசாயிகள் பலன் அடையும் முறையில் கிணறுகளை வெட்டவும், பயிர்களைப் பாதுகாப்பதற்கும் இந்த ஆண்டு ஒரு விசேட திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தினால்தான் அந்தப் பகுதிக்குரிய பல்வேறு செயல் திட்டங்களை அரசு மேற்கொண்டிருக்கிறது. இப்போது கூட விதை சுத்தகரிப்பு நிலையம் ஒன்று பழனிப் பகுதியில் தொடங்கப்பட இருக்கிறது. தொடர்ந்து அந்த வட்டாரத்தில் எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியும் என்பதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து ஏற்பாடு செய்யும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொண்ட
புதியரக நெல் ஆராய்ச்சி

*வினா எண்—106 திரு. பாபு ஜனார்த்தனன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதியரகநெல் (high yield variety) ஆராய்ச்சியின் தற்போதைய முன்னேற்றம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியின் பயனாக இந்த ஆண் உயர் விளைச்சல் நெல் ரகங்களான கோ. 43, கோ. 44, பொ மணி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

திரு பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இந் கோ. 43, கோ. 44, மற்றும் 50 போன்றவைகளை விவசா களிடத்தில் நல்லமுறையில் விளம்பரப்படுத்தப்படாமல் அ நேரத்தில் சீஸன் நேரத்தில் எந்தெந்த புது ரக நெல் விவசாயம் செய்ய வேண்டும் என்பது பற்றி நல்லமுறையி



விளம்பரம் செய்வதில்லை. ஆகவே அப்படி விளம்பரம் செய்து விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் முறையில் ஏதாவது உதவி செய்யமுடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விவசாயப் பெருமக்களுக்கு நேரடியாக அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டும் என்ற வகையில் பயிற்சி வழி தொடர்பு திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அப்படி அவர்கள் சரியான முறையில் விளம்பரம் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் கருதுவார்களேயானால் உரிய வகையில் அவைகளை விவசாயிகளுக்குத் தெரிவிக்க ஆவன செய்யப்படும்.

திரு பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட பயிற்சி வழி தொடர்புத் திட்டம் என்று விளம்பரப் பலகைகள் அதிகமாக இருக்கின்றன. இந்தப் பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தில் எந்தெந்த விதைகள், எந்தெந்த புது ரக நெல்கள் விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நல்லமுறையில் விளம்பரப்படுத்துவதில்லை. எனவே புது ரக நெல்களைப் பற்றி விளம்பரத்தை நல்லமுறையில் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து முன்வரும்

திரு ஆர். டி. கோபாலன்: தமிழ்நாட்டில் விளையும் நெல் ரகங்கள் வேண்டுமென்று மத்திய அரசு பண்ணையோ ஆந்திர அரசோ கோரியுள்ளதா? அப்படிக் கோரியிருந்தால் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

*வினா எண் 107—திரு. த. வேணுகோபால் மற்றும் திரு. ப. வெங்கடசுப்ரமணியம் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் வறட்சியைத் தாங்கக் கூடிய அளவில் புதிய ரக நெல் கண்டுபிடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: வறட்சியைத் தாங்கி, மானாவாரி நிலங்களில் அதிக அளவில்-விளைச்சல் தரவல்ல புதிய நெல் ரகங்களை கண்டுபிடிக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி மற்றும் பட்டிணம்காத்தான் என்ற இடங்களில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையங்களிலும், செங்கல் பட்டு மாவட்டத்தில் திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்திலும், தீவிர ஆராய்ச்சி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால், மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. த. வேணுகோபால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியைத் தாங்கக்கூடிய அளவிலே இந்த புதிய ரக நெல் கண்டுபிடிப்பு செங்கை, முகவை மாவட்டங்களிலே ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த பல்கலைக் கழகத்தின் மூலம் மற்ற மாவட்டங்களிலும் இந்த புதிய ரக நெல்லைக் கண்டுபிடிப்ப தற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த இரண்டு மாவட்டங்களிலே இருக்கின்ற ஆராய்ச்சி நிலையங்கள் இந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் பயன் படப் போவதில்லை. வறட்சியால் தாக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் இதன் கண்டுபிடிப்பு நிச்சயமாக பயன் தரும்.

திரு ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த வறட்சியைத் தாங்கக்கூடிய புதிய கண்டுபிடிப்பு நெல் ரகங்களின் விசேஷத் தன்மை என்ன என்பதை அறிவிப்பார் களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளில் விளைக்கூடியது. சிக்கனமாக தண்ணீர் பயன்படுத்தி வளரக்கூடியது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சியைத் தாங்கக்கூடிய கண்டுபிடிப்பு நெல் எவ்வளவு சீக்கிரத்தில் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அறிமுகப்படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்!

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, டி. கே. எம். 1, சி. ஓ. 31, ஏ. டி. டி. 22, மதுரை 1 டி. கே. எம், 9, வைகை. ஐ. ஈ, டி. 1444, சி 22, டி. ஏ. எம். ஆகிய நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர் களே, புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நெல் ரகங்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடுவதற் கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களிலும் இதனைப் பயிரிட இயலாது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், குறைந்த வயதில், 120, 125, நாட்களில் வளரக்கூடியவை.



திரு. செ. சிவசாமி. பேரவைத் தலைவர் அவர்களே பரமக்குடி, பட்டிணம்காத்தான் என்ற இடங்களில் இந்த வறட்சியைத் தாங்கக்கூடிய நெல் உற்பத்தி சம்பந்தமாக ஆராய்ச்சி நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். எந்தெந்த நெல், எவ்வளவு காலத்தில் ஹை ஈல்ட் கொடுக்கிறது என்பதைச் சொல்வதுடன், கோ 43, 44, பொன்மணி போன்ற விதைகள் வறட்சியைத் தாங்கக்கூடியவையா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒவ்வொரு நெல்லு ஒரு தனித்தன்மையோடு வளரக் கூடியவை. பரமக்குடி, மற்றும் பட்டிணம்காத்தான் ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நெல் விதைகள் வறட்சிப் பகுதிகளில் விளைவிக்கக் கூடியவை குறைந்த வயதில் வளரக் கூடியவை. கோ. 43, 44 நெல் விதைகள் 130, 150 நாட்களில் வளரக்கூடியவை. பொன்மணி தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்ற தண்ணீர் தேங்கக் கூடிய தன்மையில் வளரக்கூடியது.

### மலைப்பகுதிகளில் பயிரிடக் கூடிய புதிய ரகப் பயிர்கள் மற்றும் மர வகைகள்

*வினா எண் 108— திரு. சி. சிவப்பிரகாசம். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் விவசாயத்தில் மலைப் பகுதிகளுக்கு ஏற்ற புதிய ரக நெல், சாமை, தினை, மா, எலுமிச்சை, நாரத்தை போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (அ) ஆம். (ஆ) நெல் டி. கே. எம். 9, புஷ்பா, ஐ. ஈ. டி. 1444. ஐ. ஆர். 26, வைகை, டி. கே. எம். 1, ஜெகநாத், எம், எல். ஆர். 9672, டி. கே. எம். 8 ஏ. டி. 103 ஆகியவை.

சாமை: கோ. 2

தினை. கோ. 5

மா. மாமரத்தை மலையில் பயிரிட முடியாது. எனவே, புதிய புதிய ரக மர வகை கிடையாது.

எலுமிச்சை, நாரத்தை. பெயரிடப்பட்ட புதிய இரகங்கள் ஏதுமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலைப் பகுதியில் பலவகையான பழ மரங்கள் வளரக்கூடிய இடமாக இருப்பதால், இந்த மலைப் பகுதியில் வளரக்கூடிய நாற்றுகளைத் தயார் செய்வதற்கு ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நிதி வசதிக்குத் தகுந்தபடி அத்தகைய முயற்சி மேற்கொள்ளப் படும்.

சிங்கா நல்லூர் ஒண்டிப்புதூர், கணபதி, ஆவாரம்பாளையம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 109 திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கோவை மாநகராட்சி சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், கணபதி, ஆவாரம்பாளையம் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சிறுவாணி [illegible] கொண்டு கோவைக்கு குடிநீர் விஸ்தரிக்கும் திட்டம் [illegible] போது சிங்காநல்லூர் ஒரு தனி நகராட்சியாக இருந்தது. கோவை மாநகராட்சி ஏற்படுவதற்கு முன்னால் சிங்காநல்லூருக்கு சிறுவாணி நீரை விஸ்தரிப்பதற்காகவும், [illegible] தொட்டிகள் அமைப்பதற்காகவும் திட்டம் அனுமதி அளிக்கப் பட்டிருந்தது. இதன் வேலைகள் சிங்காநல்லூரில் (ஒண்டிப் புத்தூர், ஆவாரம்பாளையம் உட்பட) நடந்து [illegible].

திரு. எம். ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டு இன்றிருக்கக்கூடிய 'ஆடட் ஏரியாக்கள்' அதாவது பல்வேறு பகுதிகளுக்கு சிறுவாணி நீரை அதிகரிப்பதற்கான குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கேள்வி கேட்டிருப்பதினால், அதற்கு குறிப்பாக நான் பதிலை கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் எந்த எந்தப் பகுதிகளுக்கெல்லாம் கொடுக்கப்படும் என்று விரிவான கேள்வியைத் தனியாகப் போட்டால், விரிவான பதிலைக் கொடுக்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் சிறுவாணி [illegible] ஆவாரம்பாளையம், ஒண்டிப்

புதூர் போன்ற பகுதிகளுக்கு எக்ஸ்டென்ட் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் ஆவாரம் பாளையம், ஒண்டிப்புதூர் போன்ற பகுதிகளில் இன்னும் சிறுவாணி நீர் வரவில்லை என்ற புகாரை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதிகளுக்கு, ஆவாரம் பாளையத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு, சிறுவாணி நீர் மட்டும் அல்ல, அங்கேயிருக்கிற உப்பு தண்ணீரைக் கூட பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அங்கே போராட்டம் கூட நடத்தினார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் சிறுவாணி நீரை அவர்களுக்கு அங்கே கொடுக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே அப்படி நிலைமை இல்லை. ஆகவே, விரைவாக அமைச்சர் அவர்கள் சொல்லியவாறு, உண்மையாகக் கொடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கா நல்லூருக்கும் ஒண்டிபுதூர் ஆவாரம் பாளையம் போன்ற ஊர்களுக்கும் குடிதண்ணீர் கொடுக்க திட்டம் வகுக்கப்பட்டு, வேலைகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. குடிதண்ணீருக்காக தமிழகத்திலே பெரிய போராட்டம் வரும். அதுவும் குறிப்பாக சென்னையிலே வாட்டர் ரயட்ஸ் வரும் என்று கூட சில இதழ்களிலே எழுதப்பட்டது. ஆனால் இந்த அரசு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு திறமையாக சமாளித்ததன் காரணமாக, நாமெல்லோரும் இன்றையதினம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், ஆவாரம்பாளையம் போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்கக் கூடிய வேலைகளில் பேர்துக்குழாய்கள் போடுவது 98 சதவீதமும், கிளைக் குழாய்கள் போடுவது 100 சதவீதமும், நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவது 85 சதவீதமும், பகிர்மான வேலைகள் 80 சதவீதமும் முடிந்திருக்கின்றன. எல்லா வேலைகளும் 31–12–1983க்குள் செய்து முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி அணையில் இப்போது போதிய அளவு நீர் இருக்கிறது. அணைக்கட்டு வேலைகளும் பூர்த்தியாகி இருக்கின்றன. ஆகவே, கோவை மாநகரத்தில் குடிதண்ணீர் விநியோகத்திற்கான, குழாய்களை பதித்து உயர்நிலைத் தொட்டிகளையும் கட்டி முடிக்கிறவரையில், பைலட் சப்ளை மூலம் பிரச்னையாக இருக்கிற பகுதியில், அதாவது சிங்கா நல்லூர், ஆவாரம்பாளையம் பகுதிகளில், இருக்கின்ற குழாய்களை பயன்படுத்தி குடிநீர் கொடுப்பதற்கு அரசு அவசர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நடவடிக்கை எடுக்கக்கூடியது பற்றி ஆலோசனை செய்கிறேன். அவசரமாக நடவடிக்கை எடுத்து

விட்டால் சிக்கலாக வந்துவிடக் கூடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசிப் பார்க்கிறேன்.

திரு. கு. ரமணி. தலைவர் அவர்களே, சிங்கா நல்லூர் முனிசிபாலிட்டி, அண்மையிலேதான் கோவை மாநகராட்சியின் உள்ளே சேர்க்கப்பட்டது என்பது உண்மை. ஆனால் அங்கே சிறுவாணி நீர் சப்ளை செய்வதற்கான பைப்புகள் போடும்படியான வேலை வேகமாக முடிந்து வருகின்ற நிலையில் இருக்கிறது. ஆனால் அங்கே சப்ளை பண்ணுவதற்கு தேவையான புதியதாக நீர்த் தேக்கத் தொட்டிகள் சிங்காநல்லூர் வட்டத்திலே கட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக கோவை மாநகரத்திலே உள்ள புளியங்குடியிலிருக்கிற பெரிய நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்துதான் சப்ளை வருகிறது. வண்டிகளிலே வைத்துக் கொடுக்கும்படியான நிலை. ஆகவே, உடனடியாக சிங்கா நல்லூரில் பைப் வேலைகளையும், தொட்டிகள் கட்டும் வேலைகளையும் முடிந்து, கனெக்ஷன் கொடுத்து வாட்டர் சப்ளை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? அதற்கு ஒரு கால எல்லைக்குள் செயல்பட அரசு முனையுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தேதி குறிப்பிட்டு 31-12-1983-க்குள் அந்த வேலைகள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது என சொன்னேன். எனவே அதற்குள் முடிவடையவில்லை என்றால், வரவு-செலவுத் திட்டத்திற்கான தொடர் கூட்டம் நடைபெறுகிற போது, இந்தக் கேள்வி எழுப்பப்பட்டால் சரியான நிலையில் பதில் சொல்வதற்கு நான் தயாராக இருப்பேன். (குறுக்கீடு) இப்பொழுதே 31-12-1983-க்குள் முடியும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது.

## சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு குடிநீர்த் திட்டம்

*வினா எண் 110—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பூலாம்பட்டியிலிருந்து காவிரி நீரை குடிநீருக்காக கொங்கணாபுரம், எடப்பாடி, ஆட்டியாம்பட்டி, வெண்ணந்தூர், அத்தனூர், அலவாய்ப்பட்டி, பிள்ளா நல்லூர், குருசாமிபாளையம் ஆகிய ஊர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவியுடன் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கேள்வியில் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதன் தீவிர பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்து அரசின் நிர்வாக ஒப்புதல் அளித்தபின் வேலை துவங்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு? இந்த திட்டத்தால் சேலம் மாவட்டத்தில் எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி, ராசிபுரம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகள் பயன்பெற இருக்கின்றன. குறிப்பாக ராசிபுரம் தொகுதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. அதல், வெண்ணந்தூர், அத்தனூர். ஆலவாய்ப்பட்டி, பிள்ளாநல்லூர், மூஞ்சனூர், கொங்கணாபுரம், எடப்பாடி, ஆட்டியாம்பட்டி, குருசாமி பாளையம் ஆகிய கிராமங்கள் வழியாக குடிதண்ணீர் வர இருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் காலதாமதப்படுவதால், குடிதண்ணீர் வடிகால் வாரியம் போடும் பெரிய திட்டங்களும் செயல்பட முடியாமல் இருக்கிறது. அதனால் அங்கே குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறது. ஆகவே, அதைத் தீர்க்க எவ்வளவு விரைவாக இந்த திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக எடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியிலே இருக்கிற ஊர்கள் பூராவையும் சொல்லியாயிற்று.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு ஊர்களுக்குக் கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு ரூ.9கோடிஇடப்பாடி நகரத்தில் கொங்கணாபுரம் நகர பஞ்சாயத்து இடப்பாடி நகரப் பஞ்சாயத்து, இளம்பிள்ளை நகரப் பஞ்சாயத்து, இளங்கல்சாலை நகரப் பஞ்சாயத்து, மல்லன்சமுத்திரம் நகரப் பஞ்சாயத்து, வெண்ணந்தூர் நகரப் பஞ்சாயதது, பிள்ளாநல்லூா நகரப் பஞ்சாயத்து அத்தனூர் ஆகிய ஊர்களுக்குக் கொடுக்கிறோம். இவை தவிர 129 கிராமங்களுக்கும் கொடுக்கிறோம். இதுபற்றிய பரிசீலனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை கவனத்தில் வைத்து அவர் மிக அவசரத்தேவை என்று சொல்கின்ற காரணத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசி, இந்தத் திட்டத்திற்கு அரசு அனுமதியைப் பெறுவதற்கு விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் திட்டத்தை விரைவிலே ஆரம்பிக்க வேண்டுமென்பதைப்பற்றி அரசு முயற்சி எடுக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் விரைவிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் அறிவித்ததற்கு நன்றி. ஆனால் இந்த ஆண்டிற்குள் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே என்று சொல்லியிருக்கிறேன். எனவே, அது விரைவிலே துரிதமாக எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தைச் சரிவர அமுலாக்கும் திட்டம்.**

*வினா எண். 111—திரு. கு. ரமணி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலிச்சட்டம் சரிவர அமுலாக்கப்படுவதற்குத் தொழிலாளர் இலாக்கா அதிகாரிகளையே பொறுப்பாக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதுபற்றிய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) இல்லை. இருப்பினும் வேறு மாற்று ஏற்பாடு பற்றி பரிசீலனை செய்யலாமென அரசு கருதுகிறது.

திரு. கு. ரமணி தலைவரவர்களே விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு பரிசீலனை செய்து, அந்தக் கூலி உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், பல இடங்களில் அந்தக்கூலி உயர்வு அவர்களுக்கு அமுலாக்கவில்லை. இதுவும் அரசுக்குத் தெரிந்த விஷயம் தான். அதற்கு ஒரு முக்கியமான காரணம் அதை நிறைவேற்றுவதற்காக இருக்கும்படியான இலாக்காவின் அதிகாரிகள் என்போர்ஸ் பண்ணுவதற்காக இருக்கிற அதிகாரிகள் அதை ரெவினியூ துறையினுடைய தாசில்தார், கோட்டாட்சித் தலைவருக்கு விட்டிருப்பதன் விளைவாக, சரியாக அமுலாக்கப்படவில்லை. ஆகவே, இதை அமுலாக்க ஒரு தனி இலாகாவை அமைக்க, தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்தபட்ச ஊதியம் 5–4–1983 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தக்



கூலியை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு தன்னுடைய பரிந்துரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி ஒரு இலாகா அமைக்குமாறு அரசுக்குக் கூறியுள்ளது. அதாவது, தனியாக, விவசாயத் தொழிலாளர் நலத்துறை அமைக்குமாறு பரிந்துரை செய்திருக்கிறது. மேற்கண்ட பரிந்துரையின்படி விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனியான துறையை ஏற்படுத்துவதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. சம்பந்தப்பட்ட கோப்பு நிலச் சீர்திருத்த ஆணையருக்கு கருத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சட்டமன்றத்தில் இந்தப் பிரச்னையை மாண்புமிகு ரமணி போன்றவர்கள் எழுப்பி வருகிறார்கள். அரசும் மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை வைத்து பரிசீலனை செய்யலாம். அதற்கப்பாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில யோசனைகளையும் வைத்திருக்கிறார்கள். அவைகளையும் மனதிலே வைத்து விவசாயத் தொழிலாளர் களுடைய குறைந்தபட்ச ஊதியம் மட்டுமல்ல, அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதற்காக என்ன செய்யலாம் என்பதைப் பற்றி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதைப் பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நமது அரசினால் அமைக்கப்பட்ட ஹரி ராஸ்கர் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் 5–4–198? ஆம் தேதி ஆண்களுக்கு 10 ரூபாயும், பெண்களுக்கு 8 ரூபாயும் என்று சட்டக்கூலி அறிவிக்கப் பட்டது. பெண்களுக்கு முன்பு 5 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது ஒரு ரூபாய் சேர்த்து வாங்கிக் கொள்ளலாமென்றும், ஆண்களுக்கு முன்பு 7 ரூபாய் கொடுத்தது இப்போது ஒரு ரூபாய் சேர்த்து 8 ரூபாய் வாங்கிக் கொள்ளலாமென்றும் சமரசம் செய்கிறார்கள். அரசாங்கம் போட்ட சட்டத்தை அதிகாரிகள் உதாசீனப்படுத்துகிற நிலை இருக்கிறது. இதைப் போக்குவதற்கு, அரசாங்கம் நிர்ணயித்த சட்டக்கூலி விவசாயிகளுக்கு கிடைக்க அந்தச் சட்டத்தை அமல் செய்ய ஒரு தனி அதிகாரியை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வேலையை ஆணும் பெண்ணும் செய்வார்களானால் ஒரே கூலி கொடுக்க வேண்டுமென்பது சட்டம். ஈக்குவல் ரெமியூனரேஷன் ஆக்ட் என்பது அதற்குப் பெயர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல ஆணிற்கு ஒரு கூலி, பெண்ணிற்கு ஒரு கூலி என்பதல்ல. உறுப்பினர் அவர்கள் சொல்கிற 8 ரூபாய் கூலி நாற்றுநடுதல், களையெடுத்தல், விதை விதைத்தல் போன்ற வேலைகளுக்கு கொடுக்க வேண்டும். இதை ஆண் செய்தாலும், பெண்

செய்தாலும் ஒரே கூலி தான் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு குறைவு அவர்களுக்கு அதிகம் என்று இல்லை. இரண்டு பேரும் சேர்ந்து ஒரே வேலையைச் செய்ய வேண்டும். ஆண் ஒரு வேலை, பெண் ஒரு வேலை என்று தனியாக செய்கிறார்கள் என்றால் அதற்கு தனிக்கூலி. அரசாங்கம் நிர்ணயித்த கூலி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காக ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வேண்டிய அமைப்பு இருக்கிறது. அது சரியாக வேலை செய்யவில்லை என்பதுதான் மாண்புமிகு ரமணி போன்றவர்களுடைய குற்றச்சாட்டு, அதற்காக அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று சொல்லியிருக்கிறேன். தனியாக ஒரு துறை ஏற்படுத்துவதைப் பற்றி பரிசீலனை செய்து ஏற்பாடு செய்வோம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே பெண்களுக்கு 8 ரூபாய் என்று தனியாக நிர்ணயிக்கப்படவில்லை. ஆணும் பெண்ணும் ஒரே வேலையைச் செய்தால் ஒரே கூலி தான்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த சட்டக்கூலி பெருவாரியான இடங்களில் கிடைப்பதில்லை. இதை அமல் செய்வதற்கு இன்றையதினம் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் பல்வேறு இடங்களுக்கும் செல்கிறபோது கூலி கிடைக்கவில்லையென்றாலும் கூலி கிடைக்கிறது என்று அவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு கணக்கை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை முறையாக அமல் செய்வதற்கு தொழிலாளர் நல இலாக்காவிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அரசு இது சம்பந்தமாக விவசாயத் தொழிலாளர்கள் நலத்துறை என்று ஒரு தனித் துறை ஏற்படுத்துவதற்கு அரசு ஆலோசித்து வருவதாக குறிப்பிட்டார்கள். அதை அமைப்பதில் காலம் ஆகுமென்பதால் இடைக்காலத்தில் தொழிலாளர் நலத் துறையின் நிர்வாகம் மூலம் விவசாயிகளுக்கு இந்தக் கூலியை அமல் செய்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இடைக்கால ஏற்பாடுகள் அவ்வளவு திருப்திகரமாக இருப்பதில்லை. அவசரமான வேலைகளும் திருப்திகரமாக முடிவதில்லை. எனவே எதையும் நிதானமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. நம் எல்லோருக்குமே இதில் ஒரு மாற்றம் தேவை என்ற கருத்திருக்கிறது. ஆகவே அதற்கு தனியாக ஒரு இலாக்கா அமைக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. குறைந்தபட்சக் கூலி தமிழ்நாடு முழுவதிலும் கைத்தறி நெசவாளர்கள் கூட கட்கிறார்கள். An indust y or establishment which is not in a position to pay minim m wages, has no r ght to exist. குறைந்த பட்சக் கூலியை கொடுக்க முடியாத நிறுவனம் இயங்குவதற்கே உரிமையில்லை என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்





கிறது. எனவே குறைந்தபட்ச ஊதியம் கொடுத்தே ஆக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் அரசு நிர்ணயித்த விவசாயக் கூலியை வாங்கித் தருவதற்காக முயற்சியிலே ஈடுபடுங்கள்; அதற்கு வேண்டிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அரசே வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும் அதற்கு மேலும் முடியவில்லையென்றுச் சொன்னால் அரசு தன்னாலான முயற்சியைச் செய்யும். அது இடைக்கால ஏற்பாடு. முழுமையாக இந்தச் சட்டம் எப்படியும் செயல்படுவதற்கு வேண்டிய சட்டத்தைக் கொண்டு வருவது அல்லது ஒரு அமைப்பை ஏற்படுத்துவது என்பதைப்பற்றி இந்த அரசு தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தனித்துறையையே அரசு இதற்காக ஏற்பாடு செய்ப்போவதாக ஆலோசனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதே சட்டமன்றத்தில் அமைச்சரவர்கள் முன்பு எங்களுக்குப் பதில் சொல்லும்பொழுது, ரெவின்யூ இலாக்காவில் இருப்பவர்கள் இந்தக் கூலியை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு நான்கைந்து மாதங்கள் செய்து பார்க்கட்டும். அது சரியாக அமையவில்லையென்றால் தொழிலாளர் துறையே இதை எடுத்து நடத்துவதா இல்லையா என்று யோசிப்பதாகக் கூறினார்கள். இப்பொழுது தனித்துறையே வேண்டுமென்று சொல்கிறார்கள். தனித் துறையை வேண்டுமானால் உண்டாக்கட்டும். பென்ஷன் உள்பட கொடுப்பதற்குத் தனிச் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்தால் மிகப் பெரிய சந்தோஷம்தான். அப்படிப்பட்ட மூவ் இருக்கிறதா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அப்படி வருகின்ற வரையில் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற 8 ரூபாய், 10 ரூபாய்கூட கிடைக்காத நிலையில் அந்தத்தொகையாவது கிடைப்பதற்குத் தொழிலாளர் இலாக்காதான் கரெக்டாக புரிந்து கொண்டு செய்ய முடியும் என்ற முறையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்பொழுது அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்கிறேன் என்று நான் சொன்னேன்.

I do not swallow my words, now. இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் கருத்துக்கள் எப்பொழுதும் அப்படியே இருந்துவிடக் கூடாது. "My inccnsistencies" என்று இராஜாஜி அவர்களே ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். முதலிலே சொல்லப்பட்டது என்பதற்காக அதையே செய்வது என்பது அல்ல. காலப்போக்கில் ரீ திங்கிங் ஏற்பட்டு மறுபரிசீலனை

செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும். இந்தக் குழுவை அமைத்த பிறகு அது பரிந்துரை செய்திருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரையை நான் பரிசீலனை செய்யமாட்டேன் என்று சொல்லக்கூடாது. தனி விவசாய தொழிலாளர் நலத் துறையை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி பரிசீலனை செய்கிறோம். அதை தவிர மாண்புமிகு முதல்வரவர்களின் மனத்தில் பெரிய திட்டம் இருப்பது மாதிரியும் தெரிகிறது. இதைப் பரிசீலனை செய்து விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்கு நாம் எல்லோரும் முயற்சியெடுப்போம்.

### சேலம் நகர பாதாள சாக்கடைத் திட்டம்.

*வினா எண். 112—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் தற்போதய நிலை யாது?

(ஆ) திட்ட மதிப்பீடு எவ்வளவு? திட்ட வேலை எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) சேலம் பாதாள சாக்கடை திட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 12 கோடிக்கு அரசு தனது 8–3–83 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண் 386ல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 6 ஆண்டுகளில் முடிக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்ட வேலைகளை நிறைவேற்றும் பணி வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா அல்லது சேலம் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, குடிநீர் கொடுக்கும் வேலைக்கான ஏற்பாட்டைச் செய்வது குடிநீர் வடிகால்வாரியம் தான்; ஆனால் நில ஆர்ஜிதம் போன்ற வேலைகள் என்று வரும் பொழுது ஒவ்வொரு இலாக் காவும் செய்ய வேண்டும், இந்த திட்டத்தைப் பொறுத்த வரையில், சுட்ட மண் குழாய்களை வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திட மிருந்து கடன் வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. திட்டத்தை தொடங்குவதற்கு மத்திய பொது சுகாதாரக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. இதற்கான பணியாளர்கள் அமர்த்தப்பட்டதும் நில ஆர்ஜிதத்திற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும்.



திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் நகர பாதாள சாக்கடைத் திட்ட மானது இப்பொழுது உள்ள நகர எல்லைக்குள் மட்டும்தான் செயல்படுத்தப்படுமா அல்லது சேலம் மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று அறிவிக்க படுகிறதே, அப்படி விஸ்தரிக்கப் படும் பகுதிகளுக்கும் இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் அமுலாக்கப்படுமா? அதே நேரத்தில் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலம் கையகப்படுத்துவதைப் பற்றித்தான் நான் சொல்லேன். அதற்கான பணியாளர்கள் அமர்த்தப்பட்டதும் அந்தப் பணி மேற்கொள்ளப்படும். சேலம் நகரப் பாதாள சாக்கடைத் திட்டமானது சேலம் நகராட்சிப் பகுதியின் எல்லைக்குள் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், சுற்றுப்புறப் பகுதிகளான பேர்லேண்ட், அழகாபுரம், சுவர்ணபுரி, மெய்யனூர் போன்ற பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் வளர்ந்து வருகின்ற பகுதிகளாகும். அவைகளும் பிறகு சேலம் நகராட்சியின் எல்லைக்குள் சேர்க்கப்படுமானால் அந்தப் பகுதி களுக்கும் பயனளிக்கும் வகையில் மேற்கண்ட திட்டத்தின்கீழ் குழாய்கள், பெரும் கழிவுநீர்க் குழாய்கள் மாற்றப்படாமல் செயல்பட திட்டமிட்டுச் செய்யப்படும்.

திரு. செ. செம்மலை மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்தத் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூபாய் 12 கோடி என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்தத் திட்டத்திற்கான செலவை சேலம் நகராட்சியே முழுவதையும் ஏற்றுக்கொள்கிறதா அல்லது அரசு மானியம் ஏதாவது தருகிறதா? இந்தத் திட்டத்தின் மூலம் வெளியேற்றப் படும் கழிவு நீரை எந்த முறையில் வெளியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இல்லை. முதல் கேள்வியினைப் பொறுத்த வரையில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பணம் கடன் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முன்னதாகவே சொல்லி இருக்கிறேன்.

### ஈரோடு நகர குடிநீர் வசதியை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண் 113 திரு.ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பெரியார் மாவட்டம் ஈரோடு நகரத்தில் தற்போதைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஈரோடு நகரத்தில் குடிநீர் வசதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ரூ.272 லட்சம் மதிப்பீட்டில் ஓர் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் தந்துள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் நடந்து வருகின்றன.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடந்து வருகின்ற இந்தத் திட்டப் பணிகள் முடிவடைவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே இந்தப் பணியினைப் பொறுத்தவரையில் பகிர்மான குழாய்களைத் திருத்தி அமைத்தல் மற்றும் விரிவாக்குதல் ஆகிய இந்த வேலை 90 விழுக்காடு முடிந்திருக்கின்றது. நீர் சுத்திகரிக்கும் நிலையப்பணி 40 விழுக்காடு முடிந்திருக்கின்றது. பகிர்மான குழாய்கள் புதைக்கும் பணி 89 விழுக்காடு முடிந்திருக்கின்றது. தலைமையிடப் பணிகளில் 70 விழுக்காடு வேலை முடிந்திருக்கின்றது. நீர் இறைப்பான் நிறுவுதல் வேலை 95 விழுக்காடு முடிந்திருக்கின்றது. இந்தப் பணிகள் எல்லாம் 1984-85—க்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரையில் 223.85 இலட்சம் ரூபாய் இதற்காக செலவழிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஈரோடு நகரம் வளர்ந்து வரும் ஒரு நகரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே ஈரோட்டு நகரத்திலே செயல் படுத்தப்பட்டு வருகின்ற இந்தக் குடிநீர்த் திட்டத்தை ஈரோடு நகரை ஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கின்றதா? அப்படி விஸ்தரிக்கும் திட்டம் இருந்தால் அதற்கென ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அந்தத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தத் திட்டம் ஈரோட்டுக்காகத்தான். அதிலே எங்களுக்கு ஒரு பயம் இருக்கின்றது. அதாவது அந்த நகராட்சியினுடைய தற்போதய மக்கள் தொகை 1 இலட்சத்து 42 ஆயிரம். 1991 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் முறையே 1 இலட்சத்து 80 ஆயிரம், 2 இலட்சத்து 80 ஆயிரம் என்று அதிகமாக ஆகும் என்று அச்சப்படுகிறோம். அப்படி ஆகாத நிலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் அக்கறை காட்ட வேண்டும். அப்போதுதான் இந்தத் திட்டத்தின் மூலமாக ஒருவருக்கு 125 லிட்டர் குடிதண்ணீர் கொடுக்க முடியும் என்று கருதுகிறோம். மக்கள் தொகை அதிகமாகி விட்டால் ஒருவருக்கு 75 லிட்டர்தான் கிடைக்கும். எனவே குடும்பக் கட்டுபாடு விஷயத்தில் அக்கறையாக இருந்தால் இதற்கு பெரும் உதவியாக இருக்கும். இந்தத் திட்டத்தினை இப்போது விரிவாக்கும் திட்டம் இல்லை.



தொழிற்சாலை தொடங்க ஆய்வு செய்ய ஆகும் செலவு

*வினா எண் 114—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தொழிற்சாலை தொடங்க ஆய்வு செய்ய ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தமிழ்நாடு அரசின் முகவரமைப்பாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் தொழில் துவங்குவதற்கான ஆய்வு அறிக்கையை அதற்கான செலவில் 10 சதவீதத்தை பெற்றுக் கொண்டு அளிக்கிறது. தொழில் முனைவோர் திட்டத்தை நிறைவேற்றியதும் ஆய்வு அறிக்கைச் செலவில் 40 சதவீதம் கடனாக மாற்றப்படுகிறது. எஞ்சிய 50 சதவீதம் மானியமாகக் கருதப்படும்.

தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி ரகங்கள்.

*வினா எண் 115—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து என்னென்ன கைத்தறி ரகங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு?

(இ) 1980–1981, 1981–1982-ம் ஆண்டுகளில் கிடைத்த லாபம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) ரியல் மெட்ராஸ் கைக்குட்டைகள், மெட்ராஸ்—செக், டவல்ஸ், நாப்கின்ஸ் மற்றும் தயாரிக்கப்பட்ட இரகங்களாகிய தலையணை உரை, திரைச்சீலைகள் போன்றவைகள், கைலி இரகங்கள், ஆடைகள், பட்டுத் துணிகள் முதலானவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

(ஆ) 1980-81-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு ரூ. 1[illegible]1.06 கோடி ஆகும். 198[illegible]–82-ல் ரூ. 102.98 கோடி ஆகும்.

(இ) கைத்தறி துணியின் ஏற்றுமதி மூலம் வரும் இலாபம் அந்தந்த ஏற்றுமதியாளர்களைச் சார்ந்தது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர்களிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அதிகமான விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே கைத்தறி நெசவாளர்களுக்குப் போதிய இலாபம் கிடைக்கும் வகையில் அவர்களுக்கு அதிக விலை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 அக்டோபர் 31

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு கூட்டுறவுத் துணிகள் ஏற்றுமதி செய்வதற்கென கோவாப்டெக்ஸில் ஒரு தனிப்பிரிவு 'கோவாப்டெக்ஸ் இன்டர்நேஷனல்' என்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாக வெளிநாடுகளுக்குக் கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதுபோன்று எந்த ஒரு குறிப்பிட்ட சங்கத்திடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு இருக்கிறது என்கிற தகவல் கொடுத்தால், அது பற்றி விசாரிக்கப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் தனியார் துறை மூலமாகத் தான் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் காரணமாகத் தனியார் துறைக்கு அந்த லாபம் செல்கிறது. ஆகவே, அரசே கூட்டுறவுத் துறையின் மூலம் ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா? மேலும், ஏற்றுமதி செய்வதற்கென புதிய புதிய ரகங்களைக் கண்டுபிடிக்க வடிவமைப்பு நிலையங்கள் ஏற்படுத்தவும், அதன் மூலமாகப் புதிய புதிய ரகங்கள் தயாரிக்கவும், அவற்றை ஏற்றுமதி செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற கைத்தறித் துணியில் நான்கில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் இருந்து அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, கோவாப்டெக்ஸில் தனிப்பிரிவு ஒன்று 'கோவாப்டெக்ஸ் இன்டர்நேஷனல்' என்று ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தனியார் துறையினர் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வதற்காக தனியாக எக்ஸ்போர்ட் லைசென்சு எடுத்துக்கொண்டு ஏற்றுமதி செய்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் தயாரிக்கப்படுகின்ற கைத்தறித் துணிகளை வாங்கி அதிக அளவில் ஏற்றுமதி செய்ய ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்காண்டு இந்த அளவு அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு நம்முடைய (டார்கெட்) நோக்கம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே புதுப்புது டிசைன்களைக் கண்டுபிடிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வெளிநாடுகளில் என்னென்ன ரகங்களை மக்கள் விரும்புகிறார்களோ அந்த ரகங்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



1983 அக்டோபர் 31]

இளையான்குடி, திருவாடானை தாலுக்காக்களில் பெரிய தொழில்கள் தொடங்கும் திட்டம்.

*வினா எண் 116 திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி, திருவாடானை ஆகிய தாலுக்காக்களில் ஏதாவது பெரிய தொழில்கள் தொடங்க அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி, திருவாடானை ஆகிய தாலுக்காக்களில் பெரிய தொழிற்சாலைகளைப் பொதுத்துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ தொடங்க தற்போது அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. தனியார் துறையில் தொழிற்சாலைகளைத் தொடங்க யாரேனும் முன்வருவார்களானால் அவர்களுக்குப் போதிய சலுகை அளிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி, திருவாடானை ஆகிய இடங்களில் தொழில்களைத் தொடங்க யாரும் முன் வராததால், அங்கே தொழில் தொடங்க திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பிற்பட்ட பகுதி. திருவாடானை, இளையான்குடி போன்ற பகுதி வறட்சியால் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அங்குள்ள மக்கள் தஞ்சையை நோக்கிச் செல்லும் நிலைமை இருந்தது. தற்போது தஞ்சையும் பஞ்சையாகி விட்டது. இப்படிப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் அரசே புதிதாக ஏதேனும் தொழில் துவங்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் கவனிக்கப்படாமல் இருந்து வருகிற மாவட்டமாக இருந்ததை உணர்விலே கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னால், கிழக்கு இராமநாதபுரம் மானாமதுரையில் ஒரு பெரிய தொழிற்பேட்டை 600 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு, அதிலே 13 தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. மின் வெட்டு கடுமையாக இருந்த நேரத்தில்கூட அந்தத் தொழிற்பேட்டைக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு அளித்து அங்கே தொழில்கள் தொடங்கப்பட்டன. சுமார் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்து தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு, பல தொழில்கள் அங்கே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

அடுத்து, கடலோரப் பகுதியில் திருவாடானை பகுதியில் ஓரியூர் என்ற இடத்தில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் சார்பில் சுமார் 100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், 25 லட்சம் செலவில் 100 விசைத் தறிகள் கொண்ட ஆலையைத் தொடங்க இருக்கிறோம். இது ஒன்றுதான் அரசுத் துறையிலே அரசின் சார்பிலே ஏற்படுத்தப்படும் தொழிற் சாலையாகும். ஆனால் பஞ்சாலைகளைத் துவங்க பல தனி யார்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்தப் பகுதியில் காரைக்குடி, தேவக் கோட்டை பகுதியில் நகரத்தார், நாட்டுக்கோட்டை செட்டி யார் பல பேர் வசதியோடு இருக்கிறார்கள். அவர்களில் யாரேனும் தொழில் தொடங்க முன்வருவார்களானால் அதற்கு ஊக்கம் அளிக்க அரசு தயாராக இருக்கிறது. ஏற்கனவே அந்தப்பகுதியைப் பிற்பட்ட பகுதி என்று அறிவித்து பல சலுகைகளைத் தந்து இருக்கிறோம் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மானா மதுரையில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டு இருப் பதாகச் சொல்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியான இளையான்குடி 40 மைல் நீளத்திலும், 20 மைல் அகலத்திலும் இருக்கிறது. அந்தத் தொகுதி மிகவும் பாலைவனமாக இருக் கிறது. சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிலும் ஆரம்பிக்கவில்லை. ஆகவே, அரசே ஏதேனும் புதிதாகத் தொழில் ஆரம்பிக்க முன் வருமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் ஏதேனும் தொழில்கள் ஆரம்பிக்கப்படுமானால், அப்போது உறுப்பினரின் உணர்வுகள் அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

### சென்னையில் கற்களை மெருகேற்றும் புதிய நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 117—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) சென்னையில் கற்களை மெருகேற்றும் புதிய நிறுவனம் ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில் மேற்படி நிறுவனம் எப்பொழுது ...ரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1984–85-ம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட் டுள்ளது.

### பெருந்துறை வட்டம் வேட்டுப்பாளையத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை திறக்கும் திட்டம்.

*வினா எண் 118—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) பெருந்துறை வட்டம் வேட்டுப்பாளையத்தில் கால் நடைக் கிளை மருத்துவமனை திறப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், ஈரோடு கோட்டம், காஞ்சிகோயில் என்னுமிடத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்தப்பட்டதால், அங்கு ஏற்கனவே செயல்பட்டு வந்த கிளை நிலையத்தை பெருந் துறை வட்டம், பெரியவேட்டுப்பாளையத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, புதிதாக அங்கே கால்நடை கிளைநிலையம் தொடங்குவது பற்றிய செயற்குறிப்பு உள்ளதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் செயற்குறிப்பு எப்போது செயலுக்கு வரும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் 13-10-1983 அன்று அதுபற்றிய செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மிக விரைவில் நடவடிக்கை எடுக் கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, இது செயலுக்கு வரும்போது அங்கே புதிதாக இடம் வேண்டுமென்று கேட் கிறார்கள். அப்படிப் புதிதாக ஆரம்பிக்கும் ஊரில் இருக்கிற வர்கள் இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்று அரசாணை ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, புதிதாக இடம் வாங்கிக் கொடுத்தால் நிச்சயமாக அந்த இடத்தில் கிளை நிலையம் அமைக்கப்படும். இல்லையென்றால் ஊராட்சி ஒன்றியக் கட்டிடமோ அல்லது வாடகைக் கட்டிடமோ கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்த

இடத்தில் நிச்சயமாக கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் மேலும், இன்றைக்கு புதிய கிளை நிலையங்களின் ஆரம்பிக்கக்கூடாது என்று அரசு ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்படும்போது அந்தக்கிளை நிலையங்கள் பக்கத்தில் இருக்கிற கிராமங்களுக்கு நிச்சயமாக மாற்றப்படும்.

பார்வையற்ற பெண்களுக்காகப் புதிதாக அரசு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 119—திரு. சி. கணேசன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பார்வையற்ற பெண்களுக்காக அரசு உயர்நிலைப் பள்ளி தமிழகத்தில் எங்கேனும் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; (அ) தமிழகத்தில் பார்வையற்ற பெண்களுக்காக புதிதாக அரசு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முதியோர் உதவித் தொகை பெறும் நபர்கள் எண்ணிக்கை.

*வினா எண் 120—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித்தொகை பெறும் நபர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களில் எத்தனை பேர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 31–3–1983 முடிய 1,97,103 நபர்கள்.

(ஆ) 15-3-1983-ல் 1,68,945.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, தகுதி இருந்தும் இந்தத் தொகையைப் பெறமுடியாமல் பலர் இருப்பது அரசுக்குத் தெரியுமா? தகுதியுள்ள பலர் 'வெயிட்டிங் லிஸ்டில்' வைக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் அவர்கள் இந்த உதவித் தொகையை பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் தகுதிபடைத்த அத்தனை பேர்களுக்கும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, தகுதி பெற்றவர்களுக்கு அரசு சலுகைகளை வழங்கி வருகின்றது இருந்தாலும் இன்றைக்கு இந்த உதவியைப் பெற நிலைவையில்



இருக்கின்ற நபர்கள் என்று அனைக்கிறபோது அவர்கள் நலனையும் அரசு கருத்தில் கொண்டிருக்கிறது. நிதிநிலையின் காரணமாக எல்லோருக்கும் உடனடியாக வழங்க முடியவில்லை. அதிகமான நிதியை ஒதுக்கிக்கொடுத்தால் நிச்சயமாக தமிழ்நாட்டில் தகுதி வாய்ந்த முதியோர் அத்தனைபேர் இருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கின்ற வாய்ப்பு அரசுக்கு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.10).

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற முதியோர்களுக்கு உதவி செய்வதற்கு அரசில் வேறு ஏதாவது புதிய சிறப்புத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் குறிப்பிட்டதைப்போல அந்த அடிப்படையில்தான் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நிர்க்கதியாக இருக்கின்ற இந்த முதியோர்களுக்கு உதவி வழங்குவதென்பது எனியும் நீண்ட நெடுநாட்களாக நாம் கொண்டு வந்திருக்கின்ற திட்டம். இப்போதுள்ள அடிப்படையில் நான் அறிந்த வரையில் இப்போது ஓய்வூதியம் வாங்குகின்ற முதியோர்களில் யாராவது ஒருவர் இறந்தால்தான் புதிதாக வேறொருவருக்குக் கொடுக்க முடியும் என்ற நிலை இருப்பதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே நிதி அதிகம் கிடைப்பார்களானால் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க முடியும் என்ற கருத்துப்படி சொன்னதாக அறிகிறேன். ஆகவே இந்தத் துறையின் அமைச்சராக இருக்கக்கூடிய அவர்கள், இந்தக் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து அனைவருக்கும் தொடர்ந்து கொடுக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இப்படி உதவியை வேண்டி நிற்கும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால் அந்த எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களின் நிலையைக் கவனிப்பதற்காகத்தான் சமூக நலத்துறையே இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் வாயிலாகத்தான் நாங்கள் அவர்களுடைய நலனைப் பாதுகாத்து வருகிறோம். இந்த வகையில் சமூக நலத்துறை அதிக நிதி வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. நிதித் துறை அதிக நிதியை ஒதுக்கீடு செய்யுமானால் (குறுக்கீடு) நாங்கள் கேட்டிருக்கிறோம். நிதி அமைச்சர் அவர்களிடம்கூட கேட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் உண்ணாவிரதம் இருப்பது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிக்க தலைவர் அவர்களே, சென்னை மற்றும் தமிழகத்தில் பல ஆண்டுகளாகக் குடிமனைப்பட்டா வழங்கப்படவில்லை என்றும், ஹரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுப்பது 1980 ஆம் ஆண்டிலிருந்து எடுக்கப்படவில்லை என்றும் மேலும் இலவசமாக வீடுகட்டிக் கொள்ளக் கொடுக்கும் தொகையைக் குறைத்து இருக்கின்ற காரணத்தாலும், மேலும் ஆதி திராவிட மக்களுக்கு இன்றைக்கு இருக்கும் பல்வேறு கோரிக்கைகளை முன்னாலே வைத்து எங்கள் கட்சியைச் சேர்ந்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் இன்றைக்கு ஆயிரம் பேர்களுடன் குறளகம் முன்னாலே உண்ணா விரதம் இருந்து கொண்டு இருக்கிறார்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய தொகுதி மக்களாலே, குறிப்பாக ஆதிதிராவிட மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு வந்திருக்கிறார். (குறுக்கீடு) உரிமையைப் பெறுவதற்காக சட்ட மன்றத்திற்குள்ளே வந்துவிட்டு இங்கே அந்தப் பிரச்சினைகளை எழுப்பாமல் வெளியே சென்று உண்ணாவிரதம் இருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) மன்றத்திலேயே இருந்து கொண்டு பல வகையிலும் கவனத்தை ஈர்க்கலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### காவல் துறையினர் மதுரை ஆதீன மடத்தில் சோதனையிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. நெடுமாறன், மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம், எஸ். என். இராமசாமி, சு. பாலன், ரா. கிருஷ்ணன், என். பழனிவேல், எஸ். இராசாராமன், அன்பில் தர்மலிங்கம், என். வி. என். சோமு, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் "மதுரையில் திருஞானசம்பந்தர் ஆதீன மடத்தில் போலீஸ் சோதனை நடை பெற்றதனால் பொதுமக்கள் மத்தியில் நிலவும் பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1983 அக்டோபர் 31]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
நம்முடைய தமிழகத்தின் வரலாற்றில் இதுவரை இல்லாத
வகையிலே ஒரு மடத்திற்குள்ளே போலீஸ் புகுந்து சோதனை
போட்ட நிகழ்ச்சி அண்மையிலே நடைபெற்றிருக்கிறது.
மதுரையிலே இருக்கக்கூடிய திருஞான சம்பந்தர் மடாலயத்தில்
சென்ற 23-10-1983 அன்று போலீஸ் புகுந்து உள்ளே சோதனை
யிட்டு அவர்கள் சில பொருள்களை எடுத்திருக்கிறார்கள். அது
என்னென்ன என்பதை நான் உங்கள் கவனத்திற்கு வைக்க
விரும்புகிறேன். ஏர் கன் பெரியது ஒன்று; ஏர் கன் சிறியது
ஒன்று; ஏர் கன் டைப் பிஸ்டல் ஒன்று, பெரிய புல்லட்ஸ் 4; சிறிய
புல்லட்ஸ் 8. பீகாக் அரக்கு கலர் பிரான்ட் பைல் ஒன்று; பீகாக்
அரக்கு கலர் பைல் ஒன்று; திருச்செந்தூர் குடமுழுக்கு விழா,
மதுரைச் சம்பவங்கள் என்ற தலைப்பிட்டுள்ளது. இது அந்தப்
போலீஸ் அதிகாரியே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் ஒரு
அத்தாட்சிக் கடிதம். ஆக அந்த மடத்தில் சட்ட விரோதமான
சாமான்கள் எதுவும் இல்லை. அதிலும் ஏர் கன் வைத்துக்
கொள்வதற்கு எந்த லைசென்சும் தேவையில்லை. அப்படிப்பட்ட
ஏர் கன், ஏர் பிஸ்டல்கள்தான் அங்கேவைக்கப்பட்டிருக்கின்றன.
அதிலும் மதுரை மடாலயத்தில் புகுந்து எந்தப் போலீஸ் சோதனை
போட்டது என்று சொன்னால், மதுரை போலீஸ் சோதனை
போடவில்லை. திருச்சியிலேயிருந்து போலீஸ் வந்து சோதனை
போட்டிருக்கிறது. ஏன் திருச்சியிலேயிருந்து போலீஸ் வரவேண்டிய
அவசியம் ஏற்பட்டது என்பதையும் நான் இந்த அவையின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திருச்சியிலே இதற்கு
முந்திய வாரம் நடைபெற்றக் கூட்டத்திலே மதுரை ஆதீனகர்த்தர்
அவர்களும் திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு.
வீரமணி அவர்களும் உரையாற்றியிருக்கிறார்கள். அதே நாளில்
திருச்சியில் நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
அவர்கள் அங்கே இருந்து இருக்கிறார்கள். அவருடைய
உத்தரவின் பேரில்தான் திருச்சி போலீஸ் இதிலே தலையிட்டு
இந்தச் சோதனையை நடத்தியதாக மதுரை ஆதீனகர்த்தர்
நம்முடைய முதலமைச்சருக்கு தந்தியும் அனுப்பியிருக்கிறார்கள்.
அந்தத் தந்தியின் நகலும் என்னிடம் இருக்கிறது. மதுரை
மடாலயத்திலே என்ன காரணத்தினாலே ஏர் கன் வைக்கவேண்டிய
அவசியம் வந்தது என்பதையும் நான் உங்களுக்கு சொல்லியாக
வேண்டும். சென்ற மே மாதத்தில் திருச்செந்தூர் குடமுழுக்கு
விழாவிலே நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
அவர்களுக்கும் மதுரை ஆதீனகர்த்தர் அவர்களுக்கும் ஒரு சர்ச்சை
ஏற்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து மதுரை ஆதீனகர்த்தர்
அங்கே திருச்செந்தூரிலே எந்த அறையிலே தங்கியிருந்தாரோ
அந்த அறையை ஆளும் கட்சியினர் அடித்து நொறுக்கியிருக்
கிறார்கள். அதற்கு மறுநாள் மதுரை ஆதீனகர்த்தர் தன்னுடைய
அலுவலகத்தில் இருக்கும்போதும் மதுரையில் அன்றைக்கும் அற
நிலையத்துறை அமைச்சர் அவர்கள் இருந்திருக்கிறார்கள்.
அன்றையதினம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதுரை
மடாலயத்திலே புகுந்து சோடா பாட்டில்களை எல்லாம் எறிந்து
அங்கே சேதம் விளைவித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம்

போலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. இந்தச் சூழ்நிலையிலேதான் மதுரை ஆதீனகர்த்தர் தன்னுடைய பாதுகாப்பிற்காக அவ்வாறு, ஏர் கன் ஒன்றும், ஏர் பிஸ்டல் ஒன்றும் வைத்திருக்கிறார்கள். அதையும் அவர்கள் உபயோகப்படுத்தவில்லை. அதற்கு என்று ஒரு வாட்ச்மேனைப் போட்டிருக்கிறார்கள். அவருடைய பொறுப்பிலே தான் அவைகள் இருக்கின்றன. ஆகவே ஒரு ஆதீனகர்த்தரைத் தொடர்ந்து தாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன அவருடைய மடம் தாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எங்கே சென்று தங்குகிறார்களோ அந்த இருப்பிடம் தாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வேறு வழியில்லாமல் தன்னுடையபாதுகாப்பிற்காகசிலரை வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. பாதுகாப்பிற்காக இருக்கும் காவலருக்கு ஒரு ஏர் கன்னும், ஒரு பிஸ்டலும்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது, அதற்கு அரசாங்கத்தின லைசென்ஸ் அனுமதி தேவையில்லை. யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். மதுரை ஆதீனகர்த்தர் ஏதாகிலும் மதத் துவேஷம் செய்கிறாரா? அப்படிச் செய்திருந்தால் நீங்கள் நடவடிக்கை எடுப்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஒரு மதத்திற்கும் இன்னொரு மதத்திற்கும் சண்டை மூட்டும் வகையிலே எந்தக் காரியத்தை யாவது செய்கிறார் என்றால் நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.

(முற்பகல் 10-20)

ஆனால் மதவெறி பிரச்சாரமோ, மதத்துவேஷப் பிரச்சாரமோ அவர் செய்யவில்லை. இலங்கை தமிழர்கள் பிரச்னையில் அவர் உணர்வு பூர்வமாக ஈடுபட்டு, இலங்கை தமிழர்கள்பால் அனுதாபம் திரட்டுகிற முறையிலே, ஆதரவு திரட்டுகிற முறையிலே பிரச்சாரத்தில் இறங்கி தம்மை முழுமையாக அதில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு ஒரு மடாதிபதி, இலங்கை தமிழ் மக்கள் பிரச்னைக்காக முச்சந்தியிலே வந்து, உண்ணாவிரதம் இருந்த காட்சியை, அவர் மூலமாகத்தான் தமிழகம் முதன் முதலாகக் கண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து அவர் செய்கிற பிரச்சாரத்தை உணர்வு பூர்வமாக செய்து வருகிறார். அவர் பேசுவதிலே எந்தத் தவறும் இருப்பதாக எனக்குப் புரியவில்லை. தமிழகமும் அப்படி நினைக்கவில்லை. அப்படி அவர் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பேசுவது தவறு என்று சொன்னால், அதே தவற்றை, இந்த மாமன்றத்திலே இருக்கக் கூடிய அமைச்சர்களும் செய்திருக்கிறார்கள், எதிர்க் கட்சி வரிசையில் இருக்கக்கூடிய என்னைப் போன்றவர்களும் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்கள் எல்லோர் மீதும் இந்த அரசாங்கம் வழக்குகளைப் போடவேண்டும்.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய நிலைமை என்ன? இலங்கையில் நடைபெறுகிற சம்பவங்களை கண்டு 5 கோடி தமிழர்களும் கொதித்துப் போயிருக்கிறார்கள். கட்சி, இன மத

வேறுபாடு இன்றி இதிலே அனைவரும் ஒன்றுபட்டு, தமிழர்கள் என்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய வேளையிலே, இந்தப் பிரச்னைக்கு தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டிருக்கிற மதுரை ஆதீனகர்த்தாவைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தின் சார்பில் போலீசை வைத்து மடத்தை சோதனைப் போடுவது, அவரை மிரட்டுவது, ஆளும் கட்சியினர் அவரை தாக்குவது, அவருடைய மடத்தை தாக்குவது போன்ற காரியங்களைச் செய்வதெல்லாம், அவருக்கு எதிராகவோ, அந்த மடத்திற்கு எதிராகவோ செய்யப்படுகின்ற செயல்களாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக இந்த நாட்டில் உருவாகி வருகிற தமிழ் உணர்வுக்கு எதிரானவையே ஆகும் அது என்றுதான் நான் கருதுகிறேன். அதை அந்த வகையிலேதான் நான் கருத வேண்டியிருக்கிறது என்று வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இலங்கையிலிருந்து தப்பி வந்திருக்கிற ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு அந்த மடத்திலே இடம் கொடுத் திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, இருக்க இடம் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்துகொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில் இந்த அளவுக்கு அவர் ஈடுபட்டு உதவிகள் செய்துவருவதை இந்த அரசாங்கம் நிச்சயமாக பாராட்டியிருக்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆனால் பாராட்டுவதற்கு பதில், அவர்மீது இன்றைக்கு பழி வாங்குகிற முறையிலே வழக்குகள் தொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்வது மிகவும் வருந்தத்தக்கது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். யாரோ ஒரு அமைச்சருக்கு தனிப்பட்ட முறையிலே அவர்மீது ஆத்திரம் இருக்கிறது என்பதற்காக அவர் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழிகளிலே இந்த ஆட்சி ஈடுபடுவது என்பது சரியானது அல்ல. அந்த மடத்திலே இருந்த குடமுழுக்கு சம்பந்தமான ரிக்கார்டுகள் அடங்கிய பைல்களை போலீசார் எடுத்துச் சென்றிருப்பதாகக் கூறுகிறார்கள். எதற்காக எடுத்துக் கொண்டு போனார்கள்? திருச்செந்தூரிலே நடை பெற்ற குடமுழுக்கு விழாவைப் பற்றியும், மதுரை மடம் தாக்கப் பட்ட சம்பவம் குறித்தும் தமிழகத்திலே இருக்கிற ஆயிரக் கணக்கான மக்கள் அவருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள், அவருக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்து. அந்தக் கடிதங்கள் அடங்கிய பைலை போலீசார் எடுத்துக் கொண்டு போயிருக் கிறார்கள்.

விளைவு என்ன? யார் யார் அவருக்கு ஆதரவு தெரிவித்து கடிதங்கள் எழுதினார்களோ அவர்களை, தமிழ்நாடு பூராவும் உள்ள மக்களில் இப்படிப்பட்ட கடிதங்கள் எழுதியவர்களை, அந்தந்தப் பக்கத்திலே இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் மிரட்டியிருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து இதுபோன்ற காரியங்களிலேயே இந்த அரசாங்கம் ஈடுபடுவது என்பது எந்த வகையிலே நியாயமானது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழுக்காகத்தான் இருக்கிறோம் நாங்கள் என்று சொல்லுகிறீர்கள். இலங்கை தமிழர்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் இப்படிப்பட்ட செயல்களைப் பார்த்தால், நீங்கள் சொல்வதற்கும், செயல்படுவதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இலங்கை நாட்டின் அதிபராக இருக்கக்கூடிய ஜெயவர்தனே அவர்கள் அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் தமிழ் உணர்வோடு இருக்கிறார்கள் என்பதற்காக, இலங்கை வாழ்தமிழர்களுக்கு ஆதரவாக அங்கே இருக்கக்கூடியவர்கள் அத்தனை பேர்கள் மீதும்.... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. மா சின்னராசு): உறுப்பினர் அவர்கள் பிரச்சினையை விரிவாகக் கொண்டு போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் கொடுத்துள்ள பொருளின் மீது மட்டும் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்

திரு. ப. நெடுமாறன். இலங்கை அரசாங்கம், தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்று, இலங்கையில் இருக்கிற கிறிஸ்துவ துறவிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கக்கூடிய மாநில அரசாங்கம் இந்து மத துறவிகள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வகையிலே இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறது என்று சொன்னால், இரண்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். இதிலே மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு ஒரு முடிவு காண வேண்டும். ஒரு தனிப்பட்ட அமைச்சர் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிற குரோத உணர்வின் காரணமாக, மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள் மீது எல்லா வகையிலும் போலீஸ் தலையிட்டு, அவர்மீது வழக்குகளைப் போட்டு, துன்புறுத்துவது என்பது, இந்துமத உணர்வு உடையவர்கள், தமிழ் உணர்வு உடையவர்கள் ஆகிய அத்தனை பேர்களுடைய மனத்தையும் புண்படுத்துகிற விஷயம். அவர் எந்த வகையிலும் விரோதமாகவோ, மத துவேஷப் பிரச்சாரமோ பண்ணவில்லை. அவர் உண்மையான தமிழ் உணர்வோடு பேசுகிறார், செயல்படுகின்றார். எனவே, அவர் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் அத்தனையும் இந்த அரசாங்கம் வாபஸ் வாங்கவேண்டும் என்பதைப் பற்றி இன்னும் விரிவாக விவாதிப்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கக்கூடிய திருஞான சம்பந்தமூர்த்தி மடத்தினுடைய ஆதினகர்த்தா கைதுசெய்யப்பட்டார். அந்த மடத்திற்குள் புகுந்து போலீஸ் அதிகாரிகள் துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள். அவர்மீது கடுமையான வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய தலைவர் திரு. நெடுமாறன் எடுத்துச் சொன்னார்கள். நான் இங்கே இருக்கக்



கூடிய அரசாங்கத்தைக் கேட்க விரும்புவது எல்லாம் இன்றைக்கு கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் எடுத்து பல ஆண்டுக் காலமாகப் பாடுபட்டுவரக்கூடிய ஏழை அரிசனமக்களுக்கும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற சட்டங்கள் இயற்றப்படுகின்ற காலச் சூழ்நிலையில் இன்றைக்கு அந்த சட்டங்களையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு மீண்டும் அந்த மடங்களின் நிலங்களை அந்த ஆதீனகர்த்தாக்களுக்கு கொடுக்கவேண்டுமென்ற கொள்கையை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு ஆதரவாக நேற்றைய தினம் கூட இங்கே இருக்கக்கூடிய இந்து முன்னணி என்ற பெயரால் ஆதரவு ஊர்வலம் சென்னையில் நடைபெற்றது. ஆனால் அதே நேரத்திலே மதுரையிலே இருக்கக் கூடிய ஆதினகர்த்தா அவர்களை கைது செய்திருக்கிறார்கள், அவர்கள்மீது கடுமையான வழக்குகளைத் தொடுத்திருக்கிறார்கள். ஏன் இந்த இரட்டை வேடம் என எங்களுக்குப் புரியவில்லை.

ஒரு பக்கம் மடாதிபதிகளைக் காப்பாற்றக்கூடிய நிலையில் இருக்கிற இந்த அரசாங்கம், இன்றைக்கு தமிழ் உணர்வு எங்களுக்கு அதிகமாக இருக்கிறது, நாங்கள் எதையும் இலங்கைத் தமிழர்களுக்காகச் செய்யத் தயார் என்று சவால் விடக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார்—அந்த நிலங்களை எடுத்து ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதிலே முனைப்புக் காட்ட வேண்டிய தமிழக சர்க்கார்— அந்த மடாதிபதியை கைது செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் தங்களுடைய சொந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக தங்களுக்குள் இருக்கக்கூடிய அரசியல் வெறுப்புணர்ச்சி காரணமாக இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. ஏன் அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அவர்கள் பேசியது திருச்சியில். திருச்சியில் பேசிய பொதுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் படையெடுக்கவில்லையென்றால், நான் செல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, தனக்குப் பாதுகாப்புக்கு வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக் காட்டினார். இப்படி பயங்கரமான ஆயுதங்களை வைத்து இருக்கிறார் என்று அவர் மீது வழக்குகளைத் தொடுத்திருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல. நேற்றைய தினம் உங்களுடைய கழகத்தில் இருந்த, முன்னாள் முரசொலி அடியாரும், நேற்றைய நீரோட்டம் அடியாரும் இன்றைக்கு அண்ணா கழகத்தினுடைய தலைவராகவும் இருக்கின்ற அவரை 6 பாட்டில் சாராயம் வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டில் நீங்கள் கைது செய்திருக்கிறீர்கள். அதே போன்று தூத்துக்குடியிலே பல கொலைகளுக்கு சம்பந்தப்பட்ட ஆயுதங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. மா. சின்னராசு: பிரச்சினையை விட்டு வெளியே உறுப்பினர் போக வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையிலும் இந்த அவையில் பல நடவைகள் விளக்கப் பட்டிருக்கிறது எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏன் கொண்டு வருகிறோம் என்பதற்கான காரணத்தை சால்லவேண்டுமென்றுதான் சொல்கிறோம். வேறு குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்வதற்கு வேறு பல வகைகள் இருக்கின்றன, வழிகள் இருக்கின்றன. அவைகளைச் சொல்லவே கூடாது என்று சொல்லவில்லை, ஆனால் அதற்கான நேரம் இது இல்லை, அதற்கான தன்மைகள் இப்போது இல்லை என்றுதான் கூறுகிறோம். இதைப்பற்றி இப்போது பேசலாம், வேறு பல பிரச்சினைகள் பற்றி கூறுவதற்கு குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கு வேறு வழிகள் இருக்கின்றன, வகைகள் இருக்கின்றன அப்போது சொல்லட்டும் இப்போது வேண்டாமென்றுதான் சொல்கிறோம். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் அப்போதுதான் அது எதிர்கட்சிகளுக்கும் நல்லது, நமக்கும் நல்லது, அடுத்த பிரச்சினைகளை வேகமாக எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் இருக்கும்.

திரு. மு அப்பாதுரை: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நாங்கள் இதைச் சொல்லவேண்டிய தற்கான கட்டாயம், தொடர்ந்து இது போன்ற அரசியல் வெறுப்புக் காரணமாக சொந்தப் பகையின் காரணமாக வழக்குகள் தொடரப்பட்டு வருவது என்பது தமிழகத்தினுடைய ஆரோக்கியமான அரசியலுக்கு சரியில்லாதது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான். இப்படிப்பட்ட நிலைமைகள் தொடரக் கூடாது, இன்றைக்கு ஆதினகர்த்தாக்களுக்கே இந்த நிலை என்றால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் எந்த அளவுக்கு அரசாங்கப் பாதுகாப்புக் கொடுக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இன்றைக்கு தமிழக அரசு தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்யக்கூடிய நிலையில் ஆதினகர்த்தாவை கைது செய்யக்கூடிய நிலையை இந்த அவையில் முழுமையாக விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதுரை ஆதீனம் அவர்கள் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையில் தீவிரமாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக அப்படிப்பட்டவர்கள் சன்னிதானத்தை சோதனையிடுவது தமிழ் ஈழம் வேண்டும் என்று போராடுகிறவர்களை பலவீனப்படுத்தும்



என்பதுதான் எங்களுடைய கருத்து. ஆகவே இங்குள்ள ஆஸ்திகர்கள் மனம் மிகவும் புண்பட்டுள்ளது. இது போன்று அரசுக்கு ஆகாதவர்கள் என்ற அடிப்படையில் மடாதிபதிகளை கைது செய்வதை அரசு விட்டுவிட்டு இது குறித்து இங்கு விவாதிக்க இந்த மன்றத்தினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை ஆதீனம் கைது செய்யப்பட்டு அந்த ஆதீனத் திற்குள் பரிசோதனை நடைபெற்ற விவர களைப்பற்றி பேச இந்த சபையில் இதர நடவடிக்கையை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக் கிறேன்.

மதுரை ஆதீனம் அவர்கள் கைது செய்யப்பட்டது, அங்கு சோதனை செய்யப்பட்டது உண்மையிலேயே வேறு பல உட் கருத்துக்களைக் கொண்டதாக இருக்க முடியுமே தவிர நியாயமான கருத்துக்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சென்ற 17-ம் தேதி திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதீனம் அவர்களும், நானும், திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி அவர்களும் கலந்துகொண்டோம். முதலாவதாக ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை எடுத்துச் சொல்வதற்காக அங்கே ஒரு கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கண்காட்சியை மதுரை ஆதீனம் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதற்குப் பிறகு பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி அவர்கள் வெளிநாடு சுற்றுப்பயணம் செய்து திரும்பியதைப் பாராட்டி திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். மதுரை ஆதீனம் அவர்களும் பேசினார்கள். ஆசிரியர் வீரமணி அவர்களும் பேசினார்கள். அவர்கள் பேசுகிறபோது ஏதோ மக்களுக்கு அச்சத்தை ஊட்டத் தக்க வகையில் பேசியதாக ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக் கிறது. நானும் அவர்களுடைய பேச்சைக் கேட்டேன். அவர்கள் பேசியதற்கு முன்னால் நான் பேசும்போது பெரியார் காலத்தில் இந்து எதிர்ப்புக்கு ஒரு சாமியார் கிடைத்தார் அவர் தான் திரு. குன்றக்குடி அடிகளார். இப்போது ஆசிரியர் வீரமணி காலத்தில் ஒரு ஆதீனம் நமக்கு வந்திருக்கிறது அவர் தமிழ் அறிந்த காரணத்தினால்தான் தமிழன் என்ற உணர்வுபெற்று இருக்கிற காரணத்தினால் தாம்வகிக்கின்ற ஆதீன பதவியைக் கூட பெரியதாக கருதாமல் தமிழனுக்கு எங்கு தொல்லைகள் நேரிட்டாலும், துயரங்கள் நேரிட்டாலும் துறவறத்தை மேற் கொண்ட என் போன்றவர்கள் அதற்கு துணையாக வருவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை உணர்ந்தத் தக்க வகையில் அவர்கள் பேசினார்கள். நானும் அதைப் பாராட்டிப் பேசிய போது குறிப்பிட்டேன். அவர்கள் மேல் 505 சட்டப் பிரிவிலே

ஒரு குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். அங்கே அவர்கள் பேசுகிறபோது யாரும் அதைரியப்படவில்லை. அன்றைக்கு அவருக்கு இருந்த வரவேற்பைப் பார்த்தபோது அரசியல் வாதிகள் கூட்டத்தில் கூட அவ்வளவு கைத்தட்டல்கள் வந்தது இல்லை. எல்லா பக்களும் தைரியத்தோடு இருந்தார்கள். அவர் சொன்னதைப்போல அன்றையும் அவர் அங்கே படை எடுத்துச் சென்று இலங்கையில் இருப்பவர்களோடு போராடுவது என்று சொன்னார்களே தவிர இங்கு இருப்பவர்களை தூண்டுகிற வகையில் அவர் எதுவும் பேசவில்லை. அவர் பேசிய உடனே எதிர் இருந்த கூட்டம் எழுந்து நாங்களும் தயார், நாங்களும் தயார் என்று குரல் கொடுத்தார்கள். யாரையும் அதைரியம் ஊட்டத் தக்க வகையில் அவர் பேசவில்லை. அதற்குப் பேசிய ஆசிரியர் வீரமணி அவர்கள் அவருடைய துணிவைப் பாராட்டி பேசியதோடு மட்டும் அல்லாமல் நீங்கள் எல்லாம் இதற்கு முன்னோடியாக வரத் தேவையில்லை. எனக்குப் பிறகு நீங்கள் வரலாம் என்றுதான் பேசினாரே தவிர, அந்த நோக்கத்தோடுதான் அவர் பேசினாரே தவிர, வேறு வகையிலே அங்கிருந்தவர்களுக்கு அதைரியம் ஊட்டுகிற வகையிலோ, அச்சம் ஊட்டுகிற வகையிலோ, பொது மக்களுக்கு வேறு வகையிலே இன்னல் ஏற்படுத்துகின்ற வகையிலோ பேசவில்லை. 17 ஆம் தேதி அவர் பேசினார். 20 ஆம் தேதி மதுரையிலே நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. காளிமுத்து அவர்களுடைய தம்பியினுடைய திருமணத்திலே கலந்து கொண்டு, அங்கே பாராட்டிப் பேசிவிட்டுத் தான் சென்றிருக்கிறார். அதற்குப் பிறகுதான் ஆதீனம் சோதனை செய்யப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கிடையிலே என்ன நடந்தது என்பதையெல்லாம் தீவிரமாக எடுத்துச் சொல்லி விவாதிப்பதற்காக, இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே மதுரை ஆதீனத்திலே செய்யப்பட்ட சோதனை சம்பந்தமாக, தமிழ்நாட்டிலே பல சந்தேகங்கள் கிளம்பி இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்த மதுரை ஆதீனம் என்ன வேலை செய்கிறது என்ற சர்ச்சைக்குள்ளே நான் எங்கள் கட்சி சார்பிலே நுழைய விரும்பவில்லை, இந்தச் சந்தர்ப்பத்திலே. ஆனால், பொதுவாக என்ன சொல்லப்படுகிறதென்றால், அந்த ஆதீனக் கர்த்தாவைப் பொறுத்த வரையில் அரசுக்கு விரோதமாக, அரசினுடைய கொள்கைகள் பலவற்றை அவர் விமர்சிக்கிறார் என்ற கருத்து மேலோங்கியிருக்கிற இந்த நேரத்திலே, அரசு சார்பிலே திடீரென்று சோதனை செய்யப்பட்டு, சம்பந்தா சம்பந்தமில்லாத பல்வேறு ரெக்கார்டுகள் அங்கிருந்து அள்ளிக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அரசாங்கம் செய்கின்ற காரியங்களை, நடவடிக்கைகளை, அரசியல் ரீதியாக விமர்சிப்பவர்களை, மாற்றுக் கருத்துக்





கொண்டிருப்பவர்களை, அரசாங்கம் பழி வாங்குகிற நிலையை உருவாக்குகிறது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவைபற்றியெல்லாம் நீண்டதாக விவாதம் செய்து, நடந்த நிலவரங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் விவாதித்து, உண்மையான நிலையை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, இதர அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இதுபற்றி விவாதிக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை ஆதீன மடத்தைப் போலிசார் சோதனை போட்டதைப் பற்றியும், காற்றுத் துப்பாக்கிகளையும், சில தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றியது பற்றியும் விரிவாக விவாதிக்க வேண்டுமென்ற முறையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்து அதற்கான காரணங்களைச் சொல்லுகின்ற பொழுது, சிலபல கருத்துக்களையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் திட்பமாகவும் திட்டவட்டமாகவும் செல்லிக்கொள்ள விரும்புகிறேன், எந்த ஒரு ஆதீனகர்த்தாவின்மீதும் இந்த அரசுக்குக் காழ்ப்புணர்ச்சி இல்லை. எந்த ஆதீனகர்த்தாவினுடைய தன்மைகளையும் அரசு அரசியலமைப்புச் சட்டத்திலோ, இப்பொழுதிருக்கிற சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடப்பதற்கு வேண்டுமென்று கருதவும் இல்லை எந்த ஒரு ஆதீனகர்த்தாவினுடைய எதிர்ப்பும் இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடும் என்று நாங்கள் எண்ணவும் இல்லை. எந்த ஒரு ஆதீனகர்த்தாவினுடைய மாற்றுத் தன்மைகளையும் கண்டு இந்த அரசு அஞ்ச வேண்டிய தன்மையோ, அயர்ச்சி அடையவேண்டிய தன்மையோ இல்லை. ஆனால், இந்த அரசு ஆதீனக்கர்த்தாக்களின் மீது—தர்மபுரம் ஆதீனத்தின் மீதோ, திருவாடுதுறை ஆதீனத்தின் மீதோ அல்லது திருப்பனந்தாள் ஆதீனத்தின் மீதோ, அல்லது குன்றக்குடி ஆதீனத்தின் மீதோ காழ்ப்புணர்ச்சி கொண்டு, ஆதீனகர்த்தாக்களை எல்லாம் வேட்டையாட வேண்டுமென்ற எண்ணத்திலும் இல்லை.

அது மட்டுமல்ல, இந்த திருஞான சம்பந்தர் மடத்தைச் சேர்ந்த ஆதீனகர்த்தாவின் மீதும் இதுவரையில் காழ்ப்புணர்ச்சி காட்டவில்லை. இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்னையில் அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறார்கள், என்பதற்காக, இந்த அரசு காழ்ப்புணர்ச்சி கொள்ளவில்லை. பரிந்து பேசுவதை வரவேற்கவும் செய்கிறது, பாராட்டவும் செய்கிறது. இந்த அவையிலே விரிவாகவும், விளக்கமாகவும் நான் பேசுகிறபொழுது, தமிழகத்திலே உள்ள அத்தனை பேர்களுடைய உணர்ச்சிகளும் மதிக்கத்தக்கது என்ற முறையிலே கருத்துக்களைச் சொல்லி, அவர்களுக்கெல்லாம் நாம் பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறோம். இலங்கைவாழ் தமிழர்களுக்கு எழுச்சியைக்

காட்டுகிறார்கள், ஆதரவைக் காட்டுகிறார்கள் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழவில்லை. ஆனால், இருக்கிற நிலைமையை இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது அரசினுடைய

(முற்பகல் 10-40)

கடப்பாடாக இருக்கிறது. 17-10-1983-ம் தேதி திருச்சிராப்பள்ளி கோட்டையில் திரு. கோமாகுடி பிச்சையப்பா என்பவர் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்றனர். மதுரை ஆதீனத்தின் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அருணகிரி ஸ்ரீஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகளும் இப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். மதுரை ஆதீனம் உரையாற்றிக் கொண்டிருந்த போது தன்னிடம் சுழல் கைத்துப்பாக்கி (ரிவால்வர்) ஒன்றும், துப்பாக்கி (கன்) ஒன்றும் இருப்பதாக கூறி அதனை மேடைக்குக் கொண்டு வருமாறு தனது மெய்காப்பாளரை அழைத்தார். அவரிடம் அவைகள் கொடுக்கப்பட்டவுடன், அந்த ஆயுதங்களை கூட்டத்தினர் முன்பு சுற்றி காண்பித்தார். இந்நிகழ்ச்சி பொது மக்கள் மனதில் பயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது. மேற் கண்ட நிகழ்ச்சியின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றப் பிரிவு குற்ற எண். 10/83 ல் இந்திய தண்டனைச் சட்டம் 505(பி)மற்றும் இந்திய படைக்கலச் சட்டப் பிரிவு 25-ன்கீழ் மதுரை ஆதீனம் மற்றும் அவரது மெய்காப்பாளர் திரு நெல்லையப்பப் பிள்ளை ஆகியோர்மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்பு, இவ்வழக்கு சென்னை குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. குற்றம் மற்றும் புலனாய்வுத் துறையினரின் புலனாய்வின் போது சட்டப்படி குற்றவியல் நீதிபதியிடம் பிடியாணை பெறப்பட்டு கீழ்க்கண்ட இடங்கள் சோதனை செய்யப்பட்டன:-

1. மதுரை தெற்க வணி மூல வீதியில் மதுரை ஆதீனம் தங்கியுள்ள 70 ஆம் நம்பர் வீடு.

2. இராஜாமணி அம்மாள் என்பவர் தங்கியுள்ள மதுரை பாண்டிய வெள்ளாள தெருவில் உள்ள 31 ஆம் நம்பர் வீடு.

3. திருச்செந்தூர் வட்டம் ஒலுகா உடன்குடியில் மதுரை ஆதீனம் முன்பு குடியிருந்த அவருடைய முன்னோர்களுடைய வீடு.

சட்டப்படி பின்பற்றப்பட வேண்டிய அனைத்து முறைகளும் பின்பற்றப்பட்டு 23-10-83 ஆம் தேதி இச்சோதனை செய்யப்



பட்டது. இதன் விளைவாக ஆவணி மூலவீதியில் 70 ஆம் எண்ணுள்ள இடத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் கைப்பற்றப் பட்டன; —

1. மதுரை ஆதீனத்தால் காற்றுத் துப்பாக்கி எனக் கூறப்பட்ட பெரிய துப்பாக்கி ஒன்று.

2. மதுரை ஆதினத்தால் காற்றுத் துப்பாக்கி எனக் கூறப்பட்ட ஒரு சிறிய துப்பாக்கி.

3. மதுரை ஆதீனத்தால் காற்றுத் துப்பாக்கி எனக் கூறப்பட்ட மற்றொரு சிறிய துப்பாக்கி.

4. நான்கு பெரிய மற்றும் எட்டு சிறிய ஈய ரவைகள்.

5. இவ்வழக்கிற்கு தொடர்புடையன என்று கருதப்படும் கடிதங்கள், கடிதத் தொடர்புகள் அடங்கிய இரு கோப்புகள்

கைப்பற்றப்பட்ட பொருட்களின் பட்டியல் ஒன்று மதுரை ஆதீனத்திடம் கொடுக்கப்பட்டு அவருடைய ஒப்புகைப் பெறப் பட்டுள்ளது. மேலும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் திருச்சி ராப்பள்ளி முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதியிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன. மேற்கொண்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இதிலே ஒரு அமைச்சருக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது என்றும், அதன் காரணமாகத் தான் இது நடைபெற்றது என் றும் மாண்புமிகு உறுப்பினர்களில் சிலபேர்கள் குறிப்பிட்டார்கள் ஆதீனகர்த்தர்களுக்கும், அரசிற்கும் கருத்து வேறுபாடுகள் இருக் கக்கூடும். தொடர்ந்து இருந்து வருகிற ஒன்று தான். இப் போது சிதம்பரத்திலே தீட்சிதர்களைப் பொறுத்தவரையில் இந்த கருத்து வேறுபாடு இருக்கிறது. மாற்று அறிக்கைகளை கொடுக்கிறார்கள். சில சமயங்களில் அதில் அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஆதீனகர்த்தர்கள் தங்களுடைய மாற்றுக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்கிறார்கள். அதுபோன்ற கருத்து வேறுபாடு கொள்வதிலே எந்த தவறும் இல்லை. ஆனால் அந்தக் கூட்டத்தில் அந்த ஆதீன கர்த்தர் பேசிய பேச்சை முழுவதும் சுருக்கெழுத்து எடுக்கப்பட்டுள் ளது. அதிலே இருக்கிற சில குறிப்பிட்ட சொற்றொடர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அவர் பேசியிருக்கிறார், 'நாம் அரசியலில் ஈடுபட்டு விட்டுத்தான் ஆன்மீகத்திற்கு வந்தி ருக்கிறோம். அரசியல் பேசுகிறார் என்று சொல்வார்கள் என் றால், நாங்கள் அரசியல் பேசாமல் வேறு யார் அரசியல் பேசு வது? நாம் அதைத்தான் கேட்கிறோம். அந்தக்காலத்தில் எங்கள் திருஞானசம்பந்தர் ஆதினத்திற்கு எதிரிகள் தீயை வைத்தபோது அவர் சொன்னார். 'பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே' என்று சொன்னார் நாம் இந்த இருபதாம் நூற்றாண்டின் திருஞான சம்பந்தர். துப்பாக்கிச் சென்று வேகமாக ஆகவே என்றுதான் சொல்வோம். அதுமட்டுமல்ல. எங்கள் ஆதீனத் திலேயே ஒரு ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது. சிக்ஸ் ரவுண்டு தோட்டாவும் வைத்திருக்கிறோம். துப்பாக்கி வைத்திருக்கி

றோம். செக்யூரிட்டி, அதைக் கொண்டு வா என்று கேட்கிறார் அவர் கொண்டு வந்துகொடுக்க. துப்பாக்கி வந்து மனிதனைக் சன்னியாசி காப்பாற்றாது, ஆனால் நாங்கள் சாமியார் அல்ல; அல்ல; ராஜகுரு. நாங்கள் காரையும் ஓட்டுவோம் ஜீப்பையும் ஓட்டுவோம்.

நாங்கள் என்பது இந்த ஆதீனகர்த்தர்கள் எப்போதும் நாம், நாங்கள் என்று சொல்லவேண்டுமே தவிர நான் என்று ஒருமைப்பட சொல்லக்கூடாது. அதற்காக நாம், நாங்கள் என்று சொல்கிறார்கள். மேலும் சொல்கிறார், ஏதோ நினைத் திருப்பார்கள், 292-வது குரு மகா சந்நிதானம் யாரோ ஒரு சாமியார் என்று நினைத்திருப்பார்கள். ஆனால் நாம் அப் படியல்ல. எங்களுக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. இலங்கையில் நடைபெறுகிற இந்தச் சம்பவத்திற்கு இங்கே செய்யவேண்டியது என்னவென்றால் தெளிவாகச்சொல்கிறோம். பேச்சுவார்த்தையா? யாராலும் இனி அங்கே பேச்சுவார்த்தை நடத்தி எந்தக் காரியத்தையும் சாதித்து வர முடியாது. பாவம் பார்த்தசாரதி என்ன செய்வார்? அவரால் என்ன சாதித்து வரமுடியும்? பார்த்தசாரதியும் காத்த சாரதியும் சென்று ஒன் றும் நடக்காது. செய்ய வேண்டிய வேலையை தெளிவாகச் சொல்கிறோம். என்று சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட கருத்துக்களை, அபிப்பிராயங்களைச் சொல்வதில் தவறு இல்லை.

அவர் மேலும் சொல்கிறார்: 'எனவே நீங்கள் அத்தனை பேரும் வாயைப் பொத்திக்கொண்டு சும்மா இருங்கள் என்று கூறிவிட்டு 200 விமானங்களை அங்கே அனுப்பவேண்டும். சொயிங் சொயிங் என்று விமானங்கள் பறக்க வேண்டும். பறந்து சென்று அங்கே வாழ்கின்ற சிங்கள ராணுவத்தையும், சிங்கள மக்களையும், காவல்துறையினரையும் கைது செய்து தமிழ்நாட் டுக்கு கொண்டு வரவேண்டும். தமிழ்நாட்டில் எங்கே என்றால் மதுரை மத்திய சிறைச்சாலைக்கு கொண்டுவரவேண்டும். நாம் யாருக்கும் அஞ்சாதவர். எதற்கும் அஞ்சாதவர்''

இவ்வாறு சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்; ''நெடுமாறன் அவர்கள் இலங்கைக்கு தியாகப்பயணம் மேற்கொண்டார்கள். ஆனால் இனி அடுத்தப்பயணம் தியாகபயணமாக இருக்காது. போர்ப்பயணமாக மாறும். போர்ப்பயணமாக மாறுகிறபோது மதுரை ஆதீனம்தான் யந்திரத் துப்பாக்கியை தூக்கிக்கொடுக்கும்''

அவர் இன்னும் சொல்கிறார்; மதுரை ஆதீனம் துப்பாக்கி ஏந்த தயாராகிவிட்டது. நீங்கள் ஏன் இன்னும் தயங்குகிறீர்கள்? இங்கேயுள்ள விமானங்கள் என்னவகிறது, இங்கேயுள்ள படை கள் எல்லாம் எதற்கு இருக்கின்றன 3 நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்பிக்கொண்டு வந்து காதைப்பிடித்து திருகி பாரடா ஜெய வர்த்தனே என்று சொல்ல வேண்டியதுதானே. அதைவிட்டு பார்த்தசாரதி போகிறாராம். அவருக்கு சாரதியே கிடையாதே. அவரால் என்ன செய்ய முடியும். எம்மை அனுப்புங்கள் பாடம் கற்பித்துவிட்டு வருகிறோம். நெடுமாறன் தியாகப்பயணம் போன பாது அவரை பரமக்குடியில் போய் வாழ்த்தி வழி



அனுப்பும்போது ருத்திராட்சமாலையை தூக்கி எறிந்தோம் காரணம் என்ன ஆவேசம் வந்து விட்டது, மகாத்மா காந்தி போல் அஹிம்சை, ஆசிர்வாதம் என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை அடிக்கு அடி, குத்துக்கு குத்து, வெட்டுக்கு வெட்டு இனிமேல் இலங்கை பிரச்னையில் துப்பாக்கி—யந்திரத் துப்பாக்கி தான் பேசனும். விடுதலைப்புலி யாழ்பாணத்தில்தான் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். இந்த மேடையிலேயே இருக்கிறது. மதுரை ஆதீனமே ஒரு விடுதலைப்புலிதான். எம்மை இலங்கைக்கு வாங்க சந்நிதானம் என்றால் உடனே ரெடி. என்னிடம் இரண்டு துப்பாக்கி இருக்கிறது. 302 இருக்கிறது. இன்னொரு ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது. இன்னும் துப்பாக்கி வேண்டுமென்றால் கவலையில்லை. எனக்கு ரைபில் சூட்டிங்கெல்லாம் படிக்கும் போதே தெரியும். நாங்கள் கல்லூரியில் படிக்கும்போதே சூட்டிங்கில் பரிசு வாங்கியிருக்கிறோம். ஜீப் டிரைவிங் தெரியும்.'' இவ்வாறு அவர்கள் சொல்லியிக்கிறார்கள்.

மற்றக் கருத்துக்களைப் பற்றிச் சொன்னதில் பிரச்னை இல்லை, ஆனால் தங்களிடம் 302 இருக்கிறது, ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பேச்சைப் பார்த்துவிட்டு விட்டால் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்கின்ற பிரசச்னை வரும். இப்படிக் கூறிய கருத்துக்களுக்காகத்தான் சோதனை போட வேண்டி வந்தது. அந்தப் பொருட்களெல்லாம் அவருடைய ஒப்புதலோடு நீதி மன்றத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. விசாரணையின் அடிப்படையிலே அதிலே எத்தவிதமான தன்மையும் இல்லை என்ற நிலைமை வருமேயானால் அதை அரசு ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கும். ஆகவே, காழ்ப்புணர்ச்சியின் காரணத் தாலோ அல்லது கருத்து வேறுபாட்டின் காரணத்தாலோ இது செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட பேச்சுக்கள் வரும்பொழுது அரசு முறையாக எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கைதானே தவிர வேறல்ல.

இலங்கைத் தமிழர்கள் பற்றி அவர்கள் கொண்டிருக்கின்ற அனுதாபத்தை நாங்களும் வரவேற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள், இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு உண்டியும், உணவும், உறையுளும் கொடுத்து அவர் காப்பாற்றுகிறார் என்று சொன்னார்கள். அது பாராட்டப் பட வேண்டிய ஒன்று, பலரும் செய்ய வேண்டிய ஒன்று. உள்ளபடியே மடங்கள் இப்படிப்பட்ட காரியங்களை எடுத்துக் கொண்டார்களேயானால் அது நாட்டுக்கும் அரசுக்கும் மிகமிக நல்லதுதான். இப்படிப்பட்ட பிரச்னைகளுக்காக அவர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இது. இப்படி பேசியதற்குப் பிறகு ஒரு நடவடிக்கையையும் அரசு எடுக்கமுடியவில்லையே என்று வேறுபலர் சொல்லக்கூடும். (குறுக்கீடு) அவர் என்ன சொன்னார் என்றால் ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது என்று. ஆனால் அதை அங்கு எடுக்கவில்லை என்பது வேறு விஷயம். அவர் சொன்னதை வைத்துக்கொண்டு நாம் நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில் அந்த ஜெர்மன் ரிவால்வர் இல்லை என்பது வேறு விஷயம். சோதனை

செய்யும்பொழுது ஜெர்மன் ரிவால்வர் இல்லையே தவிர, அவர் ஆதினகர்த்தராக இருப்பதன் காரணமாக, அவர் இருக்கபினாய பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதன் காரணமாக, அவரது சொற்களை நாம் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது, 302 இருக்கிறது என்று சொல்லும் பொழுது நீ ஏன் பார்க்காமல் விட்டாய் என்று கேட்பார்கள். இப்பொழுது பார்க்கும்பொழுது ஏர் கன் இருக்கிறது, கைப்பற்ற பொருட்களை ஒப்படைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அதற்கான

(முற்பகல் 10–50)

சட்ட திட்டங்களின்படியும், சிலபல விதிகளின் படியும் அப்படிப் பட்ட வழக்குகளைத் தொடர்ந்து இருக்கிறார்கள். அந்த வழக்கு பற்றி விசாரிக்கும் போதுதான் உண்மைகள் தெரியும். எனவே இதிலே காழ்ப்புணர்ச்சி ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இத்தகைய நிலைமைகள் எல்லாம் விளக்கப்பட்டுவிட்டதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து மேற்கொண்டு விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்.

### (அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தெரிவிக்கும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் மீது நம்பிக்கை யின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம். பேரவையின் 71-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து அரசு மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்தீர்மானத்திற்கான முன்னறிவிப்புகள் வந்துள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாளர்கள்: என். சங்கரய்யாரா. உமாநாத், ப. நெடுமாறன், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி, எம். ஆறுமுகம், சோ. அழகர்சாமி, அன்பில் தர்மலிங்கம்;

இம்மாதிரி ஒரு தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு வரப் பெற்றால், பேரவையின் விதி 71, (2)-ன்படி, பேரவைத் தலைவர் அத்தீர்மானத்தின் முன்னறிவிப்பைப் பேரவைக்குப் படித்துக் காட்டி, அத் தீர்மானத்தை முன்மொழிய அந்த உறுப்பினருக்கு பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட முன்னறிவிப்புகள் வரப் பெற்றால், அவை வரப்பெற்ற தேதி, நேரத்தின்படி வரிசைப்படுத்தி, முதலில் முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டதை எடுத்துக்கொள்ளவேண்டும்.





எனவே, மேலே குறிப்பிட்ட முன்னறிவிப்புகளில் திரு. என். சங்கரய்யா மற்றும் திரு. உமாநாத் ஆகிய இருவரும் கையெழுத் திட்டுக் கொடுத்துள்ள தீர்மானத்திற்கான முன்னறிவிப்புதான் முதலில் வந்தது. எனவே அந்த தீர்மானத்திற்கான முன்னறி விப்பைப் பேரவைக்குப் படிக்கிறேன்.

" தமிழக சட்டப் பேரவை விதிகளின், விதி–71, உட்பிரிவு 1-ன் கீழ், கீழ்க்காணும் தீர்மானத்தை அவையில் பிரேரேபிக்க இத்துடன் அறிவிப்பு தருகிறேன்:—

> " திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் செயல்படும் அமைச்சரவை மீது இப்பேரவைக்கு நம்பிக்கை இல்லை". (ஒப்பம்) என். சங்கரய்யா, ரா. உமாநாத்.

திரு. ரா. உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன் மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்பு

கிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப் பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால், பேரவை விதி 71 (2)-ன் கீழ், தீர்மானத்தை முன்மொழிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களுக்கு பேரவை அனுமதி அளிக்கின்றது என்று அறிவிக்கிறேன். இந்தத் தீர்மானம் 8-11-1983 செவ்வாய்க்கிழமையன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, "கோ–ஆப் டெக்ஸ் நிறுவனம், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களி லிருந்து, நிர்ணயிக்கப்பெற்ற சதவீத லாபத்தைவிட குறைவான வீதத்தில் கொள்முதல் செய்வதாலும், குறிப்பிட்ட காலத்தில் கொள்முதல் செய்யத் தவறிவிடுவதால், சங்கங்களில் துணிகளின் தேக்கம் ஏற்படுவதாலும், கோ-ஆப்டெக்ஸிலிருந்து கொள்முதலுக் கான தொகையைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் படும் இன்னல் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் தற்போது 1502 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் 3.37 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றின் தலைமை சங்கமாக கோ-ஆப் டெக்ஸ் இயங்கி வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிதி நிலை மையைப் பொறுத்து பெரும்பாலும் அவ்வப்போது பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை தரவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் 50 சதவீதத்தை கொள்முதல் செய்து தமிழகத் திலும் இதர மாநிலங்களிலுள்ள அதனுடைய 625 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

2. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட துணியின் மதிப்பும், அச்சங்கங்களுக்குப் பட்டுவாடா செய்த தொகையின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | கொள்முதல் செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு. | சங்கங்களுக்கு பட்டுவாடா செய்த தொகை. |
|---|---|---|
| 1982 ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய | ரூ. 28.54 கோடி | ரூ. 25.25 கோடி |
| 1983 ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய | ரூ. 32.46 கோடி | ரூ. 33.19 கோடி |

சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக துணி வியாபாரம் மந்தமாக இருந்து வந்த காலமாகும். 1983-84-ம் ஆண்டுக்கு கைத்தறி துணிகளின் விற்பனைக் குறியீடு ரூ. 100 கோடி என நிர்ணயித்து, கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. கோ-ஆப் டெக்ஸ் தற்போதைய சரக்கு இருப்பு சுமார் ரூ. 75 கோடியாகும். இந்த அளவில் ரூ. 30 கோடி மதிப்புள்ள சரக்குகள் அதிகமாக கையிருப்பாக உள்ளது.

3. இன்றைய தேதியில் மாநில சங்கம் பிரதம நெசவாளர் சங்கங்களுக்கு பட்டுவாடா செய்ய வேண்டிய தொகை ரூ. 11.70 கோடி ஆகும். இதில் ரூ. 3.83 கோடி வருகிற தீபாவளி 1983 பண்டிகைக்கு முன்பாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பட்டுவாடா செய்யப்பட எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு பிரச்சினைக்கு விளக்க உரையில் சரியான விளக்கம் இல்லாததால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பிரதம கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்கின்றபோது 12 சதவீத இலாபத்திற்குக் கொள்முதல் செய்யவேண்டும் என்று கைத்தறித்துறை இயக்குநர் உத்திரவிட்டிருந்தும் பிரதமகூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அப்படி கொள் முதல் செய்வதில்லை. அவாகள் இந்தச் சங்கங்களில் துணிகள் தேங்கியிருக்கும் நிலைமையைச் சாதகமாக்கிக்கொண்டு 6%, 7% என்று பேரம் பேசி கொள்முதல் செய்யும் நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் பிரதம சங்கங்கள் 'கிலோன்' என்ற அடிப்படையில் துணிகளை அடகு வைத்து, கடன் வாங்குகின்ற காரணத்தால், அதற்கு வட்டியும் அவர்கள் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அவற்றின் மீது 30%, 40% என்று இலாபம் வைத்து விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக பிரதம சங்கங்களுக்கும், நெசவாளர்களுக்கும் எந்தவிதமான லாபமும் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் ஏற்கெனவே கைத்தறித் துறை இயக்குநர் போட்டு இருக்கும் உத்தரவின்படி, 12%லாபம் வைத்து கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை வலியுறுத்தி இனிமேலாவது அமல் படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டு, அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் அமைப்பே கூட்டுறவு நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளை வாங்கி கோ-ஆப்டெக்ஸ் கடைகளின் மூலமாக விற்பனை செய்து உதவுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் அரசின் அமைப்புதான் அது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் முதல் பகுதி கேள்விக்கு விடையாக அளிக்கிறேன். இரண்டாவது பகுதி கேள்விக்கு ஏற்கனவே விடை அச்சடித்துக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தற்போது அதிக அளவில் பாக்கி இல்லை. இருக்கின்ற பாக்கிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. வாங்குகிறபோது குறைந்தபட்ச இலாபம் 12 சதவிகிதம் வர வேண்டும என்று உத்தரவிட்டு இருந்தும், 6 சதவிகிதம், 7 சதவிகிதம் என்று பேரம் பேசி வாங்குகிறார்கள் என்று மாண்பு மிகு உறுப்பினர் சொன்னார்கள். அப்படி எந்தெந்தச் சங்கங்களிட மிருந்து வாங்கியிருக்கிறார்கள் என்ற தகவல் அவர்களிடத்தில் இருக்குமானால், அதைத் தெரிவித்தால் அதற்கு எற்ப நடவடிக்கை களை அரசு எடுக்கும்.

கோ-ஆப்டெக்சுக்குக் கிடைக்கும் லாபம் தனியாருக்குப் போகும் இலாபம் அல்ல. அதுவும் அரசு நிறுவனம்தான். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேக்கம் ஏற்பட்டுவிடுகின்ற நேரத்தில் அவற்றை கோ-ஆப்டெக்ஸ் வாங்கி வைத்து விற்பனை செய்கிறது. இப்போது இருக்கும் நிலைமையில் சுமார் 75 கோடி

ரூபாய் மதிப்புள்ள சரக்கு கோ-ஆப்டெக்சிடம் இருக்கிறது. அது அப்படியே தேக்கத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றபோது நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காக அமைக்கப்பட்டதுதான் இந்த கோ-ஆப்டெக்ஸ். ஆகவே, இது போன்ற பிரச்னைகள் எங்காவது இருக்குமானால், அந்தப் பகுதியில் உள்ள ஜாயின்ட் டைரக்டர் அல்லது அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் யார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அந்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிவுரைகளை வழங்கு வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் இதுவரையில் எடுத்து இருக்கும் நிலைமைகளைத்தான் அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். இந்த அரசு இத்தகைய முயற்சிகளை எடுத்துக்கொண்ட பிறகும் பிரதம சங்கங்களில் துணிகள் தேக்கம் இருக்கும் நிலை இருக்கிறது. அந்தத் தேக்கத்தைக் குறைப்பதற்காக அதிக அளவில் கோ-ஆப் டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்தல் நல்லது. அப்படி அதிகமாகக் கொள்முதல் செய்யும் துணிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நமக்கு அதிக வருமானம் வரும். அதேபோ கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு உடனடியாக பணம் கொடுக்க வேண்டும். கிட்டத்தட்ட 11 கோடி ரூபாய் இப்போது பாக்கியிருக்கிறது. இந்தப் பணத்தை நம்பித்தான் அந்தச்சங்கங்கள் இயங்க வேண்டிய நிலை இருப்பதால், அவற்றைக் குறித்த காலத்தில் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனம் அமைத்து இருக்கும் தன்னுடைய 625 கிளைகள் மூலமாக இந்தத் துணிகள் விற்கப்படுகின்றன. பல மாநிலங்களில் இதனுடைய கிளைகள் இருக்கின்றன. ஏற்றுமதி செய்வதற்காக நான் ஏற்கனவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் குறியபிட்டதைப்போல, கோவாப் டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாக ஆண்டுக்காண்டு ஏற்றுமதி செய்யப் படும் துணியின் அளவு அதிகரித்துக்கொண்டு வருகிறது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு 100 கோடி அளவிற்கு விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம கூட்டுறவுச்சங்கங்கள் உற்பத்தி செய்கிற துணிகளைத் தான் கோவாப்டெக்ஸ் வாங்குகிறது. அப்படி வாங்குகிற துணிகளை பொதுமக்களிடத்தில் விநியோகித்தால்தான் மேற்கொண்டு வாங்கமுடியும். இப்போது நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற கருத்தை தெரிவித்ததால், தீபாவளி நேரத்தில் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னதால்,





இப்போது ஏறக்குறைய 20 கோடி அளவிற்கு துணி வாங்கி யிருக்கிறார்கள். ஏற்கனவே 75 கோடி ரூபாய்க்குத் தேக்கம் இருக்கும் நிலையிலும் இது வாங்கிப்பட்டு இருக்கிறது. ஆகவே, தேக்கம் இருக்கிறது என்று சொன்னாலும், நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னாலும், அதை அறிந்தாலும், அவர்களிடமிருந்து மேற்கொண்டு எவ்வளவு வாங்க முடியுமோ அதை வாங்கி, அவற்றை தன்னுடைய கடைகள் மூலமாக கோவாப்டெக்ஸ் விற்கிறது. எனவே இப்போது

(முற்பகல் 11-00)

கோவாப்டெக்ஸ் நிறுவனம் துணிகளை விற்பனை செய்ய 625
கடைகளைத் திறந்திருக்கிறது. இன்னும் 100 சடைகளைக்
கூடுதலாகத் திறக்க இருக்கிறது. அதைப்போன்று சன்ற
ஆண்டு 1,03,00,000 ரூபாய் மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி
செய்திருக்கிறது. இந்த ஆண்டு 1.5 கோடி ரூபாய் அளவுக்கு
ஏற்றுமதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
இப்படி பல்வேறு வகைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிப்புக்கு
உள்ளாகும்போது கோவாப்டெக்ஸ் நிறுவனம் பாதிப்பைப்
போக்க நடவடிக்கைகள் எடுத்துவருகிறது; தொடர்ந்து
நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஏற்கெனவே கொள்முதல் செய்த துணிகளுக்கு கூட்டுறவுச்
சங்கங்களுக்கு 11 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது.
இந்த தீபாவளி சமயத்தில் சுமார் 4 கோடி ரூபாய் கொடுக்கப்
பட்டுவிடும். பணம் கொடுக்காமல் பாக்கி இருப்பதற்குக்
காரணம், வாங்கப்பட்டத் துணி விற்பனையாகாமல் சுமார்
75 கோடி ரூபாய் அளவுக்கு தேக்கம் அடைந்திருக்கிறது.
அவற்றை விற்று, விற்று, கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்
கிறார்கள். பொதுவாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில்
துணி தேங்காமல், அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக
பல்வேறு நடவடிக்கைகளை கோவாப்டெக்ஸ் நிறுவனம்
உடனுக்குடன் எடுக்கும்.

(ஆ) தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் திண்டுக்கல்லின் பொதுச் சுகாதாரம் பாதிக்கப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் என். வரதராஜன், ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப் படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்:

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவரவர்களே, "திண்டுக்கல் நகரைச் சுற்றியுள்ள தோல் தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் குடிநீர் கெட்டு, விவசாயம்

பொதுச் சுகாதாரம் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1974 ஆம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் 26 ஆவது பிரிவின்கீழ், கழிவு நீரை நீர் நிலைகளில் வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலைப்பெற வேண்டும். ஒப்புதலைப்பெற உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

2. திண்டுக்கல் நகரைச் சுற்றியுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வாரியத்தின் ஒப்புதலைப்பெறும்படி கடித மூலமும், நேரிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இதுவரை அங்குள்ள 37 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் 16 தொழிற்சாலைகள் வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ளன. ஆனால் கழிவு நீரைச்சுத்திகரிக்கும் திட்டம் இவற்றுடன் இணைக்கப்படாததால் அத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும்படி தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. கழிவு நீர்ச்சுத்திகரிப்புப் பற்றிய திட்டம் பெறப்பட்டபின் அவற்றை ஆய்வு செய்து வாரியம் ஒப்புதலை வழங்கும்.

3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளின்படி கழிவுநீரை சுத்திகரித்து அப்புறப்படுத்தினால் அத்தகைய தண்ணீரிலிருந்து சுகாதாரத்திற்கோ பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படாது. ஏனென்றால் அதற்கேற்ற வரைமுறைகளை அவ்வாரியம் நிர்ணயித்துள்ளது.

4. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 31-12-83-க்குள் கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் இதைக் கண்காணிக்க வேண்டுமென்றும் மாவட்டாட்சித் தலைவர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும், பொதுச்சுகாதார இயக்குநருக்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரைச் சுற்றி விவசாயம் பாதிக்கப்பட்டு, சுமார் 30,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். விவசாயம் செய்தால் பாதியில் காய்ந்துவிடுகிறது; குடிதண்ணீர் கிடைக்காமல், தண்ணீர் கெட்டுப்போகிறது; பொதுச் சுகாதாரம் நாசமடைகிறது. நாம் ஒவ்வொரு துறைக்கும் ஆணைகள் பிறப்பிக்கிறோம். ஆனால் அந்த ஆணைகள் சரியாக அமுல்படுத்தப்படுகின்றனவா என்று பார்க்கவேண்டும்.



தோல் ஷாப்புகளை நடத்துகின்றவர்கள் சிறு நிறுவனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து கழிவுநீரை சுத்தப்படுத்தும் கேணிகளை அவர்களால் உருவாக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் அரசே அந்த தோல் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவி செய்து, கழிவு நீரை சுத்தப்படுத்தும் கேணிகளை ஏற்படுத்தச் செய்யலாம். அல்லது அரசே பொதுவான ஒரு கேணியை உருவாக்கி, அந்த 36 தோல் ஷாப்புகளிலுள்ள கழிவு நீரும் அங்கே வந்து சேருவதற்கு ஏற்பாடு செய்து, சுத்தப் படுத்துவது பற்றி ஆய்வு செய்யலாம். இல்லை என்றால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள்; உற்பத்தி பாதிக்கப்படும்.

இன்றைக்கு 30,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் பயிர் செய்ய முடியாமல், அவர்கள் எல்லாம் கூலிகளாக இருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு உரிய நஷ்டயீட்டைக் கொடுக்க வேண்டாமா?

இன்றைக்குத் தோல் ஷாப்புகள் ஏற்கனவே 40 நாட்களுக்கு தண்ணீரில் ஊறவேண்டும். ஆனால் இன்றைக்கு அவ்வாறு ஊறுவதில்லை. காரணம் ரசாயனப் பொருள் வந்திருப்பதாலே ஒரு நாள் இரண்டு நாளில் தோல் வெளியே வந்துவிடுகிறது. கடுமையான ரசாயனப் பொருள் வந்திருப்பதாலே கடுமையான விளைவுகள் ஏற்பட்டிருப்பதைக் கவனித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றாலும் அரசு இந்தப் பிரச்சினையில் தொழிலாளர்கள் நலனையும், தொழில் நலனையும் கவனிக்கவேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் உடனடியாக அதைத் தடுத்து நிறுத்துகின்ற வாய்ப்பில்லாத நிலை இருக்கிறது. இதை சட்டபூர்வமாகத் தடுக்கவேண்டும் என்ற நிலையை எடுத்து, 1976-லே மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருந்தாலும் கூட, அந்தச் சட்டத்தை 1981 ஆம் ஆண்டில் தான் தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால்தான் 1982-லே இப்படிப்பட்ட ஒரு வாரியம் அமைக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. அந்த வாரியத்தின் மூலம் பல்வேறு நிலையில் அந்தத் தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல் இந்த சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை கவனத்தில் எடுத்து அரசு தனியாக ஒரு குழுவை அமைத்து எந்தெந்த வகையிலே சரி செய்யலாம் என்று அதிகாரிகள் கொண்ட குழுவை

அமைத்து, அந்தக் குழு தனது பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறது. மூன்றுவிதமான முறைகளில் அந்தத் தண்ணீரை சுத்தம் செய்வதற்கு வழிவகைகளைக் கண்டுபிடித்து சொல்லி இருக்கிறார்கள். அதை மத்திய அரசினுடைய உதவியோடு அங்கே இருக்கின்ற நிலையங்களுக்கு உதவ செய்ய, அங்கே உள்ள விவசாயத்திற்கும், குடிநீருக்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவுக்கு நடவடிக்கையை எடுக்க இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத்தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

திரு. என் சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் நான் ஓரளவுக்கு மனநிறைவு அடைகிறேன். துரித நடவடிக்கை எடுக்க விரும்புவதை நான் பார்க்கிறேன். ஆனால் நான் கேட்க விரும்புவது, இந்த விவசாய மக்கள் இன்றைக்கு ஒன்றுமே செய்ய முடியாமல் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். நான் அறிந்த வரையில் மேட்டூர் கெமிக்கல் பாக்டரி, கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறிதளவு நட்ட ஈடு கொடுத்திருப்பதாக அறிகிறேன். இந்தச் சூழ்நிலையிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, உண்மையிலேயே பரிதாபத்திற்குரிய விவசாயிகளுக்கு ஏதாவது துறையிலே இருந்து உரிய நட்ட ஈடு கொடுக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனித்து கணக்கு எடுக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விவசாயத் துறையை கேட்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு அது கழிவு நீரால்தான் பாதிக்கப்பட்டிருக்கிறதா, அது எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நிலை ஏற்படுமானால், அது தொழிலதிபர்களை வைத்துக்கொண்டு செய்வதா அல்லது வேறு வகையில் செய்வதா என்பதை அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

4. அறிவிப்புகள். (தொடர்ச்சி.)

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1975–76, 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன.

MESSAGES.

In pursuance of Ar icle 203, Clause (3) of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for grants for Excess Expenditure for the year 1975-76.



In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for Excess Expenditue for the year 1976-77.

In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, Sundar Lal Khurana, Govanor of Tamil Nadu here-by give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for Excess Expentditure for the year 1977-78.

6 (அ). மிகை செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1975–76 வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975–76, 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளிலே ஏற்பட்ட மிகைச் செலவைப் பற்றிய குறிப்புகள் தணிக்கை அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டு, பிறகு, கணக்குக் குழுவிற்கு வந்து ஆராய்ந்து, இந்தப் பேரவையினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்று கணக்குக்குழு சிபாரிசு செய்ததின் அடிப்படையிலே இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. ஆகவே இதன் மீது விவாதமின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அடுத்து துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும்போது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது என்ற முறையில் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1975–76 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1975–76 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| கோரிக்கை | 4. | பொது விற்பனை வரிகள்-ஏனைய வரிகள்-தீர்வைகள்-நிருவாகம | 5,62,407 |

| | | | ரூ. |
|---|---|---|---|
| கோரிக்கை | 11 | மாவட்ட நிருவாகம் | 35 47,691 |
| ,, | 3 | நீதி நிருவாகம் | 3,12,978 |
| ,, | 14 | சிறைச்சாலைகள் | 1,63,828 |
| ,, | 18 | மருத்துவம் | 1,48,72,827 |
| ,, | 19 | பொதுச்சுகாதாரம் | 27,09,668 |
| ,, | 22 | கால்நடை வளர்ப்பு | 6,89,648 |
| ,, | 23 | கூட்டுறவு | 3,82,124 |
| ,, | 29 | தொழிலாளர் நலன் (தொழிற்சாலைகள் உட்பட) | 4,60,637 |
| ,, | 35 | நுகர்பொருள் வழங்கல் | 16,40,452 |
| ,, | 36 | பாசனம் | 1,02,88,637 |
| ,, | 39 | சாலைகளும் பாலங்களும் | 35,13,194 |
| ,, | 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 88,82,528 |
| ,, | 44 | எழுதுபொருள் அச்சுத் துறை. | 37,13,236 |
| ,, | 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 23,96,926 |
| ,, | 52 | பொதுப்பணிகள் – கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 18,29,671 |
| ,, | 54 | சாலைப் போக்குவரத்து பணிகள் குறித்த மூலதனச் செலவு | 52,22,528 |
| | | பெரு மொத்தம் | 6,11,89,017 |

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(இ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4( சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1976–77 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1976–77 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1976–77 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| மானியம் | 33 | வீட்டுவசதி | 10,07,430 |
| மானியம் | 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 20,122 |
| மானியம் | 36 | பாசனம் | 1,91,03,047 |
| மானியம் | 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பணிகள். | 10,62,841 |
| மானியம் | 42 | ஓய்வூதியமும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 1,42,07,954 |
| | | பெரு மொத்தம் | 3,54,01,394 |

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவை தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. (இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1977–78 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1977–78 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1977–78 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| கோரிக்கை | 19 | பொதுச் சுகாதாரம் | 9,80,535 |
| கோரிக்கை | 36 | பாசனம் | 3,10,45,944 |
| கோரிக்கை | 42 | ஓய்வூதியங்களும் ஓய்வு கால நன்மைகளும். | 14,80,586 |
| | | பெரு மொத்தம் | 3,35,07,065 |

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(உ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசையைத் தெரிவித்துள்ளார்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தொடர்ச்சி)

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஊ) முதல் துணை நிதி அறிக்கை 1983-84 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1983–84 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையின் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

MESSAGE.

In pursuance of Article 203, clause (3), of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1983-84.

முதல் துணை நிதி அறிக்கை 1983–84 வாக்கெடுப்பு.

8. முதல் துணை நிதி

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த 1983-84 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய விவர அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய விவரங்களும் தனிக் குறிப்பாக தரப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த திருத்தக் குறிப்பும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்பே தனியாக சுற்று மூலம் தரப்பட்டிருக்கிறது.

27-10-1983 அன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கிற 1983-84 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளில் வைக்கப்பட்டுள்ள துணை அறிக்கையில் மானியம் 58 கடன்கள் முன் பணங்கள் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற 15 கோடியே 43 லட்சம், 8 இனங்களைக் கொண்டது. ஆங்கில

பிரதி 33 வது பக்கத்தில், தமிழ் பிரதி 37 வது பக்கத்தில் அந்த தலைப்பின் கீழ் 7 இனங்கள் தான் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 8 வது இனமாக த்றபோது உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட திருத்தத்தை சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மொத்தம் 8 இனங்கள் இருக்க வேண்டும்: ஆனால் கூட்டப்பட்ட தொகை சரியாக இருக்கிறது. ஆனால் அச்சிலே 8 வது இனத்தை விட்டிருக்கிறார்கள். ஆகவே, 8வது இனத்தை சேர்த்து மொத்தத்தைக் கூட்டிப் பார்த்தால் சரியாக வரும். ஆகவே தான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): இந்த விவாதம் ஒரு மணிக்குள் முடிய வேண்டியிருக்கிற காரணத்தால், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மிகச் சுருக்கமாக கூறி முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. இல. பலராமன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நிதியமைச்சர் அவர்கள் துணை மானியக் கோரிக்கையை அவைமுன் வைத்திருக்கிறார்கள். அதில் சுமார் 136.50 கோடி ரூபாய் மூலதனச் செலவாகவும், கடன் கணக்கில் 22·26 கோடி ரூபாயையும் காட்டி அவைக்கு கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

கடந்த இரண்டாண்டுக் காலமாக தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவியதன் காரணமாக இந்த துணை மானியத்தில், வறட்சிக்கென பல திட்டங்களுக்காக நிதி ஒதுக்கம் கோரியிருக்கிறார்கள். இந்த துணை மானியம் மட்டுமல்ல, எந்த மானிய கோரிக்கைகளும் மக்களுடைய நல்வாழ்வுக்காகவும், மக்களுடைய நலனுக்காகவும், மக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இது போன்ற மக்களாட்சி, நல்ல பல திட்டங்களுக்காக நிதியை செலவழிக்க வேண்டும் என்பது மக்களாட்சியின் ஒரு தலையாய கடன். அந்த நிலையில் இன்றைக்கு ஆளும் பொறுப்பிலே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு நிதிநிலை அறிக்கையை வைத்து, வறட்சிக்குப் பின்னால் 83-84 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளையும் வைத்திருக்கும் போது, அந்தப் பணங்கள் மக்களுடைய வரிப் பணங்கள் மக்களுக்கு முழுமையாகச் சென்றிருக்கிறதா என்று பார்க்கும் போது, சற்று ஐயப்பாட்டுக்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறோம்.

மக்களுடைய வரிப்பணம் மக்களுக்காக பல திட்டங்களில் செலவழிக்கப்படுகிறபோது, அது முழுவதுமாகச் செல்ல முடியாது என்று ஒரு பக்கம் வாதம் இருந்தாலும், அது படிப்படியாக முழுவதுமாக மக்களுக்கு சென்று வருவதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசினுடைய கடைமையாகும் என்பதை, அமைச்சர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். கடந்த இரண்டாண்டு காலமாகவே தமிழகத்தில் கடும் வறட்சி இருந்தது. ஆனால் வறட்சி வரும் என்று முன்னதாகக் கூறியபோது, மிக மெத்தனம் காட்டியது ஆளும் பொறுப்பிலே இருக்கக்கூடிய அரசாங்கம். வறட்சி வந்த பின்னால் அவசர அவசரமாக மிகக் குறுகிய



காலத்தில் சில பல திட்டங்களைத் தீட்டி, அந்த திட்டங்களுக்கு அதிகமாக செலவழிக்க ஒதுக்கீடு இருந்தாலும், அப்படிச் செலவழிப்பதில் வேகத்தைக் காட்டியதன காரணமாக, ஒதுக்கீடு பணம் முழுமையாக மக்களுக்குப் பயன் பெற முடியாத நிலை ஏற்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும் இன்றைக்கு வறட்சி தணிந்து இருக்கிறதா என்று பார்த்தால், ஏதோ சென்னையிலும், சென்னையைச் சுற்றிய சில பகுதிகளிலும் மழை பெய்துக் கொண்டிருந்தாலும், பரவலாக தமிழ்நாடு முழுவதும் வறட்சியைப் போக்கக்கூடிய அளவுக்கு மழை பெய்யவில்லை என்று தான் கூறமுடியும்.

(முற்பகல் 11.20)

இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள விவசாயிகள் மிக வேதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். கடந்த காலங்களிலே வறட்சி ஏற்பட்டது. இன்றைக்கு வறட்சிக்காக அரசு கொடுத்த உதவிகளினால் எந்தவிதமான பலனும் விவசாயிகளுக்கு கிடைக்காமல் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்து இனிமேலாவது நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் உணவு உற்பத்தியில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் உணவு உற்பத்தி செய்யக் கூடிய மாவட்டம் என்று அரசினால் அறிவிக்கப் பட்டிருக்கின்ற மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்திலே இன்றைக்கு பெரும்பகுதி 'லிப்ட் இரிகேஷன்' என்று சொல்வார்களே அந்த முறையிலே கிணற்றுப் பாசனம் மூலம் அதிகமான நெல்லை உற்பத்தி செய்து அரசுக்கு உதவியிருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகளுக்கு பெரும் பகுதி மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று பத்திரிகைகள் வாயிலாக அமைச்சர்கள் அறிக்கைகளைத் தந்து கொண்டிருக்கிறார்களே தவிர, இன்றைக்கு 6 மணி நேரம் விநியோகம் என்று இருந்தாலும் இரண்டு மணி நேரம்கூட மின்சாரம் வருவதில்லை. காலை 6 மணியிலிருந்து 12 மணி வரை, 1 மணியிலிருந்து 6 மணிவரை, இரவு 10 மணியிலிருந்து 4 மணிவரை என்ற அளவுக்கு மாறுதல் களுடன் வாரம் ஒரு முறை அதை மாற்றக்கூடிய முறையிலே வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அந்த விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தரப்படுகின்ற மின்சாரம் மூலமாக அவர்கள் அதிகமான நெல்லை உற்பத்தி செய்து தங்களுடைய வாழ்க்கையை பார்த்துக் கொண்டு அதே நேரத்திலே நம் நாட்டிற்கும் உற்பத்தி செய்து தரவேண்டுமென்ற முறையிலே நல்ல உணர்வுடன் இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுக்கு அரசு செய்யக்கூடிய உபகாரம் அபராதமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி மின்சாரம் வழங்கப்படுவது ஒரு கஷ்டமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. மின்இணைப்புக் கோரி வந்த ஆயிரக் கணக்கான மனுக்கள் அப்படியே இருக்கின்றன. ஏதாவது பரிகாரம் அவற்றிற்கு இருக்கிறதா என்றால் இல்லை. நான்

முன்பே கூறியபடி கிணற்றுப் பாசனம் இருக்கிற மாவட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. இன்னும் ஆயிரக்கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. கூட்டுறவுக் கடன்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடன்கள் பெற்று மோட்டார்களை வாங்கி வைத்தும் மின் இணைப்புக் கிடைக்காமல் கடன்களுக்கு வட்டியைக் கட்டிக்கொண்டு மின்சார அலுவலகங்களுக்கு அலையக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பல முறைகள் இதைப்பற்றி ஞாபகப்படுத்தியும்கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. 300 மீட்டருக்குள் இருக்கிற இடத்திற்கு பணம் கேட்பதில்லை. ஆனால் அதற்கு அதிகமாக இருந்தால் மின் இணைப்புக் கொடுப்பதற்கு விவசாயிகள் பணம் கட்டினால்தான் செய்யமுடியும் என்று உத்திரவிட்டு இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டிற்கு முன்னால் கொடுத்த மனுக்களைப் பரிசீலனை செய்வோம் என்று அரசு கூறியிருந்தாலும் அவைகள் பரிசீலிக்கப்பட்டனவா என்றால் இல்லை. இந்த நிலைமை மாநிலம் முழுவதும் தழுவிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத் துறைக்கு அடுத்தாற்போன்று இருக்கக்கூடியது நெசவுத் தொழில். நெசவுத் தொழிலுக்காக 10 குதிரை ஓட்டமுள்ள மின்சார இணைப்புக் கோரினால் அவர்கள் 35 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று அரசு கூறுகிறது. நெசவுத் தொழிலுக்கு அதிகமான ஊக்கம் தரவேண்டுமென்ற கொள்கையை அரசு எடுத்திருந்தாலும் சிறு தொழில் என்ற முறையிலே அதற்காக 35 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்வது நியாயமா? இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இன்றைக்கு மின்துறை ஸ்தம்பித்து இருக்கிறது. வாரியத் தலைவர் வேகமான தலைவர் என்று அவரை அரசு நியமித்து இருந்தாலும் அவர் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறாரே தவிர மக்களுக்கு எளிதாக மின்சாரம் வழங்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வடஆற்காடு மாவட்டத்திற்குத் தனி சலுகையை அளித்து உணவு உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கான முறையிலே அதிகமான மின்சாரத்தையும் மின் இணைப்புகளையும் வழங்குவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியின் காரணமாக இந்த மாநில விவசாயிகளுக்கு பல நன்மைகள் செய்ததாகச் சொல்கிறார்கள். பூச்சி மருந்துக்கு மத்திய அரசு உதவி தருகிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு இங்கே சலுகைகள் வழங்கப்படுவதாக கூறுகிறார்கள். மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் குறுவை பயிருக்கு மற்றவைக்கு எல்லாம் கூட்டுறவு வங்கிகள் மூலமாக பல திட்டங்கள் இங்கே அறிவிக்கிறார்கள். ஆனால் அவைகள் முழுமையாக மக்களுக்கு பயன்பட்டதா என்று பார்க்கும்போது, எதுவும் பயன்பட்டதாக தெரியவில்லை. பூச்சி மருந்து போன்றவைகள் சாதாரண விவசாயிகளுக்கு சிறு விவசாயிகளுக்கு 30-9-83-க்குள் வழங்கவேண்டும் என்ற ஒரு அறிவிப்பை தந்து இருக்கிறார்கள். இந்த அறிவிப்பு, எந்த



நாளைக்கு முன் வருகிறது என்றால் 1 வாரத்திற்குமுன் 4, 5 நாட்களுக்கு முன்பு தான் இதைப்பற்றி அப்படியென்றால் யார் வாங்கினார்கள். எப்படி வாங்கினார்கள் என்பது தான் கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த வறட்சிக்கு ஒதுக்கப் பட்ட பணங்கள் சாதாரண ஏழை விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு பயன்படவேண்டும் என்று மத்திய அரசு மானியம் வழங்கியும் அதை நல்ல முறையில் இந்த அரசு வினியோகிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை நான் கூறமுடியும். அதை குற்றச்சாட்டாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதை பரிந்துரையாக இந்த அரசு ஏற்று அதை பரிசீலிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பாசனக் கிணறுகள் தோண்டுவதற்காக விவசாயி களுக்கு 5 கோடி ரூபாய் அளவுக்கு இந்த துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். எங்கள் மாவட்டம் 3 லட்சம் கிணறுகளை உடைய மாவட்டம். சாதாரண விவசாயிகள் 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள் அங்கே கிணறுகளை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இந்த வறட்சியின் காரணமாக தங்களிடம் பணம் இல்லாததன் காரணமாக கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கலாம் என்று சென்றபோது உங்கள் கிணறுகளுக்கு போதுமான அகல, ஆழமில்லை, நிலத்தடி நீர் ஆராய்ச்சியாளர்கள் கடன் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஒரு தாலுகாவுக்கு 300 அடி, ஒரு தாலுக்காவுக்கு 600 அடி என்று வித்தியாசங்கள் இருக்கிறது. இப்படி ஒரு அளவுகளை கூறிக்கொண்டு மாவட்டத்தில் உள்ள எந்த நபருக்கும் கடன் வழங்காத ஒரு நிலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது, இருந்தது, என்பதை இந்த நேரத்தில் இந்த அவைக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா மாவட்டங் களிலும் இதே நிலை இருக்கிறது என்பதையும் இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஏதோ விவசாயிகளுக்கு வறட்சியின் காரணமாக பரிகாரம் காணுகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று அறிக்கைகள் வைக்கிறீர்களே தவிர அனுபவபூர்வமாக பார்க்கிறபோது கிராமங்களிலே எந்த ஒரு நன்மையும் சாதாரண விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு இல்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டது. அதில் பல நிலையில் இன்றைக்கு ஒப்பந்தக்காரர்களை அந்தப் பணிகளை செய்பவர்களை அதிகமாக உற்பத்தி செய்து இருக்கிறீர்கள். கோடி கோடியாக இன்றைக்கு செலவழிக்கப்பட்டாலும் அந்த செலவினங்கள் ஏதோ ஒரு தனி நபருக்கு சென்று இருக்கிறதே தவிர என்ன சதவீதம் மக்களுக்கு சென்றிருக்கிறது, அதனால் பயன் அடைந்து இருக்கிறார்களா என்றால் அது ஒரு கேள்விக் குறியாகத் தான் இருக்கிறது.

அதிலும் இன்றைக்கு பஞ்சாயத்து ஒன்றியங்கள் என்று எடுத்துக் கொண்டால் தலைவர்கள் இருந்தபோது பஞ்சாயத்து நிர்வாகங்கள் நல்லபடியாக நடந்துகொண்டு இருந்தன. அன்றைக்கு அதிகாரபற்று அற்றவர்கள் இருந்தபோது 2½-க்கு

உட்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அந்த ஒன்றியத்தில் இருந்தார்கள். ஆனால் வறட்சியின் காரணமாக மற்ற நிலைகளில் இன்றைக்கு நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான ஒப்பந்தக்காரர்கள் உருவாக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒன்றியங்களில் ஒப்பந்தக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு என்ன நன்மை என்று பார்த்தால் அவர்கள் பங்குப் போட்டுக் கொள்ளக்கூடிய நிலையில் தான் இது ஏற்பட்டு இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் அதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏதோ அவர்கள் எல்லாம் தகுதியானவர்கள் இல்லையா என்று கேட்காமல் இதனால் பல குற்றச்சாட்டுகள் ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் மேல் ஏற்பட்டு அவர்களுக்கு மக்கள் மத்தியில் கெட்டப் பெயர் ஏற்படுகிறது என்பதை இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். அந்த நிலையில் இல்லாமல் அவர்களை எல்லாம் கட்டுப்படுத்தி ஒழுங்காக வேலை நடப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் இந்த அதிகமான ஒப்பந்தக்காரர்கள் இருப்பதால் தவறுகள் ஏற்படுகிறது என்று குற்றம் கூறவில்லை என்றாலும் அதிகாரிகள் இதில் பல தவறுகளை இழைத்து இருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு கூறமுடியும்; இந்த வறட்சியின் காரணமாக அதிகமான வேலை செய்தவர்களுக்கு கூட பணம் வழங்கப்படவில்லை என்ற நிலை பரவலாக இருக்கிறது. ஒன்றை குறிப்பாக கூறவேண்டும் என்றால் எங்கள் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் தொகுதியான திருப்பெரும்புதூரில் கடந்த ஆண்டு வறட்சி பணிக்காக செய்த வேலைக்கு வழங்கப்படவேண்டிய ரூபாய் 50 ஆயிரம், இந்த ஆண்டு 67 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இன்றையவரையில் வழங்கப் படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்துகொண்டிருக்கிறது. வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்படுகின்ற பணங்களை செய்த பணிக்கு வழங்குவது என்பது அரசின் கடமையாக இருக்க வேண்டும். அதேபோன்ற நிலையில் பணம் வழங்குவது அவசியம் என்று இந்த அரசு உணர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூற ஆசைப்படுகிறேன், எங்கள் மாவட்டத்தில் இந்த குறை இல்லை. அதற்கு அங்கு பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு நல்லமுறையில் பணி செய்தார்கள் என்று இந்த நேரத்தில் அவருக்கு இதை ஒரு சான்றாக வழங்க இருக்கிறேன்.

இதேபோன்று பல மாவட்டங்களில் இந்த நிலை இருப்பதை நீங்கள் கண்காணித்து இதற்கான பணங்களை ஒதுக்குவதில் நீங்கள் தீவிரம் காட்டி நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் இடு பொருளான யூரியா வறட்சியின்போது அதிகமாக தேங்கி இருந்தது. ஆனால் மழை பொழிந்ததற்குப் பின்னால் விவசாயிகள் வாங்கக்கூடிய யூரியா போன்றவைகள் எல்லாம் கிடைப்பதும் அரிதாக இருக்கிறது.

(முற்பகல் 11-30)

அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலையும் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது என்பதை அரசு கவனிக்கவேண்டு



136059
600 008

பின் சம்பா விளைவிக்கின்ற நிலையில் அதிகமாக [illegible] தாக்கும் என்ற நிலையில், பூச்சி மருந்துகள் கூடக் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அவை கிடைக்கவும், அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலை இருப்பதைத் தவிர்க்கவும் மானியமாக வாங்கியதை நல்ல முறையில் விநியோகிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது அந்த நிலை இல்லை. அவற்றையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயிகள் நன்மைக்காக — விவசாயிகள் மேம்பாட்டிற்காக இந்தத் திட்டத்திலே நீர்க்கசிவுக் குட்டைகளுக்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரூ. 1 கோடி செலவு செய்ய நல்லமுறையில் திட்டமிடப்பட்டிருக்கிறதா? அது நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா, ஒழுங்காகச் செலவு செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் கூற வேண்டும். அதற்கு உதாரணமாக ஒன்றைக் கூற வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியிலே சிறியகுப்பம் என்ற ஊரிலே, மலை அடிவாரத்திலே, கசிவுக் குட்டைகட்டுவதாகத் திட்டமிட்டார்கள். அது அங்கீகரிக்கப்பட்டது, பணமும் ஒதுக்கப்பட்டது. வேலை செய்யப்பட்டதா என்றால் இல்லை என்றுதான் சொல்வேன். அதே போல் கொத்தரை என்ற ஊரிலே, அரைகுறையாக வெட்டியிருக்கிறார்கள். பெரியகரம் என்ற கிராமத்திலே முழுமையாகச் செய்யாமல், புல் டோசரை வைத்து அரைகுறையாக செய்திருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட தொகை அதிகமாக இருந்தாலும் செலவழிக்கப்பட்ட தொகை மிகவும் குறைவு என்றுதான் என்னால் காணமுடிகிறது. அது போன்ற சமயங்களில், நிரந்தரமாக மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற வகையில் திட்டத்தை நல்லமுறையில் செயலாற்றுவதற்கு அரசு முனைந்திடவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். 50 ஏக்கர்களுக்கு உட்பட்ட பாசன ஏரிகள் எல்லாம் எங்கள் மாவட்டத்திலே அதிகமாக இருக்கின்றன. ஏரிகள் நிறைந்த மாவட்டம் என்றால் அது தென்னாற்காடு மாவட்டமாகத்தானிருக்கிறது. 3,000 ஏரிகளுக்குமேல் எங்கள் மாவட்டத்திலே இருக்கின்றன. அவையெல்லாம் நன்றாகப் பராமரிப்புச் செய்யப்படுகின்றனவா என்று பார்த்தால் இல்லையென்றுதான் கூறமுடியும். அதுபோன்ற ஏரிகளை மேலும் நல்லமுறையிலே பராமரிக்க, செயலாக்கத் திட்டமிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குக் குடிநீரைப் பொறுத்தவரையில், கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்காக ரூ. 30.1 கோடியை அரசாங்கம் சென்னை மாநகரத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, தலைமையிடத்தையே மாற்றுவதற்குக் கோப்பு இருக்கிறது என்று ஒரு அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், வெளியே பார்க்கிறோம், சென்னை நகரத்தின் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் கிருஷ்ணா நதிநீர் திட்டம் என்று கூறுகிறார்கள். அதை நல்ல முறையிலே, விரைவாகச் செயல்படுத்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேலும், விநியோகத்திற்குக்

குழாய்களை அமைப்பதற்கு அரசு ஏதாகிலும் திட்டம்
இட்டிருக்கிறதா? இன்றைய தினத்திலிருந்து செய்தால்தான் அவை
நல்லமுறையில் இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கழிவு நீரும் குடிநீரும் ஒன்றாகக் கலப்பதால் இன்றைக்குச்
சென்னை மாநகரத்திலே. மஞ்சள் காமாலை போன்ற கொடுமை
யான நோய்கள். கடுமையாகப் பரவலாக இருக்கின்றன.
அதனால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்கு ஆளாகியிருக்
கிறார்கள். ஆயிரக் கணக்கான நபர்கள் இறக்கிறார்கள் என்ற
நிலையிருக்கும்போது, ஏதோ கிருஷ்ணா நதி நீர் திட்டமிட்டிருக்
கிறோம் என்ற ஒரு நிலையோடு மட்டுமல்லாமல், விநியோகத்
திற்கு ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால்
இல்லை. அந்த வேலைகளை இப்பொழுது ஆரம்பித்தால், நதிநீர்
வருவதற்கும் நல்ல முறையில் விநியோகிப்பதற்கும் சரியாக
இருக்கும். ஆகவே, அதையும் நல்ல முறையில் அரசு கவனிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய அளவில் நடைபெறும் மத்திய அரசின் என்.ஆர்.இ.பி.
திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென
வேண்டுகோள் விடுக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவருடைய
கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகிறேன். ரூ. 30,000
அளவுக்குத் திட்டமிட்டால், பஞ்சாயத்து ஒன்றிய ஓவர்சீர்
மதிப்பீடு தயாரிக்கிறார்; யூனியன் பொறியாளர் அதை அங்கீகரிக்
கிறார். அந்த ரூ. 30,000 திட்டத்தைப் பிரித்து. ரூ 7,000 என்ற
அளவுக்கு அவர்களே போட்டு, அதில் பல தவறுகள் நடக்
கின்றன. கால்நடைகளின் குடிநீருக்காகக் குளங்களை வெட்டு
கிறார்கள். வறட்சித் தொடர்ந்து இருக்கிறது; என்.ஆர்.இ.பி
யும் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என். ஆர். இ. பி.
திட்டத்திலே ஏதோ குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள்.
என்.ஆர்.இ.பி.யைப் பொறுத்த அளவில் இந்திய உபகண்டத்
திலேயே ஒழுங்காகக் கணக்கைக்காட்டி அதிக வேலைகளைச்
செய்த மாநிலமே தமிழ்நாடு தான் என்று மத்திய அரசாங்கமே
பாராட்டியிருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கத்திலே
பொறுப்பிலே இருக்கக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் இதிலே
குறைகள் இருப்பதாகச் சொன்னால், அவர்கள் ஆட்சியில்
இருக்கக்கூடிய மாநிலங்களில் எப்படி நடக்கும் என்பதைத்
தயவுசெய்து அவர்கள் பார்க்கவேண்டும். ஏனென்றால் நான்
குறையாகச் சொல்லவில்லை. ஒருசில குறைபாடுகள் பெரிய
திட்டங்களில் நடந்திருக்கலாம்; இல்லையென்று சொல்லவில்லை.
அதேநேரத்தில் எப்போதுமே குறைகள் வருகிற நேரத்தில்
அவற்றையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்வது தான் சரியாக
இருக்கும். மேலெழுந்தவாரியாக அல்லது உங்களுடைய
கண்ணோட்டத்தின் அடிப்படையில் சொல்லிக்கொண்டே
போனால் நாங்களும் திருப்பிச் சொல்ல முடியும். ஆகவே,
தயவுசெய்து இந்த அவைக்கு நீங்கள் உதவி செய்கிற வகையிலே
இருக்கவேண்டுமே தவிர, குற்றம், குறைகளை மட்டுமே சொல்



திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்த
பணிகளுக்கு மாநில அரசை, மத்திய அரசு பாராட்டியிருக்கிறது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே மத்திய
அரசே பாராட்டியிருக்கிற காரணத்தாலே, இப்போது இருக்கிற
குறைபாடுகளைச் சொல்ல வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள்
கருத மாட்டார்கள் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சில குறைபாடுகளைச் சொல்கிறார்கள்.
அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். அதை
அவர்களால் நிரூபிக்க முடியும். தவறுகளைச் சொல்லி அவற்றிற்கு
தீர்வு காண வேண்டுமென்று சொன்னார்கள். உதாரணமாக
சொல்ல வேண்டுமென்றால், திருமங்கலம் ஒன்றியத்திலே கூட
தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழே பல மாதங்களாகியும்
இன்னும் வேலைகள் துவங்கப்படாமல் இருக்கின்றன. அவர்கள்
அதைப் போல தான் சொல்கிறார்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி.
நானும் அந்தப் பணி நல்ல பணி என்று ஒட்டுமொத்தமாக
ஒப்புக்கொண்டாலும், அந்தப் பணி ஓரளவிற்கு நடந்திருக்கிறது
என்பதை ஒப்புக்கொண்டாலும், சில குறைகளை இந்த
அவைக்கு எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆர். டபிள்யூ. எஸ். என்று பழைய கிராம சேவக்குகளுக்கு புதிய
பெயரைச் சூட்டி, புதிய பொறுப்புகளை அவர்களிடத்தில்
ஒப்படைப்பதில் என்ன தவறுகள் ஏற்பட்டுள்ளன என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.
அவர்கள் ஒப்படைக்கிறபோது வேறு நபர்களுக்கு இந்தப்
பணியை கொடுக்கிறார்கள். அது செம்மையாக நடத்த வேண்டு
மென்பதற்காகத்தான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாற்றுத்தலைவர் அவர்
களே, இராம நல அலுவலர்களிடம்தான் இந்தப் பணியை
ஒப்படைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்
கிறது. ஆகவே தான் நாங்கள் அப்படி செய்ய வேண்டியவர்
களாக இருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, அவர்களிடத்தில் ஒப்படைப்பதிலே என்ன சிரமங்கள்
இருக்கின்றன? அதை எப்படி தீர்க்கலாம் என்றுதான் கூற
வருகிறேன். மத்திய அரசாங்கம் உத்தரவிட்டது; ஆகவேதான்
நாங்கள் ஒப்படைக்கிறோம் அப்படித்தான் நடக்கும் என்ற
நிலைக்கு அவர்கள் ஆளாக வேண்டாம் என்று நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். கிராம நல சேவக்குகள் வேறு ஒரு
நபருக்கு விடுகிறபோது அதில் பல தவறுகளைச் செய்கிறார்கள்,
அந்தத் தவறுகளை நான் பட்டியல் போட்டு காட்ட முடியும்.
பல நபர்களுக்கு பணம் போகவில்லை இந்த கிராம
சேவக்குகள் முதல்ல் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஏமாற்றி
விட்டுச் சென்றார்கள்; எங்களை வேலை செய்ய சொன்னார்கள்.
என்பதைப் போலவெல்லாம் நான் பட்டியல் போட்டு காண்பிக்க

முடியும். அந்த அளவிற்கு எங்கள் பகுதியில், என் தொகுதியில், என்னுடைய பக்கத்து கிராமத்தில்கூட நடந்தது. இதுபோன்று நடக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிட வேலைகள் இலாபகரமாக இருக்குமென்று, அந்த உணர்வுகளுடன் அதற்காக திட்டமிடுகிறார்கள். அவைகளையெல்லாம் தவிர்த்து, நல்லதொரு பணியைச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும், என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சமுதாய மேம்பாட்டிற்காகத்தான் அரசின் திட்டங்கள் இருக்கவேண்டுமே தவிர, சமுதாய சீர்கேட்டிற்காக இருக்கக் கூடாது. அன்னிய நாட்டு மதுவகைகளுக்காக இதிலே ஒதுக்கீடுகள் செய்கிறீர்கள். இன்றைக்கு கள்ளுக்கடைகளும், சாராயக் கடைகளும் ஆங்காங்கே திறக்கப்படுகின்றன. கோவில்களின் பக்கத்திலும், பள்ளிக்கூடங்களின் பக்கத்திலும் அவைகள் திறக்கப்படுகின்றன அதற்கு இந்த அவையிலே பல கோஷங்களையும், எதிர்ப்புகளையும் எழுப்பினாலும் அந்த நிலை மாறுவதாக இல்லை. மவுண்ட் ரோடிலே, ஆபட்ஸ்பரிக்கு எதிரிலே கூட ஒரு பெரிய கடை இருக்கிறது. அங்கே மாலை நேரங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடுவதை இந்த நகரிலே பார்க்க முடியும். இது போன்று நடப்பதால், கிராமப்புறங்களில் பல பிரச்னைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. சமுதாய கேட்டிற்கு அரசு உறுதுணையாக இருக்கிறது. சமுதாய சீர்கேட்டிற்கு இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உறுதுணையாக இருக்கிறது என்பதைக்கூட நான் சுட்டிக்காட்ட முடியும்.

அதேபோல, மாநில அரசு லாட்டரிச் சீட்டுகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. மற்றைய மாநிலங்களின் சீட்டுக்களை தடைசெய்ய வேண்டுமென்ற உணர்வுகள் இருந்தாலும், அது சமுதாயத்தில் எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உணர்ந்திருந்தாலும், அதை கட்டுப்படுத்துவதற்கு, சமுதாய மேம்பாட்டிற்காக நல்ல பல திட்டங்களைக் கொண்டு வரவேண்டும். மக்களின் நல்வாழ்விற்காக பாடுபடுவோம் என்ற நிலைக்கு நாம் வர வேண்டும். மக்களுக்காக ஒதுக்கக்கூடிய நிதி முழுவதையும் சிதைவுகள் ஏற்படாமல், மக்களுக்கே செலவழிக்க வேண்டும். சிறுதொழில்களுக்கும், விவசாயிகளுக்கும் மின்சாரம் வழங்குகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதை கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள துணை மதிப்பீட்டை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்ற முறையில் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இந்த வறட்சி நிலையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது குறைபாடுகள் சிலவற்றைக்



கூறினார்கள். இந்த நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் எழுபத்தைந்து ஆண்டுக்காலமாக இல்லாத வறட்சி நிலை இருக்கிறது, இருந்து கொண்டிருக்கிறது என்பதனை நான் ஆளுங்கட்சியிலே இருந்து கொண்டு அல்ல, எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்திலேயே சொன்ன காரணத்தினால் இங்கே வந்தவன் என்பதை நாடு நன்றாக அறியும்.

இந்த வறட்சி நிலையிலே நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்களின் அரசு எடுக்கின்ற சீரிய நடவடிக்கைகளின் மூலமாகச் சிறப்பாகச் செயல்பட்டு சீர்படுத்தப்பட்டு வருவதை நாடு நன்றாக அறியும்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், மைய அரசு பணம் ஒதுக்குவதற்கு முன்னாலேயே, அனைத்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற தமிழக அரசானது 30 கோடி ரூபாயைச் செலவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த அளவிற்கு வறட்சி நிலையைச் சமாளிப்பதற்கு இங்கேதான் முற்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினவரவர்கள் பேசும்பொழுது சில குறைகளைச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இந்த வறட்சிப் பணிகளைப் பார்வையிட மத்திய அரசு ஒரு குழுவை அனுப்பியது. அந்தக் குழு, தமிழகத்திலே புரட்சித் தலைவர் ஆட்சியில் வறட்சிப் பணிகள் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று நல்ல அறிக்கையைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறது என்பதனை அவர்களும் அறிவார்கள், நாடும் நன்றாக அறியும்.

அதுமட்டுமல்ல, மைய அரசினுடைய நிதியமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் சிலபல நாட்களுக்கு முன்பு இதையே கூறி, தமிழக அரசு வறட்சி நிலையை மிக நல்லமுறையில் சமாளித்துக் கொண்டு வருகிறது என்று கூறியுள்ளார்கள்.

அடுத்தபடியாக, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பத்திரப்பதிவுத் துறையில் உள்ள செக்ஷன் ரைட்டர்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்கும் வண்ணம், ஏறக்குறைய 329 செக்ஷன் ரைட்டர்களை இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்ய வகை செய்யும் இந்தத் துணை மதிப்பீட்டை என்னைப் போன்றவர்கள், ஏழை, நடுத்தர வர்க்கத்திலே உள்ளவர்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வரவேற்கிறோம். அது விரைந்து செயல்பட வேண்டுமென்று நான்சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி வறட்சி என்று குறிப்பிடும்பொழுது சிலபலயிடங்களில் சிலபல காரியங்கள் செய்யப்படுகின்றன. அவையெல்லாம் சரியாகச் செய்யப்படவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டமே வறட்சியால் பாதிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணியில கிழ வடி முலை குழாய் கிணறுகள் இறக்குவதற்காக 1¼ கோடியில் தஞ்சை மாவட்டத்தில் தனியார் பாசனக் கிணறுகளை அமைப்பதற்கு விவசாயிகளுக்கு 5 கோடி ரூபாய் கடனும் அரசாங்கம் கொடுத்தது என்பதை மறந்து விடுவதற்கில்லை. அதை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். எனவே நான் பாராட்டுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணா நதி நீர் பற்றி இருக்கின்றது. இதுபற்றி பெரிய பிரச்சினையாக பலபேர் வெளியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். வெளியே பேசுவதை எல்லாம் இங்கே, உள்ளே பேச முடியாது என்றாலும் காவிரி நதி நீரை சென்னை நகரத்திற்குக் கொண்டு வருவதற்காக முன்பு நான் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அப்போது நடவடிக்கை மேற்கொண்டது. அதற்குப் பின்னாலே, பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னாலே அது கைவிடப் பட்டது. அது மட்டுமல்ல. அந்த வீராணம் திட்டம் என்றாலே இந்தியத் துணைக் கண்டம் பூராவும் தெரியக்கூடிய ஒரு திட்ட மாக ஆக்கப்பட்டு விட்டது. அதனுடைய தன்மை அந்த அளவுக்கு ஆக்கப்பட்டு விட்டது என்பதை எந்தக் கட்சியிலே உள்ளவர் களாக இருந்தாலும் நெஞ்சத்திலே கை வைத்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அதிலே நடைபெற்ற தன்மைகளை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். வெளியே அவற்றை இன்றைய தினம் பேசலாம். வெளியே பேசிப் பலன் இல்லை. ஆனால் நெஞ்சத்தின் உள்ளே நன்றாகத் தெரியும். வீராணம் திட்டத் திலே நடைபெற்றது என்ன?

அந்தத் திட்டத்திற்குப் பதிலாக மாற்று திட்டமாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக முதல் தவணையாக 30 கோடி ரூபாய்—வரிப்பணம் தான் என்னுடைய சொந்தப் பணம் அல்ல—கொடுக்கப்பட்டிருக் கின்றது. அப்படிப்பட்ட வரிப்பணம் தான் வீராணம் திட்டத்திலே கூட பாழடிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்காக முதல் தவணையாக 30 கோடி ரூபாயைத் தந்திருக்கிறார்கள். அத்திட்டம் விரைந்து செயல்பட எல்லா கட்சியினரும் கட்சியை மறந்து ஒத்துழைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





ஆனால் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வரக்கூடாது என்று கருதக்கூடியவர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். அந்தப் பெரிய மனிதர்களைப் பற்றி இங்கே நான் பேச விரும்பவில்லை. அவர்கள் இங்கே இல்லாத காரணத்தாலே அல்ல, பெரிய மனிதர்களைப் பற்றி மிகச் சாதாரணமான நான் பேச விரும்பவில்லை. எப்படி வீராணம் திட்டத்தின் மூலமாக காவிரி நீர் சென்னைக்கு வர முடியாமல் போயிற்றோ அதைப் போலவே கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரக்கூடாது என்று, தவத்திலே நம்பிக்கை இல்லாதவர்கள் கூட, நம்பிக்கை இல்லாதவர்கள் கூட இன்றைய மூகாம்பிகை மீது நம்பிக்கை வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நலம் மூகாம்பிகையை வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக கிருஷ்ணா நதி நீர் இங்கு கொண்டுவரப்படும் என்று என்னைப் போன்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம். நான் புதியவனாக இருக்கலாம் இந்தக் கட்சிக்கு. ஆனால் நீண்ட காலமாக நான் அதை நினைத்துக் கொண்டிருந்தவன், நம்பிக் கொண்டிருந்தவன். புரட்சித் தலைவர் அவர்கள் காரியங்களைச் செய்யக்கூடியவர் என்று நம்பிக்கொண்டு இருந்த காரணத்தாலே தான் இந்தக் கட்சிக்கு வந்தேன். அது வேறு விவகாரம். 9 ஆண்டுக்காலம் ஆட்சியிலே இருந்தவர்கள் இப்போது இங்கே விளம்பரம் செய்திருக்கிறார்கள், திருமதி இந்திரா காந்திக்கு அருகிலே போய் உட்கார்ந்து விட்டாரே புரட்சித் தலைவர் என்று. இது என்ன பேச்சு. இப்படி இங்கிதம் இல்லாமல் பேசுவதை விட கிருஷ்ணா நதி நீர் விரைந்து சென்னைக்குக் கொண்டுவரப்படுவதற்குரிய எல்லா வகையான ஒத்துழைப்பையும் நம்மாலே தர முடியாதா? தரமுடியாவிட்டாலும், ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-50)

கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்திலே இன்னொன்றையும் நான் சொல்லவேண்டும். இங்கே சென்னை மா நகரத்திலே உள்ள சில பல சாராயக கடைகளை, பிராந்தி ஷாப்புகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அத்தகைய குறைபாடுகள் ஏதேனும் இருக்குமானால், இருக்கவே இருக்காது என்று சொல்லவில்லை, என்னுடைய முன்னாள் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கலாம் என்று சொல்வார்கள். அதைப் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக்கூடும். அப்படி நடந்து கொண்டு இருந்தால் அவற்றைக் களையவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மற்றவற்றை வாய்ப்பு கிடைக்கின்ற போது பேசுகிறேன் என்று சொல்லி, தற்போது வாய்ப்பளித் தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது னுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, உரிய மாண்புமிகு நாவலர் மதிப்பிற்கும் மரியாதைக்கும்,

அவர்கள் 1983–84 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளை ரூ. 158.75 கோடி அளவிற்கு கேட்டு, இந்த அவை முன் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இந்த அவை அனுமதிக்கின்ற பணம் முறையாக, ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய அருமை உறுப்பினர் அண்ணன் பலராமன் அவர்கள் சொன்னார்கள். நானும் சிலவற்றை இங்கே எடுத்துச்சொல்வது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன்.

தமிழ்நாடு மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருந்தது. வேலைவாய்ப்பும் இன்றி தவித்தனர். அந்த வறட்சியை விரட்டுவதற்காக மக்கள் நலன் கருதி எத்தனையோ திட்டங்களை அரசு தீட்டி, அதன் மூலம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இத்தகைய திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப் பட்டது. ஆனால் அந்த வேலைகள் எதுவும் அங்கே ஒழுங்காக நடைபெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் கூறியதைப்போல, என்னுடைய தொகுதியில் வறட்சி திட்டத்தின் அடிப்படையில், மைனர் இரிகேஷன் வகையில், ஊரணிகள் சீரமைப்பிற்காக ஒதுககப்பட்ட பணம் சரிவர செலவு செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் போய்ச் சேருகிறது. அதைப் போலவே, சாலைகள் எதுவும் சீரமைக்கப்படவில்லை. அதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தப் பணத்தை ஆர்.டபிள்யூ.ஓ. மூலமாக மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வதைப்பற்றி கவலையில்லை. ஆனால் வேலை ஒழுங்காக நடந்ததா என்று பார்க்க வேண்டாமா? நான் குறை சொல்வதற்காக இவற்றைச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் நடைபெறுகிற நேரத்தில் அதில் ஆளும் கட்சிக் காரர்கள் தலையிட்டு, வேலை ஒழுங்காக நடைபெறாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள் கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; வரவேற்கிறேன். அதற்காகக் கொடுக்கப்பட்ட பணம் 50 இலட்சம் ரூபாய். வேலைகள் நடைபெற்றன. குறிப்பாக சாலைகள் போட்டார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவுசெய்து என்னுடைய தொகுதிக்கு ஒருமுறை வந்து அந்தச் சாலைகளைப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அந்தச் சாலைகள் எந்த அளவுக்கு சீர்கெட்டிருக்கின்றன என்பது அவர் களுக்குத் தெரியும்.



சாலைகள் போட்டுவிட்டால் மட்டும் போதுமா? அவற்றை மெயின்டேயின் செய்ய வேண்டாமா? பராமரிப்புச் செய்ய வேண்டாமா? அதற்கு என்ன ஏற்பாடு? மழை பெய்துவிட்டால் சாலைகளிலுள்ள கற்கள் எல்லாம் அரித்துச் செல்லப்பட்டு விடுகின்றன; ரோடு ரோடு மாதிரி இல்லை. என்னுடைய தொகுதியில் போடப்பட்ட ஒரு சாலை கூட சரியாக இன்றைய தினம் இல்லை. ஆகவே, போடப்பட்ட சாலைகளைப் பராமரிப் பதற்காக போதுமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே மாண்புமிகு பெரியவர் கிட்டப்பா அவர்கள் அவர்களுக்கே உரிய பாணியில் சொன்னார்கள். நான் அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்றை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடிய வில்லை. கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் ஒரு வேடிக்கையாக, வித்தையாக இருக்கிறது. அதற்கு 30 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த 30 கோடி ரூபாய் ஆந்திர அரசில் முடக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை வட்டிக்கு விட்டிருந் தால்கூட இந்த அரசுக்கு பணம் வரும். பணம் கொடுத்தாகி விட்டது. எப்போது இந்தத் திட்டம் வரும் என்று தெரிய வில்லை. (குறுக்கீடு)

வீராணம் திட்டத்தைப்பற்றி நாங்கள் கூட சொல்லவில்லை. தமிழக ஆளுநர் மேதகு குரானா அவர்களே இராஜஸ்தான் சங்கத்தில் 18–11–82 லே இந்தத் திட்டத்தைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். இந்தத் திட்டம் அருமையான திட்டம், வரவேற்கக்கூடிய திட்டம், இதை நீங்கள் அமுல்படுத்த வேண்டு மென்று சொல்லியிருக்கிறார். இன்றைய கவர்னர் இந்தத் திட்டத்தை வரவேற்றிருக்கிறார். அதைப்போன்று இந்த வீராணம் திட்டம் பற்றி மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முன்னாள் முதல் அமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் இது ஒரு அருமையான திட்டம் என்று சொல்லி, வரவேற்றிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா: மாற்றுத் தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். மதிப்பிற்குரிய பெரியவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பெரியவர் அவர்கள் இங்சே பேசும்போது வீராணம் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி இந்தியத் துணைக்கண்டத்தின் இன்றைய பிரதமராக இருக்கிற மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்களே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. இதே இந்திரா காந்தி அம்மையாரால் இங்கே அனுப்பி வைக்கப்பட்ட குழு இது நல்ல திட்டம், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்பதை நினைவுபடுத்த

விரும்புகிறேன். இப்படி பலரும் கருத்துத் தெரிவித்திருந்தாலும் இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டீர்கள். இந்தத் திட்டம் வந்தால் சென்னை மாநகர மக்கள் பயன்பெறுவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த ஒரு நல்ல திட்டத்தை, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கருணாநிதி பெயரை தட்டிக்கொண்டு போய்விடுவாரே என்ற கெட்ட எண்ணத்தினால் முதலமைச்சர் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், முன்னாள் முதல் அமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் வரவேற்கப்பட்ட இந்தத் திட்டத்தை, இன்னாள் கவர்னர் குரானா அவர்களால் வரவேற்கப்பட்ட இந்தத் திட்டத்தை ஒரு நல்ல திட்டத்தை குழி தோண்டி புதைத்து விட்டீர்களே என்பதால் தான்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பல வேலைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக கிராமப்புறங்களில் மின்சார விநியோகம் எப்படி இருக்கிறது என்பது பற்றி இங்கே எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் கூறினார்கள்.

(நண்பகல் 12-00)

இன்றைய தினம் கிராமங்களிலே விளக்குகள் எரிவதில்லை. ஆனால், நீங்கள் இங்கே சவால் விட்டு சொல்லலாம். சவால் விட்டு வாபஸ் வாங்குவதிலே நீங்கள் சிறந்தவர்கள். எந்த கிராமத்திலாவது விளக்கு எரிகிறதா என்றால், எரியவில்லை. சென்னையைத் தவிர மற்ற கிராமங்களில் விளக்குகள் சரிவர எரிவதில்லை.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி. பு. யசோதா) தலைமை]

என்னுடைய தொகுதியில் உள்ள காட்டாங்கொளத்தூர் திருப்போரூர் பகுதியில் ஒரு கிராமத்தில்கூட விளக்கு எரிவதில்லை. இதற்கு என்ன காரணம்? நீங்கள் தான் காரணம். தேர்தல் இல்லை. அதனாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டில்லை, பஞ்சாயத்து யூனியன் இல்லை, நகராட்சி இல்லை. அவைகள் இருந்திருந்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இது குறித்து நடவடிக்கை எடுத்து, அதிகாரிகளைப் பார்த்து விளக்குகளை எரியச் செய்திருப்பார்கள்.

இப்போது அதிகாரியைப் பார்த்து விளக்கு எரியவில்லை என்று சொன்னால், பல்பு இல்லை, அதை வாங்கப் பணம் இல்லை, பணம் கொடுத்தால் தான் நாங்கள் இந்தப் பணிகளைச் செய்ய முடியும் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இங்கே மாண்புமிகு நாவலர் அவர்கள் துணை மதிப்பீடு நிதி ஒதுக்கீடு என்று சொல்லி நிறைய பணம் வாங்கிக் கொடுக்கிறார்கள். இது குறித்து அரசாங்கம் கவனிக்கவேண்டும்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பல்புகள் இருக்கின்றன. ஆனால், எரிவதுதான் இல்லை. உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் எந்த ஊரிலேயும் விளக்குகள் எரியவில்லை என்று சொல்கிறார்கள். நான் நேற்றைய தினம்கூட, கோவை மாவட்டத்திற்குச் சென்று வந்தேன். (குறுக்கீடு) தமிழகம் முழுவதும் எரியவில்லை என்று அவர்கள் சொல்கிற மாதிரி தெரிகிறது. எனவே நான் உறுப்பினரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் குறிப்பிட்டு எந்த கிராமம் என்று சொல்லுங்கள். தமிழகம் முழுவதும் என்று வருகிற மாதிரி சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: நான் குறிப்பாகத்தான் சொன்னேன். காட்டாங்கொளத்தூரில் தையூர் என்ற கிராமம் உள்ளது. கூடுவாஞ்சேரியில் மற்றும் திருப்போரூரில் உள்ள கிராமங்களில் எரியவில்லை. நான் என்னுடைய தொகுதியைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதை நான் ஏன் சொல்கிறேனென்றால் இந்த விஷயங்களில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடக்கூடாது. அந்தந்த பஞ்சாயத்து போர்டு அல்லது யூனியன்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டால் இந்தக்குறை இருக்காது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பக்கத்திலே இருக்கின்ற கோவளம் சென்று பாருங்கள். என்னையும் அழைத்துச் செல்லுங்கள். எனவே என்னுடைய தொகுதியில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொல்கிறேன்.

அடுத்து இன்றைய தினம், அரிசனங்களுக்காக எவ்வளவோ செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்குக் கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் செலவழிக்கவில்லை, குறிப்பாக 48 கோடி ரூபாய் இந்த அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட தொகை சரிவர செலவழிக்கப்படவில்லை என்று கூறி உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார். நீங்கள் என்ன சொன்னீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அரிசனங்களுக்கு கிராமத்துக்கு உள்ளேயே வீடு கட்டிக் கொடுப்போம், கருணாநிதியைப்போல தனியான இடத்தில் கட்டிக்கொடுக்க மாட்டோம் என்று சொன்னீர்கள், என்ன வாயிற்று? தேர்தலிலே எவ்வளவு வாக்குறுதிகள் கொடுக்கிறீர்கள். சர்வசாதாரணமாக வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்ட இன்றைக்கு நிறைவேற்ற முடியவில்லை. ஆகையினால் இன்றைய தினம் அரிசனங்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை திறமையாக செய்தார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் இதை கைவிட்டுவிட்டீர்கள்.

அடுத்து இந்த சத்துணவு பற்றி ஒரு வார்த்தை. ஏற்கனவே 30 பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது 10 பேர்தான் சாப்பிடுகிறார்கள். ஏன் அந்த 10 பேராக

குறைந்தது என்றால், அங்கே தரப்படுவது வெறும் சாம்பார் சாதம் தான். சத்தே இல்லாத உணவு. காய்கறி ஏதாவது போட்டால் தானே அதில் சத்திருக்கும். வெறும் சாம்பார்தான். (குறுக்கீடு) மாம்பாக்கத்தில் உள்ள பள்ளியிலும் மற்றும் நென்மேலி என்ற ஊரிலும் என்னுடைய தொகுதியிலே இப்படி நடக்கிறது. நாங்கள் இந்தத் திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆரம்பத்திலேயே நாங்கள் வரவேற்கிறோம் என்றுதான் சால்லியிருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டம் செயல்படும் விதம் ஒழுங்காக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் ஒன்றை மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகம் பூராவும், குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சார்ந்த, சென்னையை அடுத்துள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலே இந்த ரியல் எஸ்டேட்காரரர்கள் நிலங்களை லே-அவுட் போட்டு விற்கிறார்கள். அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். சென்னையைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் உள்ள அத்தனை இடங்களிலும் லே-அவுட் போடுகிறார்கள். இந்த லே-அவுட் போடுவதற்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் விவசாயிகளுடைய நிலங்களை வாங்கி அதை லே அவுட் போட்டுவிடுகிறார்கள். அதற்கு அனுமதியும் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும் அனுமதி கிடைக்கிறது. அந்த நிலத்தை லே-அவுட் போட்டு அதிகமான விலைக்கு விற்கிறார்கள். அப்படி விற்கிற போது குறிப்பாக மறைமலை நகர் என்ற அந்த திட்டத்தை அடிப்படையாக வைத்து, அவர்கள் விற்கிறார்கள். குறிப்பாக லியோ ரியல் எஸ்டேட் வைத்திருப்பவர்கள் இப்படி விவசாயிகளினுடைய நிலங்களை வாங்கி விற்பதால் மறைமலை நகரின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் நிருபர்கள் கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். இந்த ரியல் எஸ்டேட் வைத்திருக்கின்ற அத்தனை பேர்களும் கறுப்புப் பணம் வைத்திருக்கிறார்கள், சினிமாக்காரர்களைப் போல என்றும், இது ஒரு மோசடி என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை நடைபெறுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்த ரியல் எஸ்டேட் காரர்கள் நடத்துகின்ற விழாக்களில் மாண்புமிகு அமைச்சர்களும், மற்ற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்கிறார்கள். அதனால் அவர்கள் புறம்போக்கு நிலங்களைக்கூட லே-அவுட் போட்டு விற்றுவிடுகிறார்கள். இதனால் அரசாங்கத்தினுடைய திட்டங்களினுடைய டெவலப்மென்ட் குறைந்து போய் விடுகிறது. ஆகவே அரசாங்கம் இவைகளை எல்லாம் கவனிக்கொண்டு தக்க வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரசாங்கம் பொய்களைச் சொல்லி, மக்களை ஏமாற்றுகிறது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன.



*திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர், அவர்களே, உரிய நேரத்திலே எனக்கு வழிவிட்டு இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற துணை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை முன் வைக்க விரும்புகிறேன். 1977-லேயிருந்து 1983 வரை தொடர்ந்து 7 நிதி நிலை அறிக்கைகளை முறையாக வைத்து, அதனுடைய அங்கீகாரத்தை இந் நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற இந்தச் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களிடம் இருந்து பெற்று, அதை முறையாக நிர்வகித்து வருகிற ஒரே அரசு, இந்த பாரத மண்ணிலே புரட்சித் தலைவர் அரசு ஒன்றுதான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு தொய்வில்லாத துண்டு விழாத நிதிநிலை அறிக்கைகளை தொடர்ந்து தந்து இருக்கிற அரசு மட்டுமல்ல, 1979-ல் இந்த ஆட்சி கலைக்கப்பட்டபோது, மத்திய அரசாங்கத்தில் அப்போது நிதி அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையை அறிமுகப்படுத்தியபோது, தமிழகத்தினுடைய நிதி நிலை எவ்வளவு சீராக திறம்பட நடத்தப்பட்டிருக்கிறது என்பதையும் எவ்வளவு தூரம் நிர்வாக திறமையோடு நடத்தப் பட்டிருக்கிறது என்பதற்கும் அத்தாட்சியை தந்திருக்கிறார்கள். ஆகவே அரசியலுக்காக மாற்றுக்கட்சிக்காரர்கள்கூறும் சாதாரணக் குறைகளைக் கண்டு நமது அரசை மக்கள் குறைந்து மதிப்பிடப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இது ஒரு பட்ஜெட் ஒதுக்கீடு மட்டுமல்ல. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வள்ளுவர் சொல்விற்கொப்ப தொகுத்தலும், காத்தலும், வகுத்தலும் என்ற அவைகள் மட்டுமல்லாமல், இன்று 'சமாளித்தல்' என்னும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அது புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பின்னால் தொடர்ந்து ஏற்படுகிற சவால்களை எல்லாம் சமாளித்து வருவதைத்தான் குறிப்பிடுகிறேன். புதிய

(பிற்பகல் 12-10)

பெரிய பணிகளுக்கான வரிப்பளுவும் இல்லை. இருந்தாலும் கூட இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு ஆட்சியின் ஆரம்பக் காலத்திலேயே விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்து, நிவாரணம் அளிக்கப்பட்டது. பல கோடி ரூபாய்களை விவசாயிகளின் கடன் நிவாரணத்திற்காக, விவசாயிகளுடைய நன்மைக்காக, அரசாங்கத்தினுடைய கஜானாவிலிருந்து ஒதுக்கப் பட்டது என்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். முந்தைய அரசு காலத்தில் ஒரு காலணா தள்ளுபடி என்பது கூட பெற முடியாது இருந்த காலம் போய், பல கோடி ரூபாய்களை விவசாயிகளின் நன்மைக்காக, கடன் நிவாரணத்திற்காக ஒதுக்க முடிந்தது இந்த அரசால், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசால் என்பதை பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

[திரு. ம. சின்னராசு] [1983 அக்டோபர் 31

ஒரு காசு கூட கூடுதல் வரி போடாமல் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒரு ஒன்றியத்தினுடைய ஆண்டு காலத்தில் 3 லட்சம் அளவிற்கு கூட அரசாங்கத்தினுடைய சொத்துக்கள் சேர்க்கப்படாத இருந்த நிலைமை போய், 35 லட்சத்திலிருந்து, 50 லட்சம் ரூபாய் வரை ஒன்றியங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு எங்கே இருந்து நிதி ஆதாரம் ஏற்பட்டது? நிர்வாகத் திறமையால்தான் வந்தது என்பதை, மாற்றுக் கருத்து உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, எந்த வரியும் இல்லாமல், சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. சில இடங்களில் போடுகிற சாப்பாட்டில் குறைபாடு இருக்கிறது, காய்கறிகள் இல்லை என்று சொல்கிறார்களே ஒழிய, இந்த திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீட்டை இந்த அரசாங்கம் பெற்றிருக்கிற தன்மையையும், இந்த திட்டத்தால் பலன் பெற்றிருக்கிற லட்சோபலட்சம் மக்களுடைய உள்ள உணர்வையும், எண்ணிப் பார்க்க மறுக்கிறார்கள், குறை சொல் பவர்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். திட்டங் களைச் செயல்படுத்துகிறபோது குறைபாடுகள் ஏற்படுகிறது. காண்டிராக்ட்டுகள் எடுப்பதைப் பற்றி புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலே ஒரு பட்டியலே போட்டு படித்துக் காட்டினார். அந்த நேரத்திலே எதிர்க் கட்சியினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் இருந்தார்கள். ஆனால் அதற்கு மறுப்பு ஏதும் சொல்லவில்லை.

ஆகவே, எந்தப் பணியை எடுத்துச் செய்தாலும் அதிலே கட்சி மட்டும் அல்ல, சமுதாயத்திலே இருக்கிற, நம்மிடையே வாழ்கிற மக்களில் ஒரு பகுதியினர் தான் பணியாற்றுகிறார்கள். நம்மில் ஒருவர் தான் என்ஜினீயராக இருக்கிறார்கள். நம்மில் ஒருவர் தான் காண்டிராக்டர்களாக இருக்கிறார்கள். ஆகவே ஏற்படும் குறைபாடுகளுக்கான பழியினை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் ஆளும் கட்சியினர் தான் என்கிற முறையில் கருத்தைச் சொல்வது தவறு. இருக்கிற குறைபாடுகளை முறையாக அமைச்சர்களிடம் தெரிவித்து, அவற்றைக் களை வதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமே தவிர, ஒட்டு மொத்தமாக தன்னிறைவுத் திட்டத்தால், அல்லது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தால் நாட்டிலே ஊழல் ஏற்படுகிறது என்று சொல்வோமேயானால், அது நம்முடைய பொறுப்பை தட்டிக் கழிப்பதாகத்தான் அமையும். ஆகவே, அதை விடுத்து, பொதுக் கருத்துக்களை,—பொதுத் திட்டங்களைப்பற்றிய பொதுக் கருத்துக்களை—சொல்கிற நேரத்தில், அரசினுடைய நல்ல திட்டங்களில் ஏற்படுகிற குறைபாடுகளை நீக்குகிற வகையிலேதான் நாம் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 அக்டோபர் 31] [திரு. மா. சின்னராசு]

அது மட்டும் அல்ல, அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு முறையாக கொடுக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வு, மேல்நிலைக் கல்வித் திட்டம் ஆகியவைகளில் திறமையாக சமாளித்து நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசின் இந்த துணை நிதிநிலை அறிக்கையை வைத்தி ருக்கிறார்கள். திடீர் திடீரென்று நாட்டிலே வறட்சி வருகிறது. வெள்ளம் வருகிறது. வறட்சி வருகிற நேரத்தில் மத்திய அரசாங்கம் நிதி கொடுக்கிறதோ இல்லையோ, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற பெரும் கடமை நமக்கு இருக்கிற காரணத்தால், வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப் படுகிற மக்களுக்கு, நமது மாநில அரசாங்கம் நேரடி பொறுப் பிலே இருக்கிற காரணத்தால், மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவி அல்லது மானியம் வருகிற வரையில் காத்துக் கொண்டிருக்காமல், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, இந்த நிதிநிலை அறிக்கை இன்று தேவைப்பட்டிருக்கிறது.

அதில் பல கோடி ரூபாய்களை மத்திய அரசாங்கம் உதவி செய்யவில்லை என்றாலும் கூட, மக்களுடைய நலனுக்காக நம்முடைய நிதி ஆதாரங்களிலிருந்து அவற்றை நாம் செலவழிக் கிறோம். ஆனால் அதற்காக இருக்கின்ற திட்டங்கள் எதையும் நாம் குறைத்து விடவில்லை. ஆண்டு திட்டங்களையும் குறைத்து விடவில்லை, 6—வது ஐந்தாண்டு திட்டங்களிலேயும் எதையும் குறைத்து விடவில்லை. ஆனாலும், இருக்கின்ற நிலைமைகளை சமாளிக்க, வறட்சிப் பணிகளுக்கு என்று புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தந்திருக்கிற நிதியை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இயற்கையினால் ஏற்படுகின்ற சவாலை சமாளிக்கின்ற நேரத்திலும், நிதி நிர்வாகத்தை யாரும் குறை சொல்ல முடியாத வகையில்,—நான் முதலிலே குறிப் பிட்டுச் சொன்னதைப் போல—இருக்கின்ற மாநிலங்களில், எந்த ஒரு காலத்திலும் தமிழகத்தினுடைய நிதி நிர்வாகம் குறைபட்டு விட்டது அல்லது ஒரு சீரியஸ் செட்—பேக் நிகழ்ந்து விட்டது என்று—மற்ற மாநிலங்களிலே சொன்னதைப் போல, ஒரு காலத்தில் கேரள மாநிலத்தையும், மேற்கு வங்க மாநிலத்தையும் பற்றி கவலைக் கொண்டு மத்திய அரசு சொன்னதைப் போல— யாரும் இந்த அரசாங்கத்தை சொன்னது கிடையாது. மாற்று கட்சியிலே இருக்கக்கூடியவர்களும் சொன்னது கிடையாது.

அந்த அளவுக்கு நிர்வாகத்தை நடத்திச் செல்கின்ற திறமையில், வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் விளைவால் ஏற்படும் பிரச்னைகளில் அரசாங்கத்தின் நிதியிலிருந்தே சமாளிக் கின்ற அளவுக்கு நிர்வாகத்தை செம்மையாக நடத்திச் செல்கின்ற விதத்தில், பெரிய பொருளாதார நிபுணர்களும், வல்லுநர்களும் ஆராய்ச்சி செய்வார்களேயானால், அதற்காகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு டாக்டர் பட்டம் வழங்கலாம். இப்படி மிகத் திறமையான

நிர்வாகத்தின் மூலம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தை 7 ஆண்டு காலம் நிர்வகித்து வருகிறார்கள். ஆனால் அதற்காக நீங்கள் பாராட்டவில்லை என்றாலும்கூட, பழிச் சொல்லாமலாவது இருக்கலாம்.

கூடுதல் நிதி ஆதாரங்களை பெறுகிற நேரத்தில், நமது மாநிலத்திற்கு உரிய உரிமைகளைப் பெறுகிற நேரத்தில், இன்னும் கூட செம்மையாக இந்த அரசு மக்களின் சமூகத் தேவைகளை நிறைவேற்ற முடியும். மக்களுக்காக பாடுபட வேண்டிய பொறுப்பு இருக்கிற காரணத்தால்தான், மத்திய அரசாங்கம் ஒதுக்கி இருக்கிற நிதி 68 கோடி என்றாலும் கூட, அவர்களுடைய குழு வந்து அதைப் பார்த்துவிட்டு அதில் தமமுடைய கருத்தை தெரிவிக்க வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தால், கூடுதலாக 20 கோடி ரூபாயை நம்முடைய திட்ட நிதியிலிருந்து குறைத்து விடாமல், மத்திய அரசாங்கத்தின் முழு உதவியாக அல்லது மானியமாக இது வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று இருக்கிற வறட்சியை சமாளிக்கிற வகையில் பல நல்ல பணிகளை கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தி தந்து இருக்கிற பல துறை அதிகாரிகளுக்கும் உங்கள் மூலமாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகள் இருக்கின்ற பணிகளை மட்டும் அல்லாமல் வறட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவிடுகின்ற நேரத்தில் தாங்கள் கூடுதலாக ஏற்றுக்கொண்டிருக்கிற சிரமத்திற்கு நாம் நன்றியைச் சொல்லாமல் குறை கூறிக் கொண்டிருந்தால் அரசாங்கத்தினுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் கூடுதலான பணுவை ஏற்பதில் அவர்கள் அக்கறை காட்ட மாட்டார்கள். ஆக ஏற்றுக்கொண்ட பொறுப்பினை செம்மையாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ரெவின்யூ துறையோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பல துறைகளையும் ஒருங்கிணைத்து பலயிடங்களுக்கு நேரடியாகச் சென்று பல மாவட்ட நிவாரண கமிட்டிகளை கூட்டி பலயிடங்களை பார்வையிட்டு பணிகளை முடுக்கி விடுவதற்கு துணையாக இருந்து இருக்கிறார்கள். ஆகவே அப்படி செய்யப்பட்ட காரணத்தினால் தான் அதில் சர்வ கட்சி கமிட்டியைப் போட்டு, அதை, கூட்டி வறட்சி பணிகளை நேரடியாகப் பார்ப்பதற்கு வாய்ப்பு தந்தார்கள். ஆக அப்படிப்பட்ட நேரத்தில் எல்லாம் நீங்கள் குறைகளை காணவில்லை. சட்ட மன்றத்தில் பேசுகிறபோது மட்டும் நடந்து விட்ட அனைத்து திட்டங்களிலும் குறைபாடுகளை முட்டை உடைசல்களை சொல்கின்ற அந்த பாங்கினை நாம் மாற்றிக் கொள்ளவேண்டும். எல்லா இடத்திலும் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் வறட்சி நிவாரணப் பணியைப் பொறுத்தவரையில் அவர்கள் பங்கு கொள்வதற்கு பார்வையிடுவதற்கு குறைகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர்



அவர்கள் அரசில்தான் இந்த வாய்ப்புகள் எல்லாக் கட்சிகளுக்கும் தரப்பட்டன என்பதையும் நீங்கள் நினைவு கூற வேண்டும் என்று கேட்டு என்னுடைய தொகுதியின் 2 பிரச்னைகளை தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சிக் காலத்தில் மட்டும் அல்ல எல்லாக் காலத்திலும் நீர் பற்றாக்குறை இருக்கிறது.

சுமார் 100 அடிக்கு மேல் கிணறுகளைத் தோண்டி 2 மணி நேரம்' 3 மணி நேரம் வருகின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி இன்று விவசாயத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற பல நீர் நிலைத் திட்டங்கள்' நீர் தேக்கத் திட்டங்கள் பல காலம் ஆய்வில் இருக்கிறது. இங்கே மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் நேற்று சொன்ன பதிலில் பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் இன்னும் பேச்சு வார்த்தையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை வேகப் படுத்த வேண்டும். 2 மாநிலங்களுக்குள்ளேயே அந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்ற அபிப்பிராயம் வந்து இருக்கிற காரணத்தால் அதை விரைவுபடுத்தி கோவை மாவட்டத்தின் நிரந்தர தாகத்தை கோவை மாவட்ட விவசாயிகளுடைய நிரந்தர கடுமையான நிலையை போக்குவதற்கு உதவவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவையில் சின்னவேடப்பட்டு நீர் தேக்கத் திட்டம் இந்த அரசின் பரிசீலனைக்கு வந்து இருக்கிறது. இது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில் நிறைவேற்றப் பட்டிருந்தால் இத்திட்டம் 1 கோடி ரூபாயில் முடிந்து இருக்கும். இன்று பல ஆண்டுகள் ஆய்வில் இருந்துவிட்ட காரணத்தினால் 3.66 கோடி ரூபாய்க்கு வந்து இருக்கிறது. மேலும் இதை அதிகரிக்க விடாமல் இந்த ஆண்டு பார்ட் 2 ஸ்கீமில் நிறைவேற்றுவதற்கு நமது அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கோவையில் ஜம்புகண்டி, முண்டத்துறை, தொய்யல்—பூண்டி ஆகிய திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி முடித்தால்தான் கோவையில் ஏற்பட்டு இருக்கிற வறட்சி தீரும். மற்ற மாவட்டங்களை போல் கோவை இல்லை. கோவையில் உள்ள நீரை தேக்க எந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தினால் தான் இந்த திட்டங்களுக்கு வேண்டிய முன்னுரிமை கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் விவசாயிகளுடைய குறைகளைத் தீர்க்கவேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்தில் இதை பயன்படுத்திக் கொண்டு என்னுடைய வேண்டுகோளாக சமர்ப்பிக்கிறேன்.

அதைப்போலவே வறட்சி நிவாரணப் பணியை பார்வையிட வந்த வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சென்னூர் குட்டையையும் தொப்பம்பட்டி என்ற குட்டையையும் பார்த்து அதிகாரிகளிடம் நேரடியாகச் சொல்லி, அவைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மக்களுடைய கோரிக்கையை ஏற்று சொல்லி இருந்தும் கூட அந்த திட்டங்களை நிறைவேற்றவில்லை. ஆகவே ரெகுலர் ஸ்கீமிலாவது அந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்வதற்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டப் பகுதிகளுக்கு இந்த குடிநீர் தட்டுப்பாடு தொடர்ந்து இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையில் சொல்லிய பதிலில் இருந்து இந்த திட்டத்தை வேகப்படுத்த வேண்டிய அவசியம் நமக்குத் தெரிகிறது.

ஆகவே விரைவாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் செயல்படுத்துவதன் மூலம் நிச்சயமாக கோவையில் உள்ள அனைத்து நகராட்சி மக்களுக்கும் குடிநீர் கிடைக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நமது மாண்புமிகு காங்கிரஸ் நண்பர்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு செய்ய வேண்டிய பெரும் உதவி குறைந்தபட்ச வட்டியில் கடன் உதவ வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது. நாம் எவ்வளவோ விவசாயிகளைப் பற்றி பேசுகிறோம். மற்ற எத்தனையோ துறைகளுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியினுடைய கடன் வசதிகள் கொடுக்கப்படுகிற போது விவசாயிகளுக்கு என்று 4 சதவீத வட்டியில்—வட்டியில்லா கடன் என்று நான் கேட்கவில்லை—கொடுத்தால் எவ்வளவோ நன்மை கிடைக்கும். இப்போது வறட்சி நீங்கி மழை வந்திருக்கிறது. அந்த மக்கள் விவசாயம் செய்வதற்கு இடுபொருட்கள் இல்லை. மற்ற வசதிகள் இல்லை. இன்று கடன் வசதிகள் தான் அவர்களுக்கு முக்கியமாக வேண்டும். கூட்டுறவு வங்கிகள் மூலம் எல்லோருக்கும் கடன் கிடைப்பது அரிது. ஆகவே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இந்த நேரத்தில் உதவுவதற்கு காங்கிரஸ் அரசும் காங்கிரஸ் நண்பர்களும் உதவவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-20)

*திரு. கு. ரமணி : மாண்புமிகு அவையின் தற்காலிகத் தலைவர் அவர்களே, ரூ. 158-3/4 கோடிக்கான பிரேரணையை நமது நிதியமைச்சர் அவர்கள் முன்வைத்து இருக்கிறார்கள். இந்த விஷயங்களைப் பற்றி நாம் எடுத்துச் சொல்லும்போது எதிர்க்கட்சிகள் பூராவும் வேண்டும் என்று குற்றம் சொல்லிக்





கொண்டிருக்கிறார்கள் என்ற கண்ணோட்டத்தை தயவுசெய்து வைத்துக் கொள்ளக்கூடாது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆளும்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய அரசு திட்டங்களை புகழ்ந்து பேசுவதும் நியாயமாக வாதாடுவதும் நாம் அதை ஒன்றும் குறை சொல்லவில்லை ஆனால் குறைகளே இல்லை யென்று அவர்கள் கண்ணை மூடினால் அது எவ்வளவு பெரிய குறையாக வரும் என்பதை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு பிரேரணை மீது ஒரு சின்ன பட்ஜெட், குட்டி பட்ஜெட் மீது விரிவாக பேசுவதற்கு போதிய அவகாசம் எப்போதும் கிடைப்பது இல்லை. அதுதான் இங்கு இருக்கக்கூடிய நிலையாக இருக்கிறது. அந்த நிலையை கூட மாற்ற ஒரு மாற்று கண்டுபிடித்து ஆகவேண்டும்.

வறட்சி நிவாரணம் பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே வறட்சி நிவாரணப் பணிகள் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. போன தடவை என்பது வறட்சி நிவாரண மாவட்டக் குழுவில் கலெக்டர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். இது முடிந்துவிட்டது. பணம் எல்லாம் தீர்ந்து போய்விட்டது. வறட்சி நிவாரண வேலை நின்றது என்று சொன்னார்கள். ஆனால் வறட்சி முழுவதும் நின்றுவிடவில்லை. வறட்சியினால் ஏற்பட்டு இருக்கக்கூடிய மிகப்பெரிய குறைகள் நீடிக்கின்றன என்பதை அரசு மிகவும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சென்னையிலும், சென்னையை சுற்றிலுமுள்ள சில பகுதிகளில் இப்போது கொஞ்சம் மழை பொழிந்து இருக்கிறது என்பது உண்மை. கோவையை விட்டு இந்தக் கூட்டத்திற்கு வரும் வரையில் ஒரு துளி மழை கூட அங்கே பொழியவில்லை.

கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்லடம் தாலுக்கா, உடுமலைப்பேட்டை தாலுக்கா, பூர்ணமான வறட்சியின் பிடியில் சிக்கி இருக்கிறது. ஆழமான கிணறுகள் தோண்டினாலும் தண்ணீர் கிடைப்பது இல்லை. இதேபோன்று கோவை தாலுக்காவிலும் பல பல பகுதிகளில் இந்த நிலைமை இருக்கிறது. அவினாசி தாலுக்காவிலும், தாராபுரம் தாலுக்காவிலும் இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. இப்படி அந்த மாவட்டம் முழுவதும் வறட்சி நிலையில் இருக்கிறது. இதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும் இருக்கிறது. அவர்களுக்கும் வறட்சி நிலை நீடிக்கிறது என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

குடிநீர் பிரச்னை தீராமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்த அரசு செலவிட்டு இருக்கிற தொகை மிகப் பெரிய தொகை. அதை நாம் ஒன்றும், குறைத்து சொல்லவில்லை. அப்படியிருந்தும் இன்றைக்கும் குடிநீர்

பிரச்சனை தீராமல் இருக்கிறது. அப்படியானால் தேவை எவ்வளவு? அதில் நாம் எவ்வளவு செலவழித்து இருக்கிறோம் என்பதை பார்க்கவேண்டும்.

21,538 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டது உண்மை. ஆனால் அதில் நூற்றுக்கணக்கான கிணறுகளை தோண்டும் போதே தண்ணீர் இலலை என்று கைவிட வேண்டியதாக இருந்து இருக்கிறது. இன்னும் பல நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கு என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொல்கிறார்—கிணறுகள் அப்படிப்பட்ட முறையில் அவர்கள் கைவிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் குடிநீர் வசதி இல்லை. பல நூற்றுக்கணக்கான துளைக் கிணறுகளில் உள்ள தண்ணீர் கொஞ்சம் நாட்களில் தீர்ந்து விட்டது. ஆகவே குடிநீர் பிரச்னை நீடிக்கிறது. அந்த கைவிட்ட கிணறுகளுக்குப் பதில் வேறு துளைக் கிணறுகளைப் போட வேண்டும். வற்றிப் போயிருக்கிற கிணறுகளை எல்லாம் மறுபடியும் ஆழப்படுத்தப்பட வேண்டும்.

அதே சமயத்தில் வெட்டப்படுகின்ற 'ஒப்பன் வெல்' என்று சொல்கிறார்கள்; பல இடங்களில் அது வறண்டு போய் இருக்கிறது. அதை ஆழப்படுத்த வேண்டும். இந்தப் பணிகள் கூட வறட்சிப் பணிகள்தான். ஆகவே வறட்சிப் பணிகள் முடிந்துவிட்டது, மழை பொழிந்துவிட்டது என்று சொல்லி கைவிடக்கூடாது என்று கோவையில் அந்த கோவை மாவட்டத்தினுடைய வறட்சி நிவாரணத் திட்டத்தை கைவிடக்கூடாது என்று அந்த வறட்சி நிவாரண கமிட்டியில் பேசும்போது நாங்கள் எல்லாம் எடுத்துக் கூறினோம். நமது மதிப்பிற்குரிய சின்னராஜ் அவர்கள் கூட சொன்னார்கள் இந்தப் பணியை மறுபடியும் ஒரு 6 மாதத்திற்கு நீட்டிக்கச் செய்வது அவசியம் என்று சொன்னார்கள். அது சரியான யோசனைதான். அந்த முறையில் அந்தப் பணியை நீட்டிக்கச் செய்ய வேண்டும். மழை பொழிந்துவிட்டது என்று சொல்லி அதை ஒரு தடையாகச் சொல்லக்கூடாது. இன்னும் அதற்கு தேவையான அளவு குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களுக்கு குடிநீர் இருக்கிறது என்று உத்தரவாதம் செய்யப்படுவது நமது சுதந்திரத்தினுடைய பிரதிபலிப்பு அல்லவா? ஜனநாயகத்தினுடைய தேவை அல்லவா? அந்த நிலையை கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதேமாதிரி வேலை வாய்ப்பு பிரதானமானது. இந்த வறட்சிப் பணியிலே வந்திருக்கும்படியான ஒரு மிக முக்கியமான பிரச்னை. கிராமப்புறங்களிலே இருக்கிற இலட்சக்கணக்கான விவசாயக் கூலி தொழிலாளிகள் பிரச்னை. தண்ணீர் இல்லையென்றால், விவசாயம் அழிந்து போய், அவர்கள் வேலையில்லாமல், நகரங்களுக்குப் படையெடுப்பார்கள்; பட்டினி கிடப்பார்கள்! பட்டினிச் சாவு ஏற்படும். இதைத் தடுப்பதற்கு வேலை கொடுக்க வேண்டுமென்பது அரசினுடைய அடிப்படை நோக்கம்; வறட்சிப் பணிக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிற ஏராளமான பணத்தின் நோக்கம். அந்த நோக்கம் சரியானது



தான். ஆனால், அது எப்படி நடந்திருக்கிறது? குளங்களையும் குட்டைகளையும் ஆழப்படுத்த வேண்டும், வாய்க்கால்களிலே தூர் எடுக்க வேண்டுமென்று பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

உடுமலைப்பேட்டை தாலூகாவிலே உள்ள வாய்கால்களை எல்லாம் சீர்படுத்துவதற்காக ரூ. 60 இலட்சம், ரூ. 65 இலட்சம் செலவழிக்கப்படுவதாகக் கணக்கிலே பார்த்தேன். ஆனால் பிரச்னை என்ன வருகிறது? அந்த வேலைகளுக்கு, கான்ட்ராக்டர்களே, 10,15 பேர்கள், 20 பேர்கள், ஒரு குரூப்பாக இருந்து, நிரந்தரமாக அவர்கள் தங்கள் கையிலே வைத்திருக் கிறார்கள். அவர்கள் ஏரிகளுக்குள்ளே போய் கொஞ்சம் மண்ணை வெட்டி கரையிலே போட்டு வேலை செய்கிறார்கள். பார்ந்தால் ஏரி வெட்டப்பட்டிருக்கிறது, மண் போடப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். ஆனால், உண்மையிலே அதை தொட்டு இருக்கிற கிராமங்களிலே இன்றைக்கு விசாரணை செய்வீர்களா என்று தான் கேட்க விரும்புகிறேன். சவாலாகக் கூறவில்லை. செய்ய வேண்டுமென்று கோருகிறேன். அந்தந்த கிராமங்களிலே இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அந்த வேலையை கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவில்லை. அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. தப்பித் தவறி கொடுத் திருந்தால், 10, 20 பேர்களுக்குத்தான் எங்கோ சில கிராமங் களில் கிடைத்திருக்கும். மற்றவற்றைச் செய்ய கான்ட்ராக்டர்கள் சில ஆட்களை நிரந்தரமாக வைத்திருக்கிறார்கள். அந்த கான்ட்ராக்ட் முறையில் ஊழல் இருக்கிறது. அதை மறுப்பதற்கு இல்லை. தவிர, யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பதைக் கூற நம்மிடம் ஆதாரமில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: உடுமலைப்பேட்டை என்னுடைய தொகுதி. ஆகவே, நான் பதில் சொல்லவேண்டி யிருக்கிறது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டைத் தொகுதியிலே, ஏற்கனவே ராஜா வாய்க்கால் என்ற ஒரு பழைய வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்காலை, முன்பெல்லாம் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்திலும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் விவசாயிகள்தான் தூர் எடுக்கவேண்டும். ஆனால், கடந்த ஆண்டிலேயிருந்து அந்த ராஜா வாய்க்காலை அரசாங்கமே தூர் எடுப்பது என்கின்ற முறையிலே விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக ஏற்படுத்தி யுள்ளோம். அதேபோல் பல்வேறு வாய்க்கால்களிலும் இன்று தூர் எடுக்கின்ற பணிகள் நடக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் உடுமலைப்பேட்டையைப் பொறுத்த அளவில்—எந்தவிதமான ஊழலோ அல்லது வேலை சரிவர நடக்கவில்லை என்ற குறை பாடுகளோ, என்னிடத்திலே இதுவரையில் வரவில்லை. ஆனால், வேண்டுமென்றே ஒரு அரசாங்கத்தின் மீதோ, அல்லது அந்தத் தொகுதியிலே நடைபெற்ற வேலைகளைக் குறித்தோ,

காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, பேசுவது என்பது சரியாக
இருக்கமுடியாது. ஆகவே, தயவுசெய்து உண்மையான நிலவரங்
களை மட்டுமே இந்தச் சபைக்குத் தர வேண்டுமென்று நான்
பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி : மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்
எடுத்துக்கொண்ட நேரத்தில் என்னுடைய கணக்கிலே சேர்க்கக்
கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய தொகுதிய க
அது இருக்கலாம். தொகுதியில், ஒரு அமைச்சரே சகலவிதமான
நடவடிக்கைகளுக்கும் அவரே பொறுப்பாளி என்று பேசுவது
சரியாக இருக்காது. எங்களுடைய விவசாயச் சங்கம் இருக்கிறது;
விவசாயத் தொழிலாளிகள் சங்கம் இருக்கிறது. எங்கள் கட்சி
அங்கத்தினர்களே செயல்படுகிறார்கள். நாங்களே அடுத்த
தேர்தலில் உங்களுக்கு எதிராகப் போட்டி போட்டால் நீங்கள்
என்னசெய்வீர்கள்? ஆகவே, பிரச்னை அது அல்ல. ராஜா
வாய்க்கால் மட்டுமல்ல, பரம்பிக்குளம் வாய்க்கால்; அமராவதி
வாய்க்கால், இங்கெல்லாம் மண் வெட்டி எடுப்பதற்கு, சுத்தப்
படுத்துவதற்கு வேலைகள் நடந்திருக்கின்றன. அமைச்சருக்குத்
தேவையாக இருந்தால், எங்கள் கட்சியின் சார்பில் மெமரண்டம்
டசன் கணக்கிலே அவர் கையிலே கொடுக்கத் தயாராக இருக்கி
றோம். அதைக் கொண்டு அவர் விசாரிக்கட்டும், காழ்ப்புணர்ச்சி
இல்லை. உண்மையான நிலைமை, சரியான அனுதாயக உணர்
வோடு சொல்கிறேன். காழ்ப்புணர்ச்சி தேவையில்லை. ஏனென்
றால், எங்களிட விஷயம் இருக்கிறது. ஆகவே, வேலை வாய்ப்பு,
பிரதானமான பிரச்னையாக இருக்கிறது. ஆனால்,
கான்ட்ராக்டர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை அவர்
பரிசீலிக்க வேண்டுமென்று இப்பொழுது நான் கேட்டுக் கொள்
கிறேன். எந்த, எந்த கிராமத்திலே வேலை கொடுக்கவில்லை
என்றவிவரங்களைத் தவிர எங்களுடைய கட்சி தாலுகா கமிட்டி
களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். நீங்கள் பரிசீலனை
செய்யவேண்டும். எதிர்காலத்தில் இப்படி வரக்கூடாது.

அடுத்துஇன்னொருமுக்கியமான விஷயம். எல்லாவிஷயத்தையும்
பேச நேரம் கிடையாது; விவசாயத் தொழிலாளர்கள் மோசமான
நிலைமையைப் பற்றி இன்று காலையில் கேள்வி நேரத்தில்
சொன்னேன். தொழிலாளர் பிரச்னைகளைப் பற்றிச் சொல்ல
வேண்டுமானால், இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர்
கொள்கை சரியல்ல என்பதை நாங்கள் பலமுறை கடுமையாக
எடுத்துப் பேசியிருக்கிறோம். இன்றைக்கு என்ன நிலை
ஏற்பட்டு இருக்கிறது என்றால், தொழிலாளர்களுக்கு கடுமையான
நெருக்கடி சூழ்நிலை தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டு வருகிறது.
3,000-க்கு மேற்பட்ட அரசாங்கத்திற்குச் சம்பந்தம் இல்லா
விட்டாலும், தனியார்களுடைய கையில் இருக்கிற கன்னியாகுமரி
ரப்பர் எஸ்டேட்டில் இருக்கிற தொழிலாளர்கள் 1 நாட்களாக
வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய ஒப்பந்தம்
முடிந்து, சம்பளம் உயர்வுபற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனால், அந்த முதலாளிகள் என்ன முடிவு எடுக்கிறார்கள்





என்றால், ஒரு பைசா பஞ்சப்படியைக்கூட நாங்கள் உயர்த்த
மாட்டோம். கன்னியாகுமரியில், நாகர்கோவிலில் இருக்கிற
புள்ளிக்கு பஞ்சப்படி கொடுக்கமாட்டோம், சென்னையில்
இருப்பதைத்தான் அடிப்படையாக வைத்து கொடுப்போம்,
பஞ்சப்படிக்கு வெட்டு என்று சொல்கிறார்கள். எவ்வளவோ அதன்
பிறகுதான் பேச வா என்கிறார்கள், அதனுடைய பின்னாலே
ஒழிந்து போண்டு அரசாங்க எஸ்டேட்டுகளிலே இரண்டு
மாதங்களாகப் பஞ்சப்படி கன்னியாகுமரி புள்ளிக்குக்
கொடுக்காமல் அங்கேயும் தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

இப்படிப்பட்ட போக்கு இருக்கிறது. அதேபோல பல இடங்களில்
இருக்கிறது. அண்மையில் கோவையில் ஒரு முக்கியமான
என்ஜினியரிங் தொழிலில் பேச்சுவார்த்தை நடந்தது. லஷ்மி
மிஷின் ஒர்க்ஸ் கம்பெனியில் 5,000 என்ஜினியரிங் தொழிலாளர்
கள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை லேபர் டிபார்ட்மென்டிலே
நடக்கிறபோது ஒரு பைசா கூட பஞ்சப்படி உயர்த்த முடியாது
என்று சொன்னார்கள் முதலாளிகள். மாறாத பஞ்சப்படிக்கு 15
ரூபாய் உயர்த்தி, மாறும் பஞ்சப்படிக்கு உயர்த்த முடியாது என்று
அவர்கள் சொன்னார்கள். இப்படி தனியார் துறையிலே பஞ்சப்
படி உயர்வை மறுக்கிறார்கள் அரசாங்கத் துறையிலே அதற்கு
பின்னாலே இருந்து உதவி செய்கிறார்கள் அதே சமயத்தில் விலை
வாசி உயர்வை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்றால் பொறுப்பில்லை. விலைவாசி ஏற்றத்தை தடுப்பது மாநில
சப்ஜெக்ட் ஆக வருகிறதா என்று நிதியமைச்சர் கேட்கலாம்.
அதன் அடிப்படையான அதிகாரம் மத்திய அரசாங்கத்திலே
இருக்கிறதென்று நாங்கள் எடுத்துச் சொல்லக் கூடியவர்கள்;
வாதாடக் கூடியவர்கள். ஆனால் மாநில அரசாங்கத்திற்கு எந்த
விதமான பொறுப்பும் இல்லை என்று எப்படி சொல்ல முடியும்?
இன்றைக்கு தமிழ்நாட்டிலே விளையக்கூடிய தக்காளிக்கும்,
கத்தரிக்காய்க்கும், வெங்காயத்திற்கும் இங்கே விலையை
ஏற்றுகிறார்களே, அது அங்கே, மத்திய அரசில் அதிகாரிகல்சுரல்
கமிஷனில் போட்டிருக்கக்கூடிய விலை உயர்வு அல்ல. ஒரு கிலோ
தக்காளியின் விலை 8 ரூபாய்க்கு போயிற்று; இன்றைக்கு ஒரு
கிலோ ஒரு ரூபாய் விற்கிறது. இரண்டு சமயத்திலும் விவசாயிகளே
ஏமாற்றப்படுகிறார்கள். இதற்கு ஒரு உறுதியான நடவடிக்கை
நம்முடைய அரசிடமிருந்து வரவேண்டும். அப்படி வரவில்லை
யென்றால் விவசாயிகள் மிகவும் துன்பத்திற்கு ஆளாவார்கள்.
தொழிலாளிகளும் வாழமுடியாது. அதேபோல் எண்ணெய்
விலைகள் ஏற்க்கொண்டே இருக்கின்றன. அரசாங்கம் கொடுக்கிற
பாமோலின் எண்ணெயை மட்டும் சொல்லவில்லை. இங்கே
செக்கிலே ஆடுகின்ற எள் எண்ணெய், தேங்காய் எண்ணெய்,
கடலை எண்ணெய் போன்றவற்றிற்கு கூட மாநிலஅரசாங்கத்திற்கு
தொடர்பு இருக்கிறது. அவைகளின் விலையை கட்டுப்படுத்து
வதற்கு அரசாங்கம் எடுக்க வேண்டிய உறுதியான நடவடிக்கை
களை எடுக்கவில்லை என்பது எங்களுடைய குறை. ஜனங்களுடைய

ஆதரவைத் திரட்டி, இந்த அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுக்காத குறை இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலை விலைவாசி பிரச்னையில் நீடிக்கிறது. அதேபோல அரிசி விநியோகப் பிரச்னை. அரிசி 2 கிலோவிலிருந்து 6 கிலோ வரைக்கும் கிடைக்கிறது. நகரங்களில் அரிசி 8 கிலோ கூட கிடைக்கிறது. கிராமங்களில் இருக்கிறவர்களுக்கு வேறுவிதமான தானியங்கள் கிடைக்கின்றன என்றாலும், வேலைக்கு அன்றாடம் போய்க் கொண்டிருக்கிற உழைப்பாளி களுக்கு நிலமில்லை, விளைச்சல் இல்லை. அவர்கள் தனியாரிடம் அதிக விலை கொடுத்து வாங்கமுடியாது. அரிசி விநியோகத்திலே அளவு மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. அது சரியில்லை. விநியோகத்தின் அளவு உயர வேண்டும். மத்திய சர்க்கார் தந்தால் தானே உயர்த்த முடியும் என்று சொல்வார்கள். அது உண்மை. மத்திய சர்க்காரும் உயர்த்த வேண்டும். மாநிலத்திலே நெல்லை வைத்திருக்கிறபெரிய நிலச்சுவான்தாரர்களிடம் சரியானமுறையில் அரசு கொள்முதல் செய்யவில்லை என்றால் அது நடக்காது. இப்படிப்பட்ட நிலையில் அரிசி, தானியங்கள், காய்கறி, உணவுப் பண்டங்கள் விலை ஏறிக்கொண்டே போவதால் மக்களுடைய வாழ்க்கை சீரழிந்து கொண்டே இருக்கிறது. அதற்கு தமிழக அரசிற்கும் ஒரு பகுதி பொறுப்பிருக்கிறது. அந்தப் பொறுப்பை சரியாக நிறைவேற்றவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழக காவல்துறையைப் பற்றி ஒரு பாயின்ட் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. காவல்துறை நடவடிக்கையில் ஏற்பட்டு வருகிற சீரழிவை அரசாங்கம் கவனித்திருக்குமென்று கருதுகிறேன். சில குறிப்பிட்ட காவலர்கள் ஜனங்கள் மத்தியிலே செய்திருக்கிற பயங்கரமான திருட்டு நடவடிக்கைகள் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. இன்றைக்கு சென்னை நகரத்திலே கூட அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடந்திருக்கின்றன. அதற்கு ஆதாரம் இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், என்னையே கோவையில் டெலிபோனில் மிரட்டினார்கள் என்று இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னேன். அதற்கு 6, 7 பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தை இரண்டாவது தடவையாக நம்முடைய முதலமைச்சருக்கு அனுப்பினேன். இன்றுவரைக்கும் நடவடிக்கை இல்லை. சட்டமன்ற உறுப்பினராகிய என்னையே, ரௌடிகளாக இருக்கிற, அதுவும் ஆளும் கட்சியின் பெயரைச் சொல்லி மன்றம் வைத்திருக்கிற நபரின் இடத்திலிருந்து அந்த மிரட்டல் வருகிறது. ஆள் பெயர், வீட்டு இலக்கம் பெயர், நேரம், டெலிபோன் நம்பர் போன்று எனக்கு தெரிந்தவைகளை எல்லாம் தெரிவித்தேன். இன்றைக்கு ஒரு வருஷமாகியும், ஒரு நடவடிக்கையும் இல்லை. இன்றைக்கு மதுரை ஆதீனத்தைப் பற்றி பிரச்னை வந்திருக்கிறது. ஆகவே காவல் துறையைப் பொறுத்தவரையில் ஜனங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே இல்லை. நூற்றுக் கணக்கான கோடி ரூபாயை ஒவ்வொரு வருடமும் இந்தத் துறைக்கு செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அதனுடைய நிலைமையில் மாற்றங்கள் துரிதமாக ஏற்படவேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது. ஜனங்களுடைய உரிமைகளை பாதுகாக்க



வேண்டிய காவல்துறை, தன்னுடைய கடமையைச் செய்யத் தவறினால், ஜனங்களிடத்திலே வெறுப்பும், கோபமும் ஏற்படத் தான் செய்யும். ஆகவேதான் சொல்கிறோம், சப்ளிமெண்டரி பட்ஜெட் என்று வைத்தாலும், அதிலே 158.75 கோடி ரூபாயைக் கொடுத்தாலும், அந்தப் பணம் மக்களின் இப்படிப்பட்ட குறைகளைத் தீர்ப்பதற்காகப் பயன்பட வேண்டும். ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் உங்கள் கட்சியைச் சேர்ந்த பலரும் அதிலே சம்பந்தப்பட்டிருக்கலாம். எந்தக் கட்சியிலேயும் தவறு செய்பவர்கள் இருக்கலாம். அதற்காக வளைந்து விட்டுக் கொடுத்தால், காவல்துறையும் அதற்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்றால் ஜனநாயகம் நிச்சயமாக பிழைக்க முடியாது. இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் பணத்தைக் கேட்டு வாங்கும்பொழுது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு உறுதியாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்து பொதுஜன ஆதரவைத் தேடிக்கொள்ள வேண்டும். எனவே, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் குறை சொல்கிறார்கள் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மதுரை ஆதீனம் சம்பந்தமாக காலையிலே 55-வது விதியின்கீழ் எடுக்கப்பட்டு, சபையை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்ற பதிலும் சொல்லப்பட்டது. அதற்குப்பிறகு 54-வது விதியின்கீழ் எடுக்கப்பட்டதாக அறிவிப்பு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஏதாவது கூறுவார்களா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி டி. யசோதா); மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவைத் தலைவரின் அவைக்குச் சென்று விளக்கம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த அவையின் நடைபாதையிலே கேட்பாரற்ற நிலையில் 40 ரூபாய் பணம் இருக்கிறது. அது இந்த அவைக்குச் சொந்தமானதா? அல்லது வேறு யாருக்காவது சொந்தமானதா? கேட்பவர்களுக்காகிலும் இந்தப் பணம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி டி. யசோதா); அவைத் தலைவரின் அறையில் அந்தப் பணம் கொடுக்கப்படும்; உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நமது நிதியமைச்சரவர்கள் இடைக்காலத்தில் 158.75 கோடி ரூபாய் துணை நிதி கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1983 அக்டோபர் 31

வறட்சிக்காகப் பெரும்பகுதி தொகை செலவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மூன்று ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து வறட்சி ஏற்பட்டு, இந்த ஆண்டு கொடுமையான முறையில் தமிழகம் முழுவதும் வறட்சி மக்களை வாட்டி வதைத்தது. தமிழகத்தின் வறட்சி நிலையைப் போக்குவதற்காக, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய அரசு 200 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே இருந்து இந்திராகாந்திக்கு சவால் விட்டார்கள். இந்த வறட்சியைப் போக்க மத்திய அரசு 200 கோடி ரூபாய் கொடுக்காவிட்டால் தமிழ்நாட்டு மக்களே போராட்டத்திற்குப் புறப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மத்திய சர்க்கார் கொடுத்திருக்கின்ற நிதியோ 68 கோடி ரூபாய் என்று குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

(பிற்பகல் 12-40)

ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கும் மத்திய அரசு பாராமுகமாகத்தான் இருந்து வருகின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தை ஆளக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அதனைத் தட்டிக் கேட்பதற்கு தயங்குகின்றது. அப்படித் தயக்கம் வந்தது என்ன காரணத்தாலோ? ஒருவேளை தேர்தல் நெருங்கிவிட்டது என்று அஞ்சுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

இன்றைக்குத் தமிழகத்தில் ஒரு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. நெல்லை மாவட்டம், மேற்கு இராமநாதபுரம்; கிழக்கு முகவை மாவட்டம், கோவை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், பெரியார் மாவட்டம் போன்ற இடங்களில் இந்தப் பருவமழை காலத்திலேகூட மழை பெய்யவில்லை. அதன் காரணத்தால் விதைக்கப்பட்ட விதைகள் காய்ந்து உற்பத்தியினைச் செய்ய முடியாத நிலைமையில் நெற்பயிர் பாதிக்கப்பட்டிருக்கின்றது இதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்திலே காட்டு நிலத்திலே விதைக்கப்பட்டது அனைத்தும் கருகித் தீய்ந்து விட்டது வறட்சியால்

குடிநீரைக் பற்றி எனக்கு முன்னாலே பேசினார்கள். குடிநீர் வாரியம் இருக்கின்றது. அவர்கள் ஆழ் துளை கிணறு போடுவார்கள். மேல்நிலைத் தொட்டி கட்டுவார்கள். 200 அடி 300 அடிக்குப் பைப் போடுவார்கள். ஆனால் எங்கே தண்ணீர் கிடைக்கவேண்டுமோ அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளைச் சந்தித்து, கலந்து பேசி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ அங்கே செய்வதில்லை. அப்படிச் செய்வதற்குப் பதிலாக 100 அடிக்கு 300 அடி என்று கணக்கிலே மட்டும் எழுதிவிடக் கூடிய நிலைமையிலே அந்த வாரியம் இருக்கின்றது. இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன.



1983 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜியாலிஜிக்கல் சர்வே என்ற அளவில் அதிகாரிகள் எங்கெங்கே தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்து விட்டு அதற்குப் பிறகுதான் அடிக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்திலே போடமுடியாமல் போனதற்கான காரணம் அங்கே தண்ணீர் வராது என்று அதிகாரிகள் குறிப்பிட்டதால் தானே தவிர அவர்கள் நினைப்பது போல் கண்ட கண்ட இடத்திலே ஆழ் துளைகிணறுகளைப் போடுவதில்லை.

*திரு. பொ. உத்திராபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பெரும்பகுதி இடங்களில் இன்றைக்குத் தண்ணீர் வராமலே போய் இருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில் மேலும் குழாய்களை எடுக்க வேண்டும் என்றால் அதற்கு மேலும் இரண்டு மடங்கு செலவாகும் என்று நினைத்து அந்தக் குழாய்களை அப்படியே விட்டுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வந்தால் அப்படிப்பட்ட நிலைமை எந்தெந்த ஊரிலே இருக்கின்றது என்று காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஊழல்கள் நடக்கின்றன தண்ணீர் பிரச்சினையிலே.

இன்றைக்கு வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கடுமையாக செலவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் பலன் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். வறட்சி காரணமாக நெல்லை மாவட்டத்தில் மட்டும் 50 ஆயிரம் ஏக்கர் இன்றைக்கும் சாகுபடி செய்யப்படாத நிலைமை இருக்கின்றது. அதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்ற லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா என்றால் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. ஆனால் இந்த நாட்டிலே உள்ள பெரும் முதலாளிகளுக்கு, அதாவது கோடி கோடியாகக் கொள்ளை அடிக்கக்கூடிய முதலாளிகளுக்கு, மத்திய அரசினிடத்திலே இருந்து கோடிக்கணக்கான ரூபாயைக் கடனாகப் பெற்றிருக்கின்ற பெரும் முதலாளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 40 கோடி ரூபாய்க்கு மேல் நிவாரணம் அளிப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த நாட்டிலே 68 கோடி மக்களுக்கு உணவு அளிக்கக்கூடிய விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) இந்த ஆண்டு வறட்சியால் தமிழகத்தில் உள்ள 8 லட்சம் தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் 29 ஆயிரம் தென்னை மரங்கள் 28,000 மா மரங்கள். 1,250 பலா மரங்கள், 1,2[illegible]1 பனை மரங்கள், 1,800 முந்திரி மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மாவட்டத்திலேயே இவ்வளவு பாதிப்பு என்று சொன்னால் தமிழகம் முழுவதும் இன்றைக்கு எவ்வளவு மரங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடியும். இதற்கு மாற்றுத் திட்டம் என்ன? அவர்களுக்கு நிவாரணம் என்பது இங்கே குறிப்பிடப்படவில்லை.

இதற்காக வழக்கறிஞர் அங்குசாமி தலைமையில் போராடிய 41 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சைமாவட்டத்தில் குறுவை முழுமையாக பாதிக்கப்பட்டு, 50ஆயிரம் ஏக்கர் நிலம்தான் சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. 13 லட்சம் ஏக்கர் நிலத்தில் ஒரு போக சாகுபடி பின்னுக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. ஜூன்மாதம் வரவேண்டிய தண்ணீர் ஆகஸ்ட் மாதம் வந்த காரணத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டு 200 கோடி ரூபாய் அளவில் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்று சொல்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி தண்ணீர் விடுவதற்கு காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன? ஜூலையில் கூடிய காவிரி நீர்பிரச்சனை சம்பந்தமான கூட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்று கர்நாடக அரசோடு பேசியிருந்தால் இப்படி காலம் கடந்து தண்ணீர் வருவதைத் தவிர்த்து இருக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் விவசாயமும் காப்பாற்றப்பட்டு இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தஞ்சாவூரில் ஏற்பட்ட விவசாய பாதிப்பு காரணமாக அங்கேயுள்ள மக்கள் நண்டு, நத்தை, அள்ளிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு ஆகியவற்றைத் தின்று இருக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்போக்க ஒரு திட்டம் உண்டா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முன்பு ரூ. 2.90-க்கு விற்றுக்கொண்டு இருந்த அரிசி இன்றைக்கு ரூ. 4.50 என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. நேற்றைய தினம் மன்னார்குடி திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஆகிய இடங்களில் இருந்து வந்த தகவல்படி அங்கெல்லாம் ரூ. 5 ஒரு கிலோ அரிசி என்ற அளவிற்கு விற்கப்படுகிறது. இந்த விலைவாசி உயர்வை தடுத்து நிறுத்த முடியாதா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடம் 10,000 டன் அரிசி கேட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆந்திராவில் இருந்து கொள்முதல் செய்வதாகச் சொன்னார்கள். 30,000 டன் கோதுமை தருவதாகச் சொன்னதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிற்கு இது எப்படி போதும்? இன்னும் அறுவடைக்கு மூன்று மாதம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் தஞ்சை மாவட்டத்தில் பம்ப்செட் மூலமாக பயிர் செய்து, அறுவடை செய்து வைக்கப்பட்ட நெல் விலை அரசு கொள்முதல் செய்யாத காரணத்தால் தேங்கிக் கிடக்



கிறது. குறிப்பாக திருத்தங்கூரில் தேங்கி இருக்கிறது. காரணம் கேட்டால், சாக்கு இல்லை, பணம் இல்லை, என்று சொல் கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, அங்கே கொள்முதல் செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 63 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு தருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு தமிழ கத்தில் இருக்கும் 67 லட்சம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? அவர்களுக்கு உத்தரவாதம் உண்டா? இன்று வரையில் இல்லை. தஞ்சை மாவட்டத்தில் 3 மாதமாக வேலை இல்லை. வருமானம் இல்லை. பட்டினி கிடந்து செத்தார்கள். மாற்றுத் திட்டம் இல்லை. இதற்காக இதிலே 158 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பட்ஜெட் வந்தால் 1,700 கோடி ஒதுக்கப்போகிறோம் என்று சொல்லக் கூடும்.

நான் ஒன்றைக்கேட்டுக் கொள்கிறேன். தமிழக விவசாயத் தொழிலாளர் வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்ற அவர்களுக்கு கடுமையான வறட்சி ஏற்பட்டதன் காரணமாக கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத காலங்களில் உதவி செய்வதற்காக அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அதற்காக பட்ஜெட்டில் பணம் ஒதுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக பாசன வாய்க்கால்கள் சில வெட்டினார்கள். அந்தப் பணிகளைச் செய்வதற்காக விவசாயிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் யாருக்குக் கொடுத்தார்கள், கான்ட்ராக் டர்களுக்குக் கொடுத்தார்கள். மிகப்பெரிய மோசடி இதிலே நடந்து இருக்கிறது விவாயிகளுக்குக் கொடுத்தால் அளந்து பார்க்கிறார்கள் வேலைகள் நடந்ததா என்பதை. ஆனால், கான்ட்ராக்டர்களிடத்தில் கொடுத்தால் வேலை நடந்து விட்டது என்று சொல்லி, பணம் கொடுத்து இருக்கிறார்கள், அதிலே பங்கு போட்டு இருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் 200 கான்ட்ராக்டர்கள் பதிவு செய்து இருக்கிறார்களே; அது ஏன் தெரியுமா? அந்த நோக்கம் உங்களுக்குத் தெரியாதா? ஆகவே, வேலைகள் சரிவர நடை பெற்றனவா என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

இன்றைக்கு ஏழைகளுக்கு வேஷ்டி, சேலை கொடுக்கப் படுகிறது. ஆண்களுக்கு 40 வயது ஆனவர்களுக்கு வேஷ்டியும், 30 வயது பெண்களுக்கு புடவையும் அளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இது எப்படி தரப்படுகிறது? ஆளும் கட்சிக்காரர்கள் மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டுபோய் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறார்கள், அதிகாரி கள் சிரமப்படுகிறார்கள். திருத்துறைப்பூண்டி நகரத்தில் 15 நாட்களுக்கு முன்னாலே கொடுத்தார்கள். நான்கு ஆளும் கட்சிக்

காரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கவில்லை என்பதற்காக அந்த கிராம நல ஊழியர்களை, அந்தத்துறை வாட்ச்மேனை அடித்து, இன்று வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இப்படி விவசாயிகளுக்கு என்று வேட்டியும், புடவையும் தருவதை ஆளும் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டு போவதை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இதேபோல் கோட்டூர் யூனியனில், வள்ளூர், எலவனூர் இன்னும் சில கிராமங்களிலும் இந்த நிலை உள்ளது என்று சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவாதத்தைச் சரியாக 1 மணிக்கு முடிக்கவேண்டும் என்று விதியை நாம் வகுத்துக்கொண்டு இருப்பதால், அந்த விதியைப் பின்பற்றி ஒத்துழைக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய பேச்சை இத்தோடு முடித்துக் கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12–50

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மிகை மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் மழை இல்லாத காரணத்தால் வறட்சி ஏற்பட்டு, அதன் காரணமாக கோடிக் கணக்கான ரூபாயை எதிர்பாராச் செலவாகச் செய்திருக்கிறோம். அதிலே பல வேலைகள் நல்லமுறையில் நடந்திருந்தாலும் சில வேலைகளில் தவறு நடந்திருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும்.

கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில், எங்கெல்லாம் தண்ணீர் இல்லை என்று 'வாட்டர் டிவைனர்' கண்டுபிடித்துச் சொல்கிறாரோ அந்தப் பகுதிகளை எடுத்துக் கொண்டு, அங்கே துளைக்கிணறுகளைப் போட்டுக்கொடுத்து, ஏழை எளிய விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்ய தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல பொதுப்பணித் துறையிலிருந்து கண்மாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்கள். கண்மாய்களை ஆழப்படுத்தி, கரையை உயர்த்துவதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். கண்மாய்களில் கிணறுகள் வெட்டக்கூடாது. ஆழமாக கிணறு வெட்டும்போது பக்கத்தில் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றிப்போகிறது. எனவே கண்மாய்களில் கிணறு வெட்டும் பணியை நிறுத்த வேண்டும். இந்தப் பணிக்காக கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அறிகிறேன். அந்தப் பணத்தைக் கொண்டு, கண்மாய்களை ஆழப்படுத்த வேண்டும்; கரைகளை



உயர்த்த வேண்டும்; தண்ணீரை தேக்கி வைக்கவேண்டும். கசிவுநீர் குட்டைகளை ஏற்படுத்த வேண்டும். அப்படியானால் தான் ஆங்காங்கே உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட வீடுகளை எல்லாம் இன்னும் கட்டிக் கொடுக்க முடியவில்லை. நான் இது பற்றி பலமுறை இந்தச் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன் அமைச்சர்களுக்கு எழுதிக் கொடுத்தும் இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 1979-ல் நிலக்கோட்டைக்கு வந்தபோது பழு தடைந்த வீடுகளைப் பார்வை இட்டு இருக்கின்றார்கள். நிலக் கோட்டையில் சித்தர்கலநித்தம் கிராமத்தில் 395 வீடுகளும் வத்தல்பட்டியில் 36 வீடுகளும் இடிந்துவிட்டன. இன்னும் அந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. நம்முடைய மாநிலத்திலே எங்கெங்கே இப்படி வீடுகள் பழுதடைந்துள்ளனவோ அங்கெல் லாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டுக்கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்து, உடனடியாகக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

அடுத்தபடியாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களும். இங்கே இல்லாவிட்டாலும் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக்கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு நிலக்கோட் டையில் பாண்டிராஜபுரம் என்ற இடத்தில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. மதுரை ஷுகர் மில்ஸ் என்பது அதனுடைய பெயர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்களுடைய கரும்பை அந்த ஆலைக்கு அனுப்புகிறார்கள். நானும் ஒரு கரும்பு விவசாயிதான், அந்த ஆலைக்கு கரும்பு அனுப்புகிறேன். 1981–82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் அந்த ஆலைக்கு கரும்பு அனுப்பிய வகையில் அவர்கள் சுமார் 79 இலட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். நாங்கள் கரும்பு விவசாயத்திற்கு பாங்கி விருந்து, கடன் வாங்குகிறோம். நான் 5000 ரூபாய் வாங்கியிருக்கிறேன். பாங்கில் வாங்கிய கடனுக்கு எங்களுடைய பணத்தை அந்த ஆலையில் பிடித்திருக்கிறார்கள். 1981–82 ஆம் ஆண்டில் 7 இலட்சம் ரூபாயும் 1982-83 ஆம் ஆண்டில் 54 இலட்சம் ரூபாயும் பிடித்திருக்கிறார்கள். இவ்வளவு ரூபாய் அவர்கள் பிடித்திருந்தாலும் வங்கிக்கு அவர்கள் பணம் கட்ட வில்லை. மில் நிர்வாகிகள் மூலம் நான் பணம் கட்டவேண்டும். அந்தப் பணத்தைக் கட்டாமல் அவர்களே செலவு செய்திருக் கிறார்கள். பாங்குக்கு பணம் கட்டாததால் வங்கியிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு வாங்கிய கடனை உடனடியாக கட்டவேண்டுமென்று நோட்டீஸ் வந்துள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்

இப்பேர்பட்ட சூழ்நிலையில் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் வங்கியினுடைய பணத்தை அந்த நிர்வாகம் மோசடி செய்திருக்கிறது. அங்கே தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்த சர்க்கரை ஆலையை அரசே ஏற்றுக்கொண்டால் அந்த 3 கோடி ரூபாயையும் அந்த பாங்கே தருவதாகச் சொல்லி இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு பாதுகாப்பளிக்கின்ற வகையில் கரும்புத் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அந்த மில்லை அரசே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் குடிநீர் பிரச்சினையைப் பற்றி பல சர்ச்சைகள் நடைபெற்றன. பல இடங்களில் வறட்சி நிவாரணம் என்று இருந்தாலும் சில இடங்களில் நாம் போட்ட குழாய்கள் அடிக்குழாய்கள் பழுதடைந்து தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றி ஒரு காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற முறையில் திட்டமிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கை 158 கோடியே 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யவேண்டும் என்ற முறையிலே இங்கே வைக்கப்பட்டிருக்கிறது அது பற்றிய விளக்கங்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. சொல்லாமலேயே புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள் பெரியோர்கள் என்றும், சொல்லிப் புரிந்துக் கொள்ளக் கூடியவர்கள் சிறியோர்கள் என்றும், சொல்லியும் புரிந்து கொள்ளாதவர்கள் கீழ்த்தரமானவர்கள் என்றும் பொதுவாக எடுத்துச் சொல்வார்கள். இந்த அவையிலே இருப்பவர்கள் எல்லோரும் பெரியவர்களாக இருப்பதன் காரணமாக நான் பதில் சொல்லாமலேயே புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் எல்லோருக்கும் நிறைந்திருப்பதன் காரணமாக நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற அளவுக்கு பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனைக்கும் நான் உரிய மதிப்பு அளித்திருக்கிறேன். ஆனால் பெரிய பெரிய திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை நல்வாழ்வுத் திட்டங்களை நாம் வறட்சி நிவாரணப் பணிகள் அடிப்படையிலே கொண்டு வரப்படுகின்ற திட்டங்களை, தன்னிறைவுப் போன்ற திட்டங்களை நாம் நிறைவேற்றுகின்ற போது அங்குமிங்கும் சிலபல இடங்களில் குறைபாடுகள் இருக்கக் கூடும். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் தொகுதியினுடைய கண்களாகவும், காதுகளாகவும் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டோடு இருக்கிறார்கள். ஆங்காங்கு என்ன நடக்கின்றன என்பதை காண்கின்ற போக்கும், ஆங்காங்கு என்ன நிகழ்கின்றன என்று கேட்டறிகின்ற போக்கும் ஒவ்வொரு தொகுதியினுடைய கண்களாகவும், காது-



களாகவும் இருந்தது மட்டுமல்லாமல், அவற்றையெல்லாம் இங்கே வந்து வாயின் மூலம் எடுத்துத் தெரிவிக்கின்ற வாய்ப்பு இந்த அவையின் மூலம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே தான் ஒவ்வொரு தொகுதியிலே இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஒட்டு மொத்தமாக நீங்கள் சொல்வீர்களேயானால் அது அரசிற்கும் பயன்படாது. அந்த அமைச்சருக்கும் பயன்படாது. ஆகவே, குறிப்பிட்டு சிலபல இடங்களை எடுத்துச் சொல்கின்ற போது, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற போது தான் கவனம் செலுத்தப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது.

இதுபற்றி இருக்கிற அதிகாரிகளும், பேரவை உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகிறார்கள், சட்டமன்றத்திலே சுட்டிக்காட்டுகிறார்கள் என்கிறபோது, அதற்கு சமாதானம் தேடவோ, அல்லது விளக்கங்கள் தரவோ கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். எடுத்துச் சொல்லப்பட்ட குற்றங்கள் மீது, நாங்களும், அந்தந்தத் துறை அமைச்சர்களும் என்ன நிகழ்ந்திருக்கின்றது என்ற கேள்வியை கேட்க வாய்ப்பு இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்த அவையிலே பேசியவர்கள் நான்கைந்து பேர்கள் என்றாலும் கூட, மற்றவர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்லவில்லை என்ற நிலை இல்லை. ஒரு தொகுதியிலே, ஒரு ஒன்றியத்திலே ஏதேனும் குறைபாடுகள் உண்மையாக நிகழுமேயானால் கூட, குற்றங்கள் நிகழுமேயானால் கூட அவைகளைச் சுட்டிக்காட்டுகின்ற அளவிற்கு நாம் அந்தந்த அமைச்சர்களுக்கு அனுப்பித் அந்தந்த துறைகளுக்கு அனுப்பி அதனுடைய நிலைகளை விளக்கி, எங்களிடத்திலே கோப்புகளை அனுப்புங்கள் என்று கேட்க முடிகிறது. (குறுக்கீடு)

அந்தக் காழ்ப்புணர்ச்சி சில இடத்திலே இருப்பதன் காரணமாக சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் முதலிலே சொன்னார்கள். ஒரேயடியாக ஆதரிக்கவும் கூடாது, ஒரேயடியாக எதிர்க்கவும் கூடாது என்று சொல்லிவிட்டுத்தான் அவர்கள் ஆரம்பித்தார்கள். அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே அந்த வகையிலே தனிப்பட்ட முறையிலே ஒவ்வொரு உறுப்பினரும் அந்தந்த நிலைமைகளை எடுத்துச்சொல்வார்களேயானால் அப்படிப்பட்ட குறைபாடுகளை களையமுடியும். இப்போது ஒரு மணியோடு முடிக்கவேண்டியிருப்பதன் காரணமாக இதற்கு அதிகமான அளவிற்கு விளக்கங்கள் மற்றவைகள் தருவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் நிதி ஒதுக்கீடு மசோதா வருகிறபோது அதை இப்போது நான் முன் அறிவிப்பு செய்தாலும் கூட அதற்கு என்று 8, 9 தேதிக்குப் பிறகு மீண்டும் பேரவை கூடுகின்றபோது நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இந்தப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 31

பேரவைக்குத் தரப்பட்டு இருக்கிறது. அப்போது வேண்டுமென்றாலும் ஒருநாள் ஒதுக்கவேண்டுமானாலும் கூட ஒதுக்கி. அல்லது 2 மணி நேரமோ, 3 மணி நேரமோ கூட ஒதுக்கி தரலாம், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூறுவது போன்று இப்படிப்பட்ட நெருக்கடி நிலைகளுக்கு மாற்று வேண்டும் என்றார்கள். இப்படிப்பட்ட துணை மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது, காலையிலே கேள்வி நேரம் எதுவுமே இல்லாமல் துணை மானியக் கோரிக்கைகளை நாம் 9 மணிக்கே ஆரம்பித்துவிடுவோமானால் 1 மணிக்குள்ளே நாம் முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். பின்னர் இதுபற்றி ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று சொல்லி, இந்த 158 கோடியே 75 லட்சம்திற்கு நீங்கள் ஒப்புதல் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :பேரவைமுன்னுள்ள கேள்வி: ''1983-84 ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-10-83 ஆம் நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிலும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைக்கு மேற்படாத தொகைகள் அந்தந்த இனங்களில் 1983-84 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### நிறைவேற்றப்பெற்ற 1983-84 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள்

#### A. வருவாய்க் கணக்கில் செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 24,14,50 |
| ஷை | 4-பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 52 |
| ஷை | 6—பத்திரப் பதிவு | 3,39 |
| ,, | 8—தேர்தல்கள் | 10,72 |
| ,, | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலையிடப் பணியாளர்கள் | 22,36 |
| ,, | 10—பால் வழங்கு திட்டங்கள் | 12,00 |
| ,, | 14—சிறைசாலைகள் | 15,11 |
| ,, | 15—காவல்துறை | 3,38 |
| ,, | 17—கல்வி | 16,22 |
| ,, | 18-மருத்துவம் | 2,00 |
| ஷை | 19—பொதுச் சுகாதாரம் | 50,40,91 |



| | | |
|---|---|---|
| கோரிக்கை | 20-வேளாண்மை | 9,24,57 |
| ,, | 22—காலை நடை வளர்ப்பு | 3,00,06 |
| ,, | 23-கூட்டுறவு | 16,82,87 |
| ,, | 24—தொழில்கள் | 5,07,28 |
| ,, | 26-கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 8,00 |
| ,, | 28-சமுதாய நல வளர்ச்சி திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 6,66,22 |
| ,, | 30—சமூக நலன் | 2,70,81 |
| ,, | 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 16,76 |
| ,, | 35—நுகர் பாருள் வழங்கல் | 5,45 |
| ,, | 36-பாசனம் | 14,01,55 |
| ஷை | 38—பொதுப் பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகள் தளவாடமும் | 3,30 |
| ,, | 39-சாலைகளும் பாலங்களும் | 1,07,93 |
| ,, | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,81,00 |
| ,, | 41-இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 10,20 |
| ,, | 44—எழுதுபொருள்—அச்சுத்துறை | 2,33 |
| ஷை | 45-காட்டுவளத் துறை | 19,97 |
| | A. மொத்தம் வருவாய்க் கணக்கு | 1,36,49,31 |

#### B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 49. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,00,00 |
| ஷை | 51-பாசனம் குறித்த மூலதனச் செலவு | 2,43,55 |
| ,, | 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,72,50 |
| ,, | 53-சாலைகள், பாலங்கள் குறித்த மூல்தனச் செலவு | 3,20 |
| ,, | 57—பல்வகை மூலதனச் செலவு | 1,63,97 |
| | மொத்தம் B மூலதனக் கணக்கு | 6,83,22 |

#### C கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 58-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 15,42,55 |
| | பெரு மொத்தம் | 1,58,75,08 |

4 அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(எ) நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7 அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ஈ) நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.7) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1–11–1983 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

193. அத்தியாவசியப் பொருள்களைக் கொள்முதல் செய்தல் சேமித்து வைத்தல். விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொதுத்துறையின் கீழான தொழில் நிறுவனங்களை 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்து தொழிலாளர் நலத் துறையின் 16.8.1983 ஆம் நாளிட்ட 1961 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

(ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள்' ஏனைய தாள்கள்.

35. உறுக்குறியிடாத வினாக்களும், விடைகளும்.(இரண்டாவது பட்டியல்) 1 முதல் 100 வரை.

## உள்ளடக்கம்

1 11–1983 | பக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1. | வினாக்கள்— விடைகள்: | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 237—277 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம்: பஞ்சாலைகள் மூடப்பெறுவது குறித்து | 278—284 |
| 3. | கவன ஈர்ப்பு; தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கான தண்ணீர் தட்டுப்பாடு | 285—288 |
| 4. | அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| | (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு 1983. | 289—305 |
| | (ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு 1983. | 305—306 |
| | (இ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983. | 306 |
| | (ஈ) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த சட்டமுன்வடிவு 1983. | 306 |
| | (உ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1983. | 306—307 |
| | (ஊ) பாரதியார் பல்கலைக் கழக(திருத்த) சட்டமுன் வடிவு 1983. | 307—309 |
| | (எ) சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவு 1983. | 309—361 |
| 5. | அரசினர் தீர்மானம்; பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல் | 361—362 |
| 6. | பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்! | 362 |

2273A



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*1983, நவம்பர், 1 செவ்வாய்க்கிழமை.*

ஐப்பசி *15*, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு *2014*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.''

பின்னர் கிடைக்கப் போகும் ஆதாயத்தை நினைந்து தற்சமயம் தம் கையில் உள்ள மூலதலத்தை இழக்கக் கூடியச் செயலைச் செய்யுமாறு அறிவுடையோர் தூண்டமாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

1980-82—ம் ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மின்சார திருட்டுகள்.

*வினா எண் *121*—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் *1980-81, 1981-82*—ம் ஆண்டுகளில் மின்சாரத் திருட்டுகள் எத்தனை கண்டுபிடிக்கப் பட்டன?

(ஆ) அவைகள் மூலம் அரசுக்கு வசூலான தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) *39*.

(ஆ) அவைகள் மூலம் அரசுக்கு வசூலான தொகை ரூ. *24,316.10* பை. ஆகும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 39 திருட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவைகள் என்ன விதமான திருட்டுகள் என்பதை அறிவிக்க இயலுமா? இப்படிப் பட்ட கடுமையான குற்றங்களைச் செய்கிறவர்கள் மீது, அரசு என்ன நடவடிக்கை எடுத்து என்ன தண்டனை வழங்குகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடுமையான குற்றங்களைச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. களவு போன மின்சாரத்தினுடைய மதிப்பீடு 1981–82 ஆம் ஆண்டு 29,518 ரூபாய் ஆகும். அதில் 13,260 ரூபாய் ஏற்கனவே வசூலிக்கப்பட்டு விட்டது. மற்ற தொகையையும் வசூலிக்க நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டு என்று சொன்னால் அது எந்த வகையில்? வீட்டிலே உபயோகப் படுத்துகின்ற மின்சாரத் திருட்டுகள் பற்றியதா? அல்லது ஆலைகளிலே செய்யப்படுகின்ற திருட்டுக்களா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தலைப்புகளில் இந்தக் குற்றங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று மின் திருட்டு, இரண்டாவது மின் முறைகேடு. அந்த வகைகளில் 7 விதமான முறைகளில் குற்றங்கள் நடைபெறுவதாக வகுக்கப் பட்டிருக்கின்றன. (1), மீட்டரில் துளையிட்டு அதில் கம்பியோ அல்லது குச்சியோ செருகி மீட்டரை ஓடவிடாமல் செய்வது: (2) மீட்டரில் உள்ள பியூசை எடுத்து, மீட்டரை ஓடவிடாமல் செய்வது; (3) மின் அளவைக் காட்டும் கருவியை மாற்றி வைத்து அளவைக் குறைத்துக் காட்டுவது; (4) அனுமதியின்றி அதிக மின் கம்பிகளை இணைத்து ஒட்டுவது; (5) மின் தொடர்பிற்கான அனுமதியைப் பெறாமலேயே மீட்டர் பெறாமலேயே மின் கம்பத்திலிருந்து நேரிடையாகத் மின் தொடர்பு எடுப்பது (6) டீசல், ஜெனரேட்டர் போன்றவற்றை ஒட்டுவது போல காட்டி, உச்ச நேரத்தில், மின் வாரியம் விதித்திருக்கிற கட்டுப்பாடுகளுக்கு மாறாக மின் சக்தியைப் பயன்படுத்துவது: (7) அனுமதிக்கப்பட்ட பணிகளுக்கு மட்டும் அல்லாமல் வேறு பணிகளுக்காகவும் மின் சக்தியைப் பயன் படுத்துவது என்ற வகையில், 7 வகையான முறைகேடுகள், குற்றங்கள், தவறுகள் நடைபெறுவதாக வகுக்கப்பட்டு அவைகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவைகளையெல்லாம் பத்திரிகைகளிலே போட்டு விடாதீர்கள். தெரியாதவர்களும் எப்படி குற்றங்கள் புரிவது என்பதைத் தெரிந்து கொள்வார்கள்





திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிற மின்சார வாரியத்திற்கு, இது மாதிரியான திருட்டுகளைச் செய்வதினால் மேலும் நட்டம் ஏற்படுவதைத் தடுக்க, குற்றவாளிகள் மிக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருப்பதற்கில்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தெந்த வகைகளிலே திருட்டுகள் நடைபெறுகின்றன என்று விளக்கம் கொடுத்தார்கள். அந்த திருட்டுக்களை அறவே நீக்குவதற்காக என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது. மேலும் இது போன்ற குற்றங்கள் தொடராமல் இருக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இந்தக் குறைபாடுகளை அறவே களைவதற்காக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி முதல் இந்தக் குற்றங்களைக் கண்டு பிடித்து வாரியத்திற்கு அறிவிக்கின்ற அந்த வாரியத்தின் பணியாளர்களாக இருந்தாலும் சரி, நுகர்வோர்களாக இருந்தாலும் சரி' பொது மக்களாக இருந்தாலும் சரி–அவர்களுக்கு வெகுமதி அளிப்பது என்ற வகையில், அவர்கள் கண்டு பிடித்துக் கொடுக்கின்ற அளவில் 10 சதவீதத்தை அவர்களுக்கே கொடுப்பது என்ற வகையில் ஊக்குவிப்பதற்கான முறையில் ஒரு திட்டத்தை 13-4–1983 ஆம் நாள் முதல் அமல் படுத்தப்பட்டு வருகிறது. அதன் காரணமாக கடந்த 8 மாதங்களில் மட்டும் 130 மின்சார களவுகள் கண்டுப்பிடிக்கப் பட்டிருக்கின்றன. 1,662 மின்சார முறைகேடுகள் என்ற வகையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய மொத்த மதிப்பீடுகள் 3 லட்சம் ரூபாய் அளவுக்கு கண்டுபிடிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது,

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 35 லட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய் அளவுக்கு நட்டம் உண்டாக்கக் கூடிய நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். இது முக்கியமான விஷயமாக இருப்பதால் இது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதா? அதன் மூலம் யாராவது தண்டிக்கப்பட்டு அச்சுறுத்துக்கின்ற முறையிலே கடுமையான நடவடிக்கை எடுக்காத வரையிலும் இப்படிப்பட்ட முறைகேடுகளை நாம் எப்படிச் சரிப்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நீதிமன்றங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி அது குறித்துப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1983 நவம்பர் 1

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டு மூலமாக 29,518 ரூபாய் நட்டம் ஏற்பட்டதாகவும் அதில் 11 ஆயிரத்து சொச்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இது மின்சாரம் பற்றியது மட்டுமா? மின்சாரக் கம்பிகள், மின்சார லைன்களிலே உள்ள செப்புக் கம்பிகள், ஸ்டோர்களிலே சாமான்கள் திருடப்படுகின்றனவே அவைகளும் சேர்ந்ததா? மின்சாரத் திருட்டு சம்பந்தமாக எத்தனை கேஸ்கள் பைல் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலே ஏற்பட்ட மின்சாரக் களவுகள் பற்றி மட்டுமே நான் தெரிவித்து இருக்கிறேன்.

திரு, என். பழனிவேல்: தலைவர் அவர்களே, 1980-82 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மின்சாரத் திருட்டுகளைப் பற்றி சொல்கிறார்கள். இது மின்சாரத் திருட்டா? அல்லது சில விவசாயிகள் கோரிக்கைகளை வைத்து அவைகளின் அடிப்படையில் பணம் கட்டாமலே அவர்கள் இஷ்டத்திற்குப் பயன்படுத்திய முறையிலே ஒரு சங்கத்தின் சார்பிலே நடத்தப்பட்ட போராட்டத்தின் மூலமாக செய்யப்பட்டவையா? அந்த மாதிரிக் குற்றங்களாக இருந்தால் ஏன் அவைகளைத் தள்ளுபடி செய்யக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே குற்றம் அரசியல் என்ற பெயராலே செய்யப்பட்டாலும் அரசியலுக்கு அப்பாற்பட்டு செய்யப்பட்டாலும் குற்றம் குற்றம் தான். எனவே அரசு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது.

கோத்தகிரியில் கோழிக்கரை அருகே சிறு மின்சார நிலையம்
அமைக்கும் திட்டம்.

*வினா எண் 122—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் ஆவக்கல் கிளிப்பி, முள்ளூர். கீழ் தட்டப்பள்ளம் ஆகிய ஆறுகள் ஒன்று சேரும் கோழிக்கரையில் ஒரு சிறு மின்சார நிலயம் அமைக்க ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?



1983 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ கோத்தகிரியில், கோழிக்கரையின் அருகே 2 மெகாவாட் திறன் உள்ள ஒரு சிறு நீர்மின் திட்டம் அமைப்பதற்காக விரிவான ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள மின்வாரியத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. விரிவான ஆய்வுப் பணிகளை மின் வாரியம் மேற்கொள்ளும்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, கோத்தகிரியில் ஆவக்கல், கிளிப்பி, முள்ளூர், கீழ் தட்டப்பள்ளம் ஆகிய ஆறுகள் ஒன்று சேருகின்ற அந்தப் பகுதியிலே கோழிக்கரையில் ஒரு மின்சார நிலையம் அமைக்க ஆய்வு நடத்தப்படுவதாகச் சொன்னார்கள். இந்த ஆய்வு எப்பொழுது முடியும்? அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அது ஆய்விலே இருக்கிறது. துரிதப்படுத்தப்படும்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, நீலகிரியில் வேறு சில ஆறுகள் ஓடுகின்ற இடங்களில் அவற்றைத் தடுதது அதன மூலமாக சிறு சிறு மின் நிலையங்கள் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் சிறிய, மிக மிகச் சிறிய புனல் மின் திட்டங்களை ஆங்காங்கே ஏற்படுத்தவேண்டுமென்ற முறையிலே அதன்மூலமாக மின் சக்தியை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கொள்கையை வைத்திருக்கிறது. மைக்ரோ ஸ்கீம்ஸ் என்ற முறையிலே நூற்றுக்கணக்கான திட்டங்களைச் செயல்படுத்த 320 திட்டங்களை 336 மெகாவாட் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு—மாநில முழுவதும் பரவலாக அந்தத் திட்டங்களை ஏற்படுத்த அரசு முனைந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக 105 கோடி யூனிட்டுகள் உற்பத்தி செய்ய முடியும்.

ஒகேனக்கல் நீர் மின்திட்டம்

*வினா எண் 123—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் நீர் மின் திட்டம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்

(ஆ) காவிரி நீர்ப் பிரச்சினையில் இறுதித் தீர்வு ஏற்படும் வகை ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றிய செயற் குறிப்பு நிலுவையில் வைக்கப் பட்டுள்ளது.

[1983 நவம்பர் 1

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினை கானல் நீர்போல் முடியாமல் இருப்பதன் காரணமாக தமிழக அரசும் கர்நாடக அரசும் சேர்ந்து செயல் படுத்தப் போகின்ற ஒகேனக்கல் மின்சாரத் திட்டத்தை நிலுவையில் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். கர்நாடக மாநிலம் அதற்குள்ளாக பேகதூது மின் திட்டத்தை செயல் படுத்துவதன் மூலமாக தமிழகம் பாதிக்கப்படும் என்பதை மத்திய அரசு மூலமாக வலியுறுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? காவிரி நீர்ப் பிரச்சினை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைப் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை போல இந்தத் திட்டம் கடந்த 2[illegible] ண்டுகளாக கனவாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கனவை நனவாக்குகின்ற வகையில் கடந்த 3, 4 ஆண்டுகளாக தீவிர முயற்சி எடுக்கப்பட்டு கடந்தமாதம் அக்டோபர் திங்கள் கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு அக்டோபர் திங்களுக்குப் பிறகு பேசலாம் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். விரைவில் கர்நாடக மாநில முதலமைச்சரும் நம்முடைய மாநில முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் சந்தித்துப் பேசி ஒரு நல்ல தீர்வைக் காண்பார்கள்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது காவேரி நீர் பிரச்சனையோடு இது இணைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். விரைவில் காவேரி நீர்ப் பிரச்சனை தீர்க்கப் படவேண்டியதுதான். அதற்கு மத்திய அரசால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு திட்டம் தமிழ்நாட்டுக்கு மிகத் தேவையாக இன்றைக்கு இருப்பதால் மின்சாரத்திற்காக இந்தத் திட்டத்தை எழுப்புவதற்கு இரண்டு மாநில அரசுகளும் நிதி ஒதுக்கீடு செய்து மாநில அரசுகளே இந்தத்திட்டத்தை ஆரம்பிக்க முன் முயற்சியாக அரசு, கர்நாடக முதலமைச்சரை சந்திக்கின்ற போது இந்த உணர்வோடு, திட்டத்தோடு செல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-3-80 அன்று சந்தித்த மாநில முதலமைச்சர்களும் மத்திய அமைச்சரும், மத்திய அரசின் கீழ் இந்த திட்டத்தை அமைப்பது சிறந்த ஏற்பாடாக இருக்கும் என்றும், இதன் செலவுகளையும் பயன்களையும் இரு



1983 நவம்பர் 1]

மாநிலங்களும் நியாயமான அடிப்படையில் பகிர்ந்து கொள்ளலாம் எனவும் மத்திய அரசால் ஒரு கருத்து தெரிவிக்கப் பட்டது. அதன் அடிப்படையில் இன்றையதினம் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் பிரச்சனைக்கு விரைவில் கூடிப்பேசி தீர்வு காண இருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கர்நாடக முதலமைச்சர் திரு ஹெக்டே அவர்கள் தமிழக அரசின் கோரிக்கை நியாயம் அற்றது என அவர்கள் டெல்லிக்கு எழுதியிருப்பதாக பத்திரிகையில் செய்திகள் வந்திருக் கின்றனவே........................ ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சனை மின்சாரத்தைப் பற்றியது. மூலக் கேள்வியை ஒட்டியதாக துணைக் கேள்வி அமைய வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒகேனக்கல்மின் உற்பத்தி திட்டத்தைப் பற்றி ஏற்கனவே இந்த சட்டமன்றத்தில் பல தடவை கேள்விகள் கேட்கப்பட்டது. இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகள் இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டு வருகிறது என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த 2 அரசுகளும் கர்நாடக அரசும் தமிழக அரசும் திட்டமிட்டு செயல்படுத்த முடியுமா அல்லது மத்திய அரசு அனுமதி எந்த வகையிலாவது வாங்க வேண்டியிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்? மற்றும் இதை சீக்கிரமாக நிறைவேற்ற வேண்டும், கர்நாடக அரசு ஒரு பகுதி மின்சாரத்தை கேட்டாலும் கூட நமக்கு ஒரு பகுதி அதனால் மின்சாரம் கிடைக்கும் இதில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் இரண்டு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து இதுபற்றி பேச இருக்கிறார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர் உணர்வுகள் கவனத்தில் கொண்டு துரிதப்படுத்தப்படும்.

தமிழக அரசால் நடத்தப்படும் 'தமிழரசு' பத்திரிகை.

வினா எண் 124— திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1983 நவம்பர் 1

(அ) தமிழக அரசால் நடத்தப்படும் 'தமிழரசு' பத்திரிகை இலாபகரமாக நடக்கிறதா?

(ஆ) எத்தனை பிரதிகள் ஒரு வெளியீட்டுக்கு விற்பனை ஆகிறது?

(இ) அரசின் சார்பில் எத்தனை பத்திரிக்கைகள், எவையெவை வெளியிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) முதல் (இ) வரை. விவர அறிக்கை *அவைமுன் வைக்கப்படுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசு பத்திரிக்கையில் சட்டமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை விளக்கமாக வெளியிடுவதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்யப்படுமா? அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் செய்யும் பணிகள் பற்றிய நிகழ்ச்சிகளை சட்டமன்ற உறுப்பினர் தருகின்ற குறிப்புகளைத் தமிழரசு பத்திரிகையில் வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற நடவடிக்கைகளை தமிழரசு பத்திரிக்கையில் வெளியிடுவது என்பது நடைமுறையில் சாத்தியம் அற்ற காரியம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே அரசு நிறைவேற்றுகின்ற பணிகளைப் பற்றிய குறிப்புகளை அவர்கள் அனுப்பினால் அது பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரை அப்படி அனுப்பியதாக தெரியவில்லை. இனிமேல் அவர் அனுப்புவதற்கும் தடை இல்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மிக்க நன்றி, இனிமேல் அனுப்புகிறேன். தமிழக அரசு ஒரு தினசரி பத்திரிக்கையை அரசின் சார்பிலே உள்ள செய்திகளை வெளியிடுவதற்காக—தமிழரசு என்ற பெயர் இல்லையென்றாலும், இன்னொரு பெயரிலே—நடத்துவதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது முன் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*353—361 ம் பக்கங்களில் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.



1983 நவம்பர் 1]

எருக்கஞ்சேரியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை.

*வினா எண் 125—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மாதவரம் அருகில் எருக்கஞ்சேரியில் உள்ள தோல் பதனிடும் ஒரு தொழிற்சாலையில் பாம்புகளின் தோல் ஏராளமான அளவில் பதனிடப்பட்டு வருவதாக வனத் துறை அதிகாரிகளுக்கு 26-9-1981 தேதி அன்று பொது மக்களிடம் இருந்து புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) பொது மக்களிடம் இருந்து புகார் எதும் வரவில்லை. எனினும், சந்தனக்கட்டைகள் கடத்தப்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்று, அதனைக் கண்டுபிடிக்க சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வனத் துறை அதிகாரிகள் கண்காணிக்கும்போது, பாம்புத் தோல்கள் கடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. குற்றவாளிகள் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி தண்டிக்கப்பட்டு, அவர்களிடம் அபராதத் தொகை வசூலிக்கப் பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய்க்கு அந்தப் பாம்புத் தோல் பிடிக்கப்படுவதாக அரசுக்குத் தகவல் வந்தது? இப்படிப் பாம்பைக் கள்ளத்தனமாக வனவிலங்குக் காடுகளில் பிடிப்போருக்கு ஏதாவது தண்டனை கொடுக்க அரசிடம் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் பிடிக்கப்பட்ட அந்த பார்சலில் 344 பாம்புத் தோல்கள் இருந்தன. பிடிபட்டவர் கொடுத்த வேறு தகவலை ஒட்டி, அவர் எந்த இடத்திற்குக் கொண்டு செல்வதாகச் சொன்னாரோ, அந்த இடத்திலே போய் பரிசோதித்தபோது, 9,000 பாம்புத் தோல்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, சட்டத்தின்படி அவர்களுக்கெல்லாம் உரிய தண்டனை வழங்கப்பெற்று, அபராதமும் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது, கடுமையாக இந்தப் பாம்புத் தோல்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதைக் கண்காணிக்கவும் தீவிர நடவடிக்கை எடுத்து, தேவையானால் அவர்களை உடனடியாகக் கைது செய்யவும் அரசு ஆணைகள் பிறப்பித்திருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தனியார் பாம்புத்தோல் பதனிடும் தொழிற்சாலைகளோ, தோல் பதனிடும் தொழிற்சாலைகளோ வைத்து, வெளி

நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்வதைத் தவிர்க்க, அரசாங்கமே பாம்புத்தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா? அரசு பொறுப்பிலே ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத் லெதர் கார்ப்பரேஷன் என்ற அரசுக்குச் சொந்தமான அமைப்பிடம் இந்தப் பாம்புத் தோல்கள் வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. பிடிக்கின்ற பாம்புத் தோல்களானாலும் அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பாம்புத் தோல்களானாலும் பாரத் லெதர் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் பதனிட்டு, செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

**திரு. சு. பாலன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உணவு தானியங்களை எலிகள் பாழாக்கிவிடுகின்றன. வயல்களிலே ஏராளமான பாம்புகள் இருக்கின்ற காரணத்தால், எலிகளை அவைகள் பிடித்து உணவாக்கிக் கொள்கிற காரணத்தால், உணவு தானியங்கள் மிச்சப்படுகின்றன. ஆனால், இன்றையதினம் பாம்புகளை அதிகமாகப் பிடிப்பதன் காரணமாக, எலிகள் அதிகமாக இருந்து, உணவு தானியங்களை பாழாக்குகின்றன. ஆகவே, இப்படிப் பாம்புகளைக் கொல்வதை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பாம்புகளைப் பிடிக்கக் கூடாது, கொல்லக் கூடாது என்பதற்குச் சட்டம் இருக்கிறது. அதை இப்பொழுது தீவிரமாக அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொள்ளிடக் கரையிலிருந்து திருடுபோன தேக்குமரங்கள்.

* வினா எண் 126—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் சீர்காழி வனச்சரகம் திருவிடைமருதூர் வட்டம் வேட்டமங்கலம் கிராமத்தில் கொள்ளிடக் கரையில் இருந்து தேக்குமரங்கள் திருடுபோனது பற்றிக் காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) ஆம்.



(ஆ) மொத்தம் மூன்று தேக்கு மரதிருட்டுக்கள் நடந்துள்ளன. அதில் ஒரு திருட்டில் காவல்துறையினர் புலன் விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியவில்லை என்று 30-7-1982 ஆம் தேதி அறிவித்துள்ளனர். மீதி இரண்டு தேக்குச் செடிகள் திருட்டில் சம்பந்தப்பட்டவரிடம் இருந்து ரூ. 30 அபராத தொகையாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் பொதுப்பணித் துறையினரால் செலுத்தப்பட்டுள்ளது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருடப்பட்ட மரங்களின் மதிப்பு எவ்வளவு? திருட்டுப்போன அத்தனை மரங்களையும் வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றினார்களா? நீதிமன்றத்தில் அந்த மரங்களை ஒப்படைத்தார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே நான் முன்னாலே தெரிவித்ததைப் போல் இரண்டு செடிகள்தான் திருடப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலேயிருக்கிற அந்தத் தேக்கு மரங்களே சுமார் 10 அல்லது 12 வயதிற்குட்பட்ட தேக்குமரங்கள்தான். ஆகவே, அவை மரங்கள் என்ற அந்தப் பட்டியலுக்குள்ளே இன்னும் வராமல்தான் இருக்கின்றன. அதற்கு சுமார் ஒரு கன அடிக்கு ரூ. 50 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதை ஒட்டித்தான் அந்த விறகு மதிப்பு போட்டு ரூ. 30—ஐ வசூலித்திருக்கிறார்கள். அதிலும் வனத்துறை பொறுப்பிலே அந்த மரங்கள் — பாதுகாப்பிலே— இல்லை. அந்த மரங்கள் பயிரிடப்பட்டு பொதுப்பணித்துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அது பொதுப்பணித் துறையின் பொறுப்பிலேதான் இப்பொழுது இருந்து வருகிறது. இந்த நடவடிக்கைகளையும் பொதுபணித் துறையினர்தான் எடுத்து வருகிறார்கள்.

(முற்பகல் 9-20)

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையினர் இது சம்பந்தமாக காவல் துறையிலே புகார் செய்தார்களா? அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் என்னுடைய முதல் பதிலிலே தெரிவித்திருக்கிறேன். பொதுப்பணித் துறை போலீசிலே புகார் செய்து, அதில் ஒரு வழக்கில் குற்றவாளி கிடைக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். மீதி இரண்டு வழக்குகளில் அபராதம் போடப்பட்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே திருட்டுப்போன மரங்கள் செடிகள் என்ற கணக்கிலே வைக்கப்பட்டிருப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுவும் 10, 12 வயதுடைய செடிகள் என்றும் மரங்கள் என்ற கணக்கிலே வராமல் இருப்பவை என்றும் தெரிவிக்கிறார்கள். அங்கே திருட்டுப் போகிற மரங்கள் இனிமேல் காவல் நிலையத்திற்கு நடவடிக்கைக்கு கொண்டு போகாமல், இவ்வாறு அபராதம் விதித்து விட்டுவிடுவார்களா என்பதை அமைச்சர் அவர்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்வியிலிருந்து, இப்படி அபராதம் கட்டலாம் என்ற தைரியத்தில் மரத்தைத் திருடலாம் என்ற உணர்வுகள் யாருக்கும் வந்துவிடக் கூடாது. இப்போது மிகத் தீவிரமாக அப்படிப்பட்ட முயற்சிகளை கண்டுபிடித்து அவர்களை தண்டனைக்கு உட்படுத்த வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையிலே இருக்கிற காரணத்தாலே, அவர்களால் கண்காணிக்க முடியவில்லை என்ற கருத்தும் பொதுப்பணித் துறையிலேயிருந்து பெறப்பட்டிருக்கிறது. ஆகவே வனத்துறை சொத்து என்று ஆணை பிறப்பித்து நோட்டிபிகேஷன் செய்து மீண்டும் வனத் துறை சட்டத்தின்கீழ் கொண்டுவந்தால் அப்படி மரங்களை வெட்டுபவர்கள் வனத்துறை சட்டத்தின் கீழ் தண்டனைக்குட் படுவார்கள். ஆகவே இன்னும் கடுமையான நடவடிக்கைக்கு அவர்களை உள்ளாக்கலாம் என்று அரசு ஆலோசித்து கொண்டிருக்கிறது.

1980-ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்டம்.

*வினா எண் 127— திரு. கே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசினது வனப் பாதுகாப்புச் சட்டம், மாநில அரசின் வளர்ச்சிப் பணிகளான சாலை அமைத்தல், அணை கட்டுதல் போன்றவைகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாகவும் காலதாமதம் ஏற்படுத்துவதாகவும் இருப்பது அரசிற்கு தெரியுமா?

(ஆ) இதனைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 1980 ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனநிலங்களை, வனச் சம்பந்தப்படாத காரணங்களுக்காகப் பயன்படுத்த மைய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும். எனவே சாலை அமைத்தல், அணை கட்டுதல் போன்றவற்றிற்கும் மைய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும். இதனால் காலதாமதம் ஏற்படத்தான் செய்கிறது.



(ஆ) இக்காலதாமதத்தைப் போக்குவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. சுல்தான்முகம்மது என்ற கோரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வனப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயராலே, அப்பா சமுத்திரம் தொகுதியில் புலி சரணாலயம் என்று டிக்ளரேஷன் செய்ததன் அடிப்படையில், பல கோடி ரூபாயிலே ஆரம்பிக்கப்பட இருந்த அணைக்கட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது; அதேபோல் மேல் மணிமுத்தாறில் நீளவால் குரங்கு பாதுகாப்பு என்ற பெயரால் அந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த திட்டமும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? மத்திய அரசிடம் வாதாடி, மீண்டும் நிறைவேற்றுகிற முறையிலே அந்தத் திட்டங்களை நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிறைவேற்றிய வனப் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிய கேள்விக்கான குறிப்புகள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. அதற்கான பதிலைத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அதன் விளைவாக தடுக்கப் பட்டிருக்கிற, அல்லது நிறைவேற்றக்கூடாது என்று அரசு கருத்து தெரிவிக்கிற அணைத் திட்டங்களைப் பற்றி நான் விவரம் அளிக்க இயலாது. தனியாக கேள்வி போட்டால் அதற்கான பதிலை சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பதில் அளிப்பார்கள். அது வனத்துறை சம்பந்தப்பட்டிருந்தால் நானே பதில் அளிப்பேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சி நிலையில் இருக்கிறபோது சிறிய நீர்தேக்க குட்டைகளை கூட அமைக்க முடியாமல் பாரஸ்ட் ஏரியா என்று சொல்லி தடுக்கப்படுகின்றன. ஆனால் அங்கே பாரஸ்டே இல்லை. இதுபோன்று நீர்தேக்க குட்டைகள் அமைப்பதில் ஏற்படுகிற தடைகளை போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும்; அதைக் கடுமையாக அமல் நடத்தவேண்டுமென்று கருத்தையொட்டி மத்திய அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதை மாநில அரசுகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதிலே நடைமுறைச் சிக்கல் வருகிறபோது இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுகின்றன. ஆங்காங்கே சிறு தேவைகளுக்கு கூட — உதாரணமாக மலைப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு மின்சாரம் தரவேண்டுமென்றால், மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கு மின் கம்பங்களை நட வேண்டுமானாலும் கூட மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் சாலைகள் அமைக்க வேண்டுமானாலும் மத்திய அரசினிடத்தில் அனுமதி

கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் தான் இப்படிப்பட்ட நீர் குட்டைகளில் அந்தத் தண்ணீரைத் தேக்குவதற்காக செய்யப்படுகிற முயற்சிகளும் அதற்குள்ளேதான் வருகின்றன. அப்படிப்பட்ட முயற்சிகளை மாநில அரசே அது மக்களுக்குத் தேவையான மிகவும் அத்தியாவசியமான தேவை என்று கருதி அடிக்கடி தேவைப்படுகிற விஷயங்களிலாவது உத்தரவு போடுவதற்கு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதால் காலதாமதமாகிறது. ஆகவே அந்தச் சட்டத்திலிருந்து இப்படிப்பட்ட சில கருத்துக்களுக்கு, நிகழ்ச்சிகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து எத்தனை அணைகளுக்கா , இதுபோன்று வனத் துறையின் கீழுள்ள இடங்களில் அணைகள் கட்ட அனுமதி கோரப்பட்டிருக்கிறது? அத்தியாவசியமானவற்றிற்கு விதிவிலக்கு அளிக்க ஆலோசனை கூறியுள்ளதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையை வலியுறுத்தி அதற்கான அனுமதி பெறுவதற்காக என்ன திட்டம் இருக்கிறது? அணைகள் கட்டும்போது பாதிக்கப்படும ஹெக்டேர்கள் எவ்வளவோ அதற்கு மாற்றாக மரங்களை வைத்து வளர்க்கும் ஆலோசனையை மாநில அரசு கூறியிருக்கிறதா? அதற்கான ஆலோசனை ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே பதிலளித்திருக்கிறேன். அணைகளுக்காக எத்தக் கோரிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் பொதுவாக இப்படிப்பட்ட ஒரு சாதாரண நடைமுறைக்குக்கூட இந்தச் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளே மத்திய அரசை நாம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையும் அதனால் காலதாமதமும், ஒரு சாலை போடுவதற்குக்கூட மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால் தாமதமாகிறது. மக்களுக்கு சாலை வசதி கிடைக்காமல் இருக்கிறது. அதுவும் ஆறு மாதங்கள் கழித்து அந்தச் சாலையைப் போடத்துவங்கும் போது அதனுடைய செலவினமும் உயர்ந்து விடுகிறது. அப்படிப்பட்ட சாதாரண நிகழ்ச்சிகளுக்குக்கூட ஒரு மாநில அரசே — வனங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற அக்கறை மத்திய அரசுக்கு எவ்வளவு இருக்கிறதோ அதற்குக் கொஞ்சம் கூட குறையாமல் அக்கறை கொண்டிருக்கிற மாநில அரசு மக்கள் தேவைகளில் நேரடியாக தொடர்பு கொண்டிருக்கிற மாநில அரசு அப்படிப்பட்டதொரு அத்தியாவசியமான தேவைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு அந்தச் சட்டத்தில் வழிவகை காணப்பட வேண்டுமென்று நாம் வலியுறுத்தி தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். அது இந்தியா முழுவதற்கும் செய்யப்பட்ட சட்டம் என்ற காரணத்தால் வனங்களைப் பாதுகாக்கவேண்டியது மிகுந்த அவசியம், மற்ற விஷயங்களையெல்லாம் பின்னால் நிறுத்தி இது முக்கியம் என்று கருதப்படுகிற அந்த அவசியத்தையொட்டியும் இந்திய அரசு அதிலே இன்னும் முடிவெடுக்காமலிருக்கிறது.



### வத்தலகுண்டு கூட்டுறவு நகர வங்கி.

** வினா எண். 8— திரு. என். எஸ். வி. சித்தன்:* மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வத்தலகுண்டு நகரத்தில் A-723 வத்தலகுண்டு கூட்டுறவு நகர வங்கியில் நலிந்தோர் கடனாகத் தையல் மிஷின் வழங்கியதில் இந்த ஆண்டு (1982) ஊழல் நடைபெற்றது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) தையல் மிஷின்கள் வாங்க வழங்கப்பட்ட மொத்தம் 70 கடன்களில், 37 அங்கத்தினர்கள் தையல் மிஷின்கள் வாங்கியுள்ளனர். தையல் மெஷின்கள் வாங்காத 33 நபர்களில் 29 நபர்களின் கடன்கள் முடிவு கட்டப்பட்டு கடன் தொகை முழுவதும் சாதாரண கடன்களுக்கான வட்டி விகித வட்டியுடன் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 நபர்களிடமிருந்து ஒரு பகுதி கடன்கள் வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகையை வசூலிக்க வங்கியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இருபது அம்சத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அளிப்பதன் அடிப்படையில் குறைந்த வட்டியில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படவேண்டிய இந்தக் கடன் முறையாக வழங்கப்படாத காரணத்தினால் மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் முறைகேடு நடந்திருக்கிறது என்பதை அறிந்து இந்தக் கடன்கள் எல்லாம் முன்னால் முடிவு செய்யப்பட்டது உண்மையா? அதேபோல் வணிகவியல் குற்றப்புலனாய்வுத் துறையிலிருந்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதும் உண்மையா? அப்படியானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட இந்த வங்கியைப் பொறுத்தவரையில் இது ஒரு நகர வங்கி. இந்த நகர வங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒரு நிர்வாகக் குழுவைக் கொண்டதாக இருந்தது. அதிலே மருதமுத்து மற்றும் நான்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார்கள். நகர வங்கியில் பணியாற்றுகிற சிப்பந்திகளுக்கும், உறவினர்களுக்கும் — அதனுடைய இயக்குநர்கள் அவர்களுடைய உறவினர்களுக்கெல்லாம் இந்தக் கடன்களை வழங்குவதாக வழங்கி, ஆனால் அதில் வழங்கப்பட்ட கடன்கள் கொண்டு தையல்மெஷின் வாங்காத நிலையை அவர்கள் கடைப்பிடித்த காரணத்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து அந்த அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதில் தற்போது யார் யார் அந்தக் கடனை வாங்கி மெஷின் வாங்கவில்லையோ

அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பணம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. 15 சதவிதம் வட்டியோடு பெறப்பட்டுள்ளது. சட்டரீதியான நடவடிக்கைகள் அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. 65 என்கொயரியும் போடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே இம்மாதிரி நடைபெறாமல் இருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டுக்கொரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர வங்கியில், இதுபோன்ற வங்கிகளில் அங்கத்தினர்கள் செய்கிறபோது, அவைகள் அரசின் கவனத்திற்கு வருகிறபோது, உடனுக்குடன் எப்படி அந்த வங்கியின்மீது நடவடிக்கை எடுத்தோமோ, அந்த மாதிரி இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. கூட்டுறவு இயக்கம் நலிந்த பிரிவினருக்காக இருக்கின்ற காரணத்தினால், இந்த இயக்கத்திலே உள்ள அங்கத்தினர்கள், பொறுப்பாளிகள், நலிந்த பிரிவினரின் நலனைக் காக்க வேண்டுமென்ற நல்ல நோக்கோடு செயல்படுகின்றபோது, இந்த பிரச்னையை உண்மையிலேயே நல்ல முறையில் களைய முடியும். புதிய கூட்டுறவு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் அந்த புதிய சட்டத்தின்படி 65 என்கொயரி எல்லாம் போட்டு, அதிலே அவர்களுக்கு குறைந்த தண்டனை வருகின்ற காரணத்தினால், அடுத்த முறையும் தவறு செய்யலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு வரக்கூடாது என்பதற்காக, கூட்டுறவுத் துறையில், கூட்டுறவு அங்காடிகளில், கூட்டுறவு வங்கிகளில், கூட்டுறவு அமைப்புகளில், அவைகளிலே எதுவாக இருந்தாலும், அதிலே தேர்ந்து எடுக்கப்பட்ட இயக்குநர்கள் ஆனாலும் சரி, அங்கத்தினர்கள் ஆனாலும் சரி, அதிகாரிகள் ஆனாலும் சரி, முறைகேடுகளில் ஈடுபடுகின்றபோது சிறை தண்டனை தர வேண்டும் என்ற கடுமையான சட்ட விதிகளை புதிய சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம். அப்புதிய சட்டம் நடைமுறைக்கு வருகிறபோது, கூட்டுறவு இயக்கத்தில் நல்லவர்கள் மட்டுமே வர முன்வருவார்கள். அத்தகைய முறையில் இச்சட்டம் அமைய இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு வங்கியில் மொத்தம் 70 பேர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு, அதிலே 33 பேர்கள் வாங்காமல் இருந்து, அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, அவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அப்படி வசூல் செய்யும்போது, அந்த பாங்குக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சில நபர்கள் மெஷின்களை வாங்காமல் இருந்த காரணத்தால்,



அதிலே நான்கு பேர்கள் வாங்காமல் இருந்து, அதற்கு பணம் வசூலிக்கப்பட்டதா என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்த நகர வங்கி இலாபகரமாக ஓடுகிறதா? அல்லது நஷ்டத்தில் ஓடுகிறதா? இந்த நகர வங்கியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 பேர்கள் எந்த காரணத்திற்காக வங்கியில் பணம் வாங்கிக் கொண்டு மெஷினை வாங்கவில்லை என்றால், ஒருவேளை மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்திருக்கவேண்டும். அதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இந்த குறிப்பிட்ட வங்கி லாபத்தில் ஓடுகிறதா, நஷ்டத்தில் ஓடுகிறதா என்ற செயற்குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. இந்த வங்கியைப் பொறுத்த வரையில் ஒரு விநோதமான தகவல் வந்திருக்கிறது. அங்கே தேர்தல் நடந்து, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவைப் பொறுத்தவரையில், நல்லவர்கள் இல்லை என்பது ஆய்ந்தபோது தெரியவந்தது. ஆரம்ப காலத்திலே இவர்கள் ஒரு அரசியல் கட்சியிலே இருந்திருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, இந்த தவறுகளைச் செய்தபிறகு, நடவடிக்கை எடுக்கிறபோது, ஆளுங் கட்சியிலே சேருவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட தகவலும் வந்திருக்கிறது. ஆனால் இவர்கள் சட்டத்தை மீறி, விதிகளை மீறி, ஏழைகளுக்கு அவர்கள் பணத்தைத் தராமல், தவறு செய்திருக்கின்ற காரணத்தால், அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது.

விடுதலை அடைந்து வீடு திரும்பும் சிறைக் கைதிகளின் பயணச் செலவுக்கான பணம் வழங்கும் திட்டம்.

* வினா என் 9—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிறைக் கைதிகள் விடுதலை அடைந்து வீடு திரும்பும் போது அரசு அவர்கட்டுப் பயணச் செலவுக்குப் பணம் கொடுக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் 1982-ம் ஆண்டு அதற்காக செலவான தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) ரூ. 68,377.43 ஆகும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறையிலிருந்து நீண்ட காலத்திற்குப் பிறகு விடுதலை அடைகின்றபோது, அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்கு, பல வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று சொல்லி நரசிம்மன்

கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டதாக அரசாங்கம் கூறியிருக்கிறது. ஆகவே, இந்த சிபார்சுப்படி, அதை அமுல்படுத்தி, எத்தனை பேர்களுக்கு அந்த பெனிபிட் கொடுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை பேர்களுக்கு என்று எண்ணிக்கை இல்லையென்றாலும், எந்த வடிவங்களில் அவர்களுக்கு இந்த பெனிபிட் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த சிபார்சுகளை அமுல் நடத்திய பிறகு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் நேரடியாகத் தொடர்பு இல்லையென்றாலுங்கூட, இந்தியாவிலேயே முதன் முதலாக நமது மாநிலத்தில்தான் சிறையிலிருந்து ஒரு கைதி விடுதலை பெற்று வெளியே சென்றபிறகு, அவன் திருந்தி நல்ல முறையில் வாழ வேண்டும், மீண்டும் குற்றவாளியாக ஆகக் கூடாது, மக்கள் மத்தியில் இருந்து, மக்களில் ஒருவனாகக் கருதப் படவேண்டுமென்ற நோக்கத்தோடு, அவர்களுக்கு நல்முறையில் மறுவாழ்வு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, அந்த அடிப்படையிலே Tamil Nadu Priso ers Welfare Corporation Private Limite' என்ற ஒரு அமைப்பையே ஏற்படுத்துவதற்கு அரசு தீர்மானித்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அப்படிப்பட்ட திட்டம் வருகின்ற வரையில் சும்மா இருக்கக் கூடாது என்ற முறையில், சிறையிலிருந்து வெளியே செல்வதற்கு முன்பே சிறையிலேயே அவர்களுக்குப் பல கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கிறோம். எந்த கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு அவர்கள் விரும்புகிறார்களோ அந்தத் தொழிலில் அவர்கள் விடுதலை பெற்ற பிறகு ஈடுபடும்வகையில் பணம் கொடுப்பதற்கு நிதி ஆதாரம் அரசின் மூலம் ஒதுக்கப்படவில்லையென்றாலும், 7th Fina ce Commission நிதி வசதியும் அதற்குப் போதிய அளவில் இல்லையென்றாலும், கூட்டுறவு வங்கியின் மூலம் கொடுக்கும் கடனில் இவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்ற முறையில் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம். மூன்று நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளை – Lead Banks for the State of Tamil Nadu—India Overseas Bank, Indian Bank and Canara Bank ஆகியவைகளை அணுகி, அவர்களும் விடுதலை ஆகி வெளியே செல்லும் இதுபோன்ற கைதிகள் தொழிலில் ஈடுபடுவதற்கு உதவி தர வேண்டுமென்று சொல்லி அந்த அடிப்படையிலே தரப்பட்டு வருகிறது. அந்தந்தத் தொழிலில் ஆர்வம் உள்ளவர்கள் அதைப் பெற்று வருகிறார்கள். ஆனால் அதுசம்பந்தமான எண்ணிக்கை தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கைதிகளாக இருந்து வெளியே செல்பவர்கள் மறுவாழ்வு பெறுவதற்கு உதவி செய்யப் படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். நம்முடைய மாநில கூட்டுறவு வங்கி மூலமாக நிதி உதவி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே நான் அந்தப் பதிலினூடேயே சொன்னேன், தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக, சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே செல்பவர்கள், தாங்கள் சிறையிலே கற்ற கைத்தொழிலின் அடிப்படையிலே தொழில் துவங்க முன்வரும்பொழுது அவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஈடேற்றி வருகிறோம். அதுமட்டுமல்லாமல், லீட் பேங்க் என்று சொல்லப்படக்கூடிய மூன்று நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க முன் வந்து தங்களை ஈடுபடுத்திக்கொண்டு உதவி செய்வதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

## கண்விழிப் பாதுகாப்புச் சட்டம்

*வினா எண் 10—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசு தற்பொழுது உள்ள கண்விழிப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

(இ) மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் கண் பாங்கு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) அதிக அளவுக்கு கண் விழிகளை பெறுவதற்காக தமிழ்நாடு கண்விழிப் பாதுகாப்பு சட்டத்தை திருத்தம் செய்ய செயற்குறிப்பு உள்ளது.

(இ) தற்போது சென்னை கண் மருத்துவ மனையிலும் மதுரை இராஜாஜி மருத்துவமனையிலும் கண் வங்கி இயங்கி வருகிறது. இது தவிர மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் கண் வங்கி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்பதைப்போல இறந்தவர்களின் கண்கள் எல்லாமே அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று சட்டமியற்றி கண்களைச் சேமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாறுதல் செய்ய வேண்டுமென்று இந்தச் செயற்குறிப்பில் உள்ளது என்று நான் சொன்னது, யார் யார் தங்கள் கண்களைத் தானம் செய்வதாக எழுத்து மூலம் எழுதிக் கொடுக்கிறார்களோ, அவர்கள் கண்களைத் தானம் செய்யும் வாய்ப்பினைத் தடுக்கக் கூடாது என்பதற்காக புதிதாகச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது என்பதாகும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல் செய்வது இயலாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்தானம்என்பது மிகவும் புனிதமானது. அப்படிப் புனிதமானதாகக் கருதப்படுகின்ற கண்தானத்தின் மூலமாகக் கிடைக்கின்ற கண்களைக் சில பெரிய டாக்டர்கள் வியாபார நோக்கத்தில் செய்வது அரசுக்குத் தெரியுமா? அதைக் கண் காணிப்பதற்கு அரசு முன்வருமா? தியாகிகளுக்கு எப்படிச் சில சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ அதைப்போல கண் தானம் செய்கின்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி சில சலுகைகள் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் கண்தானம் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றவர்கள், எழுத்து மூலமாக என்னுடைய கண்களைத் தானம் செய்கிறேன் என்று எழுதிவிட்டுப் போகிறார்கள். அதை WILL என்று சொல்கிறோம். ஆனால் அவர் இறந்தபிறகு அதை அமல் நடத்த முடியாமல் யாராவது குறுக்கே வந்து கண்களை எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். கண்களை எடுப்பது என்றால் முழுமையாக எடுப்பது என்பது அல்ல; இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின்படி கண்ணை எடுப்பதைத் தடுப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதாவது கண்தானம் செய்வதற்காக யாரேனும் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்திருந்தாலும் கூட பின்னர் அதைத் தடுப்பதற்குரிய உரிமை தற்போது இருக்கின்ற சட்டத்தின்படி இருக்கின்றது. ஆனால் அப்படி கையெழுத்திட்டு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்தால் அதைத் தடுக்க முடியாது என்ற அந்தச் சட்டத்தினை நாம் கொண்டு வந்தாலே நமக்கு நிறைய கண்கள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே இருக்கக்கூடிய சில பெரிய கண் மருத்துவ நிபுணர்கள் இலங்கையில் உள்ள கண் வங்கியிலிருந்து கண்களை இங்கே வரவழை து இங்கேயுள்ள மக்களுக்கு 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்ற அளவில் கார்னியோ ட்ரான்ஸ்ப்ளேன்டேஷன் செய்து ஏராளமான இலாபம் சம்பாதிக்கிறார்கள். இதுபற்றி அண்மையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்கூட ஒரு கட்டுரை வந்திருந்தது. எனவே அவ்வாறு இலங்கையிலிருந்து இனாமாகக் கொண்டுவரப்பட்ட கண்விழிகளைப் பொருத்துகின்ற வகையில் அம் மருத்துவ நிபுணர்கள் பெருத்த இலாபம் சம்பாதிப்பதைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முயலுமா? மத்திய அரசுடன் நமது அரசு தொடர்பு கொண்டு இதை நிச்சயமாகத் தடை செய்வதற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரையில் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை என்றுதான் கருதுகிறேன்... (குறுக்கீடு).... தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்வதை முழுமையாகக் கேட்டால் அதனை அமைதியாக ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இலங்கையிலிருந்து சிலபேர் கண்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்த குறிப்பினை நானும் பார்த்தேன். அதாவது இந்தியன் எக்ஸ்பிரஸிலே வந்த கட்டுரையை நானும் பார்த்தேன். அவ்வாறு எழுதுவது அவர்களுடைய உரிமை, எனவே அதைப்பற்றி நான் பேசவில்லை. எனினும் அது குறித்து நான் விசாரித்ததில் எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். அந்தப் பத்திரிகையிலே வந்த கட்டுரையைப் பார்த்ததற்குப் பிறகு பொதுவான பொறுப்பு அமைச்சருக்கு இருக்கின்ற காரணத்தாலே நான் அது பற்றி கேட்டு விசாரித்தேன். எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால் அந்தக் கண்ணுக்கு மாத்திரம் சார்ஜ் செய்வது இல்லை என்றும் ஆபரேஷன் செய்வதற்கு மட்டும் சில நேரங்களில் சார்ஜ் பண்ணுகிறார்கள். அதாவது அந்த ஆபரேஷனை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் வசதி உள்ளவர்களாக இருந்தால் அவ்வாறு செய்கிறார்கள். வசதி இல்லாதவர்களாக இருந்தால் இலவசமாகச் சய்கிறார்கள். இந்தத் தகவல்தான் எனக்குக் கிடைத்தது. எனினும் நான் திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறேன்.அந்த கார்னியோ ட்ரான்ஸ்ப்ளேன்டேஷனை இலவசமாகத்தான் செய்ய வேண்டுமென்று. அதை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமக்கு ஸ்டேச்சட்டரி பவர்ஸ் இல்லை என்றாலும் கூட ரெக்கமென்டேஷன் என்ற வகையிலே சொல்வதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது.

திரு. மி. வினசென்ட்: தலைவர் அவர்களே, கண் வங்கிகளிலே கண்களை வைத்திருந்தால் அவை எத்தனை நாட்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண் தானம் செய்வதாக எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா? பொருத்தப்படும் கண்கள் நூற்றுக்கு நூறு வெற்றி தருகின்றதா?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அந்தக் கண் விழிகளைப் பொறுத்தவரையில் 24 மணி நேரத்திலிருந்து 36 மணி நேரம் வரை வங்கிகளில் சேமித்து வைக்கலாம். இன்னொரு மெ தட் இருக்கின்றது. M.K.Fluid Preserva ion. அது நம்முடைய நாட்டிலே இயலாத காரியம். என்னுடைய கண்களை நான் கொடுத்திருக்கிறேனா என்று கேட்டிருக்கிறார்கள். தற்போது திட்டவட்டமானஸ்டேச்சுட்டரி பவர்ஸ் இல்லை என்றாலும்கூட நான் கண்களைக் கொடுப்பதாக எழுதிக் கொடுத்தது பற்றி யாரும் ஆட்சேபம் தெரிவிக்கக்கூடாது என்ற அளவில் எழுதிக் கையெழுத்திட்டு கொடுத்திருக்கிறேன். இம்மாதிரி பலபேர் முன்வந்து செய்தால் நல்லது. அப்படிச் செய்தால் நம்முடைய நாட்டிலேயே ஏராளமான கண்கள்

இடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. இன்னொரு கேள்வியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதிலே ஃபெய்லியர் இருக்கிறதா என்று கேட்டார்கள். ஃபெய்லியர் என்பது ரொம்பக் குறைவு. சரியானபடி அந்தக் கண் சிகிச்சையினைச் செய்தால் ஃபெய்லியர் இல்லாமல்கூட செய்ய முடியும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண் தானம் செய்ததாகச் சொன்னார்கள். இந்த அவை உறுப்பினராகிய நானும் கண் தானம் செய்வதாக எழுதிக் கொடுத்திருக்கிறேன். எனவே இந்தஅவை எங்கள் இருவருக்கும்பாராட்டு தெரிவிக்குமா? (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, எனக்குப் பாராட்டு தேவையில்லை. ஆனால் திரு. புருஷோத்தமன் அவர்களுக்குப் பாராட்டு உண்டு. (சிரிப்பு).

செவிலியர் பயிற்சிக்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவிகள் எண்ணிக்கை.

*வினா எண் 11— திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செவிலியர் பயிற்சிக்கு (Nurses Training) ஆண்டுக்கு எத்தனை மாணவிகளைத் தேர்தெடுக்க அரசு அனுமதித்துள்ளது?

(ஆ) 1982-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவிகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) இப்பயிற்சிக்குக் கூடுதல் இடங்களை ஒதுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) செவிலியர் பயிற்சிக்கு ஆண்டுக்கு 690 உதவித் தொகை பெறும் மாணவிகளும், 50 உதவித் தொகை பெறாத மாணவிகளும்தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1982-ம் ஆண்டில் 590 உதவித் தொகை பெறும் மாணவிகளும் 95 உதவித் தொகை பெறாத மாணவிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(இ) இல்லை.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து அனுமதிக்கப்பட்ட இடங்களில் கிட்டத்தட்ட 100 இடங்களுக்கு தேர்வு செய்யப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. பயிற்சி பெற்ற செவிலியர்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது இந்த ஆள்குறைப்பு ஏற்பட்டதற்கு என்ன காரணம்? அதைப்போன்று, சேலத்தில் ஒரு



செவிலியர் பயிற்சிப் பள்ளியை நடத்த அரசு அனுமதி கொடுத்தும் இன்னும் தொடங்காத நிலைமை இருக்கிறது. சேலத்தில் அந்த செவிலியர் பயிற்சிப் பள்ளியை விரைவில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, எண்ணிக்கை குறைந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக சேலத்தில் இட நெருக்கடி இருக்கிறது. இரண்டாவதாக சேலத்தில் தொடங்க கட்டிட வசதி இல்லை. அது மட்டுமல்ல, 690 இடங்களையும் முழுமையாக நிரப்ப வேண்டுமென்றால் 1983-ல்தான் முடியும். படிப்படியாக நாம் எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டு வந்தோம் அதனால் தற்போது 590 இடங்களைத்தான் நிரப்ப முடிந்தது. சேலத்தைப் பொறுத்தவரையில் கட்டிட வசதி இல்லாததால் திருச்சியில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சேலத்தில் இடம் தருவதாக இருந்தால் அதுப்பற்றி அரசு சிந்திக்கும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, செவிலியர் பயிற்சிக்கு ஆண்களையும் தேர்வு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. ஆனால் அதுபற்றி முடிவு எடுப்பது 'இந்திய நர்சிங் கவுன்சில்' என்று சொல்கிறார்கள். சில குறிப்பிட்ட நோயாளிகளுக்கு ஆண் செவிலியர்கள் தேவை என்பதால் ஆண்களையும் தேர்வு செய்ய இந்திய நர்சிங் கவுன்சிலுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்திய நர்சிங் கவுன்சில் பரிந்துரையை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, செவிலியர் பயிற்சி பெறுகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையானது ரொம்பவும் குறைவானதாக இருக்கிறது. அது நீண்ட காலத்திற்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்டது. பயங்கரமான விலைவாசி இருக்கிற இந்த நேரத்திலும் அது அப்வெர்டு ரிவிஷன் செய்யப்படவில்லை. அதனால் அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த உதவித் தொகையை திருத்தி அமைக்க என்ன ஏற்பாடு? அது மட்டுமல்ல. இப்போது தேர்வு செய்யப்படுவதிலேயே பெரிய 'பிரைபரி', இருக்கிறது. அது அமைச்சரவர்களுக்கும் தெரியும். எந்த லெவலிலும் இந்த பிரைபரி இல்லாமல் தேர்வு செய்யப்படுவதற்கு ஏதாவது 'காரண்டி' இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த உதவித் தொகையை உயர்த்த வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நிதிநிலைமையைப் பார்த்து இது செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இரண்டாவதாக 'பிரைபரி' இருக்கிறது என்று சொன்னார்கள். மார்க் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும் என்று முழுமையாக இதை

ஒரு 'ஸ்டாச்சுட்டரி'யாகக் கொண்டுவந்துவிட்டால் பிரச்சனை இருக்காது. ஆனால் ஆல் இந்திய நர்சிங் கவுன்சில் தேர்வு செய்யும்போது கூடுதல் வெயிட் இருந்தால் அதற்கு தனியாக மார்க் கொடுக்கச் சொல்கிறது. அது மட்டுமல்ல. இரண்டாவது, மூன்றாவது மார்க் இருந்தால் அதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று இப்படி பல 'கைட் லைன்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். அதை மாற்றினால் பயன் உள்ளதாக இருக்குமா என்பது தெரியவில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி Discretionary power for the selecting authority should be restricted; I think the Hon'ble Member will agree to it.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, நம்முடைய மாநில அரசு நடத்துகின்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், தாலுகா தலைமை மருத்துவ மனைகளிலும் சித்த வைத்தியப் பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சித்த வைத்தியத்தில் செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா? இல்லை என்றால் உடனடியாக ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு செயற்குறிப்பு இல்லை. ஆனால் இது ஒரு நல்ல யோசனை.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை.

வினா எண் 12— *திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை நகர அரசு மருத்துவமனையில் பாம்பு விஷப்பூச்சிகள் கடித்து வருகிற நோயாளிகளுக்குத் தேவையான மருந்து இல்லை என்பது உண்மையா?

(ஆ) 15-11-1982-ம் தேதி மதியம் சுதா என்ற பெயருள்ள இரண்டு வயது குழந்தை விஷக்கடிக்காக மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு மருந்தில்லை என்று திருப்பியனுப்பி இறந்து போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) போதுமான மருந்துகள் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் இருக்கின்றன.

(ஆ) மற்றும் (இ) ஆம். போதுமான அளவு பாம்புக்கடி விஷ முறிவு மருந்து பொதுமருந்து இடங்கில் இருந்தபோதிலும், அவசர சிகிச்சை புற நோயாளிகள் பிரிவில் 15-11-82 அன்று தேவையான மருந்து பணியில் இருந்தவர்களின் கவனக் குறைவினால் இருப்பில் வைத்திருக்கப்படவில்லை. புகார் கிடைத்தவுடன் கோவை மாவட்ட மருத்துவ அலுவலர் மேற்கண்ட சம்பவம் குறித்து



விரிவாக விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கையை மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநருக்கு அனுப்பி உள்ளார். விசாரணை அறிக்கையில் பணியாளர்களின் கவனக் குறைவே குழந்தை இறப்பிற்குக் காரணம் என்று தெரிகிறது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான பாம்புக்கடி மருந்துகள் அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் எந்த நேரமும் இருக்க வேண்டும் என்று அறிவுரை கொடுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50 )

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொஞ்சம் விரிவான பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கேள்வியை நான் கேட்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. 1982 நவம்பர் மாதம் கேட்ட கேள்வி இது. இதிலே முக்கியமான விஷயம் என்ன என்பதைக் குறித்து அமைச்சருக்குக் கடிதம் கூட எழுதி இருந்தேன். அந்தப் பாம்புக் கடிபட்ட 2 வயதான பெண் குழந்தையை அங்கே கொண்டு வந்தவுடன் ஒரு இன்ஜெக்ஷன் போட்டு இங்கே இதற்குத் தகுந்த மருந்து இல்லை என்று அவர்களைப் பொள்ளாச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி சொல்லி, அவர்கள் வெளியிலே வந்து ஒரு டாக்சி பிடிப்பதற்குள்ளாகவே அந்தக் குழந்தை இறந்து விட்டது. அந்த உடுமலைப்பேட்டை மருத்துவமனைக்குச் சொந்தமாக 2, 3 வண்டிகள் இருந்தபோதிலும் கூட, அந்த வண்டியை அந்தக் குழந்தையைக் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்யவில்லை. இவ்வளவு பெரிய நெக்லிஜன்ஸ் அங்கே வேலை பார்க்கும்படியான பொறுப்பான டாக்டர்களுக்கு இருப்பதைக் கட்டுப்படுத்துவதற்கும், அந்தக் குழந்தை இறந்து போனது பெரிய தப்பு என்று சொல்லி அதற்குக் காரணமானவர்கள் பேரில் கொலை கேஸ் போட ஏதாவது வழி இருக்கிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Dr.Neil Isaac, Assistant Surgeon and Selvi Pushpha, Staff Nurse ஆகியவர்கள் அன்றையதினம் டூட்டியிலே இருந்திருக்கிறார்கள். Decodron, Avil, Coramine ஊசி போடப்பட்டது. அது போதாது. உடனடியாக Anti-venom போட்டிருக்க வேண்டும். இதிலே தயவு தாட்சண்யம் காட்டாமல் திட்டவட்டமாகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்குச் சாதகமான கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட நடவடிக்கையை நாம் இந்திய பீனல் கோடு மூலம் எடுத்துக் கொண்டாலும் அது போதாது என்பது என்னுடைய கருத்து.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, உடனடியாக மரணம் விளையக்கூடிய நிலையில் வருகிறவர்களுக்கு உடனடியாக அவர்களுடைய உயிரைக் காக்கும் நல்ல மருந்துகளை எல்லா ஆஸ்பத்திரிகளிலும் போதிய அளவுக்கு இருப்பில் வைக்க வேண்டிய கட்டாயமான கடமையை நிறைவேற்றுவதற்காக மாவட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குரிய ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றதா? இல்லை என்றால், அதைச் செய்வதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதையும், மேலும் இந்த விஷயத்தில் இப்படி ஏற்பட்ட பிறகு மாவட்ட மருத்துவ அதிகாரி அங்கே போனாரா, பார்த்தாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர்களே, மூலக்கேள்விக்குப்பதில்சொல்லு போதே நான்சொன்னேன். மாவட்ட மருத்துவ அலுவலர் மேற்கண்ட சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தி அங்கே சென்றிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதுமட்டுமல்ல. அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளிலும் மருந்துகள் எந்த நேரமும் இருக்கவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம். அங்கேகூட மருந்து இல்லாமல் இல்லை. அந்த மருந்தும் இருந்துள்ளது. அந்த டாக்டர்கள் தவறு செய்திருக்கிறார்கள். அதுதான் வேதனையாக இருக்கிறது. ஆகவே தான் தாட்சண்யம் இல்லாமல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு 304 (ஏ) என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. 'Causing Death by negligence' நெக்லிஜன்சிலே தப்பு பண்ணினால் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: I must thank the Hon' Speaker for the suggestion.

ஐயன்பேட்டை அரசினர் மருத்துவ மனை.

* வினா எண் 13—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஐயன்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்குக் கூடுதல் மருத்துவ அலுவலர் வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) அரசின் நிதிநிலை பற்றாக்குறையால் கூடுதல் மருத்துவ அலுவலர் பணியிடம் உருவாக்க இயலவில்லை.





திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 3, 4 ஆண்டுகளாக அந்த மருத்துவமனையில் கூடுதல் மருத்துவரை நியமனம் செய்யவேண்டும் என்று பல்வேறு நிலைகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடப்பட்டும், அவரும் நேரிடையாக அந்தமருத்துவமனைக்குவந்தபோது பொதுமக்கள் அவரிடம் விண்ணப்பம் அளித்தும் இருக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்குள் அந்த மருத்துவமனைக்குக் கூடுதல் மருத்துவரை அரசு நியமனம் செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற நோயாளிகள், அவுட் பேஷண்ட்ஸ் 150க்கு மேற்பட்டவர்கள் இருந்தால், 2 டாக்டர்களை நியமிக்கலாம் என்று இப்போதுள்ள மருத்துவச் சட்டத்தில் இருக்கிறது. ஆகவே, அங்கே 150க்கு மேற்பட்டவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது அது 167 ஆக உயர்ந்திருக்கிறது என்றும், நோயாளிகளினுடைய எண்ணிக்கை இன்னும் சற்று ஜாஸ்தியாக இருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இவைகளைத் தீர விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இன்னொரு டாக்டரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் இப்படிக் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறது. செய்யாறு மருத்துவ மனையில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருகிறார்கள். எனவே அங்கே கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. எனவே கூடுதல் மருத்துவர்களை உடனடியாக நியமனம் செய்யவேண்டிய இடங்களில் நியமனம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சில குறிப்புகளை எல்லாம் கொடுத்து என்னுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செய்யாறு மருத்துவமனையைப் பற்றிச் சொல்கிறார்கள். அது குறித்து முழு விவரத்தைச் சேகரித்துக் கொடுத்தால் நிச்சயமாக அதுபற்றி ஆராயப்படும்.

திரு. வை. இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ரூல்ஸ் என்று சொன்னார்கள். ஆனால் டாக்டர் பட்டம் படித்துவிட்டு ஆயிரக்கணக்கிலே வேலையற்றிருக்கிறார்கள். ஒருபுறம் டாக்டர் பட்டம் படித்து வேலையற்றிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் அதிகமான நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிகமான டாக்டர் வேண்டுமென்று நம்முடைய அமைச்சரிடம் சொல்லிமக்கள்மனுகொடுக்கிறார்கள். இன்னொருபக்கம் நம்மிடம் அதிகமாக மருந்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். மருந்து

இருந்தும், டாக்டர்கள் இருந்தும், மக்கள் தேவையிருந்தும் ஏன் உடனடியாக அங்கே டாக்டர்களை பணி செய்வதற்கு அனுமதிக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? நோயாளிகள் அதிகமாக இருந்தும், டாக்டர்கள் நம்மிடையில் அதிகமாக இருந்தும், உடனடியாக அவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் அதிகமான அளவில் டாக்டர்களை நியமிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தற்போதுள்ள டாக்டர்கள் முழுமையாக கவனித்தால் 150 பேர்களை ஒரு நாளிலே கவனிக்க முடியும். இன்னும் ஏராளமான டாக்டர்களை நம்முடைய சர்விசிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நாம் தேவைப்பட்ட நேரத்தில் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் அதிகமாக எடுத்துக்கொள்வதற்கு நிதி நிலைமை சரியில்லை. அப்படி எடுத்தால் அதிகமான அளவில் வரி போட வேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் மறக்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே கவனப்படுத்துகிறேன்.

அரியலூர் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளியேறும் தூசுப்புகை

*வினா எண் 11— திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் தூசுப்புகை (Dust) சுற்று வட்டார நிலங்களில் படிவதால் பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்து விவசாயிகளிடமிருந்து ஏதேனும் புகார்கள் அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) பொது சுகாதாரத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது, இச் சிமெண்ட் தொழிற்சாலையின் சுற்றுப்புற கிராமங்களில் வாழ்கின்ற பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இச்சிமெண்ட் தொழிற்சாலையின் உலைக்களக்கழிவுகளிலிருந்து வெளியேறும் மிகுதியான அளவு தூசு அவர்களுடைய துணிகளையும், சுற்றுப்புற இடத்தையும் அழுக்காக்குவதுடன் அவர்களுடைய வயல்கள் மற்றும் பயிர்களின் மேல் குறிப்பாக எலுமிச்சை மரங்களின் மேல் படிந்து இயற்கையான வளர்ச்சியைப் பாதிப்பதாகவும் நேரடியாகக் கூறியுள்ளார்கள்.





(ஆ) ''எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ்'' மின் கருவிகளைத் தொடர்ந்து தொய்வின்றி இயக்குமாறும், அதனால், தொழிற்சாலையைச் சூழ்ந்து மாசுப் புகை படிவதைக் குறைத்திடச்செய்ய இயலும் என்றும் அத்தொழிற்சாலைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம், இப்பிரச்சினைபற்றித் தொடர்ந்து கண்காணிக்கின்றது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல்தான் என்னுடைய தொகுதியில் உள்ள செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷனிலிருந்து புகை வந்து அந்தப் பகுதி முழுவதும் பாழடைந்து கொண்டிருக்கிறது. அதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பல்வேறு இடங்களில் இருக்கிற சிமெண்ட் ஆலைகளில் இருந்து புகை வந்து சூழ்ந்து கொள்கிற காரணத்தால் மக்களிடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் வருகின்றன. அந்தக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்காகத்தான் இதுவரையில் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வழியில்லாமல் இருந்தது. தற்போது 1—10—83 முதல் இதற்காக யார் காற்றிலே மாசு ஏற்படுத்தினாலும் அதைத் தடைச் செய்வதற்கு சட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறோம். அந்தச்சட்டத்தின் மூலமாக எல்லோருக்கும் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். வெகு விரைவில் எல்லா சிமெண்ட் ஆலைகளின் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலையிலிருந்து வெளியேறும் தூசி, புகை இவைகள் சுற்றுப்புற வட்டாரங்களில் பரவுவதால் பயிர்கள் சரியாக முளைப்பது இல்லை. அத்தோடு நீண்ட நெடிய ஆண்டுகளாக இதன்மூலம் மக்களுக்கு பல்வேறு நோய்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே புகையை வெளியே செல்லவிடாமல் தடுக்கும் கருவியை, அரசு உடனே அந்த ஆலைகளுக்குப் பொருத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தூசி, புகையை தடுப்பதற்காக ஒரு இயந்திரத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த இயந்திரத்தை வைத்துக்கொண்டு, மின்சாரம் காரணமாக,

ஆலைகள் இயங்குகின்ற நேரத்தில் இதை இயக்காமல் வைத்திருக்கிற காரணத்தால், அதிகமான அளவுக்கு புகை, தூசி வெளியேற்றப்படுகிறது. அதைக் கண்காணிக்க வாரியத்தின் சார்பிலே நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

## திண்டுக்கல் நகரிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள்

*வினா எண் 15—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுபாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் சுற்றியுள்ள குடிநீரும் விவசாய நிலங்களும் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு நகராட்சி சுகாதார அலுவலர் அத்தொழிற்சாலைகள் குறிப்பிட்ட வரம்புகளுக்கு ஏற்புள்ள முறைகளின்படி கழிவுப் பொருட்களை அகற்றாமைக்காக தேவையான எச்சரிக்கை விடுத்துள்ளார். தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைத் தூய்மைப் படுத்தி வெளியேற்றுவதற்கான நடைமுறைத் திட்டத்தை வகுக்க அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது. அக்குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கை மீது அரசு பரிசீலனைசெய்துநடவடிக்கை எடுக்கஇருக்கிறது. இதற்கிடையில் கழிவுநீரைத் தூய்மைப்படுத்தும் இயந்திரத்தை அமைக்க மாநிலத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அனைத்திற்கும் 31—12—83 வரையில் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரைத்தடுப்பதற்காக மாநில அரசில் இருக்கிற விதிகளின்படி, மைய அரசின் விதிகளுக்கும் உட்பட்டு, உத்தேசமாகக்கொண்டு வரயிருக்கின்ற சட்டங்களிலே, நகராட்சி எல்லைக்குள் இருக்கிற ஆலைகளுக்கு மட்டும்தான் இந்தச் சட்டங்கள் பொருந்தும் என்கிற வகையில் இருப்பது உண்மையா? ஆம் என்றால், நகராட்சி எல்லைக்கு அப்பாலும் பல்வேறு தொழிற்சாலைகளை வைத்திருக்கிறார்களே. அந்தத் தொழிற்சாலைகளையும் கட்டுப்படுத்துகின்ற முறையிலே, அவைகளையும் இணைத்து இந்தச் சட்டம் விரிவுபடுத்தப்படுமா? அதேபோல புதியதாகத்தொடங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு



இப்படி தூய்மை கெடுகின்ற முறையில் இருப்பதை மாற்ற அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய அமைப்பை ஏற்படுத்தினால்தான் துவங்கவே, அனுமதி வழங்கப்படும் என்ற வகையில் மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நகராட்சி பகுதிகளுக்கு மட்டும் என்று இல்லை. மாநிலத்திலே இருக்கிற எந்தப் பகுதியிலே இருந்தாலும், இப்படிப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீரினால் தூய்மை கெடுமானால், அவற்றைத் தடுப்பதற்கும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த வகையிலே தமிழகத்திலே இருக்கிற பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் தேவையான இன்ஸ்டிரக்ஷன்கள் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சில தொழிற்சாலைகளில் ஒன்றிரண்டு பேர்கள் கூட்டாகச் சேர்ந்து வெளியேறுகின்ற கழிவு நீரைத் தூய்மைப் படுத்தி வெளியேற்றுவதற்காக இயந்திரத்தை வாங்க மைய அரசு, மாநில அரசினுடைய உதவியைக் கோரியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அரசு பரிசீலித்து அந்த இயந்திரத்தை வாங்குவதற்காக, மைய அரசினுடைய உதவியைப் பெறுகின்ற முறையிலே இப்போது நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயமே செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி 4, 5 பேர்கள் கூட்டாக சேர்ந்து வந்து அரசாங்கத்தை அணுகி, இப்படிப்பட்ட இயந்திரத்தை வாங்கி தூய்மையைக் காக்க எண்ணினால், மாநில அரசு அவர்களுக்கு உடனடியாக உதவி செய்து, கடனோ அல்லது மானியமோ வழங்கி அந்த இயந்திரத்தை அமைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து திண்டுக்கல் பகுதியில் உள்ள கிராமப்பகுதிகளில் இருக்கும் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் கூட்டாக அந்த இயந்திரங்களை வாங்குவதற்கு முயற்சிகளில் ஈடுபடுவார்களானால், மத்திய அரசு உதவ வேண்டும் என்றும், அவர்களுக்கு அந்த இயந்திரங்களை வாங்கித் தரவேண்டும் என்றும் மாநில அரசின் சார்பில் பரிந்துரைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மாலன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநிலத்திலே எந்த நகரத்தில் சுற்றுப்புற சூழல் கெட்டாலும் அதற்காக நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று சொன்னார்கள். சென்னையிலே பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் இருந்து வரும் சாம்பல் அந்தப் பகுதியை அசுத்தப்படுத்துகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து சாம்பல் வராது. இதற்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளி வரும் கழிவு நீர் காரணமாக ஆங்காங்கு குடிநீர், சுகாதாரம் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக இவை பாதிப்பை எல்லா இடங்களிலும் ஏற்படுத்துவதால், அந்த வட்டாரத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதைத் தடுப்பதற்கான வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், இந்த நிலைமைகளை மாற்ற, அங்கேயுள்ள தொழிற்சாலை அதிபர்கள் அங்கேயுள்ள மக்கள் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரை வைத்து ஒரு விவாதத்தை நடத்தி, ஒரு திட்டத்தை விரைவில் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்க வேண்டிய ஒன்று. ஏனென்றால் நடவடிக்கைகள் எடுக்கின்ற நேரத்தில் தொழிலாளர்களோ மற்றவர்களோ பாதிக்கப்படாத நிலை இருக்கவேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் போன்றவர்களை வைத்துக்கொண்டு, அங்கேயுள்ள தொழில் அதிபர்களோடு விவாதம் நடத்தி, இது குறித்து என்ன செய்யலாம் என்பதை முடிவு செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. ஏ. எம். சேதுராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோல்பேட்டைகளில் இருந்து வரும் கழிவு நீர் குறித்த பிரச்னையில் ஏற்கனவே மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களும் மேற்கொண்ட முயற்சிகள்என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதே போல், ராணிப்பேட்டை, வாணியம்பாடி போன்ற இடங்களில் உள்ள நூற்றுக்கணக்கான தொழிற்கூடங்களில் இருந்து வெளி வரும் நீரின் காரணமாக ஆற்றுக் குடிநீர் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதை எந்த அளவிற்கு அரசால் தடுக்க முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் நலத்துறையிலிருந்தும், உள்ளாட்சித்துறையில் இருந்தும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. ஆனால் குறிப்பாக சுகாதாரத்துறையைப் பொறுத்தவரையில் தான் நடவடிக்கை எடுக்க முடிந்தது. ஆனால் தண்ணீரின் தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கு மத்திய அரசின் சட்டம் 1974—ஆம் ஆண்டு வந்திருந்தபோதிலும், 1981-ஆம் ஆண்டில் தான் அது இங்கே அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.1982—ஆம் ஆண்டில்



அதைக் கண்காணிப்பதற்காக சரி செய்வதற்காக ஒரு வாரியம் தனியாக ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அந்த வாரியம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்த வாரியத்தின் மூலமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவர்கள் சிலவற்றிற்கு இப்போது நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள். சில ஆலை அதிபர்கள் அறிக்கை கொடுத்தபின்பும் அதற்காக தடுப்பு நடவடிக்கை எடுக்காததால், அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும். விரைவில் இதைத் தடுத்து நிறுத்திவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கோரைப்பாய் மற்றும் பனை ஓலைப்பாய் பின்னும் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம்.

*வினா எண் 16 —திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோரைப்பாய் மற்றும் பனை ஓலைப்பாய் பின்னும் தொழில்கள் நசித்து வருவதை முன்னிட்டு அத்தொழிலுக்கு ஊக்கமளிக்க அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, கோரைப்பாய் மற்றும் பனை ஓலைப்பாய் பின்னும் தொழில்கள் தமிழகத்தில் நசிந்து விடவில்லை. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் கடன் மற்றும் மானியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக கிராமத் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (கிளஸ்டர் டெவலப்மென்ட் புரோகிராம்)சுமார் 6 இலட்சம் ரூபாய் செலவில் நவீன முறையில் பாய் பின்னும் பயிற்சித் திட்டம் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் திருச்சி மாவட்டத்திலுள்ள ஒன்பது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர தொழிற்கூடங்கள் கட்டுவதற்கும் தறிகள் வாங்குவதற்கும் முழு மானியம் வழங்கப்படுகிறது.

பனை ஓலைத்தொழில் முன்னேற்றத்திலும் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கும் மகளிருக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரிய அளவில் பனைப் பொருள் உற்பத்தி நிலையங்கள் துவக்கி அதன் மூலம் பனை ஓலைத் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

[1983 நவம்பர் 1

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கோரைப்பாய் பின்னும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போலவே, இந்தத் தொழில் தமிழ் நாட்டின் பழமையான தொழில் என்பதாலும், நம்முடைய பாரம்பரியத்தை, பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் என்பதாலும் இதை மேலும் வளர்ப்பதற்கும் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும், பெரிய பெரிய ஓட்டல்களில் தற்போது கைவினைப் பொருள்களை அலங்காரப் பொருள்களாக வைப்பதுபோல் வி.ஜி.பி. ஓட்டலில் கோரைப்பாய்களைக் கொண்டு செய்யப்பட்ட அலங்காரப் பொருள்கள் வைத்திருப்பதுபோல், தமிழ்நாடு அரசு நடத்தும் ஓட்டல்களிலும் பயணியர் விடுதிகளிலும் கோரைப்பாய் மூலம் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்களை வைத்தால் அழகாகவும் இருக்கும். அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவித்ததாகவும் இருக்கும் என்பதால் இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமி தலைவர் அவர்களே, கோரைப்பாய்கள் பின்னும் தொழிலாளர்களுக்கு தறிகள் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக 1981–82 ஆம் ஆண்டில் 1,115 நபர்களுக்கு மானியமும் கடனும் வழங்கப்பட்டிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 1200 நபர்களுக்கு மானியமும் கடனும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அதற்குப் பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1,115 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. து. புருஷோத்தமன்: கோரைப்பாய்கள் பனை ஓலைகள் செய்கின்ற தொழில் மேலும் வளருவதற்கும் (குறுக்கீடுகள்)

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 நவம்பர் 1]

திரு. து. புருஷோத்தமன்: இந்தத் தொழிலில் தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கேட்டேன். அவர்களுக்கு அரசின் மூலமாக உதவிகளைச் செய்வதாகச் சொன்னார்கள். இன்னும இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களில் பலர் வறுமைக் கோடு என்று சொல்கிறார்களே அதற்குக் கீழே தான் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அந்தத் தொழில் வளர்வதற்கு அந்தச் சமுதாயத்தை, சாதியைச் சேர்ந்தவரை 24 பேர்களோடு 25வது அமைச்சராகப் போட்டு அதன்மூலம் அந்தத்துறையை உன்னிப்பாகக் கவனிக்கக்கூடிய முறையில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தொழிலில் எத்தனை பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற விவரம் கேட்டார்கள். அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களில் உள்ள பெண்கள், தாய்மார்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சில இடங்களிலே இந்தத் தொழில் நசித்துப் போயிருக்கிறது. இந்தத் தொழில் நசித்துப் போனதற்குக் காரணம், அவர்களுக்குக் கோரை சரியானபடி கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அவர்கள் பாய்களைப் பின்னி வெளியே விற்பனைக்கு அனுப்புகிறபோது அந்த விலைக்கும், அதாவது கூட்டுறவுத்துறையின் விலைக்கும், வெளிவிலைக்கும் வித்தியாசம் இருப்பதால் விற்கமுடியாத நிலை இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து வருங்காலத்திலேயவது இந்தத் தொழிலை நல்ல முறையில் வளரச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்ல கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி அரசுக்குத் தகவல் கொடுத்தால் அரசசம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981-82-ம் நிதியாண்டில் விற்கப்பட்ட கதர்த் துணிகள்.

*வினா எண் 17-திரு. எஸ். இராசாராமன்: திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1981-82-ம் நிதியாண்டில் எவ்வளவு கதர்த்துணிகள் விற்கப்பட்டன?

(ஆ) மத்திய அரசு மற்றும் மாநில அரசு வழங்கிய தள்ளுபடி தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி: (அ) 1981-82-ம் ஆண்டில் ரூ. 1401,91 லட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் தமிழகத்தில் விற்கப்பட்டன.

(ஆ) இந்த விற்பனைக்கு மாநில அரசும், மைய அரசும் வழங்கிய தள்ளுபடி தொகை பின்வருமாறு:—

| | |
|---|---|
| மாநில அரசு | ரூ. 51.66 லட்சம். |
| மைய அரசு | ரூ. 150.92 லட்சம். |

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கதர் விற்பனையில் நாம் ஓரளவு முன்னேறியிருந்தாலும் கதர்த் துணிகள் விற்பனை ஆகாமல் அதிகமாகத் தேங்கியிருக்கின்றன என்று கூறப்பட்டு இருக்கிறது. இதை அதிக அளவில் விற்பனை செய்வதற்கு தள்ளுபடியை அதிக அளவில் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, காமராஜர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர் பிறந்த தின விழாக்களையொட்டி 30 தினங்களுக்கு கதர் விற்பனைக்கு 10 சதவீதம் தள்ளுபடி தருகிறது. மேலும் காந்தி ஜெயந்தி, தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல், பக்ரீத் ஆகிய விழாக்களையொட்டி 60 நாட்களுக்கு இதுவரை இந்த நாட்களுக்கு 5 சதவீதம் தள்ளுபடி கொடுக்கபட்டது, அது 2-10-83 முதல் 10 சதவீதம் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் கதர்த் துணிகளுக்கு மொத்தம் 30 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் கதர் வஸ்திராலயம் பிரிவு விற்பனையில் 10 சதவீதம் தள்ளுபடி அளிக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு அதிகமாகத் தள்ளுபடி கொடுக்கப்படுவதால் இன்று தீபாவளி சமயத்தில் கதர்த்துணி நல்ல விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 புயலில் காணாமல்போன முதுகுளத்தூர் வட்டம், ரோச்சுமாநகர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள்.

* வினா எண் 18—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முதுகுளத்தூர் வட்டம் ரோச்சுமாநகர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 1. வியாகூலம், 2. ரோச்விக்டர், 3. சவரிமுத்து 4. போத்திராசு 1978 புயலில் காணாமல் போனது உண்மையா?

(ஆ) அதுபற்றி அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இறந்துவிட்டார்கள் என்றால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) & (ஆ); கடலில் ஏற்கொந்தளிப்பின் காரணமாக மேற்கண்ட மீனவர்கள் காணாமல் போனதாகக் தகவல் வந்ததால் உடனடியாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் மூலம் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்திய தூதரகத்தின் மூலம் பெறப்பட்ட விவரங்களின்படி காணாமல் போன மீனவர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சி நடந்த ஐந்து நாட்களுக்குப் பின்னர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே காணாமல் போன மீனவர்கள் திரும்பி தங்கள் ஊர்களுக்கு வந்து சேர்ந்துவிட்டார்களா என்பதனை குறித்து மீன் துறை அலுவலர்களை நேரடி விசாரணை செய்யும்படியும், மற்றும் உள்ளூர் காவல் நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு இது பற்றி புலன் விசாரணை செய்யும்படியும் தூத்துக்குடி மண்டல மீன் துறை துணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். விசாரணைக்குப் பிறகு காணாமல் போன மீனவர்கள் இந்தியா திரும்பவேயில்லையென தூத்துக்குடி மண்டல மீன்துறை துணை இயக்குநர் கூறியுள்ளார். காணாமல் போன மீனவர்களைப் பற்றி தலைமன்னாரிலுள்ள இந்திய பிரதிநிதியிடம் விரிவான விசாரணை நடத்தி அவ்விதம் மேற்கண்ட மீனவர்கள் இலங்கையில் இருந்தால் அவர்களை உடனடியாக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டு ஒரு கடிதம் இலங்கையிலுள்ள இந்திய தூதரக இரண்டாம் செயலாளருக்கு எழுதப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இலங்கை அரசுடன் தொடர்பு கொள்ளுமாறு மைய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் எதுவும் மைய அரசிடமிருந்து பெறப்படவில்லை.

(இ) இந்நிலையில் தற்போது பெறப்பட்ட சிறப்புச்சான்றிதழ், காவல்துறை அறிக்கை, நீதிமன்ற சான்றிதழ் முதலியவற்றின் அடிப்படையில் காணாமல் போன மீனவர்கள் நால்வரும் இறந்துவிட்டார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதப்பட்டு கருணை அடிப்படையில் நான்கு மீனவர்களது குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 4 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் உதவி வழங்க இருப்பதாக கூறினார்கள். அதற்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் மேலும் அந்த 4 பேருக்கும் இறப்பு சான்றிதழ் 'டெத் சர்ட்டிபிகேட்' கொடுத்தால்தான் அவர்களுக்கு உரிய தொகை வழங்க இயலும் என்று கூறுகிறார்கள். ஆகவே அதற்கு பிரத்தியோகமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அரசு மூலம் ஒரு உதவியாக அந்த இறப்பு சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. க. கலைமணி: இறந்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதால், அங்கேயிருக்கிற பாதிரியாரிடம் சான்றிதழ் பெற்றால்கூடப் போதும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனம்: உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்றே தெரியவில்லை. அதற்குள்ளே எப்படி டெத் சர்ட்டிபிகேட் வாங்குவதைப் பற்றிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தமது பதிலில், 4 பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று உறுதி செய்யப்பட்ட தகவல் அரசுக்கு வந்திருக்கிறது என்று சொன்னார்.

திரு வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டுமுறை இறந்துபோன நால்வருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அரசு அனுமதியுடன் இலங்கைக்குச் சென்று பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் எங்கும் இல்லையென்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இறப்புச் சான்றிதழ் வழங்கப்பெறுவதற்கான ஒரு குறிப்பை மாண்புமிகு அமைச்சர் வழங்குவாரா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பகுதியிலேயிருக்கிற கிறிஸ்தவப் பாதிரியார் கொடுத்தாலே போதும் என்று அமைச்சர் சொன்னார். பாதிரியாருக்குத் தகவல் தெரியும் அல்லவா? இறப்புச் சான்றிதழை அவரிடம் வாங்கிக் கொள்ளலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 4 மீனவர்கள் இறந்துவிட்டார்கள் என்று ஒத்துக்கொண்டு அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் போன்றவர்கள் இறந்து விட்டால், அவர்களுக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடிக்கிற காலத்தில் இறந்து போகிற எல்லா மீனவர்கள் குடும்பத்தினருக்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணை இட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போகின்ற மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்காக ஏற்கனவே அரசாங்கத்தின் மூலமாக, ஹெலிகாப்டர் வாங்கப் பட்டுள்ளதே, அதன் மூலமாக எத்தனை பேர்கள் கண்டு பிடிக்கப் பட்டார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செத்தவர்களுக்கு உதவித் தொகை உண்டா என்பதுபற்றி கேட்கும்போது, ஹெலிகாப்டர் பற்றிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்?

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் காணாமல் போகும் மீனவர்களுக்கு அரசு வழங்க உத்தேசித்துள்ள உதவித் தொகை எவ்வளவு என்று மாண்புமிகு அமைச்சர் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவரவர்களே, இறந்து போகிற ஒவ்வொரு மீனவர் குடும்பத்திற்கும் ரூ.5,000 வழங்குவதற்கு அரசு ஆணைகள் இட்டிருக்கின்றன.

டாக்டர் ஹே. சௌரிராஜன்: ஹானரபில் ஸ்பீக்கர் சார், காணாமல் போனவர்கள் எவருமே செத்தவர்கள் என்று அறிவிக்கப்பட வேண்டுமானால் Corpus Deletii என்ற ஒரு சட்டம் இருக்கிறது. 7 ஆண்டுகளுக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாமல் போனால் அவர் இறந்து போனதாகக் கருதப்பட வேண்டுமென்பது சட்டம். ஆனால் புயலிலே காணாமல் போனவர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்க தகுந்த ஏற்பாடுகள் செய்து, ஓராண்டுக்குள் தகவல் வராமல் போனால் அவர் குடும்பத்திற்கு இறந்தவர்க்குரிய சலுகைகள் கொடுக்கப்படுமா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

தமிழகத்தில் கட்டப்படவுள்ள மீன்பிடித் துறைமுகங்கள்.

*வினா எண் 19—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மத்திய அரசு அனுமதியோடு எந்த இடத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் மற்றும் தொண்டி ஆகிய இரு இடங்களிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறு என்னும் இடத்திலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கோட்டைப் பட்டினத்திலும் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சின்னமுட்டத்திலும் வாலி நோக்கத்திலும் தொண்டியிலும் பழையாற்றிலும் கோட்டைப் பட்டினத்திலும் மத்திய அரசின் அனுமதியோடு மீன்பிடி துறைமுகம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அனுமதி வழங்கப்பட்ட தொகை எவ்வளவு? எப்பொழுது அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் சுமார் ரூ. 540 இலட்சத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் சுமார் ரூ. 150 இலட்சத்திலும், தொண்டியில் சுமார் ரூ. 50 இலட்சத்திலும், பழையாற்றில் சுமார் ரூ. 86 இலட்சத்திலும், கோட்டைப் பட்டினத்தில் சுமார் ரூ. 30 இலட்சத்திலும் மீன்பிடி துறைமுகங்கள் கட்ட அரசு திருத்திய மதிப்பீட்டிற்கான அனுமதி வழங்க உள்ளது. அவற்றினுடைய பணிகள் ஆங்காங்கு துவக்கப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமைச்சர் அவர்கள் கூறிய இந்தத் துறைமுகங்களைத் தவிர தமிழகத்திலே வேறு பகுதியிலே புதியதாக துறைமுகங்களைக் கட்ட தமிழக சர்க்கார், மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறதா? அப்படி வலியுறுத்தியிருந்தால் எப்போது அனுமதி வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொண்டும் தமிழகத்தில் 10 இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அவைகள், பழவேற்காடு, கோவளம், திருமுல்லைவாசல், ஆற்காட்டுத் துறை, ஜெகதாபட்டினம், ஏர்வாடி, பாம்பன், காயல்பட்டினம் மணப்பாடு, முட்டம் ஆகும்.

மீனவர்களுக்கான தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்.

*வினா எண் 20—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) N.C.D.C. (National Co-operative Development Corporation). என்ற மத்திய அரசின் திட்டம் தமிழக மீனவர்களுக்கும் அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்தின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கணக்கர்கள் நியமிக்கப்படுகிறார்களா?

(இ) அதன் விவரம் என்ன?



விடை—

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள மீனவ கூட்டுறவு சங்கங்களுக்காக நிதியுதவி பெறப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ): தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் அடிப்படையில் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு தனியாக எழுத்தர்கள் நியமிக்கப்படவில்லை. எனினும் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு பெருமளவில் நிதியுதவி தேசிய கூட்டுறவு கழகம் போன்ற நிறுவனங்களால் அளிக்கப்படுவதால் இக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும் முறையைச் சீர்படுத்தி மேம்பாடு செய்தல் அவசியமாகும். கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்த ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு எழுத்தரை நியமனம் செய்ய அரசு கருதியது. அதன்படி 1983-84 ஆம் ஆண்டில் 200 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை தேர்ந்தெடுத்து மாதத்திற்கு ரூ. 250 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 ஒவ்வொரு சங்கத்திற்கும் எழுத்தர்கள் நியமனத்திற்கு வழங்குவதற்கு வேண்டிய ஆணை, எண் 558 நாள் 13-5-1983ல் வெளியிடப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன:

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிட்டப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பஞ்சாலைகள் மூடப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. உமாநாத், என். வரதராசன், கு. ரமணி, கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணை, ஏ. டி. குலசேகர், எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன், மற்றும் ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டைமான் ஆகியோர், ''சுந்தரம் மில், திருப்பூர் எஸ். ஆர். சி. மில் போன்ற பல நிறுவனங்கள் மூடியதை மீண்டும் திறக்க அரசு முயற்சி எடுக்கத் தவறியதாலும், புதுக்கோட்டை காவேரி மில் போன்ற மில்கள் மூடும் தருவாயில் இருப்பதனாலும் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் தர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பல பஞ்சாலைகள் இப்படி மூடிக்கொண்டே போய், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் போகும் படியான ஒரு நிலை ஏற்பட்டிருப்பதைப் பற்றி சில முக்கியமான விஷயங்களை அடிப்படையாக வைத்து, இந்த அவையிலே விவாதித்து தீர்வு காண வேண்டிய அவசியம் இருப்பதற்கான ஒன்றிரண்டு அடிப்படைகளை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். 1300 தொழிலாளர்கள் வேலை செய்கிற எஸ். ஆர். சி. மில் கிட்டத்தட்ட ஒரு வருடமாக மானேஜ்மெண்ட்டின் தவறான போக்கின் காரணமாகவும், ஊழல்களாலும் மூடப்பட்டிருக்கிறது. ரிலீப் அண்டர்டேகிங் ஆக்ட்டின்படி அரசிற்கு இருக்கிற அதிகாரங் களின் கீழ் அந்த மில்லை அரசு எடுத்து நடத்த வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் இதுவரைக்கும் அரசு அந்த நிர்வாகத்தை எடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொழிலாளர்கள், அவர்களுடைய பிராவிடெண்ட் பண்டில் இருக்கிற பணத்தை எடுத்து உயிர் வாழ வேண்டிய நிலை இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் பட்டினிக்கு ஆளாகவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் சீரியசான பிரச்னை. அதேமாதிரி, சிங்காநல்லூர் வட்டாரத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஒரு மில்லை —— ஸ்ரீஹரி மில் என்று நினைக்கிறேன் —— அரசு எடுத்திருக்கிறது. எஸ். ஆர். சி. மில் ஒரு வருடமாக மூடிக் கிடக்கிறது. இதை எடுக்காமல் ஓடிக் கொண்டிருக்கிற மில்லை எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு சில காரணங்கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோல், சுந்தரம் மில்லில், தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சர்வீஸ் பாதுகாப்பும் இல்லாமல், தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த மில் பல மாதங்களாக நடக்காமல் இருக்கிறது.



இப்போது மானேஜ்மெண்ட் தாங்களாக சில சங்கங்களுடன் பேசியாகி விட்டது என்று சொல்லி அந்த மில்லைத் திறப்பதாகச் சொல்கிறார்கள். 700 பெண் தொழிலாளர்கள் மற்றும் நூற்றுக் கணக்கான ஆண் தொழிலாளர்கள் வெளியிலே இருக்கிற நிலையிலே அந்த மில் ஓடியும் ஓடாத நிலையிலே இருக்கிறது.

(முற்பகல் 10-30)

காவேரி மில்லை அரசே ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. அந்தக் காலம் முடியப் போகிறது. தனியார் துறையிலே ஊழல் செய்து சீர்கெட்டுப்போயிருந்த மில்லை அரசே நடத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து காலம் முடியும்பொழுது அவைகளைச் சட்டப்படி தேசிய மயமாக்க வேண்டுமேயொழிய அந்த முதலாளிகளுக்கே திருப்பிக் கொடுக்கக் கூடாது. அப்படி முதலாளிகளுக்கே திருப்பிக் கொடுக்கின்ற அபாய நிலை இருப்பதாக அறிகிறேன். அப்படிக் கொடுக்கக் கூடாது. இப்படி அந்த மில் சம்பந்தமான விஷயங்களும் இருக்கின்றன.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழ் நாட்டில் வேறு இடங்களில் உள்ள மில்களை மூடுகின்ற அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது. ரிலீப் அண்டர் டேக்கிங் ஆக்ட் இருந்தும் இப்படிப்பட்ட மில்களை மூடும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. முதலாளிகளுக்கே அந்த மில்களைத் திருப்பிக் கொடுப்பதையும் தடுக்க வேண்டும். தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றுதான் ரிலீப் அண்டர் டேக்கிங் ஆக்ட் என்ற பெயரிலே அந்தச் சட்டம் வந்தது. அந்தச் சட்டத்தைப் போதிய அளவிற்குப் பயன்படுத்தி நடவடிக்கை எடுத்திருந்தால் இவ்வளவு மில்களை மூட வேண்டிய அவசியம் வந்திருக்காது. அப்படிப்பட்ட சட்ட நிலைகளையும் பற்றிப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இப்பொழுது அரசாங்கம் எடுத்து நடத்துகின்ற மில்களை மறுபடியும் தனியார்களுக்கே கொடுக்காமல் அவைகளைத் தேசிய மயமாக்க வேண்டும். அது இந்த அரசாங்கம் மட்டும் செய்யக் கூடிய காரியம் அல்ல. மத்திய அரசாங்கத்தோடு வாதாடி அவைகளைத் தேசியமயமாக்க வேண்டும். அவ்வாறு செய்ய வில்லையென்றால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்ற நிலைமை வந்து சேரும். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

சட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும், அரசுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்தாமல் மில்களை மீண்டும் முதலாளிகளிடம் கொடுக்கக் கூடாது என்பது பற்றியும், அரசாங்கம் எடுத்து நல்ல நிலைமையில் நடக்கும் பற்றியும், இவைகளின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கஷ்டத்திற்கு ஆளாவது பற்றியும், இன்னும் இப்படிப்பட்ட முக்கியமான விஷயங்களைப் பற்றியும், நாம் விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

எஸ்.ஆர்.சி. மில்லை உடனடியாக அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும்; சுந்தரம் மில்லில் உள்ள நிலைமைகளை மாற்றி எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும்; அவர்கள் அதை மறுத்தால் அரசே நேரடியாக எடுத்து காரியங்களை நிறைவேற்ற வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி விரிவாக விவாதித்து தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவும், அரசுக்குத் தகுந்த ஆலோசனைகளைத் தெரிவிக்கவும், ரிலீஃப் அண்டர்டேக்கிங் ஆக்டை எஃபக்டிவாக அமல் நடத்தவும் நடவடிக்கை எடுப்பதற்காக அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள எஸ்.ஆர்.சி. மில்லோடு என்னுடைய தொகுதியான அவிநாசியில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் பற்றியும் நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கொடுத்திருந்தேன். காளப்பட்டி பத்மா மில்லையும் சேர்த்துக் கொடுத்திருந்தேன். ஆனால் அவைகளைப் பற்றி வரவில்லை. கோவை அவிநாசியில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், காளப்பட்டி பத்மா மில், இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்ற சிங்காநல்லூரில் உள்ள வசந்தா மில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காவேரி ஸ்பின்னிங் மில், சுந்தரம் மில் போன்ற மில்கள் கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கும் மேல் தொடர்ந்து மூடிய நிலையிலும், சில ஆலைகள் மூடக் கூடிய அபாயகரமான நிலையிலும் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கத்தின் தொழில் கொள்கையின் காரணமாக, பஞ்சாலைகளை நடத்தக் கூடிய முதலாளிகளின் மிஸ்மேனேஜ்மெண்டின் காரணமாக எஸ்.ஆர்.சி. மில் போன்ற மில்களில் கிட்டத்தட்ட ஓராண்டுக்கும் மேலாக 1,300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த பட்ஜெட் கூட்டம் நடந்த நேரத்திலேயே இதே அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசும் நேரத்தில், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். எஸ்.ஆர்.சி. மில்லை எடுத்து நடத்துவதற்கு மத்திய சர்க்காரிடம் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு கிட்டத்தட்ட ஏழு மாதங்கள் ஆகியும் இதுவரையில் இப்படிப்பட்ட ஆலைகளை எடுப்பதற்கான நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

என்னுடைய தொகுதியில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லில் வேலை செய்த 200—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மூன்றாண்டுகளுக்கும் மேலாகப் பட்டினியாகக் கிடந்து கொண்டிருக்கிறார்கள்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆலையையும் எடுக்கவேண்டும் என்று கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரின்போது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதேபோன்று காளப்பட்டியிலே இருக்கக்கூடிய பத்மா மில் என்கின்ற ஆலையும் கிட்டத்தட்ட 4 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கின்றது. அந்த ஆலை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக சொல்லியும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்படி தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பஞ்சாலைகள் இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை காரணமாக இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்றன. இந்த அரசின் கொள்கையை ஆலை முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆலைகளை மூடினால் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது என்ற அடிப்படையிலே பல்வேறு ஆலைகளை அவர்கள் மூடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் ஆட்சியிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதெல்லாம் சொல்வார்கள், போராட்டம் நடைபெறாமலேயே இந்த அரசு பல்வேறு சலுகைகளை அளித்திருக்கின்றது என்று. இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த அரசாக இருந்தாலும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் போராட்டங்கள் நடத்தித் தான் சலுகைகளைப் பெற்று இருக்கிறார்களே தவிர போராட்டம் நடத்தாமல் சலுகைகளைப் பெற்றதாகச் சரித்திரமே இல்லை. அந்த அடிப்படையிலேதான் கோயம்புத்தூரிலே இருக்கின்ற இந்த ஆலையை மட்டுமல்ல, ஜோதி மில் என்ற ஆலையையும் இந்த அரசாங்கம் எடுத்து நடத்த ஒப்புக்கொண்டிருக்கின்றது. அந்த ஆலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டும் என்பதற்காகப் போராட்டத்திலே ஈடுபட்ட கிட்டத்தட்ட 200—க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் இன்னும் திரும்பப் பெறப்படாமல் இருக்கின்றது. எனவே தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய காவேரி ஸ்பின்னிங் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், காளப்பட்டி பத்மா மில், திருப்பூரிலே இருக்கக்கூடிய எஸ்.ஆர்.சி. மில் போன்றவை ஓராண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருப்பதன் காரணமாக பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எஸ்.ஆர்.சி. மில்லிலே பணியாற்றிய 6 தொழிலாளர்கள் கஷ்டம் காரணமாக, வறுமை காரணமாகத் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை நீக்குகின்ற வகையில் மூடி இருக்கக் கூடிய ஆலைகளுக்கு எல்லாம் உடனடியாக நிவாரணம் அளிக்கப் படவேண்டும். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படவேண்டும். அந்த ஆலைகளை உடனடியாகத் தமிழக

அரசோ அல்லது மத்திய அரசோ மேற்கொண்டு நடத்துவதற்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்கின்ற வகையில் இந்த அவையில் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு அது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் இன்று இருக்கக்கூடிய ஒரு பதட்ட நிலைமை பற்றி விவரமாக எடுத்துச் சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலே 3 மில்கள் இருக்கின்றன. அந்த மூன்று மில்களிலும் காவேரி மில் என்பது ஒரு பெரிய மில்லாக இருந்து கொண்டிருக்கின்றது. அதிலே கிட்டத்தட்ட 1,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பல தடவை அது தனியார் [illegible] கையிலே இருந்து பல தடவைகள் அது நிறுத்தப்பட்டு, மூடப்பட்ட பிறகு பல்வேறு கோரிக்கைகள் வைத்ததற்குப் பிறகு இன்று அரசாங்கம் எடுத்து நடத்திக்கொண்டிருக்கின்றது. அப்படியும் அது மேனேஜ்மெண்ட் என்ற அளவில்தான் எடுத்து நடத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. முழுமையாக தேசிய மயமாக்குகின்ற திட்டத்தின்படி அது எடுக்கப்படவில்லை என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசின் கைப்பிடியிலிருந்து அது நல்ல முறையில் இயங்கிக்கொண்டு வந்திருக்கின்றது. அதற்கு முன்பு அதிலே மேனேஜிங் டிரக்டராக இருந்தவர்தான் இப்போது புதுக்கோட்டை மாவட்ட கலெக்டராக இருக்கிறார். அவர் அந்த மில்லின் மேனேஜிங் டிரக்டராக இருந்தபோது அது இலாபகரமாக ஓடிக்கொண்டிருந்த மில் இன்று இரண்டு 3 மாதங்கள் டைம் கொடுக்கப்பட்டு, 3 மாதத்திலே அந்த மில் நிறுத்தப்படும் என்று அரசிற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். எனவே அங்கே பணியாற்றும் 1,500 தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு இல்லாமல் போகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு பதட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால் நான் அதுபற்றி எடுத்துக் கூற முன் வந்திருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

நான் கூறிக்கொள்வது எல்லாம், அந்தத் தொழிலாளர் நலன் கருதி, பம்பாயில் மத்திய அரசாங்கம் 18 மில்களை எடுத்து இருப்பதுபோல், புதுக்கோட்டையில் உள்ள மில்லையும் மத்திய அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு இந்த அரசாங்கம் பரிந்துரை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிக் மில்லாக இருக்கும் மற்ற மில்களைப் பற்றிச் சொன்னார்கள். அவற்றையும் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாநில அரசாங்கம் பரிந்துரை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னும் மூன்று மாதத்திற்குள் நிறுத்தப்போகிறார்கள் என்பதால், அந்தத் தொழிலாளர்களிடையே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு இருப்பதால், அவர்கள் எங்களைப்போன்றவர்களை வந்து அடிக்கடி சந்தித்துப் பார்த்து, இதற்கு எப்படியாவது எக்ஸ்டென்ஷன் வாங்கவேண்டும் என்று வற்புறுத்தும் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, இது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதால், இதைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள மில்களின் நிலவரம் பற்றி கீழ்க்கண்ட விளக்கங்களை அளிக்கிறேன்:—

1. ஸ்ரீ இராமலிங்க சூடாம்பிகை மில்ஸ், திருப்பூர்:—மூடப்பட்டுள்ள இந்த மில்லில் பல இடுக்கண்களுக்கு உள்ளான ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 500 வீதம் (மொத்தம் ரூ. 7 இலட்சம்) மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக அரசாணை எண் 2314 (தொழிலாளர் துறை), நாள் 3-10-1983-ல் வழங்க ஆணை இடப்பட்டது. இத்தொழிற்சாலையை இயக்க புது நிர்வாகம் 4-5-83 அன்று ஏற்றுக்கொண்டது. ஆலையைத் திறப்பது சம்பந்தமாக, ஆலையின் நிர்வாகம் அரசுடைமை வங்கியிலிருந்து கடன் பெற அரசின் உத்திரவாதத்தைக் கோரியுள்ளது. இது அரசு தொழில் துறையின் பரிசீலனையில் உள்ளது.

2. ஜனார்த்தனா மில்ஸ்:—இந்த மில்லில் உள்ள தொழிலாளர்கள் 'மெதுவாக வேலை செய்தல்' மற்றும் 'வன்முறைகளில்' ஈடுபட்டதாகக் கூறி நிர்வாகம் 7-8-83 முதல் கதவடைப்பு செய்து விட்டது. தொழிலாளர் நல ஆணையர் மில்லைத் திறப்பது சம்பந்தமாக தொடர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார். 1979 முதல் மில்லுக்கு தொடர்ந்து மொத்த நஷ்டம் ரூ. 1.52 கோடி என்று நிர்வாகம் அறிவித்துள்ளது. ஏற்கனவே நிர்வாகம் பல நிதி நிறுவனங்களிலிருந்து ரூ. 3.8 கோடிக்கு பணம் கடன் வாங்கியுள்ளது. மேற்கொண்டு ஆலையை இயக்க ரூ. [illegible] கோடி கடன் வாங்க அரசின் உத்திரவாதத்தை நிர்வாகம் கோரியுள்ளது. இது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

3. பத்மா மில்ஸ்:—இம் மில்லின் தொழில் தகராறு சம்பந்தமான சென்னை தொழிலாளர் நீதிமன்றம், தொழிலாளிக்கு 25-2-1981 முதல் வேலை வாய்ப்பை அளிக்காதது நியாயமற்றது, சட்டத்திற்குப் புறம்பானதென்றும், தொழிலாளர்களுக்கு அன்றைய தேதியிலிருந்து முழு ஊதியமும் வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

இந்த ஆலை 'இயங்காத நிலையில் உள்ள' ஆலையாதலால், கோவை மாவட்ட ஆட்சியர், ''இந்த ஆலையின் நிர்வாகத்தை நடத்த அரசு சார்பில் ஒரு இயக்குநரை நியமிக்கவேண்டும் என்றும், கடன் உதவி பெற அரசின் உத்தரவாதம் வழங்க வேண்டும்'' எனவும் கோரியுள்ளார். இது அரசு தொழில் துறையின் ஆய்வில் உள்ளது.

4. தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ்:—இந்த மில்லில் தொழிலாளர்கள் 8–6–1981 முதல் 'தங்களுக்கு உரிய நாட்களில் ஊதியம் வழங்க வேண்டும், என்று வேலை நிறுத்தம் செய்தனர். அன்றையலிருந்து அவ்வாலை ''இயங்காத ஆலையில்'' ஒன்றாகி விட்டது. ஆலை மின் கட்டணத்தை செலுத்தவில்லையென்பதால், தமிழ் நாடு மின் வாரியம் மின் தொடர்பைத் துண்டித்து விட்டனர்.

5. ஸ்ரீஹரி மில்ஸ்:—இந்த மில்லைப் பொறுத்தவரையில் அரசாணை எண் 1166, தொழில் துறை, நாள் 17-9-1983-ன்படி ஒரு விடுப்பு நிறுவனமாக ஓராண்டுக் காலத்திற்கு (1-10-1983) முதல் ஆணை பிறப்பித்துள்ளது. ஆகவே, இவ்வாலை இப்பொழுது திறக்கப்பட்டு இயங்கி வருகிறது.

6. காவேரி மில்ஸ், புதுக்கோட்டை மற்றும் சுந்தரம் மில்ஸ், கொமாரபாளையம்:—இந்நிறுவனங்களைப் பொறுத்தவரை, தற்போது இயங்கிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக பேச 7-11-1983 அன்று தொழில் அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர், செயலாளர், நிதித் துறை, செயலாளர், தொழில்துறை, செயலாளர், தொழிலாளர் துறை, தொழிலாளர் நல ஆணையர், கைத்தறி மற்றும் துணி இயக்குநர் அவர்களைக் கொண்ட கூட்டம் ஒன்று கூட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.





3. கவன ஈர்ப்பு.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்காக தண்ணீர் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரெ. இராசமாணிக்கம், மற்றும் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே ''தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் இடைக்காததால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. வா. கை. மு. மூசா: துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

மேட்டூர் நீர்த்தேக்கம், ஆண்டுதோறும் பாசனத்திற்காக, ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறக்கப்பட வேண்டும். ஆனால் இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் மிகவும் குறைவாக இருந்ததாலும், தென்மேற்குப் பருவமழை, காலம் கடந்து தொடங்கியதாலும், நீர்வரத்தும் குறைவாகவே இருந்தது. மேலும், கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு உரித்தான தண்ணீரை அனுப்பாமல் தன்னுடைய பகுதியில் உள்ள நீர்த்தேக்கங்களில் தேக்கி வைத்தது. ஜூலை மாதம் பிற்பகுதியில் சில நாட்களிலும் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதி முதற்கொண்டும் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரித்தது. எனவே, 17-8-83 அன்று மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கம் 31-12-83 அன்று பாசனத்திற்கு மூடப்பட இருப்பதால், குறுகிய காலப் பயிரான ஐ.ஆர். 20 போன்ற பயிர் களையே பயிரிடுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

2. 17-8-83 முதல் டெல்டா பகுதிகளுக்கு தண்ணீர் தொடர்ந்து விடப்படுகிறது. விவசாயப் பெருமக்கள் பயிர் நடுவதை துரிதமாக முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பயிர் நடுவதில் அதிக கால தாமதம் ஆனதால் தொடர்ச்சியாக நீர் விடுவதை 25-10-83 வரை நீட்டிக்க வேண்டியதாயிற்று.

3. இந்த ஆண்டு குறுவைப் பயிருக்காக முன்னதாகவே தண்ணீர் விடாததால், ஒரே சமயத்தில் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பான புதிய மற்றும் பழைய டெல்டா பகுதியில் பயிர் நடவு எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு அதிகாரிகள் தீவிரமான முயற்சிகள் எடுத்துக்கொண்டனர்.

4. வடவார் எக்ஸ்டென்ஷன் மற்றும் கல்லணைக் கால்வாய்களின் மேல் பகுதிகளில் உள்ளவர்கள் அடிக்கடி கால்வாய்களின் குறுக்கே தடுப்பு அமைத்து கீழ்ப்பகுதிகளுக்கு தண்ணீர் போவதில் குறுக்கிட்டனர். மேல் பகுதிகளில் உள்ளவர்கள் கால்வாய் கரைகளை வெட்டி தங்களுடைய நிலங்களுக்கு தண்ணீரை நிரப்பிக் கொண்டனர். அதிகாரிகள் பெருமுயற்சி செய்தும் கூட இதை தவிர்க்க முடியவில்லை. சில இடங்களில் சிறப்புக் காவல் படை உதவியுடன் தண்ணீர் விடுவது அமுலாக்கப்பட வேண்டியிருந்தது. கல்லணை மற்றும் வடவார் எக்ஸ்டென்ஷன் கால்வாயின் சில பகுதிகள்தான் இதனால் பாதிக்கப்பட்டன. மற்ற டெல்டாப் பகுதிகளில் நீர்ப்பாசனம் ஒழுங்காக நடைபெற்று வருகிறது. காவல் துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருகிறார்கள். தற்போது நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளுக்கும் திருப்திகரமாக தண்ணீர் விடப்படுகிறது.

5. இம்மாதத்தில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் டெல்டாப் பகுதிகளை, குறிப்பாக கடைக்கோடி பகுதிகளை அடிக்கடி நேரில் பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். தற்சமயம் பயிர் நடவு பகுதிகளில் பயிர் நடுதல் சுமார் 80 விழுக்காடுகளுக்கு மேல் முடிந்து விட்டது.

6. இவ்வாண்டு மேட்டூர் நீர்த்தேக்கம் முழு அளவு நிரம்பவில்லை என்றாலும் பயிர் நடவுக்கான உச்ச தேவைகளை பூர்த்தி செய்ய வினாடிக்கு சுமார் 28,000 முதல் 30,000 கனஅடி வரை 8-10-83 முதல் 16-10-83 வரை நீர் விடப்பட்டது.

7. 27-10-83 அன்று மேட்டூரின் நீர்மட்ட அளவு 76.10 அடியாகும். அணைக்கு வரும் நீரின் அளவு 5,067 கியூசெக்ஸ் ஆகும். அணையிலிருந்து விடப்படும் நீரின் அளவு 10,398 கியூசெக்ஸ் ஆகும். தென்மேற்குப் பருவமழை முடிந்துவிட்டதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து விட்டது. தற்போதைய சூழ்நிலையில், மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர்அளவை மேலும் குறைப்பது உசிதமில்லை.

8. வடகிழக்குப் பருவமழை ஆரம்பமாகி போதிய அளவு பெய்து வருகிறது. இவ்வடகிழக்குப் பருவமழையின் உதவியால் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு விடும் தண்ணீரை குறைத்து ஏற்கனவே உத்தேசித்துள்ளபடி டிசம்பர் மாதம் முடிய பயிர்களின் தேவையை பூர்த்தி செய்யலாம் என்று நம்பப்படுகிறது



திரு. இரெ இராசமாணிக்கம் துணைத்தலைவரவர்களே மாவட்டத்தில் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் மத்தியில் ஒரு பெரிய பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் 30-10.1983 அன்று தஞ்சை மாவட்ட நீர்ப்பாசன கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்கள் கலந்துகொண்டிருந்தால் இன்றைக்கு இங்கே பதில் சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அதிலே கலந்துகொள்ளவில்லை. அது மிகவும் வருந்தத்தக்கது.

அவையிலே வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் சில விவரங்களை கொடுத்துள்ளார்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் 12–ந்தேதி தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். ஆனால் இந்த ஆண்டு ஆகஸ்ட் 17-ல்தான் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. கல்லணையிலிருந்து ஆகஸ்ட் 22–ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இடையில் ஜூலை 31 தேதியில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு ஐந்தே நாளில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டு விட்டது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. சுமார் 65 நாட்கள் தாமதமாக தண்ணீர் விட்டதால் தாளடிப்பயிர் காலந்தாழ்ந்து பயிர் செய்யப்படுகிறது. அதனால் 1984 ஜனவரி முடிய காவிரியில் தண்ணீர் விட வேண்டும். விடாவிட்டால் பல கோடி ரூபாய் இழப்பு விவசாயிகளுக்கு ஏற்படும் தண்ணீர் விட அதற்கு அமைச்சரவர்கள் தக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் துணைத்தலைவரவர்களே சட்டமன்றப் பேரவையும் சட்டமன்ற மேலவையும் கூடியிருந்த காரணத்தால் இடையிலே வந்த ஞாயிற்றுக்கிழமை, அதாவது 30–ந்தேதி நடைபெற்ற நீர்ப்பாசன கருத்தரங்கில் நான் பங்கு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அதற்கும் இங்கே அறிக்கை தரப்பட்டிருப்பதன் மீது பதில்தரவும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற இதர தகவல்கள் தரவும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வழக்கமாக ஜூன் மாதம் 12–ந் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும் இதர பல்வேறு விவர அறிக்கையில் தரப்பட்ட காரணங்களாலும் குறிப்பிட்ட அந்தக் காலத்தில் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. 17–8.1983 அன்றுதான் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தண்ணீர் அளவு மிகவும் குறைவாக இருப்பதால் குறுகிய கால பயிர்களைச் செய்யும்படி விவசாயிகளுக்கு அறிவுரை கூறப்பட்டது. இருந்தாலும்கூட விவசாயிகள் அவர்களுடைய ஆரம்பப்பணிகளை பயிர் நடுவதில் கூட காலதாமதம் செய்திருக்கிறார்கள். பயிர் செய்வதில்

தாமதம் ஏற்பட்டதால் 31-1-1983 வரை தண்ணீர் விடுவதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது. இப்போது அப்பகுதி களில் மழையின் அளவு அதிகமாக இருக்கிற காரணத்தால், தாராளமாக இப்போது விடப்படுகின்ற தண்ணீர் போதும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அறிக்கையில் பல விவரங்கள் கொடுத் திருக்கிறார்கள். இருந்தாலும் நான் கேட்க விரும்புவது, இங்கே டிசம்பர் இறுதிவரை இருப்பதாகச் சொல்லி இருக் கிறார்கள். ஜூன் மாதம் வரவேண்டிய தண்ணீர் இரண்டு மாதங்கள் கழித்து வந்தது. இப்போது ஒரு போக விவசாயம் தான் ஆகியிருக்கிறது. போட்டிருக்கிற நெல் என் எல். ஆர் பொன்னி 1003 போன்ற நெல்கள் தான். இங்கே நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜனவரி 15-ந்தேதி அறுவடையாகும் என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது இதற்கு நிரந்தரமாக ஒவ்வொரு ஆண்டும் தவிக்காமல் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் பிப்ரவரி மாதம் முதல்வாரம் அறுவடை வேறு இருக்கிறது, கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி விவசாயிகள் பாதிக்கப்படாமல் உற்பத்தியை பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்பதோடு, ஒவ்வொரு ஆண்டு பேசிக்கொள்ளாமல் தஞ்சை மாவட்டத்தில் 200 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதை ஈடுசெய்யும் அளவுக்கு மத்திய சர்க்காரை வலியுறுத்தி நிரந்தரமான பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இந்த ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில் தண்ணீர் விடுவதற்கும், இடைக்கால நிவாரணமாக கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீரைப் பெற்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்துடன் தமிழக அரசு காவிரி நீர்ப் பங்கீடு விஷயமாக பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஏற்கனவே இந்த அவைக்கு விவரங்கள் நன்றாகத் தெரியும். புதிதாக தற்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு நிச்சயமாக தண்ணீரை விடக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்படுமானால் செலவத்தை கருதாமல் பரிசீலிக்கப் படும். மேட்டூர் நீரின் மட்டத்தின் அளவையும், இன்னும் பருவ மழையின் வாயிலாகக் கிடைக்கின்ற பயனையும் கருதி நிலைமைக் கேற்ப டிசம்பர் மாதம் இரண்டு வாரத்திற்குப் பிறகு முடி வெடுத்து தண்ணீர் விட அரசு முடிவெடுக்கும். உரிய வாய்ப்புகள் இருக்குமானால் ஜனவரி மாதத்திற்கு தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



## 4. அரசினர் சட்டமுன் வடிவுகள்

### (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுடைய தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் நீட்டிப் பதற்கான திருத்தத்தை உள்ளடக்கிய சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள், இந்த அறிமுகம் செய்யப்படுவதை கடுமையாக நான் எதிர்க்கிறேன்: 13,000 ஊராட்சிகள், 374 ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சிகள், மாநகராட்சிகள் இவைகள் எல்லாம் கலைக்கப் பட்டன. காரணம் ஊழல் நடைபெற்றது. நிர்வாகச் சீர்கேடுகள் உள்ளன. ஊழல் இருக்கிறது என்று காரணம் சொல்லப் பட்டது. ஆனால் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவை ஏற்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட முறைப்படி தேர்தல் கொண்டு வரப்படாமல் எந்த காரணங்களுக்காக இவைகள் எல்லாம் கலைக்கப்பட்டதோ, அதே காரணங்கள் அன்றாடம் நடைபெறுவதற்கு வழிவகுக்கின்ற விதத்திலே, தனி அதிகாரிகள் கையிலே அதிகாரத்தை ஒப்படைத்து, அவருடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது எந்த விதத்திலே நியாயம்?. எனவே, கொள்ளை அடிப்பதற்கு, ஊழல் செய்வதற்கு தனி அதிகாரி களுக்கு இன்னும் கொஞ்சம் காலத்தை நீட்டித்துக் கொடுங்கள் என்று அனுமதி கேட்கக்கூடிய அறிமுகச் சட்டமாகத்தான் இது இருக்கிறது.

மக்கள் பிரதிநிதிகள் இதுபோன்ற அமைப்புகளில் இல்லாத காரணத்தாலே இன்றைக்கு நகராட்சிகளாகட்டும், மாநகராட்சி களாகட்டும்; ஊராட்சியாகட்டும், ஊராட்சி ஒன்றியங்களாகட்டும் பாதைகள் சரியாக இல்லை, விளக்குகள் எரிவதில்லை, கக்கூஸ் வசதிகள் இல்லை குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை, சென்னை போன்ற இடங்களிலே எல்லாம் கொசுக்கள் குடும்பமே நடத்துகின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட சொல்வார்கள், அவர்கள் கட்சிக்காரர்களை ரத்தத்தின் ரத்தமே என்று. ஆனால் கொசுக்கள் தான் உண்மையிலேயே ரத்தத்தின் ரத்தமாக கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அடுத்து இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இலாகாவிற்கு மந்திரிகள் மாறி மாறி வருகிறார்கள். முதலில் காளிமுத்து இருந்தார். இப்பொழுது அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து அறிவிப்பு பொறுத்த வரையிலே ஆறு மாதத்திற்கு ஒரு முறை தேர்தல் வருகிறது என்று அவரும் சொல்லிக்கொண்டே இருந்தார். இப்பொழுது இவரும் சொல்லிக் கொண்டே இருக்கிறார். ஆகவே கச்சேரி நடத்துகின்ற பாகவதர்கள் மாறினாலும் பாடல் ஒன்றாகத்தான் இருக்கிறது. நாடகத்திலே நடிக்கின்ற நடிகர்கள் வேறாக இருந்தாலும், நாடகம் ஒன்றாகத்தான் இருக்கிறது. எனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது இதே சட்டசபையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வாசித்துக் காட்டுகிறேன். உள்ளாட்சித் தேர்தலுக்கு தடை ( பற்றால் முன்பிருந்த நிலையின் அடிப்படையில் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லிவிட்டு ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றிற்கு தேர்தல்களை ஜூலை மாதம் நடத்த வேண்டும் என்று அனைத்துக்கட்சி கூட்டத்திலே ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு முன், பெண்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு செய்யும் சில விதிகளை வகுத்து உத்தரவிட்டு இருக்கிறோம். உள்ளாட்சி நிறுவனங்களில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையிலே இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது: அடுத்து சொல்வது ( ராம்பவும் முக்கியமானது. அதை எதிர்த்து வழக்கு மன்றம் போய் தடை உத்தரவு வாங்கினாலும் நாங்கள் திலே பிடிவாதமாக இல்லாமல் அந்த நிலைமைகளை மக்களிடம் விளக்கிவிட்டு பழைய நிலைமையின் அடிப்படையிலே தேர்தலை நடத்த விரும்புகிறோம் ஆகையினாலே சுப்ரீம் கோர்ட்டிலே இட ஒதுக்கீடு சம்பந்தமாக வழக்கிருக்கிறது என்ற காரணம்' சொல்லப்பட்டாலும் அதுபற்றி எங்களுக்கு கவலையில்லை பழையச் சட்டத்தின் அடிப்படையிலே உள்ளாட்சித் தேர்தல்களுக்கு தடை பெற்றாலும் முன்பிருந்த நிலையின் அடிப்படையில் தேர்தலை நடத்துவோம் என்று நான் இந்தச் சட்டசபையிலே எப்போது தேர்தல் நடக்கும் என்று போன கூட்டத் தொடரிலே கேட்டபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பே செய்திருக்கிறார்கள். ஜூலை மாதம் அடுத்து வருகின்ற ஜூலை மாதம் அல்ல கடந்து போன ஜூலை மாதமே தேர்தல் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இட ஒதுக்கீடு சம்பந்தமாக அரிசன மக்களுக்கும் பெண்களுக்கும் அதைப்போலவே மலைஜாதி மக்களுக்கும் இட ஒதுக்கீடு சம்பந்தமாக இங்கே சென்னை உயர்நீதி மன்றத்திலே சாதகமான தீர்ப்பு இருந்தாலும், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு பெண்டிங்காக இருக்கிற காரணத்தாலே அது முடிகின்ற வரைக்கும் தேர்தலை நடத்தமுடியாத நிலை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இது பற்றி கவலை இல்லை, நடத்துவோம் என்கிறார். ஆனால் நம்முடைய அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் அதற்குக் காரணம் இருக்கிறது என்கிறார். கருத்து வேறுபாடு இருந்தால் அமைச்சரவையையே கலைப்பேன் என்றுசொன்னாரே, இந்த கருத்து வேறுபாட்டுக்குப் பிறகு அன்று முதலமைச்சர் சொல்கிற கருத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் இல்லையென்றால் இவர் சொல்வது தான் சரி, அல்லது அவர் சொல்வது தான் சரி என்ற முடிவிற்கு வரவேண்டும். ரீசன்ஸ் அன்ட் ஆப்ஜெக்ட்சிலே மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன வாக்குறுதியை நம்முடைய அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். மறுக்கலாமா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகின்ற நேரத்திலே விரிவாக விளக்கமாகப் பேசினால் பரவாயில்லை. ஆனால் இப்போதே இவ்வளவு விரிவாக, விளக்கமாக உடன்பிறப்புகளுக்கு எல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால் நான் கேட்டுக் கொள்வது உங்களுடைய ஆட்சேபணையை தெரிவியுங்கள். அதற்குப் பிறகு என்னுடைய விளக்கத்தை நான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் திருச்சியிலே பேசுகிறபோது தினமணியிலே ரிப்போர்ட்டாகி இருக்கிறது. எல்லாப் பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவையிலே பேசுகின்றபோது உடன் பிறப்புகள் என்று சொன்னார். அப்படிச் சொல்வது சரியா இது சபையிலே பேசக்கூடிய வார்த்தையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நல்ல வார்த்தை; எல்லோரும் கூடப்பிறந்தவர்கள்போல்இருக்க வேண்டும் என்று சொல்கிற வார்த்தை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சியிலே பேசுகிறபோது தினமணியிலே ரிப்போர்ட்டாகி இருக்கிறது. இந்த ஆகஸ்ட் செப்டம்பரிலே மாநகராட்சி, நகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற எல்லா வேலைகளும் ஏற்பாடாகி விட்டது என்று அன்னௌன்ஸ் செய்திருக்கிறார்கள் நடக்கப் போகிறது என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால் அதற்கும் உண்டா என்றால் இல்லை. பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். உதாரணமாக என்னென்ன சொன்னார்கள் என்றால் 18 வயது நிரம்பியவர்களுடைய வாக்காளர் பட்டியல் எடுக்கப்பட வேண்டும். புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும். வார்டுகள் பிரிக்கப்பட வேண்டும்

[திரு. அ. ரகுமான்கான்] [1983 நவம்பர் 1

அடுத்து சொன்னார்கள் தஞ்சையிலே நாகப்பட்டினத்திலே தேர்தல் நடக்கிறபோது, இவைகளுக்கு எல்லாம் தேர்தல் வைக்க முடியாது. மழைக்காலமாக இருக்கிறது வாகனங்களை பயன்படுத்த முடியாது. விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டும், மழைக்காலம் ஆகவே தேர்தல் நடத்த முடியாது என்று சொல்லிவிட்டு, இப்போது இட ஒதுக்கீடு என்று ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டு, கடைசியாக இலங்கைத் தமிழர் பிரச்சினை என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவரவர்களுக்கு தகுந்தபடி காரணங்களைச் சொல்கிறார்கள். இந்த கிரிக்கெட்டில் அதிக ரன் யார் எடுப்பது என்ற பட்டியலில் அமைச்சர் காளிமுத்து எடுப்பாரா, அல்லது குழந்தைவேலு எடுப்பாரா என்றால் இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதிலே நான் யாருக்கும் குறைந்தவன் அல்ல என்ற அளவில் அதிக ரன் எடுத்த அமைச்சருக்கு நான் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். இன்னொன்றை நான் கடைசியாக சொல்ல விரும்புகிறேன். இந்த தேர்தலைப் பொறுத்தமட்டில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாக மட்டும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அவர் இதிலே மாநகராட்சி இட ஒதுக்கீடு சம்பந்தமாக சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். கொண்டு வருவதற்கான அடையாளம் தெரியவில்லை. ஏற்கனவே இருக்கிற சட்டத்திலேகூட இடம் இருக்கிறது.

(முற்பகல் 11-00)

One-fourth of the Members were electcd from among the Schedul d C'sts and ladics. ஏற்கெனவே உள்ள சட்டத்திலேயே அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வழி இருக்கிறது பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வழி இருக்கிறது. அதற்காக நீங்கள் புது திருத்தத்தைக் கொண்டு வர இருக்கலாம். ஆனால் பழைய சட்டத்தின் அடிப்படையிலேயே, மாநகராட்சி தேர்தலும் நடத்தலாம். இதற்கும் தேர்தல் நடத்தலாம். கர்நாடகாவிலே ஹெக்டே அவர்கள் நாங்கள் வெற்றி பெற்றால் பஞ்சாயத்து தேர்தலை நடத்துவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதன்படி பெங்களூரிலே தேர்தலை நடத்தினார்கள். நீங்களும் தான் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள். அமைச்சர்கள் எல்லாம் மாறி மாறி தேர்தல் வாக்குறுதிகளை கொடுத்து வந்தார்கள். ஆனால் ஏன் நீங்கள் இன்னும் தேர்தலை நடத்தவில்லை. இது நீங்கள் மக்களை ஏமாற்றுகின்ற முறையிலே தான் இருக்கிறது. ஆகவே, தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு வேண்டிய முறையிலே அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)



1983 நவம்பர் 1] [திரு. அ. ரகுமான்கான்]

ஆகவே, சர்வ கட்சி கூட்டம் நடத்தி அதில் தேதியை அறிவிக்கப்போகிறோம் என்று சொல்வதெல்லாம் ஏமாற்றுகின்ற வேலை. சட்டசபையிலேயே அறிவிப்போம் என்று சொன்னார்கள் அப்படி நீங்கள் அறிவிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் சர்வக் கட்சியைச் சேர்ந்த எல்லோருடைய கோரிக்கையும் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதுதான். ஆகவே உடனடியாக தேர்தலை நடத்த தேதியை அறிவித்து உங்களுடைய நீண்ட நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பேரவையின் துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தடவை நீட்டித்துக் கொண்டு வந்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பது எங்களுடைய இந்தியதேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலையாய எண்ணம் என்பதை சபையினர்க்கு சொல்லிக்கொண்டு பஞ்சாயத்து தேர்தல் நடக்காமற் இருப்பதினாலே கிராமங்களிலே உள்ள பஞ்சாயத்துக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து அங்கத்தினர்களும் உணர்ந்த ஒன்று. இந்தப் பஞ்சாயத்து ஆட்சிமுறைகளைக் கொண்டு வந்ததன் நோக்கமே கிராமப்பகுதிகளில் பல,சிறப்பான வகையிலே முன்னேற வேண்டும் என்பதற்காகத் தான். இந்த திட்டம் காமராசர் காலத்திலே, கிராம ராஜ்யம் என்ற முறையிலே அங்கே தேர்தலை நடத்தி, எல்லா கிராமங்களிலேயும் பஞ்சாயத்துக்களிலும் உள்ள அனைத்து நிர்வாக பொறுப்புகளையும் ஒன்று சேர்த்து, கிராம பஞ்சாயத்து தலைவர் வந்து, அவர்களுடைய கிராம வளர்ச்சிக்கு வேண்டிய திட்டங்களை நடைமுறையிலே கொண்டு வருவதற்காக, அரசோடு தொடர்பு கொள்ள வேண்டித்தான், இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் கொண்டு வரப்பட்டது.

ஆனால் 1975-ஆம் ஆண்டிலேயிருந்து, கிட்டத்தட்ட 7, 8 ஆண்டுக்காலமாக தேர்தலை நடத்தாமல் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை சில உதாரணத்தின் மூலமாக சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு அரசோடு இணைந்து செயற்பட்டு, கிராமங்களிலே உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கு தகுந்த சரியான பிரதிநிதிகள் இல்லை. கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிகளிலும் அந்த தேர்தல் நடத்தாத காரணத்தால் இதே நிலைமைதான் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகத்தான், அந்தக் கிராமங்களிலே இருக்கிற குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். கிராமத்திலே லைட் எரியவில்லை என்றால், ரோடு சரியாக இல்லை என்றால், மேலும் சுகாதார வசதிகள் சரிவர இல்லை என்றால், கிராமத்திலே உள்ள பொதுச் சொத்துக்கள் சரிவர பாதுகாக்கப்படவில்லை என்றால் அவைகளை எடுத்துச் சொல்ல கிராம மக்களின் பிரதிநிதிகள் வேண்டும். இவைகள் எல்லாம்

[திரு ஆர். தியாகராசன்] [1983 நவம்பர் 1

இன்று கிராமப்புறங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்குத் தேர்தல்வராத காரணமேதவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பஞ்சாயத்துக்களிலே இருக்கிற பஞ்சாயத்து ஆணையாளர்கள் தங்கள்இஷ்டம் போல் செக்குகளை வெட்டிக் கொண்டு ஊழல் செய்து வருகிறார்கள் எதற்காக இருந்தாலும் 1500 ரூபாய்க்குள் செலவழிப்பதாக இருந்தால் பஞ்சாயத்து பணத்திலிருந்து சுலபமாகக் கொடுக்க முடியும் என்பதை மன்ற அங்கத்தினர்கள் அனைவரும் அறிவார்கள். இன்றைக்கு அதே முறையைக் கையாண்டு எந்த வேலையாக இருந்தாலும் 1.500 ரூபாய்க்கு மேலே அந்த எஸ்டிமேட்டை போடாமல் அதற்குள்ளாகவே போட்டுக் கொண்டு, காண்டிராக்டர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்தப் பணத்தை தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டு, பங்கு வைத்துக் கொண்டு, பஞ்சாயத்தின் பணத்திலே ஊழல் செய்து வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.குறுக்கீடுகள்

என்னுடைய தொகுதியிலே மணவாளநல்லூர் என்ற பஞ் சாயத்திலே இது போன்றஊழல்கள் பல நடைபெற்று வருகின்றன என்பதை என்னால் தெளிவாக எடுத்துக் கூற முடியு . அதே போல குழந்தையப்பன் கோவிலுக்கு சுகாதாரவசதி என்ற பெயரால் 10 ஆயிரம் ரூபாய் செலவழித்ததாக ரெக்கார்டு பூர்வமாக குறிப்பு வைத்திருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கு இதுவரையில் 2 ஆயிரம் 3, ஆயிரம் ரூபாய் அளவுக்குசுகாதார வசதிக்காக செலவழிக்கப்பட்டு வந்தது. இப்போது 10 ஆயிர ரூபாயைச் செலவழித்திருக்கிறார்கள், நான்கூடஅந்தகமிஷனரைப் பார்த்து கேட்டேன். உங்களுடைய பஞ்சாயத்தின் வருமானமே 4 ஆயிரம் என்று இருக்கும் போது. 10 ஆயிரம் இதற்கு ஏன் செலவு பண்ணினீர்கள். அதற்கு கவர்ன்மெண்ட்டிடம் பெர்மிஷன் வாங்கினீர்களா என்று. ஆனால் அவர்கள் ரெக்கார்டு பூர்வமாக ஆதாரம் வைத்திருக்கிறார்கள்: பத்தாயிரம் ரூபா சுகாதார வசதிகளுக்காக செலவிடப்பட்டது என்று. இதை உங்கள் மூலமாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல விருதாச்சலம் பகுதியிலே உள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், ஒரே ஊழல். கொடுப்பதற்கும் கமிஷன், வாங்கு வதற்கும் கமிஷன் என்று லஞ்சத்தை உதாரணமாகவே வைத்துக் கொண்டு, பஞ்சாயத்தே ஒரே ஊழல் மயமாகியிருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், என்.ஆர். டி. வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் அரிசி கொடுக்கிறது. அந்த அரிசியைப் பயன்படுத்தாமல் நூற்றுப் எடுத்து 3 மூட்டைகள், 40 மூடைகள் அப்படியே கிடக்கின்றன காண்ட்ராக்ட்காரர்கள் அரிசி வாங்கமாட்டேன் என்கிறார்கள் பணமாகக்கொடுத்தால்தான் வாங்குவேன் என்று சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.



1983 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு நான் பதில் கொடுக்கிறேன். ஆனால் சட்டத்தை நாம் இப்போது அறிமுகம்தான் செய்யப்போகிறோம், அந்த ஸ்டேஜிலேதான இருக்கிறது. ஆய்வுக்கு இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது தாங்களோ அல்லது தலைவர் அவர்களோ அவர்களுக்குப் பேசுவதற்கு அனுமதித்தால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசட்டும். நான் தக்க பதிலைச் சொல்கிறேன். ஆகவே இப்போது இந்தச் சட்டத்தை ஏன் அறிமுகம் செய்யக் கூடாது என்பதற்கான காரணத்தை மட்டும் அவர் சொல்ல வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆய்வுக்கு வரும் போது எல்லா கருத்துக்களையும் சொல்லுங்கள். இப்போது வேண்டாம்.

திரு. ஆர். தியாகராசன்: அடிக்கடி இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிறார்கள், அதனால் தேர்தல்களை ஒத்திப் போடுகிறார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக் கிறீர்கள். அவர்கள் அவைகளை துஷ்பிரயோகம் செய் கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன். இல்லை யென்றால் நான் ஏன் சொல்லப்போகிறேன். ஊராட்சி நிவாரணப் பணிகள் நடந்தன. அவைகளில் என்ன என்ன நடந்தன என்பதையெல்லாம் நான் சொல்ல வேண்டிய நேரம் வந்தால் சொல்வேன். அளவில்லாத அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. எங்களுக்குக் கொடுத்து இருக்கின்ற அதிகாரங்கள் எல்லாம் அதிகார பற்றற்ற குழுவிலே பங்கேற்பது என்ற ஒரே ஒரு அதிகாரம் தான். பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் நகராட்சியாக இருந்தாலும் அதிலே உட்கார்ந்து எந்தக் கருத்தைத் தாங்கள் சொல்லமுடியும்? விருதாச்சலம் நகரத்திலே நடப்பது பற்றி எல்லோரும் பப்ளிக் மீட்டிங்கில்கூட ஆளுங்கட்சி உட்பட பேசியிருக்கிறோம். என்ன பேசினாலும் அவர்கள் எல்லாம் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் கேட்கிற திட்டங்கள் நிறைவேற்றப்பட முடிய வில்லை. இந்தச் சட்டங்களை அடிக்கடி அறிமுகப்படுத்துகிறீர்கள். இதையே கடைசி அறிமுகமாக வைத்துக்கொண்டு பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த முன்வர வேண்டும். நான் பல உதாரணங் களைச் சொல்லமுடியும். மாண்புமிகு அமைச்சர்கள்கூட என் னுடைய தொகுதிக்கு வருவதில்லை. நாங்கள் எதிர்க்கட்சி உறுப் பினராக இருக்கிறோம். தாங்கள் சொன்னாலும் இவர் போய் சொன்னால் என்ன நடக்கப் போகிறது என்று அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு இன்னும் பயம் விட்டுப் போயிற்று. எந்த அளவுக்கு அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்கிறார்கள் என்றால் நான் சட்டமன்றத்திலே அவைகளைச் சொல்லக்கூடாது அந்த அளவுக்கு அக்கிரமத்தையும் அநியாயத்தையும் செய்து

123,180

கொண்டு இருக்கிறார்கள். இவைகளை நிறுத்தும் வகையில் இத்தோடு ஒரு முற்றுப்புள்ளி வைத்து தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் இதோடு நிறுத்திக் கொள் கிறேன். இதை கடைசிமுறை அறிமுகமாக வைத்துக் கொண்டு தேர்தலை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத்தலைவர் அவர்களே, இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற ஊராட்சிகளின் தனி அதிகாரிகள் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறேன். கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். 11-3-1984 வரை இந்த ஏற்பாடா? கொடுத்த வாக்குறுதிகள் மீறப்படுகின்றன. இந்த காரணநோக்கவிளக்கத்தில் 26-11-1982 அன்று நடந்த அனைத்துக்கட்சித் தலைவர் கூட்டத் தில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகு நடத்தலாம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாக்கல் செய்யப்பட்டது உண்மை. ஆனால் ஸ்டே வாங்கப்பட்டு இருக்கிறதா என்று முழுமையாக புரியமுடியாமல் அப்படி ஒரு ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்டே இல்லை என்பதுதான் உண்மை. அதற்குப் பிறகு நடந்த கூட்டங்களில், சந்தர்ப்பங்களில் அமைச்சர் உடனடியாக இந்த வழக்கை விரைவு படுத்தக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படும் என்ற முறையில் வாக்குறுதிவழங்கினார்கள். அதுவும்கூட விரைவிலேவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தலைமை நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. ஏன் நடத்தப்படவில்லை? அதற்கு அரசு காரணமா? சுப்ரீம் கோர்டினுடைய சீப் ஜஸ்டிஸ் ஆணையிட்டுள் ளார். அதற்குப் பிறகும் காலதாமதம் ஏன் என்பதைத் தயவு செய்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு அரசு தயாரிப்பு வேலைகளைத் தொடங்கி னாலும்கூட அதை ஸ்டே செய்ய முடியாத நிலைமைதான் இருக்கிறது. உதாரணமாக மேற்கு வங்கமாநிலத்தில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்ட போது காங்கிரஸ்கட்சி கல்கத்தா ஹைகோர்ட்டிலே ஸ்டே வாங்கியது. நோடிபை செய்தபிறகுஸ்டே வாங்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக் கிறது. அதற்குப் பிறகு அங்கே ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்த அரசுக்கு உண்மையிலேயே தேர்தல் நடத்தவேண்டுமென்ற மனப்பூர்வமான எண்ணம் இருக்குமானால் நோடிபை செய்யலாம். நோடிபை செய்தபிறகு நீதிமன்றம் தடை செய்ய முடியாது. அதுதான் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படை. அந்த அடிப்படையில் தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

(முற்பகல் 11-10)

அதோடு, பொதுத் தேர்தல் 1984-ம் ஆண்டுநடத் தப்பட வேண்டும் என்று அக்கறைதான் இந்த அரசுக்கு அதிகமாக இருக்கிறது. இது பத்திரிகை செய்தி ஆனால்





அதே நேரத்தில் ஊராட்சித் தேர்தலைப் பொறுத்த வரையில் அக்கறை இல்லை என்பதுதான் நிலைமை. இந்த மன்றத்தில் அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு.காளிமுத்து அவர்கள் வாக்குறுதி சொன்னார்கள். அவர் சொன்ன காரணம் மிக அபூர்வமானதாக இருந்தது. அடுத்த முறை சட்டமன்றம் கூடுகின்றபோது உங்களை நான் சந்திக்கின்ற நேரத்தில் உங்களுக்குக் கொடுத்த உறுதிமொழியின்படி நாங்கள் தேர்தலை நடத்தி விட்டோம் என்பதை இந்த அவைக்கு தெரிவிக்கின்ற முறையில் திரு. லத்தீப் போன்றவர்கள் பாராட்டுகின்ற வகையில் இருப்பேன் என்று மாண்புமிகு அமைச்சர்திரு.காளிமுத்துஅவர்கள் சொன்னார்கள். திரு. லத்தீப் அவர்கள் இன்றைக்கு இல்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் இடம் மாறி ஆகிவிட்டது. அதுதான் வேடிக்கை. அன்றைக்கே 5 மாதங்கள் கேட்பீர்கள்—கடைசி காலம்மழைக்காலம் ஆகவே டெபினிட்டாக மினிஸ்டர் அஷ்யூர் செய்வார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அப்போது மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து "தலைவர் அவர்களே, அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடைபெறும்" என்று சொன்னார்கள். தேர்தல் எங்கே இருக்கிறது பத்திரிகையில் இருக்கிறது. ஆனால் உண்மையில் தேர்தல் இல்லை. இதை மிகவும் பரிவோடு கவனிக்க வேண்டும். இது மிகவும் கேலிக் கூத்தாகஇருக்கிறது.

அதோடு சென்ற செப்டம்பர் மாதம் நடந்த சட்டமன்ற கூட்டத்தில்மாண்புமிகுஅமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் விவாதம் நடக்கின்றபோது சொல்லியிருக்கிறார்கள் இந்த மாதத்தில் பெரியகுளம் தேர்தல் இல்லையென்று சொல்லியிருந் தால் இப்படிப்பட்ட விவாதங்கள் வந்து இருக்காது என்று தேர்தல் இருக்கின்ற காரணத்திற்காக ஏதோ இட்டுக்கட்டி பேசவேண்டும் என்றும் பெரியகுளம் தேர்தலில் இவைகளை எல்லாம் சொல்லவேண்டும்இவைகள்பத்திரிகைகளில்வரவேண்டும் என்பதற்காக ஒரு சில மாமன்றஉறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். என்றும் அமைச்சர் சொல்லியிருக் கிறார்கள். எதுஇட்டுக்கட்டி பேசியது. அதோடு 1982-ம் வருடம் செப்டம்பர் மாதம் 6-ம் தேதி இதே மன்றத்தில் வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் நாங்கள்தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம். என்று சொல்லியிருக்கிறார்கள். எப்போதுவரை தயாராக இருக்கிறீர்கள், என்று நமக்குத் தெரியவில்லை. ஆக இந்த தேர்தலைப்பொறுத்த வரையில் இப்படி நீட்டிப்பது ஜன நாயகத்திற்குப் புறம்பானது. உங்களுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருக்குமானால் அந்தத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும். அது நான்மிகவும்அவசியமானது இன்றைக்கு உள்ளாட்சி ஊராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்களில் பல்வேறு குறைபாடுகள் நடக்கின்றன அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் அங்கு பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. அத்தனை வேலைகளும் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தலையில் விழுகின்றன. குறைந்த

மக்களும் சட்டமன்ற உறுப்பினர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் நீங்கள் விரைவில் தேர்தலை நடத்த வேண்டும். இது மிக மிக அவசியமானது.

இன்றைக்குப் பல்வேறு பண ஒதுக்கீடுகள் அவைகளுக்குச் செய்யப்படுகின்றன. அவைகளுக்குச் சிலவழிகளில் வருமானங்கள் வருகின்றன. டவுன் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் வரியைக் கூட்டமுடியாது. அங்கே அந்த வீடுகளுக்கு தீர்வையை உயர்த்தக்கூடிய ஏற்பாட்டைச் செய்யமுடியாது. ஏன் என்றால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லை.

இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலையில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் உள்ள பஞ்சாயத்தில், 10 மாதங்களாக அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குச் சம்பளம் போடமுடியாமல் 2 மாத சம்பளம் தரவில்லை என்று சொல்கிறார்கள். சிவகிரியில் டவுன் பஞ்சாயத்தில் 5 மாதங்களாக சம்பளம் போடவில்லை. ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்குப் பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. இருக்கக்கூடிய பணத்தையும் வருகின்ற நிதியையும் வேறு விதமாக தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத சூழ்நிலையால் தான் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. ஆகவே, இதை கேலிக்கூத்தாக்காமல் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்குமானால் உடனே இந்த தேர்தலை நடத்துவோம் இந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அதற்கான தேதி அறிவிக்கப்படும் என்ற அடிப்படையில் நீங்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, தேர்தலை நடத்துவதற்கு, ஆலோசிப்பதற்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறீர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவற்றை எல்லாம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பேசவேண்டும். அல்லது, விரிவான ஆய்வுக்கு வரும்போது பேசவேண்டும். மக்கள் எல்லாம் வரி கட்டினால்தானே அவர்களுக்குப் பணம் கிடைக்கும், என் தொகுதியிலே கூட இரண்டு பஞ்சாயத்துக்களிலே பணம் கிடையாது.

திரு. ரா. கிருஷ்ணன்: நான் 'மெரிட்ஸ்' ஸுக்குள்ளே போகவில்லை. தேர்தலை நடத்த ஆலோசிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறீர்கள். ஆனால், அதே நேரத்திலே, தேர்தலை ஒத்திப் போடுவதற்கு, அல்லது நடத்தத் திட்டமிட்டதை ரத்து செய்வதற்கு நீங்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் நடத்துவோம் என்று சொல்லி கூட்டத்தைக் கூட்டுவது பெரிய மோசடி. ஆகையினாலே, தேர்தலை நடத்துவதற்கு ஆலோசிக்க என்று கூட்டப்படுகின்ற கூட்டம் என்பதே ஒரு பெரிய மோசடியா என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்குத்தான் இந்த அரசு நடந்து கொள்கிறது. (மணியடிக்கப்பெற்றது)



திரு தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, ஆகிய இந்த அமைப்புகளுக்குத் தனி அதிகாரிகளை நியமனம் செய்வது (நீட்டிப்பது) என்கின்ற அந்தத் திருத்த மசோதாவை, ஆரம்பத்திலேயே நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம். காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாகச் சொல்கின்றபொழுது, இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலேயே நாங்கள் தேதியை அறிவித்து, தேர்தலை நடத்துவோம் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான தேதி அறிவிப்பும் வரவில்லை, மாறாக, தனி அதிகாரிகளை இன்னும் 6 மாதகாலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்ற நிலையோடு திருத்த மசோதா அரசு கொண்டு வந்திருக்கிறது. தனி அதிகாரிகளை மேலும் நீட்டிக்கின்றபொழுது, தேர்தல் முடிந்து சற்றேறக்குறைய 13 ஆண்டுகளாகியும் பலவேறு கிராமங்களிலே குடிநீர் வசதிக்காக இருந்தாலும் சரி, அல்லது சாலை வசதிக்காக இருந்தாலும், ஏனைய அடிப்படை வசதிகளுக்காக இருந்தாலும், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இல்லாத காரணத்தாலே சட்டமன்ற உறுப்பினர்களை எதிர்பார்த்து, மின் விளக்கு எரியவில்லை என்றால்கூட, அவர்களிடத்திலே செல்ல வேண்டிய நிலையிருக்கிறது.

மேலும் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், நாங்கள் மக்கள் குழுவை அமைத்திருக்கிறோம் என்று. மக்கள் குழு ஆலோசனைக்காக அமைக்கப் போடப்பட்டாலும், சற்று பொழுது போக்கிற்காக அங்கே சென்று உட்கார்ந்து பேசிவிட்டு வருகிறது என்கின்ற ஒரு நிலைதான் இருக்கிறதே தவிர, மக்கள் குழுவாலே ஆலோசனையாக சொல்லப்படுகிற எந்த வேலையும் செயல்பாட்டுக்கு வருவதில்லை.

உதாரணமாக, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியிலே உள்ள ஒரு சந்தைக் கடை ஒரு வருஷத்திற்கு ரூ.3 இலட்சத்திற்கு ஏலத்திற்குப் போகிறது. ஆனால் அந்தச் சந்தைக் கடையிலே லைட் வசதி இல்லை, பாதை வசதி இல்லை என்று ஊரில் 3 ஆண்டுகளாக மக்களால் பேசப்பட்டும், பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், அதிகாரிகளிடம் சொல்லப்பட்டும் எந்தவிதமான செயல்களும் நடைபெறாத நிலையிருக்கிறது. இப்படி ஒரு இடத்தில் மட்டும் அல்ல, தமிழ்நாடு பூராவும் பல்வேறு பிரச்னைகள், தனி அதிகாரிகள் இருக்கும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, இந்த நிலையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று 5 சட்டமுன்வடிவுகளை இங்கே அறிமுகம் செய்வதற்கு உங்களுடைய மேலான அனுமதியை எதிர்பார்த்துத்தான் முதல் சட்டமுன்வடிவை நான் இங்கே அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன். அறிமுகம் செய்கின்ற நேரத்

திலேயே ஆட்சேபணைகள்; எதிர்க்கணைகள் எல்லாம் இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இது புதிதல்ல எனக்கு. புதிய அனுபவம் அல்ல. ஏனென்றால், பல்வேறு அனுபவங்கள் இந்த மாமன்றத்திலேயே, இதற்கு முன்னாள் சட்ட முன்வடிவுகளையெல்லாம் கொண்டு வருகிற நேரத்தில் எனக்குஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றையெல்லாம் பேசுகின்ற நேரத்தில். பழைய பஞ்சாங்கத்தை அடிச் சுவடுகளைத்தான் மீண்டும், மீண்டும், புரட்டிப் புரட்டிப்படித்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற எண்ணம்தான் எனக்கெல்லாம் ஏற்படுகிறது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அங்கத்தினர் கூறுகின்ற கருத்துக்கள் பழைய பஞ்சாங்கக் கருத்துக்கள் என்று கேலியாகச் சொல்கிறாரே....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பழைய பஞ்சாங்கம் கிடைப்பதே கஷ்டம்.

MR. DEPUTY SPEAKER:—Old is gold.

திரு. ரா. உமாநாத்: அவர்களே பழைய பஞ்சாங்கம்தான்.

[முற்பகல் 11.20]

மாண்புமிகு திருப.குழந்தைவேலு: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகளை நான் கொண்டு வருவதின் நோக்கத்தை, காரண, விளக்கங்களை எல்லாம் இங்கே கொடுத்திருக்கிறார்கள், ஏற்கெனவே ஒவ்வொரு முறையும் தள்ளிப் போட்டதற்கான காரணத்தையும், இந்தமுறை என்ன காரணத்தால் நாம் தள்ளிப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக 1980—ல் இந்தப் பொறுப்பை நான் எடுத்துக்கொண்டதற்குப் பின்னாலே ஊராட்சி ஒன்றியங்களுக்குண்டான சட்டங்களிலே எல்லாம் புதிய திருத்தங்களைக் கொண்டு வந்ததால்தான் இந்த மன்றங்களினுடைய தேர்தல்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக புதிய திருத்தமாக, ஒதுக்கீடுகளை நாம் செய்தோம். ஆதி திராவிட மக்கள் பழங்குடி மக்களுக்கு எல்லாம் 18 சதவீதம் இடங்களை ஒதுக்கீடு தந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகஅரசு தான். அதேபோல இன்றைக்குத் தாய்மார்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று புதிய முறையிலே, புதிய சட்டத்தைக் கொண்டு வந்து நாம் அந்தத் திருத்தத்தை செய்திருக்கிறோம். அதற்காககால நீட்டிப்பு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவேஇந்த புதிய முறை மூலமாக 15 சதவீதம் தாய்மார்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 21 வயது வந்தால் தான் வாக்குரிமை என்ற நிலையில்லாமல், 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கிற சட்டத் திருத்தத்தை நாம் இதே சட்டமன்றத்திலே நிறைவேற்றி இருக்கிறோம். ஆகவே இவைகளால் தான் காலந்தாழ்த்த வேண்டிய சூழ்நிலை





ஏற்பட்டது. இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஏராளம், ஏராளம், என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 29,30 தேதிகளில் இந்தத் தேர்தல்களை நடத்துகிறோம் என்று தேதி முன் அறிவிப்பு செய்து, தேர்தல்களை நடத்துவதற்கான முனைப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்ட நேரத்தில் தான் சிலர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, 300—க்கும் மேற்பட்ட மனுக்களை அங்கே தாக்கல் செய்து, அதன்மூலமாக தடைகளைப் பெற்றார்கள். அவ்வாறு தடைகளைப் பெற்றதன் காரணமாகத்தான் தேர்தல்களை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, அதற்கு பின்னாலே உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்தது. அந்தத் தீர்ப்பிலே கொண்டு வந்திருக்கிற ஒதுக்கீடுகள் செல்லுபடி என்று தீர்ப்பு அளித்தார்கள். ஆனாலும் இன்றைக்குத் அந்தத் தீர்ப்பிற்கு எதிராக உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. வெங்கடாஜலம் பிள்ளை என்பவர் அவ்வாறு மேல்முறையீடு செய்ததன் காரணத்தால் தான் அந்தத் தேர்தல்களை நடத்த முடியவில்லை. ஆகவே வேண்டுமென்றோ, அல்லது காலம் தாழ்த்துகிற முறையிலோ, அல்லது ஜனநாயகத்தின் ஆணிவேராக இருப்பதை அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடோ, அல்லது இருக்கக்கூடிய குடியுரிமைகளை எல்லாம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடோ இவை செய்யப்பட்டவை அல்ல.

ஜனநாயகத்தின் தொட்டிலாக இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற எண்ணம் தான் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. ஆனால் கடந்த 26—11—1982 ல் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி. அந்தக் கூட்டத்திலே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையிலே தான் விரைவு படுத்துகிற மனுவை உச்சநீதி மன்றத்திலே நாம் தாக்கல் செய்தோம். அது தாக்கல் செய்யப்பட்டு கடந்த ஏப்ரல் மாதத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்மீது உச்சநீதிமன்றத்தின் நீதிபதி அவர்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் மேல்முறையீட்டை மிகவும் சீக்கிரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்ப்பை உச்சநீதி மன்றத்திலே இருக்கிற நீதிபதி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த மேல்முறையீடு சீக்கிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டால் உடனடியாக நாம் தேர்தல்களை நடத்துவதற்கு எந்தவிதமான தடையும் இருக்காது.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். குறிப்பாக மேல்முறையீடு செய்யப்பட்டாலும் அங்கே தடை செய்யப்படவில்லை. ஆனால் தடை இல்லாத நேரத்திலே ஏன் நீங்கள் நடைமுறைப்படுத்தவில்லை என்கிற கேள்வியை கேட்டார்கள். உண்மையிலே

[திரு. ப. குழந்தைவேலு] [1983 நவம்பர் 1

தேர்தலை நடத்துவதற்குத் தேதியை குறிப்பிட்டு விட்டால் உடனே அதே வெங்கடாஜலம் பிள்ளை என்ன செய்வார் என்றால், அங்கே ஒரு மனுவைப் போட்டு, தான் மேல் முறையீடு செய்திருக்கிறேன். முறையீடு நிலுவையில் இருக்கிற நேரத்திலே இவர்கள் தேர்தலை நடத்துவதற்கு தேதியைக் குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே எனக்குத் தடை வேண்டுமென்று மனுவைக் கொடுப்பார்கள். ஆகவே மீண்டும் தடை செய்ய வேண்டிய சூழ்நிலைதான் உச்சநீதி மன்றத்திலே ஏற்படுமே தவிர வேறல்ல. ஆகவேதான் இருக்கக்கூடிய மேல்முறையீட்டை உடனடியாக் நடைமுறைப்படுத்த வேண்டுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாகத்தான் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நாம் தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலே விட்டு அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு சீக்கிரமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி மன்றத் தேர்தல்களைப் பொறுத்து ஏற்கனவே 12-10-1983 ஆம் நாளன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாங்கள் கூட்டினோம். அந்தக் கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற பல்வேறு கட்சிகள் எல்லாம் கலந்து கொள்ளவில்லை. அதற்கு அவர்கள் சொன்ன காரணம். வேண்டுமென்றே தேர்தலை ஒத்திப் போடுவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டு கிறார்கள். உண்மையில் தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதாகும்.

இந்தத் தேர்தலை கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலே நடத்துவோம் என்ற உறுதியைச் சொன்னேன், அது உண்மை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஜூலை மாதத்தில் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை வந்தது. அது எல்லோருக்கும் தெரியும், நாடறிந்த உண்மை அது. இலங்கைத் தமிழர்கள் மீது இருக்கின்ற தமிழ் இன உணர்வின் காரணமாக, அங்கேயிருக்கின்ற தன்மையின் காரணமாகக் கொதித்தெழுந்து நம்முடைய கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப் பாட்டங்கள் நடந்தன ஊர்வலங்கள் சென்றன: கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. இப்படித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளி லேயும் நடந்தன என்பது உங்களுக்குத் தெரிந்த உண்மை. இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு. பச்சை இரத்தம் பரிமாறப்படும் நிலைமை இருந்த நேரத்தில் நாம் தேர்தலை நடத்துவது என்பது சரியாக இருக்காது. அந்த நேரத்தில் இலங்கைத் தமிழர்கள்பால் உள்ள நம்முடைய இன உணர்வைக் காட்ட வேண்டுமே தவிர, தமிழகத்திலே தேர்தலை நடத்தி நமக்குள்ளே வெற்றி தோல்வி காண்பது என்பது சரியாக இருக்காது என்பதால்தான் இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.



1983 நவம்பர் 1] [திரு. ப. குழந்தைவேலு]

ஆனால் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏற்கனவே ஒரு அறிவிப்பை நான் கொடுத்திருக்கிறேன். நகராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்குண்டான தேதியை இந்த மன்றத்தில் அறிவிப்பதாக ஒரு உத்தரவாதத்தை நான் கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நேரத்தில் கண்டிப்பாக அந்தத் தேதி அறிவிக்கப்படும். நகராட்சிகளுக்கு முதலிலே அறிவிக்கப்படும். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் பற்றிய மேல் முறையீடு நிலுவையில் இருப்பதால் அது முடிந்த பிறகுதான் அந்தத் தேர்தல்களை நடத்த முடியும் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அருமை நண்பர்கள் ரகுமான்கான் அவர்களும், கிருஷ்ணன் அவர்களும் நல்ல வழக்கறிஞர்கள். அவர்களுக்கும் இருக்கின்ற நிலைமை புரியும். புரிந்திருந்தாலும்கூட வேண்டுமென்றே அரசியல் காரணமாக ஒருசில கருத்துக்களைக் கூறியிருக்கிறார் களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் திரு. காளிமுத்து இருக்கிற பொழுது பல்வேறு உறுதிமொழிகளைக் கொடுத்தார்கள். ஆகவே ஒரே ராகம், ஒரே பல்லவி, ஒரே பாடல், ஆனால் இதைச் சொல்வதற்கு இரண்டு அமைச்சர்கள் என்று சொல்கிறார்கள். ராகங்களைப் பொறுத்தவரையில், ராகங்கள் மாறுவதில்லை என்பது உங்களுக்குத் தெரிந்த உண்மை. ஆனால் எந்த அமைச்சர் பொறுப்பில் இருந்தாலும் இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வரும் நேரத்தில் காரண காரிய விளக்கங்களைச் சொல்லித்தான் ஆக வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, வேண்டுமென்றே இந்தத் தேர்தலை நடத்தக் கூடாது என்ற எண்ணம் இந்த அரசைப் பொறுத்த வரையில் கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எந்தத் தேர்தலையும் கண்டு பயப்படுகின்றவர்கள் அல்ல என்பதையும் நான் பணி வோடு தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனையோ எதிர்ப்புச் சூறாவளிகள் எங்களைத் தாக்கிய நேரத்திலேயெல்லாம்கூட அணையாத அகல் விளக்காக, மாற்றுக் குறையாத தங்கமாக, மாசற்ற மாணிக்கமாகத் தமிழ் நாட்டில் ஒளி வீசிக்கொண்டிருப் பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இந்தக் கழகம் எந்தத் தேர்தலையும் கண்டு பயப்பட வில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக்கொண்டால் தான் இந்தத் தேர்தல்களைச் சீக்கிரமாக நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு கி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கட்சியின் வியூகை திரு ரகுமான்கான் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அமைச்சரவர்களும் பேசிமுடித்த

பிறகு ஓட்டுக்கு விடுவதுதான் நியாயமானது. இப்பொழுது கிளாரிபிகேஷன் வேண்டுமானால் சுருக்கமாகக் கேட்கலாம். அதுவும்கூட இதில் பேசியவர்கள்தான் கேட்க முடியும். எல்லோரும் கிளாரிபிகேஷன் கேட்க முடியாது. ஆய்வுக்கு வரும் பொழுது வேண்டுமானால் மற்றவர்கள் பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சட்டத்தை ஏறத்தாழ பத்து பன்னிரண்டு தடவைகளுக்கு மேலாக இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வேண்டுமென்றே இந்தத் தேர்தலை நடத்தாமல் பல ஆண்டுகளாக ஒத்தி வைத்துக்கொண்டே வந்து பொது மக்களுக்குக் குந்தகம் தரக்கூடிய வகையிலே நடந்து கொள்கின்ற காரணத்தால் இதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

(முற்பகல் 11-30)

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தினுடைய நாற்றங்கால்களாக விளங்குகின்ற ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் தேர்தல்களை நடத்தாமல் அவற்றை ஒத்திவைத்துக் கொண்டே போவது என்பது ஒரு வழக்கமாக இருப்பதன் காரணத்தால் மக்களுடைய நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்ற காரணத்தால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய எதிர்ப்பினைத் தெரிவிக்கின்ற முறையில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு இவர்கள் தேர்தலை நடத்தவே போவதில்லை என்பது ரொம்பத் தெளிவாகி விட்டது. ஒளி வீசுகின்றது என்பது உண்மை. ஆனால் தேர்தல்கள் நடத்தப் படாத காரணத்தால் கிராமங்கள் எல்லாம் இருளாகத்தான் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இப்போது சொன்ன ஸ்ரீலங்கா பிரச்சினை காரணம் என்பது பற்றி மேமோரண்டத்திலே சொல்லப்படவில்லை.. (குறுக்கீடு) எக்ஸ்ப்ளனேட்டரி மெமோரண்டத்திலே அது பற்றி குறிப்பிடப் படவில்லை. எனவே இவர்கள் தேர்தலை நடத்தவே போவதில்லை என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அதை ப்ரொட்டஸ்ட் பண்ணி நாங்கள் வாக் அவுட் பண்ணுகிறோம்.



(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. ப. நெடுமாறன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கம் எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்ற காரணத்தால் எங்களுடைய கட்சி இங்கே இருந்து வெளிநடப்பு செய்கிறது.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஊராட்சி, நகராட்சிகளுக்குத் தொடர்ச்சியாக இப்படிப்பட்ட சட்ட முன்வடிவினை ஆளும் கட்சி கொண்டுவரக் கூடிய நிலைமை இருப்பதன் காரணத்தால் இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடுமையாக எதிர்த்து, கண்டனம் தெரிவித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கொண்டுவருகின்ற இச்சட்ட முன்வடிவினை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக எதிர்த்து வெளிநடப்பு செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 30

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். '' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் மூன்றாவது திருத்த சட்டமுன்வடிவு 1983

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த, சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது,

(உ) மதுரை மாநகராட்சி திருத்த சட்டமுன்வடிவு 1983

மாண்புமிகு திரு ப.குழந்தைவேலு:பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''



1983 நவம்பர் 1].

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு ப.குந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு1983.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக (திருத்த)சட்டமுன்வடிவு) சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1083) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''

நீலகிரி மாவட்டத்தில் வெலிங்டனில் உள்ள ராணுவ அலுவலர் கல்லூரி இப்போது பாரதியார் பல்கலைக் கழகத்துடன் 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டப்படி இணைந்துள்ளது. பாரதியார் பல்கலைக் கழகச் சட்டம் 7-1-1982 லிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் ராணுவ அலுவலர் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது. இந்தக் கல்லூரியில் பாதுகாப்பு ஆய்வுத்துறை குறித்து அறிவியல் பட்ட மேற்படிப்புக்கான வசதிகள் (எம். எஸ்ஸி. டிபென்ஸ் ஸ்டடீஸ்) உள்ளன இக்கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை ராணுவ அதிகாரிகள் மாநில அரசின் முன் வைத்தனர் பாரதியார் பல்கலைக் கழகம் புதிதாக நிறுவப்பட்டிருப்பதால் மேலே சொல்லப்பட்ட தனித் துறையை அங்கே ஏற்படுத்த மேலும் சில காலம் ஆகும் என்பதை ராணுவ அதிகாரிகள் எடுத்துக் காட்டினர்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தக் கல்லூரி காமன் வெல்த் நாடுகளுக்கும் மற்ற அனைத்து நாடுகளுக்கும் ஏற்கனவே அறிமுகமாகியுள்ளது என்றும் இந்நிலையில் மாற்றம் செய்வது கல்லூரியின் நலனுக்கு உகந்தது அல்ல என்றும் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே பாதுகாப்பு ஆய்வு இயல் தனியாக இருக்கிறது என்ற காரணத்தாலும் அப்பயிற்சியின் தரத்தைக் கருத்தில் கொண்டும், பல்கலைக் கழகமே தற்போது அறிவியல் (பாதுகாப்பு) பட்டமேற்படிப்பு பேரவைகளின் தேர்வுத் தாளை வெளிப் பல்கலைக் கழக ஆசிரியர்களைக் கொண்டு தருவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதாலும் இக்கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

** 1983 ஆம் ஆண்டு மார்ச் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இச்செயல் நோக்கத்திற்காக 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1981) பொருத்தமான விதித்துறைகளைத் திருத்தியமைக்க கருதப் பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தில் பொருத்தமான விதித் துறைகளில் செய்யக் கருதப்பட்ட திருத்தங்களுக்குமுன்னர் ஒரு நாளிலிருந்து அதாவது அவ்விதித்துறைகள் செயலுக்கு வரத் தொடங்கிய நாளிலிருந்து செயல்திறன் அளிக்கவும் கருதப் பட்டுள்ளது.

இச்சட்டமுன்வடிவு, மேற்கூறிய முடிவுகளுக்குச் செயல் வடிவும் கொடுக்க விழைகிறது.

சட்டப் பேரவைக்குப் போதிய அவகாசமில்லாததாலும்' அதனால் சட்டமுன்வடிவு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படாதாலும், சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதாலும், அவசர முக்கியத்துவத்தைக் கருதி உத்தேசம் சட்டம் அவசரச் சட்டமாகக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன்படி அவசரச் சட்டம் 19.8-1983 அன்று வெளியிடப்பட்டது. இதனைச் சட்டமுன் வடிவாக மாற்றி அதற்கு ஒரு திருத்தத்தையும் கொண்டு வந்து அவை முன் வைத்துள்ளேன்,

திருத்தத்தை உள்ளடக்கிய இந்தச் சட்டமுன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்,

(முற்பகல் 11–40)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

4 ஆம் பிரிவுக்குப் பின்னர், பின்வரும் பிரிவைச் சேர்க்கவும், அதாவது:—

''5. ரத்தும் காப்பும் : (1) 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/1983) இதனால் ரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு ரத்து செய்யப்பட்டிருப்பினும், மேற்கூறிய அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டுள்ள மூலச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதுவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள மூலச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளதாக அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாகக் கருதப்பட வேண்டும்.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.





புதிய பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(எ) சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை— காமராசர் பல்கலைக்கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

25-10-1983 அன்று பேரவையில் இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தி 5–ம் பிரிவிலும், 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் 5-ம் பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் தவிர பல்கலைக்கழகப் பகுதிக்குள் உள்ள கல்லூரிகள் எதுவும் வேறு யாதொரு பல்கலைக் கழகத்துடனும இணைக்கப்படக் கூடாது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வேறு எந்தப் பல்கலைக்கழகத் துடனும் இணைந்த அல்லது தொடர்புடைய எந்த ஒரு கல்வி நிறுவனமும், அரசு மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகம் ஆகியவற்றின் முன் அனுமதி இன்றி, மற்றபடி பாரதியார் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்படக் கூடாது என்றும் மேற்குறிப்பிட்ட பிரிவில் இரு சட்டங்களிலும் கூறப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்திலும் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திலும் இவை போன்ற விதித்துறைகள் எவையும் இல்லை எனவே, சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களின் சட்டங்களில், பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் சட்டங் களில் காணப்படுகின்ற மேலே சொல்லபட்டுள்ளப் பிரிவைச் சேர்ப்பதற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த உத்தேசச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால். 19–8–1983 அன்று அவசரச் சட்டமாகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

---

**1983 ஆம் ஆண்டு அக்டோபர் 25-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இது சட்ட முன்வடிவாக மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு மேற்கூறியுள்ள முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க வகை செய்கிறது.

இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும் பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின் முன் வைத்திருக்கிற சட்ட முன்வடிவின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கிற பல்கலைக் கழகங்களிலே இருக்கின்ற சட்ட விதிமுறைகள் இன்றைக்கு 125—வது ஆண்டு விழாக் கொண்டாடிய சென்னை பல்கலைக் கழகத்தில் இல்லை என்பதால் அமைச்சரவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். அந்தந்த பல்கலைக் கழக ஏரியாவுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள கல்லூரிகள் அந்தந்த பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்பது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவைகளுக்கு ஒரு முழுமையான சட்டம் தமிழக அரசால் கொண்டுவரப்படும் என்று அமைச்சரவர்கள் இங்கே பலமுறை தெரிவிக்கிறார்கள். எப்போதோ போடப்பட்ட சென்னைப் பல்கலைக் கழக சட்டத்தில் எத்தனையோ விதிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. ஸ்டேச்சூட் என்கிறோம். ஆர்டினன்ஸ் என்கிறோம். ரூல்ஸ் என்கிறோம், ஆக்ட் என்கிறோம் இப்படிப் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து துண்டு, துண்டாக தொகுப்பாக இருக்கிறது சென்னைப் பல்கலைக் கழக சட்டங்கள். யாராவது ஒருவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உள்ளே சென்று ஒட்டுமொத்தமாக இவைகள் எல்லாம் வேண்டுமென்று கேட்டால் நிச்சயமாகக் கிடைக்காது. சிண்டிகேட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நானே பலநாள் பொறுத்துதான் ஒரு ஆக்ட்டை அவர்களிடத்திலே வாங்கமுடிந்தது. அதற்கு ஒரு காம்ப்ரஹென்சிவ் ஆக்ட் கொண்டுவருவோமென்று அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள், இந்த அவையிலே. அந்தச் சட்டம் கூட, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, தயாரான நிலையில் இருப்பதாகக் கேள்வி. அதையே கொண்டுவந்திருக்கலாம். இப்படி ஏதாவது தலைவலி என்றால் திடீரென்று அனாசின் சாப்பிட்டு டெம்பரரி ரிலீப் பெறுவதைப் போல இப்படிப்பட்ட ஆர்டினன்ஸ் கொண்டுவந்து உடனடியாக தலைவலியைநீக்கிக் கொள்கிறார்களே, தவிர, பல்கலைக்கழகத்திலே செய்யவேண்டிய இதைவிட செம்மையான காரியங்கள் இருக்கின்றனவே, அவைகளை அமைச்சர் செய்வதில்லை,



இந்த மாமன்றத்திலே 1979 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சீர்திருத்தங்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட வேண்டுமென்று மன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கூட, நானும் நண்பர் உமாநாத் அவர்களும், மேலவையிலே வீராசாமியும் மற்றும் உள்ள நண்பர்களும் பல்வேறு கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்தோம். ஆனால் அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு முழுமையான சட்டவடிவு கொண்டுவந்து முழுவதாக நிறைவேற்றுவதற்கு காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், இப்போதுகூட கொண்டு வந்திருக்கலாம். ஆனால் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலே இப்படிப்பட்ட முழுமை பெற்ற ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டுவர மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். காரணம், அதற்கு ஒரு சில பேக் கிரௌண்ட் இருக்கிறது.

இந்த மன்றத்திலே திரு. உமாநாத் அவர்களும், நானும் சென்ற ஆண்டு பேசுகின்ற போது குறிப்பிட்டுக் காட்டினோம். அதாவது எப்படி இரண்டு முறைக்கு மேலே ஒருவர் செனட் உறுப்பினராகவோ, சிண்டிகேட் உறுப்பினராகவோ இருக்கக் கூடாது என்று ஒரு சட்டமுன்வடிவு இந்த மன்றத்திற்கு வருகின்ற நேரத்தில் திரு. உமாநாத் அவர்கள் இதுகுறித்து பேசிய போது சென்னை யூனிவர்சிட்டி ரிஜிஸ்ட்ரார் பற்றி பல்வேறு குற்றசாட்டுகளை தொடுத்துக் காட்டினார்கள். ஆனால் அவர் தொடுத்துக் காட்டிய குற்றச் சாட்டுகளுக்கு அமைச்சர் அவர்கள் அப்போதே பதில் அளித்தார்கள். இதையெல்லாம் களைவதற்கு நான் நிச்சயமாக முயற்சிக்கிறேன். ஏனென்றால், பாரதிதாசன், பாரதியார்பல்கலைக் கழகங்களில் இருக்கிற ரிஜிஸ்ட்ரார்கள், கல்லூரி முதல்வராகவோ, அல்லது ரிடையர் ஆன பிரின்சிபாலாகவோ இருக்கிறார்கள். ஆனால், பிளிட்ஸ் பத்திரிகை எழுதியதைப்போல ஒரு கிளார்க் ரிஜிஸ்ட்ராராக மாற்றப்பட்ட விசித்திரம் இங்கே தான் இருக்கிறது. அவரும் பல ஆண்டு காலமாக அங்கே இருந்துகொண்டிருக்கிறார். எனவே அவர்கள் மாற்றப் பட வேண்டுமென்று மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் இதே அவையிலே பதிலளித்தார்கள். ஆனால் இதுவரையில் அவர் மீது எந்தவிதமான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் சாதாரணமாக குமாரசாமி என்கிற ஒரு ரிஜிஸ்ட்ராரை மட்டும் மாற்றுங்கள் என்று அவர் கேட்கவில்லை. சரமாரியாக குற்றச்சாட்டுக்களை தொடுத்துக் கேட்டார். அந்த சரமாரியான குற்றச்சாட்டுக்களை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஒப்புக்கொண்டதற்குப் பிறகு அதிலே திரு. உமாநாத் பேசுகிறபோது, இங்கே பேசிய அமைச்சர் அவர்கள் அதற்கு இங்கே பதிலளிக்கவில்லை. மேலவையிலே பேசிய சொன்னார்கள். அவர் 50 கால் சவரன் நகைகளை வாங்கிவிட்டார். பிறந்த நாள் விழாவிற்கு என்று காட்டியது. அவர் வாங்கவில்லை. சாதாரண 5 பவுன் கூட இருக்காது. இதுதான் அந்த செயின் என்று மேலவையிலே காட்டினார்கள்.

5 பவுன் வாங்கினாலும் லஞ்சம் லஞ்சம் தான். 500 பவுன் வாங்கினாலும் லஞ்சம் லஞ்சம் தான் என்பதை நான் மட்டுமல்ல இங்கே திரு. உமாநாத் அவர்களும் சென்ற முறை சுட்டிக்காட்டி னார்கள். 1977 ஆம் ஆண்டிலே அவருடைய பிறந்த நாள் விழா ஈரோட்டிலே நடைபெற்ற நேரத்தில் அதிலே பல்வேறு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக அன்றைய ஆளுநர் திரு. பட்வாரி அவர்களுக்கு புகார் வருகிறது. உடனே திரு. பட்வாரி அவர்கள் தமிழ்நாட்டினுடைய ஸ்பெஷல் செல் சி.ஐ.டி.-க்கு இதை ரெபர் செய்கிறார். அந்த ஸ்பெஷல் செல் சி.ஐ.டி. 1-6-79-ல் ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறது. அந்த 1-6-79—ல் இருப்பதைத்தான் சென்ற ஆண்டு சுட்டிக்காட்டியதைப் போல நம்முடைய குமாரசாமிக்கு ஈரோட்டிலே பிறந்தநாள் விழா எடுக்கப்பட்டது. அதிலே திரு. புருஷோத்தமன் என்கிறவர்—

"It is learnt that Thiru Purushothaman, the Proprietor of New Burns Electricals, Madras, a Contractor of the Madras University presented to him 50 quarter sovereign valued at Rs. 8000 during this function". என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களை வரிசையாகச் சொல்லிவிட்டு கடைசியாக அந்த ரிப்போர்ட் சொல்லுகிறது.

It is stated in the report under the heading, "General," as follows:

"He is reported to have received Commission from the Building Contractors of the University,"

(முற்பகல் 11-50)

பில்டிங் காண்ட்ராக்ட் கட்டுகிறவர் இடத்திலேயிருந்து அவர் பணத்தை வாங்குகிறார் என்று குறிப்பிட்டிருக்கிறது, சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலே. நான் கேட்கிறேன். இந்த சி.ஐ.டி. ரிப்போர்ட்டின் மீது என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது. இதுநாள் வரையில் என்று சென்ற ஆண்டு கேட்டார் திரு. உமாநாத் அவர்கள். அவர்கள் கேட்டதற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமன்றத்தினுடைய வாயை அடக்கிவிட்டு போய்விட்டார்கள். ஆனால் அவர்கள் கையை விரித்துக்கொண்டுதான் உட்கார்ந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த அரசுக்கும் பல்வேறு குறைபாடுகள் வருகின்றன. 1980 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி இங்கேயிருக்கிற செக்ரட்டேரியட்டிலேயிருந்து, அண்டர் செக்ரட்டரியிடமிருந்துஒரு ஜி.ஓ. அனுப்பப்படுகிறது.

Strictly Confidental

Government of Tamil Nadu

Education - University Education - University of Madras - Thiru Kumarasamy Registrar - University of Madras - Allegation of mal practices - enquiry officers to be Appointed - appointment - ordared.-

A number of complaints of malpractices such as misuse of power, favouritism to the rela ives in the matter of appointment to he University posts, amazing of wealth beyond his means obtaining illegal gratification in matters connected with th



University building and other transactions, housing of staff, im- proper handling of University accounts etc., alleged to have been committed by the Registrar have been received by the Governmens

In pursuance of the above complaint, the Government considers that there is a prima facie case for enquiring into the allegationt against the Registrar.....

என்று போடப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களை யார் விசாரிப்பது என்பதற்கு

1. The First Member and Commissioner of Land Revenue and Transport, Board of Revenue.

2. The Commissioner and Secretary to the Government, Education Department.

3. Commissioner and Secretary to Government, Finance Department.

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மூன்று அரசு அலுவலர் களும் திரு. குமாரசாமி மீது தூவப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை எல்லாம் விசாரிக்க வேண்டும் என்று சொல்லி, அவர்கள் விசாரித்து ஒரு அறிக்கையை இந்த அரசுக்கு 1980—ஆம் ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அறிக்கை என்ன ஆயிற்று என்றால் அது எங்கே இருக்கிறது என்று இதுவரையிலும் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. இவ்வளவிற்குப் பிறகும், இவ்வளவு குற்றச்சாட்டுக்கள் செய்ததற்குப் பிறகும், 1979 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 10ஆம் நாள் திரு. உமாநாத் அவர்கள் இந்த அவையிலே குற்றத்தைச் சாட்டுகிறார்கள். எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்படி எல்லாம் சென்ற ஆண்டு நாங்கள் குற்றம் சாட்டியதற்குப் பிறகு, 1980 ஆம் ஆண்டிலே மூவர் நடவடிக்கையை கவனிக்காமல், சென்ற ஆண்டு நான் குற்றம் சாட்டியதற்குப் பிறகு அமைச்சர் இந்த அவையிலே கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் தேதி நானும் திரு. உமாநாத் அவர்களும் இதே மன்றத்திலே பேசியதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி உடனடியாக அந்த நடவடிக்கையை எடுத்தாரா? ஏற்கனவே கவர்னர் பட்வாரி அவர்கள் போட்ட சி.ஐ.டி. ரிப்போர்ட் மீது நடவடிக்கை இல்லை. 1980 ஆம் ஆண்டு 3 கமிஷனர்களைப் போட்டு விசாரித்த ரிப்போர்ட்டின் மீது நடவடிக்கை இல்லை. ரெட்டி வைச்சது, முதலி அழிச்சது என்பதைப் போல, மறுபடியும் நடவடிக்கைக்கு வந்த பிறகு ஒரு வருஷம் கழிந்து சென்னைப் பல்கலைக் கழகத்திலே பணி புரிபவர்களுக்கு, குறிப்பாக, மாதம் ரூபாய் 750 க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்கள் பிரவன்சன் ஆப் கரப்சன் என்ற அடிப் படையிலே விஜிலன்ஸ் கமிஷனருடைய கட்டுப்பாட்டுக்குள்

வேண்டும் என்று ஒரு ஜி.ஓ.வை—ஜி.ஓ.எண். 741—18–4–83 அன்று இந்த அரசு பிறப்பிக்கிறது. பல்கலைக் கழகத்திலே வேலை புரிகிற 750–க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்கள் எல்லாம் இந்த பிரவென்சன் அன்ட் கரப்சன் ஆக்ட்க்குள்ளே வரவேண்டும் என்று அந்த ஜி. ஓ. சொல்கிறது. அந்த ஆணையை எதிர்த்து நம்முடைய வி.சி. அவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதுகிறார். காரணம்

The University is a Supreme body. The Government has no power to interfere in the Univers.tymatter.

நாங்களே எங்களுடைய பிராப்ளம்சை சால்வ்செய்து கொள்கிறோம், சர்க்காருக்கு இதிலே அதிகாரம் இல்லை என்று வி. சி. அவர்கள் இந்த அரசு போட்ட ஆணையை எதிர்த்து ஒரு கடிதம் எழுதுகிறார். உடனே அந்த லட்டரைப் பார்த்து நம்முடைய எஜுகேஷன் செக்ரட்டரி மதிப்பிற்குரிய திரு.சுந்தரராஜ், ஐ.ஏ. எஸ். அவர்கள் ஒரு பதில் எழுதுகிறார். என்னவென்று வி.சி. அவர்களே, பல்கலைக் கழகத்திலே குற்றம் நேரிட்டால் பொறுத்துக் கொள்ள முடியாது. அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, நாங்கள் போட்ட டி. ஓ. லெட்டர் ஆணைக்கு உட்பட்டு நீங்கள் எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று ஒரு டி.ஓ. லெட்டரை எழுதி விட்டு, அத்தோடு இன்னொன்றையும் இணைக்கிறேன். இந்தக் குமாரசாமி மீது புகார்கள் எக்கச்சக்கமாக வந்திருக்கின்றன. ஆகவே' அவற்றின் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி, 1983 ஜுலை இரண்டாம் நாள், இன்னொரு ஜி. ஓ.வை அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஜி. ஓ., எம்.எஸ். நெம்பர் 1038, 2–7-1983. இது ஜுலை இரண்டாம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஜி. ஓ. ஆனால் குமாரசாமி அவர்களிடத்திலே, அரசியல் வாதிகளாகிய நாமெல்லாம் சென்று கற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படி தனக்கு எதிரான ஒரு ஜி. ஓ. ஜுலை இரண்டாம் தேதியன்று பிறப்பிக்கப்படுகிறது என்று கேள்விப்பட்டவுடன், ஜுன் மாதம் 30 ஆம் தேதியே தனக்கு வேண்டிய ஒரு பேராசிரியரை விட்டு, உயர் நீதி மன்றத்திலே ஒரு ரிட் பைல் பண்ணச் செய்திருக்கிறார், அதுவுப லஞ்ச் மோஷன் போடுகிறார். ஐட்ஜ் கேட்கிறார்கள். அரசாங்கத்தின் தரப்பிலேயிருந்து நான் எதுவுமே கேட்கவில்லை, திடீர் என்று ஸ்டே கேட்கிறார்கள் என்று சொல்லி, அரசாங்கத்தைக் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லி, அரசின் தரப்பிலேயிருந்து பதில் எதிர்பார்ப்பதால், அது வரையில் 4 நாட்கள் ஸ்டே தருவேன் என்று சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோர்ட்டிலேயிருந்து கவர்ன்மெண்ட்டுக்கு நோட்டீஸ் வருகிறது. இந்த மாதிரி பேராசிரியர் ஒருவர் ஸ்டே கேட்கிறார்கள், அரசின் ஆணையை எதிர்த்து. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் நம்முடைய கல்வித் துறை செயலாள





அவர்கள், அந்தத் தடையை நீக்க வேண்டும். போட்ட ஆணை நிறைவேற்றப்பெற வேண்டும் எனவே, வழக்கறிஞர்கள் இந்தத் தடையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந் துரைத்து, சட்டத்துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு வழக்கு வழக்குமன்றத்திற்கு வருகிறது. இங்கேதான் கவனிக்க வேண்டும். அரசு தரப்பிலே யிருந்து யாரும் ஆஜராகவில்லை. அரசு தரப்பிலேயிருந்து யாரும் ஆஜராகாத காரணத்தால், எதிர்தரப்பு வழக்கறிஞர் அப்சலியூட் ஸ்டே வேண்டும் என்று கேட்கிறார்கள். அரசாங்கத்திலேயிருந்து யாரும் எதிர்த்து வழக்காட வரவில்லை ஆகவே, எங்களுக்கு அப்சலியூட் ஸ்டே வேண்டும் என்று கேட்கிறார்கள்.

நீதிபதி அவர்கள் கவர்ன்மெண்ட் பிளீடரைப் பார்த்து, என்ன பதில் சொல்கிறீர்கள் என்று கேட்கிறார். அவர் சொல் கிறார் ஸ்டேவை நீட்டிக்கலாம் என்று. எதிர் தரப்பினர் ஸ்டே கேட்கிறார்கள் அரசு ஆணையை எதிர்த்து, கவர்ன்மெண்ட் பிளீடர் தற்போது தந்திருக்கும் 4 நாட்கள் ஸ்டேவை நீட்டிக்க லாம் என்று சொல்கிறார். இதற்கிடையில் வெளியே வேறு ஒருவர்—பல்கலைக்கழக ஆசிரியர், ஸ்டேவை வெக்கேட் செய்ய வேண்டும் என்று சொல்லி பெட்டிஷன் கேட்கிறார்கள். என்ன காரணம்? பப்ளிக் இம்பார்ட்டன்ஸ், அது நியாயம் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் 2 ரூபாய் கொடுத்து பெட்டிஷன் போடுங்கள், அதுவரையில் ஸ்டே இருக்கும் என்று ஜட்ஜ் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பேராசிரியரும் பணம் கட்டி பிளீடிங் பெட்டிஷன் போட்டு ஸ்டே—வை வெக்கேட் செய்ய வேண்டும் என்று வாதாடிய போதும், சர்க்கார் தரப்பிலே யிருந்து வழக்கறிஞர்கள் வந்து வாதாடவில்லை, அரசின் சார்பாக. எனவே நீதிபதி என்ன செய்கிறார்? இரண்டு, மூன்று முறை களும் அரசின் சார்பாக யாரும் வராத காரணத்தால், அரசாங்கத் தரப்பிலேயிருந்து எந்தத் தகவலும் வராத காரணத்தால், கவர்ன்மெண்ட் பிளீடரும் ஸ்டேவை நீட்டிக்கலாம் என்று சொன்ன காரணத்தால், அப்சலியூட் ஸ்டே கொடுத்துவிடுகிறார்கள், அரசு ஆணையை எதிர்த்து.

அப்படி தீர்ப்புக் கொடுத்த பிறகு, அந்த தீர்ப்பை எதிர்த்து அந்தப் பேராசிரியர் அப்பீலுக்குப் போகிறார். டிவிஷன் பெஞ்சுக்கு வழக்கு வருகிறது. வழக்கை விரைவாக முடிக்க வேண்டும், ஸ்டேவை வெக்கேட் செய்ய வேண்டும் என்று அந்த அப்பீலுக்கு வந்தவர் நீதிமன்றத்திலே வாதாடுகிற போது, அப்போதும் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் வரவில்லை. எனவே வேறு வழி இல்லாமலே அப்சலியூட் ஸ்டே வழங்கப்பட்டது. இப்போது 1984 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3 ஆம் தேதிக்கு வழக்கின் வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன். அரசாங்கத்திலே, திரு. குமாரசாமியை எதிர்த்து, நம்முடைய கல்வி இலாகா செயலாளர் டிபார்ட்மெண்ட்டிலே விசாரிக்கலாம் என்று போட்ட ஜி.ஓ. விலே பல்கலைக் கழகத்திலே இருக்கிற ஆசிரியர்கள் 750 ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்கினால் அது பிரவின்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்டுக்கு உள்ளே வரவேண்டும் என்று போட்ட ஜி.ஓ.வை, எதிர்த்து, வேறு ஒருவர் மூலமாக ஸ்டேவை கேட்டு வாங்கிக் கொண்டு, இந்த திரு. குமாரசாமி, அதில் ஒளிந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஸ்டேவை வெக்கேட் பண்ணாத காரணத்தால் இவ்வளவு விஷயங்கள் இந்த பல்கலைக் கழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே அதை பாதுகாப்பதற்கு யார் உறுதுணையாக இருந்தார்கள்? இதுவரையில் சட்டத் துறையின் மீது யாராவது தீர்ப்பு கேட்டது உண்டா? ஏன் நீங்கள் இதில் எந்த ஆக்ஷனும் எடுக்கவில்லை என்று. பல்கலைக் கழகத்திலே சிண்டிகேட் தேர்ந்து எடுக்கப்படாமல், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் இருந்த நேரத்தில், இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆனால் சிண்டிகேட்டுக்கு அந்தப் பவர் உண்டு. எனவே அரசாங்கத்தினுடைய ஆணையை ஏற்று நாமே அந்தக்காரியத்தைச் செய்யலாம் என்று சிண்டிகேட்உறுப்பினராக நான் வந்தபிறகு வைஸ்–சான்சலருக்கு ஒரு கடிதம் எழுதினேன் அந்த கடிதத்திலே

(நண்பகல் 12-00)

I understand that the Tamil Nadu Government by G.O.Ms. No 741 Education. Science and Technology extended the provisions of Prevention of Corruption Act, 1947, to the employees of the University. I also understand that on 2-7-1983 G.O.Ms.No.1038 Education. Science and Technology was passed to refer the charges of corruption levelled against Mr. C. K. Kumaraswamy, Registrar, to the Vigilance Commission for investigation.

I came to know that so far the two G.Os. passed by the Government are not placed before the Syndicate for its consideration.

As a lawyer I know that no employee of the Corporation and statutory body can claim himself immune to the Prevention of corruption Act, 1947 as amended in 1974. It is the responsibility of the Syndicate to discuss and decide the adoption of the above said G.Os. என்று நான் எழுதினேன். அதற்கு நம்முடைய வைஸ்-சான்சலர் அவர்கள் பதில் எழுதினார்கள். தலைவர் அவர்களே, கவனிக்க வேண்டும்.

Regarding Madras University being brought under vigilance, I wish to state that this is a complicated matter in the sense that there is a set procedure for the Government according to the Madras University Act to call for enquiry. etc. Also it is unfortunate only Madras University has been singled out for vigilance.



மெட்ராஸ் யுனிவர்சிடிக்கு மட்டுமல்ல, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினுடைய பல்கலைக் கழகத்திற்கும் அந்தச் சட்ட விதி முறைகள் பொருந்தியிருக்கின்றன.

The Vice-Chancellor, the Registrar, the Finance Officer and other employees of the University shall be deemed to act or purporting to act in pursuance of any of the provision of the Act to be public servant within the meaning of the section 21 of the Indian Penal Code என்று நாம் போட்டிருக்கிறோம். அதைக்கூடத் தெரிந்துக் கொள்ளாமல் நம்முடைய வைஸ்-சான்சலர் எழுதுகிறார் unfortunatly துரதிருஷ்டவசமாக என்று எழுதுகிறார். மேலும்

எழுதுகிறார், In the meanwhile' I think one of the teachers has filed a writ and the complete judgment is not yet in the hands of the University என்று. அப்படி வாங்கப்பட்ட ஸ்டே ஆர்டரின் காப்பி ஒரு ஆண்டு ஆகியும்கூட யுனிவர்சிடிக்கு வரவில்லையென்று சொல்லி அவரும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்.

The entire matter will certainly be placed before the Syndicate at an appopriate time என்று அவர்கள் எழுதினார்கள். நான் வைஸ்-சான்சலருக்குச் சொன்னேன். 'அப்ரோப்ரியேட் டைம்' என்பது இதுதான். நான் எழுதினேன், Regarding the vigilance G O. I am happy to understand that you are not interested in shielding anybody from vigilance commission. I hope you will respect the commitment of the State Goverment. to refer him to vilgilance for charges of corruption.I request that the G. Os. should be placed for the Syndicates consideration immediately, என்று. ஆனால் நடந்து முடிந்த இந்த சிண்டிகேட் கூட்டத்தில்கூட அவர்கள் அதை வைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிண்டிகேட் புரசிடிங்க்ஸ் பூராவையும் படித்து நாம் இங்கே டிஸ்கஸ் பண்ணமுடியாது. அங்கே அதைச் சொல்லலாம். இங்கேயே நாம் ஒரு சிண்டிகேட் கூட்டத்தை நடத்தமுடியாது.

திரு. ரா. உமாநாத்: அதுவல்ல. சிண்டிகேட், கான்ஸ்டிட்யூஷன், அதற்கு நாமினேஷன் எல்லாம் இங்கே வருகிறபோது அது பங்க்ஷன் பண்ணுவது சம்பந்தமாகவும் பேசலாம், அந்த வகையில் இவையெல்லாம் கனக்டட் மேட்டர்ஸ்தான். அவர் சுருக்கமாக முடித்துக்கொள்வார்.

திரு துரைமுருகன்: இந்த மன்றத்திலிருந்து நான் அங்கே போய் இருக்கிறேன். அங்கே கூட சொன்னேன். அங்கே டிரஷரி பெஞ்ச், அப்போஸிஷன் எல்லாம் கிடையாது, நாமெல்லாம் ஒன்றாக இருந்து பாடுபடவேண்டுமென்று சொன்னேன். இன்றைக்கும் நான் இந்த மாமன்றத்திலே சொல்கிறேன். இந்தப் பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக நான் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். இந்த நிலையில் கோர்டில் அவரைப் பாதுகாத்திருக்கிறீர்கள். அங்கே பல்கலைக் கழகத்திலே அவர் பாதுகாக்கப்பட்டிருக்கிறார். இரண்டுக்கும் மேலாக அரசு போட்ட ஆணைமீது நடவடிக்கை எடுக்கலாம் என்று நான் கேட்டால் அதைக் கூட சிண்டிகேட்டில் ...வக்க மறுத்து இருக்கிறார்கள் என்றால் இன்றைக்கு என்ன நிலைமை

அது மட்டும் அல்லாமல் இன்னும் பல குற்றச்சாட்டுகள்—குற்றச்சாட்டுகள் என்று நான் சொல்லமாட்டேன்—அதில் புரோ-சான்சிலராக இருக்கின்ற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 1981-ம் ஆண்டு 'ஸ்டுடன்ட்ஸ் அமினிட்டி சென்டர் என்ற ஒரு சென்டரை கட்டியிருக்கிறார்கள். அதில் ஏறத்தாழ 30லிருந்து 35 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. அங்கே நம்முடைய மாணவர்கள் உட்கார, படிக்க, சாப்பிட வசதிகள் செய்யப்பட்டு அது கட்டப்பட்டது. இதை கட்டியவர் யார் என்றால் புருஷோத்தமன் என்பவர். நான் முன்னால் சுட்டிக்காட்டினேனே அந்த புருஷோத்தமன் தான். அவர் சாதாரண ஒரு எலக்டிரிக் இன்ஜினியர். அவர் தான் கான்டிராக்ட் எடுத்து இருக்கிறார். சிவில் இன்ஜினியர் வேறு. எலக்டிரிக் இன்ஜினியர் வேறு. அந்த புருஷோத்தமன் ஏற்கனவே ரிஜிஸ்டிராருக்கு 50 கால் சவரன் பில்டிங் கமிஷன் மூலமாக கொடுக்கிறார் என்று நம்முடைய சி.ஐ.டி, ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புருஷோத்தமனுக்குத்தான் இந்த ஸ்டுடன்ட்ஸ் அமினிட்டிசென்டர் கட்டுவதற்கு கான்டிராக்ட் கொடுக்கப்பட்டு 1981-ல் கட்டி முடித்து இருக்கிறார். இது வரையில் அந்த 'ஸ்டுடன்ட்ஸ் அமினிட்டி சென்டர் திறக்கப்படவில்லை, அதை பூட்டி வைத்து இருக்கிறார்கள். அது 3 அடுக்கு கட்டிடம். அதன் கிரவுண்டு ஃப்ளோரில் பெரிய வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை நான்தான் சுட்டிக்காட்டினேன். இந்த வெடிப்பைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை. நான் தான் அதை எடுத்துச் சொன்னேன். புத்தகத்தை அங்கிருந்து எடுத்து இருக்கிறார்கள். அப்படி வெடிக்கிற அளவுக்கு ஒரு மோசமான கட்டிடத்தைக் கட்டியவர் புருஷோத்தமன் என்கிற ஒரு எலெக்டிரிக் கான்டிராக்டர். அவர்மீது என்ன செய்து இருக்கவேண்டும். பல்கலைக்கழகம் இவர் மீது நடவடிக்கை எடுத்து இருக்கவேண்டும். ஆனால் மாறாக அவருக்கு போனஸ் அளிப்பது போல அடுத்து 'இன்ஸ்டிடியூட் ஆப் கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்' என்ற பில்டிங்கை கட்டுவதற்கு 50 லட்ச ரூபாய் அளவுக்கு அவருக்கு—எந்த புருஷோத்தமன் ஸ்டுடன்ஸ் அமினிட்டி சென்டர் கட்டி வெடிப்பு விழச் செய்தாரோ அவருக்கு—51 லட்சம் ரூபாய் அளவுக்கு கான்டிராக்ட்டை. அவர் தலையில்



வைக்கிறார்கள். டெண்டர் விடப்பட்டிருக்கிறதா என்றால் விடப்பட்டிருக்கிறது. நம்முடைய புரோ-சான்சிலர் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அவர் இந்த மன்றத்தில் கல்வி அமைச்சராக இருக்கிறவர். போட்டிருக்கிற டெண்டரிலேயே அவர்தான் ஹையஸ்ட் டெண்டர் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட இவருக்கு ஹையஸ்ட் டெண்டரிலே கொடுக்க வேண்டிய நிலைமை என்ன என்று நான் தெரிந்துகொள்ள விழைகிறேன்.

அது மட்டும் அல்லாமல் இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அந்த கான்டிராக்டர்—சிவில் கான்டிராக்டர் அல்லது எலெக்டிரிக் கான்டிராக்டர்—மத்திய அரசிலோ அல்லது மாநில அரசிலோ ரிஜிஸ்ட்ரேஷன் செய்து இருக்கவேண்டும், என்பது இந்த மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். ஆனால் அவர் மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ரிஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்ளாத ஒரு எலெக்டிரிக் கான்டிராக்டராக இருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் இடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அவரைதான் கமிஷன் வாங்குகிற பில்டிங் கான்டிராக்டர் என்று சி.ஐ.டி. ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

நான் இன்னும் ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன், சிண்டிகேட் மீட்டிங் முக்கியமானது. அதில் ரிஜிஸ்ட்ரார் ஒரு மெஜஸ்டிக் கிளார்க். அவர்தான் அதனுடைய முடிவை எடுத்து நடவடிக்கை செய்பவர். நம்முடைய சட்டமன்றத்தில் பேசுகிறோம், ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. இதை இந்தத் துறை செகரட்டரி மெம்பர்களுக்கு தெரிவிக்கவேண்டும். இந்த மன்றம் எந்த முடிவை எடுக்கிறதோ அதை தான் அவர் மெம்பர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமே தவிர மாற்றித் தெரிவிக்கக்கூடாது. ஆனால் அப்படி மாற்றி ரிஜிஸ்ட்ரார் தெரிவித்து இருக்கிறார். இந்த ஒரே காரணத்திற்காக அவர் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்க வேண்டும் சட்டப்படி.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உதாரணமாக 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி ஒரு சிண்டிகேட் கூட்டம் நடக்கிறது. அந்த சிண்டிகேட் கூட்டத்தில் ஐட்டம் நம்பர் 71 என்ன சொல்கிறது என்றால்

The Coordinator in the department of adult and Continuting Education as a permanent post.. என்று ஒரு புரபசரை பர்மனென்ட் போஸ்ட்டில் போட்டு இருக்கிறார்கள். அதை சிண்டிகேட் பாஸ் செய்கிறது. அந்த சிண்டிகேட் முடிவை அந்த புரபசருக்கு எப்படி அறிவித்தார் என்று கேட்டால் Reference D.3231/8.8.78-The appointment was purely Temporary and intendable upto 31.3.1979. என்று போட்டிருக்கிறார். பர்மனென்ட் போஸ்டு என்று முடிவு எடுக்கிறது சிண்டிகேட். ஆனால் அதை அவருக்கு அறிவிக்கிறபோது ப்யூரிலி டெம்பரரி என்று அறிவித்து இருக்கிறார். இந்த குற்றச்சாட்டுக்கு அவரை நீங்கள் சஸ்பெண்டு செய்யலாம் என்று நான் அவரிடத்திலே சொன்னேன்.

அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு பத்திரிகையிலே பல விடங்களில் பல்வேறு மக்கள் மத்தியிலும் பல்கலைக் கழகத்திலும் வியாபித்து இருப்பது சிமெண்ட். இந்த சிமெண்ட் பற்றி சிண்டிகேட் கூட்டத்தில் கேட்டேன். இப்படி ஒரு செய்தி வந்து இருக்கிறது. 40 ஆயிரம் மூட்டைகள், 2 ஆயிரம் டன் கொரியன் சிமெண்ட் பல்கலைக் கழகத்தினுடைய கட்டிடங்களுக்காக வாங்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள் அதிலே முதல் தவணையாக கட்டிடத்திற்காக 1983ம் ஆண்டு. மார்ச் மாதம் 17-ம் தேதி ஆயிரம் டன் வந்து இருக்கிறது.

(பிற்பகல் 12–10)

அடுத்து, இன்னொரு ஆயிரம் டன் ஜூலை 7 ஆம் தேதி வந்திருக்கிறது. இந்த 2,000 டன், 40,000 மூட்டை சிமெண்டு இன்றைக்கு என்ன செய்யப்பட்டிருக்கின்றது? எங்கே வைக்கப் பட்டிருக்கின்றன? நான் திருப்பித் திருப்பிக் கேட்டேன். அவையெல்லாம் காணாமல் போயிருக்கின்றது என்று சொல்கிறார்கள். லாரியினுடைய டிரிப் ஷிட்டைப் பார்த்தால், ஹார்பரிலிருந்து நீலாங்கரைக்குப் போகிறது என்று சொல்கிறார்கள். ஹார்பருக்கும் நீலாங்கரைக்கும் என்ன சம்பந்தம்? பல்கலைக் கழகத்தினுடைய வளாகம் எங்கே? ஏ.சி. காலேஜ் எங்கே? அதற்குப் பிறகு தரமணி எங்கே? இவ்வளவும் இருக்கும்போது நீலாங்கரைக்கு அந்த மூட்டைகள் எடுத்துச் செல்லப்பட்ட மர்மம் என்ன என்று நான் கேட்டேன். இன்னுங்கூட நான் கெஞ்சிக் கேட்டேன். அந்த மூட்டைகளை நீங்கள் எங்களுக்குக் காட்டவேண்டும், பெர்சனல் வெரிபிகேஷன் தேவை. அப்படி இல்லாவிட்டால், இருக்கிற அட்ரசையாவது கொடுங்கள். பழைய காலத்தில் கேட்பார்களாம், சுபாஷ் சந்திர போஸ் இருக்கிறாரா? இல்லாவிட்டால், அவர் இருக்கிற இடத்தையாவது காட்டுங்கள் என்று. அப்படிக் காட்டுங்கள் என்று நான் கேட்டேன். அப்பொழுதும் வைஸ்—சான்சிலர் அமைதியாக இருந்து விட்டார். நான் வேண்டாம். இருக்கிற சிண்டிகேட் மெம்பர்களிலே 5 பேர்களைப் போடுங்கள் அவர்கள் போய் பார்த்துவிட்டு வரட்டும் என்று நான் கேட்டேன். அப்பொழுதும் பதில் இல்லை. அந்த சிமெண்ட் பிளாக் மார்க்கெட்டிலே விற்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே உண்டா, இல்லையா? கேட்டேன், அப்பொழுதும் பதில் இல்லை., இப்படிப்பட்ட சிமெண்ட் ஊழலுக்குக் காரணமாக இருந்தவர் காண்ட்ராக்ட் கொடுப்பதிலே ஊழலுக்குக் காரணமாக இருந்தவர், அரசாங்கத்தினுடைய கண்ணிலேகூட குற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டு, ஜி.ஓ. பிறப்பித்திருக்கிற காரணத்தாலே, அவரை நீங்கள்—இந்த சிண்டிகேட்—சட்டப்படி சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று நான் கேட்டேன். ஆனால், முடியாது என்று அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்ட பலர் அவருக்கு ஆதரவாக இருந்தார்கள். ஆனால், கல்வித் துறைச் செயல்ாளர் பல்கலைக் கழகத்தினுடைய சட்டப்படி செய்யலாம் என்று விளக்கம் கொடுத்தார்கள். ஆனால், கடைசியிலே இவ்வளவு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதோடு மட்டுமல்லாமல்



நான் இன்னமும் சொல்வேன், பல்கலைக்கழகத்திற்கென்றே கொடுக்கப்பட்டிருக்கிற பேப்பர்--வேறு எங்கும் கிடைக்காது; அதை யாரும் மிஸ்யூஸ் பண்ணக் கூடாது. அவர் எம்.எல்.சி. யாக நிற்பதற்கு, அந்தப் பல்கலைக்கழக பேப்பரிலே 1 இலட்சம் பேப்பரை எடுத்து, கிராஜுவேட்ஸ் என்ரோல்மென்ட் பார்ம் அடித்திருக்கிறார். சஞ்சீவி என்ற புரபசர் தன்னுடைய குறையை பல்கலைக்கழகத்தின் பேப்பரிலே எழுதினார் என்பதற்காக, ஏன் பல்கலைக் கழக பேப்பரிலே எழுதினாய் என்று அவருக்கு மெமோ கொடுத்தவர்—ஆனால், பல்கலைக் கழக பேப்பரிலேயிருந்து 1 இலட்சம் எடுத்து, அவர் எம்.எல்.சி. யாக நிற்பதற்காக, என்ரோல்மென்ட் பார்ம் அடித்திருக்கிறார். இது நியாயமா? எனவே, இதையெல்லாம் வைத்து, அவரை சஸ்பெண்ட் செய்யவேண்டுமென்று கேட்டு, கல்வித்துறை செயலாளர் போட்ட ஜி.ஓ.படி குற்றவாளி என்ற அவரை சட்டப்படி சஸ்பென்ட் செய்யலாம் என்று எந்தக் கல்வித் துறை செயலாளர் சொன்னாரோ, அவர் ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டபொழுது, நான் ஒருவனாக அங்கே நிறுத்தப் பட்ட காரணத்தாலே, ஓட்டுக்கு விடப்பட்டதா? பல்கலைக் கழக வரலாற்றிலே அப்படிப்பட்ட ஓட்டுக்கு விடுகிற விவகாரங்கள் அதிகம் கிடையாது. எப்பொழுதோ வந்திருக் கிறது. ஆனால், இதில் ஓட்டுக்கு விட்டபொழுது, எந்தக் கல்விச் செயலாளர், திரு. குமாரசாமியை விஜிலன்ஸுக்கு ரெபர் செய்ய வேண்டுமென்று எழுதினாரோ, எந்தக் கல்விச் செயலாளர், பல்கலைக்கழகத்திலே, ரூ. 750—க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்கள் பிரிவன்ஷன் ஆப் ஆன்ட்டி கரப்ஷன் ஆக்டின் கீழே வரவேண்டுமென்று எழுதினார்களோ, அதே செயலாளர், ரிஜிஸ்டிராரை சஸ்பெண்ட் செய்யக் கூடாதென்று கையைத் தூக்கினார், அரசாங்கத்தின் அதிகாரிகள் எல்லாம்—உங்களாலே நியமனம் செய்யப்பட்டவர்கள்— அவருக்கு ஆதரவாகக் கையைத் தூக்கினார்கள். ஏழு பேர்கள் அவரை சஸ்பெண்ட் செய்யக்கூடாது என்றார்கள். நான்கு பேர்கள் சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று எனக்கு ஓட்டுப் போட்டார்கள். நான்கு பேர்கள் அமைதியாக இருந்தார்கள். ஆனால், நான் சொல்வது நியாயம் என்று ஒத்துக் கொண்டார்கள்.

24 ஆம் தேதி நான் கிளப்பிய பிரச்சினை இது. நான். டிசென்ட் நோட் கொடுத்திருக்கிறேன். 25 ஆம் தேதி வரையிலும் என்னைக் கூப்பிட்டு விளக்கம் சொல்லவில்லை. 26 ஆம் தேதி என்னைக் கூப்பிட்டு விளக்கம் சொல்லவில்லை. 27-ஆம் தேதி என்னைக் கூப்பிட்டு, துரைமுருகன், நீங்கள் வேகமாகக் குற்றச்சாட்டு சொன்னீர்கள். எங்களுக்குப் புரியாமல் போய்விட்டது. இப்போதுதான் புரிந்தது என்று விளக்கம் சொல்லவில்லை. 26,27,28,29, 30, போய் நேற்றைய தினம் 6 மணிக்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். யார், யாரை? திரு. வையாபுரி. டைரக்டர் அப் டெக்னிக்கல் எடுக்கேஷன், ஒருவர். நான் அவர்மீதுதான் குற்றம்

சாட்டினேன். ஸ்டுடன்ட்ஸ் அமனிட்டீஸ் சென்ட்டர் கட்டி, அதில் கிராக் விழுவதற்கே மூலகாரணம்—அந்த பில்டிங் கமிட்டியினுடைய சேர்மன்—அந்த ஊழலிலே சம்பந்தப்பட்ட ஒருவர்—இந்த வையாபுரி என்பதை நான் அங்கேயும் சொன்னேன், இங்கேயும் சொன்னேன். அரசாங்கத்திலே புரையோடிப் போயிருக்கிற நோய்க் கிருமிகளிலே ஒருவர் இவர்—டெக்னிக்கல் எடுக்கேஷன் டைரக்டர், என்று. அவர்தான் வி.சி.க்கு துர் மந்திரி. அவரை ஒருவராகக் கமிட்டியில் போட்டிருக்கிறார்கள், இந்த மூட்டைகளை எண்ணுவதற்கு. அதே போல், அரசாங்கத்தினுடைய கல்வி இலாகா டைரக்டர் ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. நாராயணசாமியை மட்டும் நேற்று போட்டிருக்கிறார்கள். நம்முடைய செக்கரட்டரி இருக்கிறார். சிண்டிகேட்தான் வி.சி-க்கு கமிட்டி போடுவதற்குப் பவர் கொடுக்க வேண்டும். ஆனால் 24-ஆம் தேதி சிண்டிகேட் மீட்டிங்கில் ஸ்பெஷல் கமிட்டி போடுவதற்கு ஒத்துக்கொள்ளாமல் போனதற்குப் பிறகு, சிண்டிகேட் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு, இப்படி செய்திருக்கிறார்கள். ஸ்பெஷல் கமிட்டி போடலாம் என்று சிண்டிகேட்டில் வி.சி-க்கு அதிகாரம் வழங்கவே இல்லை. "தி கமிட்டி இட்செல்ப் இஸ் ஏன் அன்-கான்ஸ்ட்டிடியூஷனல் ஒன்."

ஆனால் நேற்று போட்டிருக்கிறார்கள். குற்றம் சாட்டியவன் நான். என்னை அழைத்துக்கொண்டுபோய், துரைமுருகனே, நீ மூட்டை இல்லை என்றாய்; ஆனால் எண்ணிக்கொள் என்று காட்டியிருக்கலாம் தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். முதலில் வந்தது ஆயிரம் டன் அகோமெரினா என்ற கப்பலில்; இரண்டாவது சடினா என்ற கப்பலில் ஆயிரம் டன் வந்தது, கொரியா நாட்டு சிமெண்ட்: மூட்டைக்கு மூட்டை அந்தக் கப்பலின் முத்திரை இருக்கும். இப்போது அமைச்சர் அவர்கள் சொல்வார், துரைமுருகன், நான் விசாரித்துப் பார்த்தேன். எனக்கு ஒன்றும் அவரைக் காக்க வேண்டிய அவசியம் இல்லை. முதலில் வந்த ஆயிரம் மூட்டை சிமெண்ட் நேராக பாலவாக்கத்திற்கு நான்-டீச்சிங் குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கு அனுப்பப்பட்டது. அங்கே ஏற்கெனவே இரண்டாயிரம் டன் தேவைப்பட்டது. இந்த ஆயிரம் மூட்டையை அதிலே போட்டு விட்டோம். எனவே இரண்டாயிரம் மூட்டையிலே அதைக் கட்டிவிட்டோம் என்று சொல்வார். அதுமட்டுமல்ல, துரைமுருகன், இன்னும் கூட உனக்கு நான் சொல்வேன். மிச்சம் இருப்பது எங்கெங்கே இருக்கிறது என்று கேட்டால், உனக்குத் தெரியாதா? ஏ.சி. காலேஜில் 330 டன்: யூனிவர்சிட்டியில் 175 டன் இருக்கிறது; காந்திநகர் கோடவுனில் 350 டன் இருக்கிறது. எங்கே போய் வேண்டுமானாலும் எண்ணிப் பார்க்கலாம் என்பார். காந்தி நகரிலே இருக்கிற கோடவுன் யாருடையது என்று கேட்டால். நான் நேற்றைக்கு இராத்திரி 8 மணிக்கு மேல் வெரிபை செய்தேன்.



அது புருஷோத்தமனுடைய வீடு. புருஷோத்தமனுடைய வீடு எப்படி யூனிவர்சிட்டியின் கோடவுன் ஆகும்? அந்த மூட்டைகளை பல்கலைக் கழகத்திலே நானே பார்த்தேன். நான் இன்றைக்கும் சொல்கிறேன். தவறு இருந்தால் திருத்திக் கொள்கிறேன். குற்றம் சாட்டுகிறபோது எவ்வளவு தைரியம் ஒருவருக்கு உண்டோ, அது தவறு என்று சொன்னால் அதற்காக வருத்தப்படுகிற மனப்பான்மை வேண்டும். இந்த மன்றத்திலே பெருந்தலைவரோ, துணைத்தலைவரோ அல்லது தங்கள் தலைமையிலோ ஒரு கமிட்டி போட்டு எப்படி பல்வேறு ரெக்கார்டுகள் பரிசீலிக்கப்படுகின்றனவோ, அப்படி முதல் வரிசையிலே இருக்கிற பல தலைவர்கள் போகட்டும். அந்த மூட்டைகள் வந்ததை கணக்கிட்டுப் பார்க்கட்டும். ஆனால் இன்றைக்கு ஈ.ஈ.-யிடம் யுடிலிசேஷன் சர்டிபிகேட் ஒன்று வாங்குகிறார்கள், ஒரு போகஸ் ரெக்கார்டை தயார் செய்து ஏட்டிலே எழுதினால் போதுமா? நாட்டு மக்களுடைய கண்களுக்கு காட்டப்பட வேண்டாமா? அந்த மூட்டைகள் எங்கே? நீலங்கரைக்குப் போயிற்றா? இல்லை, மதுக்கரைக்குப் போயிற்றா? விவகாரத்தை நான் விளக்கத் தேவையில்லை. ஆனால் ஒரு குற்றச்சாட்டை மறைக்க ஒன்பது குற்றங்களைப் பல்கலைக் கழகத்தினுடைய முன்னோடிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது இதுதான்; நான் அவர்கள் மீது மரியாதை இல்லாதவன் அல்ல. தாங்கள் அறிவீர்கள். உங்களை நான் இவ்வளவு பெருமையாக இதுவரைக்கும் விமர்சித்து பேசியிருக்க மாட்டேன். தாங்கள் அறிவீர்கள். பல்கலைக் கழகத்தினுடைய விவகாரத்திலே நான் கேட்கிறேன், நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். கோர்ட்டிலேயிருந்து அவரை காப்பாற்றி இருக்கிறீர்கள்; அமெனிட்டி சென்டரிலிருந்து காப்பாற்றி இருக்கிறீர்கள்; 1979 ஆம் ஆண்டு சி. ஐ. டி. ரிப்போர்டில் நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்கள்; 1980ஆம் ஆண்டு அரசு அதிகாரிகள் கொடுத்த அந்தப் பிரச்னையில் நீங்கள் காப்பாற்றி இருக்கிறீர்கள். திரு. உமாநாத் அவர்கள் பேசியதற்கு பிறகு ஏற்பட்ட அந்தப் பிரச்னையில் காப்பாற்றியிருக்கிறீர்கள். மூட்டையை திருடிய ஒருவரை மூட்டை கட்டி பல்கலைக் கழகத்தை விட்டு வெளியே அனுப்புவதற்குப திலாக அவருக்கு வெண்சாமரம் வீசுவீர்களானால், நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அருண் சௌரி அன்று அந்துலே மூட்டையை வைத்துவிட்டேன் என்று சொன்னார். அருண் சௌரி அழகாகச் சொன்னார். நான் குற்றம் சாட்டிய அன்றைக்கு மூட்டை இல்லை. அதற்கு பிறகு நீ ஆயிரம் அடுக்கியிருப்பாய் என்றார். இன்றைக்கு வேண்டுமானால் ஊரை மறைக்க, உலகத்தை மறைக்க 10 மூட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கலாம் அந்த மூட்டைகளில் சிமெண்ட் இருக்கிறதா? சாம்பல் இருக்கிறதா? அல்லது உள்ளே இந்தியன் சிமெண்ட் திணிக்கப்பட்டிருக்கிறதா? யார் கண்டுபிடிப்பது? பாலவாக்கத்திற்கு ஆயிரம் டன் அனுப்பினோம் என்று

இன்றைக்கு பொய் ரெக்கார்டு தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். பாலவாக்கத்திலே கட்டப்பட்ட நான்-டீச்சிங் குவார்ட்டர்ஸ், முதல் தவணை சிமெண்ட் வருவதற்கு முன்னாலேயே 80 சதவிதம் கட்டி முடிக்கப்பட்டு, சீலிங் போடப்பட்டு, வர்ணம் தீட்டுகின்ற நிலையில் இருந்தது. எனவே சேலஞ்ச் பண்ணிச் சொல்கிறேன். அந்த நான்-டீச்சிங் குவார்ட்டர்ஸ்ஸிற்கு கொரியன் சிமெண்ட் பயன்படுத்தப் பட்டதா? எவ்வளவு பயன்படுத்தப் பட்டது? யார் அந்த ரெக்கார்டைப் பார்ப்பது? நான் இன்னும் சொல்கிறேன். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பொய் ரெக்கார்டுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சரை கேட்கிறேன்; நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அவரோடு நான் சேரவில்லை; குற்றவாளியை நான் கண்டுபிடித்தே தீருவேன் நியாயப்படி நடப்பேன்; என்று; நீங்கள் சொல்வது உண்மையானால் - இன்னும் பல்வேறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. வீடு மாற்றிய குற்றச்சாட்டு; தோட்டம் வாங்கிய குற்றச்சாட்டு; அதுபோல பல குற்றச்சாட்டுகள். இந்த குற்றச்சாட்டுகளை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், சி.பி.ஐ. என்குயரி போடுங்கள். துரைமுருகன் சொன்னார் என்று சொல்லி உங்களுடைய ஆஸ்தான ஜட்ஜ்கள் சிலபேர் இருக்கிறார்களே, அவர்களைப் போட்டுவிட்டு என்னை வம்பிலே மாட்டாதீர்கள். எனக்குத் தெரியும். எனவே சி.பி.ஐ. விசாரணை போடுங்கள். நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். பொறுப்போடு சொல்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இல்லாவிட்டால், இத்தனைக் குற்றச்சாட்டுக்களுக்கும்—பிளிட்ஸ் பத்திரிகை எழுதியதைப்போல, குமாரசாமி மீது எந்தக் குற்றச்சாட்டு வந்தாலும் அமைச்சர் அரங்கநாயகம் பாதுகாக்கிறார் என்றால், இதில் அமைச்சர் அரங்கநாயகத்திற்கே பங்கு உண்டு என்ற குற்றச்சாட்டை அவர் மீதே சுமத்தி அமர்கிறேன், வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, 1923-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம், 1965-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழகச் சட்டம் ஆகியவற்றை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவுகளின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலே உள்ள பிரச்னைகளுக்குப் போவதற்கு முன்னால் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி, மேலும் இருபத்தைந்தாண்டுகளையும் கொண்டாடி இருக்கிறது. ஒரு காலத்திலே மிகப் பெருமையாக இருந்த



பல்கலைக் கழகம் அது என்பதிலே நமக்குப் பெருமை உண்டு, உலகத்திலே மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களிலே, முதன்மையாக இருந்த பல்கலைக் கழகங்களிலே இதுவும் ஒன்றாக இருந்தது என்பதையும் எண்ணிப்பார்க்கிறோம். இந்தியாவிலே வாழ்ந்த அறிஞர்களில் ஒருவரான திரு. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் துணைவேந்தராக இருந்து பணியாற்றிய காலத்தையெல்லாம் பூரிப்போடு எண்ணிப்பார்க்கிறோம். பல்வேறு பெருமைகளுக்கு இலக்காக இருந்த இந்தப் பல்கலைக் கழகம் இன்றையதினம் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி இருக்கிறது. இந்த மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நீண்ட நெடுநேரம் விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 125 ஆண்டுக்காலத்தில் இல்லாத அளவிலே, இப்படிப் பல்வேறு குறைகள், ஊழல்கள், தவறுகள் நடந்திருப்பதாகச் சொல்வதாலும், இதைப்பற்றித் தமிழகத்திலே உள்ள பத்திரிகைகள மட்டுமல்லாது வடபுலத்திலே உள்ள பத்திரிகைகளிலேயும் வந்துவிட்ட காரணத்தினால் நான் கேட்டுக் கொள்கிறேன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கைஎடுத்து, இதனை விரிவாக விசாரிக்க வேண்டும். இதில் பல்வேறு முறைகேடுகளைப்பற்றிச் சொன்னார்கள், நாமும் பதில் சொன்னோம் என்ற முறையில் இல்லாமல், நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற பல்கலைக் கழக வளாகங்களில் ஏற்படுகின்ற ஒழுங்கீனங்களை நியாயப்படுத்த முயலக் கூடாது. அங்கே குற்றங் குறைகள், முறைகேடுகள் நடப்பதை அனுமதிக்க முடியாது. அப்படிப்பட்ட தன்மைகளைக் கண்டிக்கும் விதத்தில் இது பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த படியாக, பல்கலைக் கழகத்தில் நடக்கின்ற தேர்வுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். செமஸ்டர் தேர்வுகள் நடக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஐந்தாவது செமஸ்டர் நடந்து அந்த ரிசல்ட் வருவதற்கு முன்னால் ஆறாவது செமஸ்டர் தேர்வு வந்து விடுகிறது. இப்படிப் பரிட்சைகளை நடத்தக்கூடாது. மேலும், பரிட்சைகள் நடந்து அதற்கான முடிவுகள் வருவதில் காலதாமம் ஏற்படுகிறது. இதனால் மாணவர்களின் நிலைமை என்னவென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே ஒரு நேர்வைப் பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் சேலத்தில் பி.ஏ. தேர்வு எழுதியிருந்தார். ஆனால் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் அவர் தேர்ச்சி பெறவில்லை என்பதால் அவர் முழுமையாகத் தேர்ச்சி பெறவில்லை என்ற முடிவு வருகிறது. தேர்வு எழுதிய அவர் சொன்னார், நான் நிச்சயமாக நன்றாகத் தேர்வு எழுதியிருந்தேன்; நான் தேர்ச்சி பெறாமல் போனதற்கான காரணம் எதுவுமில்லை என்று. எனவே, குறிப்பிட்ட அந்தத் தாளை மட்டும் திரும்பச் சரி பார்க்க வேண்டுமென்று பணம் கட்டுகிறார். பணம் கட்டி அவர்

மனுக்கொடுத்த இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு முடிவு வருகிறது, எற்கனவே கொடுத்த முடிவு தவறு, நீங்கள் தேர்ச்சி பெற்று விட்டீர்கள் என்ற முடிவு வருகிறது. இந்த முடிவுக்குப் பிறகு அவருடைய நிலை என்ன? அவர் பட்ட மேற்படிப்புக்குப் போக வேண்டுமென்றால் அதற்கான காலம் முடிந்து விடுகிறது. இப்படி அவர் செய்யாத ஒரு தவறுக்காக தண்டிக்கப்பட்டிருக்கிறார். இப்படித் தேர்வுத் தாள்களைச் சரியாகத் திருத்தாத காரணத்தால் பல மாணவர்கள் பாதிக்கப் பட்டிருக்கலாம். திரும்பவும் தங்களது பேப்பர்களைத் திருத்த வேண்டுமென்று அவர்கள் போகலாம். அப்படிப் போவதால் காலங்கடந்து விட்டால் அவர்களுக்கு என்ன பாதுகாப்பை இந்த அரசாங்கம் கொடுக்கவிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு மருத்துவக் கல்லூரி பற்றி பல்வேறு குற்றச் சாட்டுக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அது சம்பந்தமாக நீதிமன்றத்திற்குக்கூட போய் இருக்கிறார்கள். அது சம்பந்தமாக நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவுகளிலே குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கி வையுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு பாதுகாப்பு கூட இந்த மாணவர்களுக்கு இல்லை. இந்த மாணவர்கள் தாங்கள் செய்யாத ஒரு தவறுக்காக இன்றைக்குத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும்,

அடுத்து மார்க் பட்டியல் எழுதுவதிலேயும் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் வருகின்றன. மார்க் எதுவும் எழுதாமலே பிளாங்காக மார்க் பட்டியல் வந்திருக்கிறது பல்வேறு இடங்களில், அப்படி வந்த பிறகு திரும்பப் போய் கல்லூரி வளாகத்திலே இருப்பவர்களிடம் அதுபற்றிச் சொல்லி அந்த மார்க்குகளை எல்லாம் எழுதிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதன் காரணத்தால் தவறுகள் நடப்பதற்கு நிறைய வழிகள் இருக்கின்றன.

அடுத்து இங்கே பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். செனட் சபையினைப் பொறுத்தவரையில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர்கள்தான் இருக்கிறார்கள். 10 சதவீதம் பேர் தான் மக்களின் பிரதிநிதிகளிலே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. இதன் காரணமாக பல்வேறு நியாயங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல முடியவில்லை. எனவே சிண்டிகேட் போன்ற அமைப்புகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள இடம் பெறவேண்டும் அந்த வகையிலே மக்களின் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்கின்ற வகையிலே சட்டங்கள் திருத்தப்பட்ட வேண்டும்.

அடுத்து செனட் சபையினைப் பொறுத்தவரையில் அது ஒரு வருடத்திற்கு ஒரு முறைதான் அதாவது வருடத்திற்கு ஒருமுறை தீபாவளி வருவது போல், கூட்டப்படுகின்றது, அப்படி கூட்டப் படுகின்றது. அப்படி கூட்டப்படுகின்ற நேரத்திலே நீண்ட



பட்டியலை வாசிக்கிறார்கள். அத்தோடு முடிந்து விடுகின்றது அப்படி இல்லாமல் வருடத்திற்கு 3 முறை அல்லது 4 முறை அந்த செனட் சபை கூடினால் நல்ல முக்கியமான முடிவுகளை எடுப்பதற்குத் துணையாக இருக்கும்.

அடுத்து நான் கேள்விப்படுகிறேன் பல்கலைக் கழகங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய சதவீதத்தின் படி இடங்கள் ஒதுக்கப்படுவது என்பது முறையாக நடைபெறவில்லை என்று. அதைப்போன்று வேலைவாய்ப்புக்களிலும் மாணவர்களைச் சேர்ப்பதிலும் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து உதவிப் பேராசிரியர்களைப் பொறுத்தவரையில் கல்லூரியிலே வேலை செய்பவர்களைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயம் செய்து அந்தத் தேதிக்கு முன்னாலே நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு அதிக ஊதியமும் அந்தத் தேதிக்குப் பின்னாலே நியமனம் செய்யப்பட்டவர்களுக்குக் குறைந்த ஊதியமும் கொடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆனால் ஊதியத்தை நிர்ணயம் செய்கின்றபோது பதவியை, தகுதியை வைத்துத்தான் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமே தவிர தேதியை வைத்து நிர்ணயம் செய்வது முறையல்ல என்பதைச் சொல்லி இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கு.ரமணி: மன்றத்தின் தற்காலிகத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட திருத்தச் சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில் நாங்கள் எதிர்க்கவில்லை. இது வரவேற்கத்தக்கது தான். தேவையான ஒன்றுதான். ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே விரும்புகிறேன்.

இப்படி துண்டு துண்டாகக் கொண்டு வந்து அவ்வப்போது ஒரு குறிப்பிட்ட தற்காலிகத் தேவைக்காக மட்டும் சட்டத்தைத் திருத்தக்கூடிய முறையில் கொண்டுவருவது என்பது சரியல்ல, எத்தனை காலத்திற்கு இப்படி கொண்டுவருவது என்பது சரியாக இருக்கும்? எனவே ஒரு காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்ற வகையிலே, விரிவான வகையிலே எல்லாவற்றையும் உள்ளடங்கிய ஒரு சட்டத்தை உருவாக்குவது என்பதுதான் சரியானதாக இருக்கும். ஏனென்றால் பல தடவைகள் இப்படிப் பட்ட நிலைமை நமக்குத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. எனவே ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் சிறு சிறு துண்டுகளாக, பீஸ் பீஸாக சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது என்ற முறை மாற்றப்பட வேண்டும். ஒரு தகுந்த சட்டத்தை உருவாக்க வேண்டும். அப்போதும் மாற்றங்கள் தேவை இருக்கலாம். அப்படிப்பட்ட அடிப்படையான மாற்றங்கள் தேவை என்கின்றபோது மட்டும்தான் மாற்ற வேண்டி இருக்கும்.

அதை விட்டுவிட்டு இப்படி துண்டு துண்டாகக் கொண்டுவருவது என்பது சரியானதல்ல. எனவே இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கும்படியான நிலைமை பற்றி இங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ரெஜிஸ்ட்ரார் சம்பந்தப்பட்ட வகையில் இதே மன்றத்தில் நானே கேள்வியைக் கிளப்பி இருக்கிறேன். ஒரு கட்டத்தில் மாணவர்களுடைய பரீட்சைத் தாள்களாகிய ரிக்கார்டுகள் எரிந்து போய் விட்டன என்ற பிரச்சினை இந்த பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட வரையில் வந்தது. அது சம்பந்தமாக ரிஜிஸ்ட்ராருக்குச் சம்பந்தம் உண்டு என்று அன்றைக்கு எடுத்துக் காட்டப் பெற்றது. இந்த யூனிவர்சிட்டியினுடைய நிதியினை அவர்களுடைய பெயரிலேயே வங்கிகளிலே டெப்பாசிட் பண்ணி வைத்து அவ்வாறு அவர்களின் பெயரிலே பணத்தை டெப்பாசிட் பண்ணி வைத்திருப்பதன் காரணத்தால் அந்த வங்கிகளிலே என்ன செல்வாக்கைச் செலுத்த முடியும் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயமாகும். அந்த வகையிலே செல்வாக்கைப் பயன்படுத்தி பலருக்கு வேலை தேடிக் கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் காட்டி இருக்கிறேன். பாக்கி விஷயங்களுக்கு நான் இப்போது போக வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவையும் ஏற்கெனவே சொல்லி விட்டார்கள்.

சென்னை பல்கலைக் கழகம் நீண்ட நெடுங்காலமாக பெரும் புகழும் செல்வாக்கும் பெற்று வந்திருக்கக் கூடிய ஒரு பல்கலைக் கழகம். அப்படிப்பட்ட பல்கலைக் கழகத்திலே இப்படிப்பட்ட சில அதிகாரிகள் இருப்பதன் காரணத்தால் எவ்வளவு பெரிய கெட்ட பெயர் உருவாகின்றது என்பதை நாம் வேதனையோடு கவனிக்கவேண்டும். இந்த நிலைமைக்கு ஒரு முற்றுப் புள்ளியினை வைத்தாக வேண்டும். ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பல்கலைக் கழகத்திலே ஊழல் புரிபவர்கள் எந்தப் பிரிவிலே இருந்தாலும் அவர்களைத் தடுத்து நீக்கவேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து அதன் மூலம் அதைச் சுத்தம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. இவ்வளவுக்கும் பிறகும் அந்த ரிஜிஸ்டிரார் ஏன் சஸ்பெண்ட் செய்யப்படவில்லை என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், அவர்கள் மீது விசாரணை நடைபெற வேண்டும்.

(பிற்பகல் 12-30)

இதற்கு முன்னாலே கூட இப்படிப்பட்ட குற்றச்சாட்டு வந்தது உண்டு அவைகளின் மீது பல்வேறு சில்லறை நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக அவர்கள் அதைச் சமாளித்து, அதிலே ஊறிப் போய் விட்ட காரணத்தால் அதைப் பக்கவாட்டில் தள்ளிவிட்டு, விட்டு அல்லது அந்தக் குற்றச்சாட்டுகளை மற்றவர்



களின் மீது வருகிற மாதிரி செய்து விட்டு அவர் (மல் வராமல் இருக்கும்படி சாமர்த்தியமாக அவர்கள் இருந்து சமாளித்து இருக் கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்க அவர் உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டு அவர் மீது விசாரணை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றவாளிகள் தகுந்த தண்டனை பெறவேண்டும். பல்கலைக் கழகங்களில் இப்படிப்பட்ட ஊழல்கள் தலை தூக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலமாக மற்ற பல்கலைக்கழகங்களில் இப்படிப்பட்ட நிலைமை கள் ஏற்படாமல் இருப்பதைத் தடுப்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும். ஆகவே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் சம்பந்தமாகவும், அதனுடைய பங்கின் சம்பந்தமாகவும் பல்வேறு விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். பல்கலைக் கழகத்தின் பெயருக்கும், புகழுக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப் பவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் பல்கலைக்கழகத்தில் நடக்கும் இத்தகைய பிரச்னைகள் காரணமாக அவர்கள் மீது எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக அவர்கள் இன்றைக்கு நரக வேதனை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதுவும் தனி யார் துறையில் இருப்பவர்கள் பயங்கரமான ஆபத்தில் இருக்கிறார் கள் என்பது நாடறிந்த உண்மை. அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவற்றை இங்கே பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

தன்னாட்சிக் கல்லூரிகளில், அதனுடைய செயல்பாட்டை அறிந்து, அதனுடைய நடவடிக்கைகளைக் கண்ட பிறகு, அவற்றிற்கு தன்னாட்சி தேவையில்லை, அதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற முறையில் இன்றைக்கு எண்ணங்களும், கருத்துக்களும் தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டு இருக்கிறது. ஆசிரியர்கள் மத்தியிலும் அது அழுத்தமாக இருந்து வருகிறது. இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகளின் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்து பரிந்துரை செய்வதற்காக பல்கலைக்கழகத் தால் அமைக்கப்பட்ட குழு, ஆசிரியர்களையும், மாணவர்களை யும் மற்றும் உள்ள முக்கியமான பொதுமக்களையும் கண்டு, பேசி பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு ஒரு அறிக்கை சமர்ப் பித்து இருக்கிறது. அந்த அறிக்கை இன்னும் வெளியிடப்பட வில்லை. அந்த அறிக்கை என்னவாயிற்று? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அந்தக் குழுவின் அறிக்கை இது வரையில் வெளியிடப்படாமல் இருக்கிற காரணத்தால், அந்தக் குழுவின் மனோபாவங்கள் எப்படி இருந்தன என்பதை தெரிந்து வைத்து இருக்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்தக் குழு 'தன்னாட்சி முறை கூடாது' என்று பரிந்துரைத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்களும் அதை நம்ப வேண்டி யிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரை வெளியே வராமல்

இவ்வளவு காலம் கிடப்பில் போடப்பட்டு இருப்பதற்கு என்ன காரணம்? ஏன் அதை வெளியிடக்கூடாது? அவர்கள் கொடுத்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் சில பல நடவடிக்கைகளுக்கு அரசு செயல்வடிவம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அது பல்வேறு கல்லூரிகளின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்த தன்னாட்சி பெற்ற கல்லூரிகளில் இருக்கும் 'அகடமிக் கவுன்சில்களின்' தலைவராக அதனுடைய சொந்தக்காரரர்கள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனை தன்னாட்சி அதிகாரம் அந்தக் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டபோதே சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியானால், அந்த விதி எல்லாக் கல்லூரிகளிலும் பின்பற்றப் பட்டு இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் பி.எஸ்.ஜி. கல்லூரியில் என்ன நிலைமையென்றால், ஒரு கல்வியாளர்தான், அந்தக் கல்லூரியின் பிரின்சிபால் தான் அந்தக் குழுவிற்குத் தலைவராக இருக்கவேண்டும் என்ற விதியை மீறி அதன் சொந்தக்காரர் ஒருவர் இருக்கிறார். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. விதியை மீறினால் அதைப்பார்த்துக்கொண்டு இருக்கக் கூடாது. அரசாங்கமும், பல்கலைக்கழகமும் இத்தகைய நிலைமைகள் எங்கேயிருந்தாலும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இத்தகைய நிலை இருப்பதால் ஆசிரியர்கள் மத்தியிலும் பலமான அதிருப்தி இருக்கிறது. இது ஒரு முக்கியமான விஷயம். அப்படிப்பட்ட நிலை மாற்றப்படவேண்டும். அந்த அகடமிக் கவுன்சிலுக்கு பிரின்சிபால்தான் தலைவராக இருக்கவேண்டும் என்பதைக் கண்டிப்பாக அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி கல்லூரி ஆசிரியர்கள்மீது பழிவாங்குதல் நடக்கிறது. எடுக்கின்ற முடிவுகளை அரசு போடுகின்ற விதிமுறைகளை சரியாக நிர்வாகத்தினர் நடைமுறைப்படுத்துகிறார்களா இல்லையா என்பதைப் பரிசீலிப்பதற்கு ஒரு ஏற்பாடு இல்லையா? அரசாங்கம் அதிலே உரிய கவனம் செலுத்த வேண்டும். அந்த ஆசிரியர்கள்மீது நிர்வாகத்தினர் பழிவாங்கும் போக்கைத் தொடங்கும்போது அதைக் கேட்க அல்லது கண்டிக்க ஆசிரியர்கள் ஒன்றாக சேருகிறார்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். உடனே ஆசிரியர்களே கிளர்ச்சி செய்கிறார்கள் கல்வியாளர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள் என்று விமர்சித்தால் மட்டும் போதுமா? அவர்களுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டாமா? தொழிற்சாலைகளிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுடைய நலன்கள் பாதிக்கப்படும்போது, தொழிலாளர்கள் பழி வாங்கப்படும்போது ஆலை நிர்வாகத்தைக் கண்டிக்கிறோம்; தொழிலாளர் நலனைப் பாதுகாக்க குரல் கொடுக்கிறோம். ஆனால் கல்லூரி ஆசிரியர்கள் நிலைமையைப் பார்த்தால் அதையும் தாண்டிப்போய் இருக்கிறது. அவர்கள் நிலைமை பரிதாபமாக இருக்கிறது.



உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பி.எஸ்.ஜி. கல்லூரியை எடுத்துக்கொள்ளலாம். அந்தக் கல்லூரியில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரண்டு நாள் 'டைம் டேபிள்' படி வகுப்பு எடுக்கவில்லை என்ற காரணத்தைக்காட்டி ஏழு ஆசிரியர் களுக்கு மூன்று இன்கிரிமென்ட்ஸ் கட் செய்திருக்கிறார்கள் கியூமிலேட்டிவ் எஃபக்டோடு. அப்புறம் அந்த ஆசிரியர்களுக்கு என்ன உணர்வு இருக்கும்? உற்சாகம் இருக்கும்? அதைப் போன்று அதற்கு முந்தைய ஆண்டில் இரண்டு ஆசிரியர்களுக்கு இரண்டு இன் கிரிமென்ட்ஸ் கட். அதுவும் கியூமிலேட்டிவ் எஃபக்டில்தான். இந்த மாதிரி இருந்தால் ஆசிரியர்கள் என்ன செய்வார்கள்? அதுவும் தன்னாட்சி பெற்ற கல்லூரிதான். இப்படிப்பட்ட நடைமுறை களால் கல்லூரிகளின் தன்னாட்சி முறையை எதிர்த்து ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதன் காரணமாக அந்த மனதிலே வைத்துக்கொண்டு, வேறுசில பிரச்சனைகளைச் சொல்லி, இரண்டு நாள் டைம் டேபிள்படி வகுப்பு எடுக்கவில்லை என்று ஒரு காரணத்தை ரூப்புக்காகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒன்று நடந்திருந்தால் கூட அதற்கு இப்படிப்பட்ட தண்டனையா? 8 வருஷம், 10 வருஷம் சர்வீஸ் இருக்கும் ஒரு ஆசிரியருக்கு இதனால் அவருடைய சர்வீஸ் காலத்தில் 30,000 ரூபாய், 40,000 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இது மிகவும் மோசமான ஒரு தண்டனை. இப்படிப்பட்ட நடவடிக்கை சட்ட விரோதம் என்று கூறி ஆசிரியர் சமுதாயம் எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்கத்திற்கு பல விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறது. அதிகாரிகளை நேரிலே சந்தித்தும் கொடுத்திருக்கிறார்கள். கல்வி இலாகாவை அணுகி தமிழ்நாடு பிரைவேட் காலேஜஸ் ரெகுலேஷன் ஆக்ட், செக்ஷன் 20-ன்படி சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். செக்ஷன் 20 (பி)-ன்படி அவர்கள் தங்களுக்கு பரிகாரம் தேட உரிமை உண்டு என்று அப்ரோச் பண்ணியிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்குக் கிடைத் திருக்கிற பதில் ஆச்சரியம் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இதிலே எனக்கு இருக்கிற சந்தேகத்தை அமைச்சரவர்கள் நிவர்த்திப்பார்கள் என்று கருதுகிறேன். For example Against the order of the Management of Devananga Arts College of Aruppukottai—S.Clement Arulnathan, Professor of History அவர் அரசாங்கத்தை அணுகி கேட்ட நேரத்தில் கல்வித் துறை துணைச் செயலாளர் கொடுத்திருக்கும் பதில் அவருடைய தீர்ப்பைச் சொல்லியிருக்கிறார்.

With reference to your letter cited, I am directed to state that the orders of the Management withholding increment do not fall within the ambit of the Section 20 of the Tamil Nadu Private Colleges Regulation Act. hence they are not appealable under Section 20 of the Act.

இதை இன்றைக்கு ஆசிரியர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்த மாதிரியான உத்தரவை எதிர்த்து அப்பீல் அவர்களுக்கு செக்ஷன் 20 (பி) படி உரிமை இருக்கிறது. இப்படிப் செய்வதற்கு

பட்ட தண்டனைக்கு 'ரெமடியல் மெஷர்ஸ்' இல்லாமல் 'கியூமலேட்டிவ் எபக்ட்' என்று சொல்லி, 3 இன்கிரிமென்ட்ஸ், 2 இன்கிரிமென்ட்ஸ் கட் என்றால் எப்படி ஆசிரியர் சமுதாயம் வாழ முடியும்? இது மிக முக்கியமான விஷயம். அதைப்

பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கைகளின் கீழ் இதைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதே மாதிரி கல்லூரிக் கல்வி இயக்குநருடைய இந்த உத்தரவு வந்ததற்கு பிறகு பல்வேறு கல்லூரிகளில் இன்றைக்கு இந்த மாதிரி தாக்குதல் மேலும் அதிகமாகிக் கொண்டு வருகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இது மிகவும் வருத்தப்படக் கூடிய ஒன்றாகும். பலரும் இதற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மேலும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிற கேஷுவல் லீவ் எடுப்பது கூட அன்எம்ப்ளாய்மென்ட் நிலையை உருவாக்கும் நிலையில் வந்து இருக்கிறது. இந்த தன்னாட்சிக் கல்லூரியில் ஒரு ஆசிரியர் ஒரு நாள் இரண்டு நாள் கேஷுவல் லீவ் எழுதிக்கொடுத்ததற்குப் பிறகு கொடுத்ததாக நிருவாகிகள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அந்த கேஷுவல் லீவை அவர்கள் செங்ஷன் செய்ய மாட்டார்கள். வேலைக்கு வரவில்லையென்று சொல்லி சம்பளம் கட் பண்ணுவார்கள். இப்படி ஒவ்வொரு கல்லூரியிலும் டஜன் கணக்கான ஆசிரியர்களுக்கு அவர்களுடைய சொந்த தேவைகளுக்கு கேஷுவல் லீவ் எடுக்கிற உரிமை அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு எப்படி தாக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்களைக் காட்டமுடியும். இப்படிப்பட்ட அநியாயமான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இவையெல்லாம் பழி வாங்கும் நடவடிக்கைகள் என்ற பட்டியலிலே சேர்ந்தவை. சில கல்லூரிகளில் இன்றைக்கு வேலையில்லா திண்டாட்டத்தை அவர்களே உருவாக்குகிற ஒரு முறை இருக்கிறது. அதாவது வகுப்புகளை மூடிவிடுகிறார்கள். இதை அமைச்சருடைய கவனத்திற்கு பலர்கொண்டு வந்திருக்கிறார்கள். அமைச்சரும் சில நடவடிக்கை எடுத்திருக்கிறார். இல்லையென்று நான் மறுக்கவில்லை. அதற்காக பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. சிலசெக்ஷன்களை மூடிவிடுவது, அப்படிப்பட்ட நடவடிக்கையால் அந்த ஆசிரியர்களுக்கு வேலையின்றி சர்ப்ளசாக இருக்கிறோம் என்ற நிலையில் அந்தக் கல்லூரியிலே அவர்கள் சம்பளம் கேட்க முடியாது.

அடுத்து, இன்னொரு கல்லூரிக்கு அவர்கள் போக வேண்டும். அங்கே அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமென்று கூறி வேறு பக்கத்திலிருந்து ஆசிரியர்களை கேட்பதாக சொல்வார்கள். ஆனால், அங்கே போனால் உடனடியாக



எடுக்க முடியாது என்று பதில் கூறுகிறார்கள். ஆகவே இந்த இடத்திலும் சர்ப்ளசாக ஆகிவிட்டார்கள். போன இடத்திலேயும் உள்ளே போக முடியாமல் வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இது இரண்டும் சேர்ந்தால் அந்த ஆசிரியர்கள் முடிவு மாதக்கணக்கில் சம்பளம் இல்லாமல் ஆசிரியர்களும், பேராசிரியர்களும் வருமானமில்லாமல் குடும்பத்தோடு திண்டாட வேண்டிய நிலை ஏற்படுகிறது. வேலையில்லாத படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், ஆசிரியர்களுக்காக எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்; வேலை கொடுக்க வேண்டுமென்று பலவிதத்திலே அரசு எடுத்துக் கொள்ளும்படியான அந்த அடிப்படைக்கே வேட்டு வைக்கும் ஏற்பாடாகும் இது. இப்படிப் பட்ட நடவடிக்கை எப்படி சரியாகும். இது ஆசிரியர்களை மிகவும் வருத்தப்படுத்துவதாக உள்ளது. அதனால் ஆசிரியர்களுடைய கிளர்ச்சி, போராட்டங்கள் என்று சொன்னால் அதற்கடியில் ஒரு நெருப்பு இது. இதையெல்லாம் சேர்த்துத் தான் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக கேட்கிறார்கள். ஆசிரியர்கள் சர்ப்ளசாக இருக்கும்போது வேலையில்லாத் திண்டாட்டம் உருவாக்கும் முயற்சிகளை இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கல்லூரி செயல்பாடுகளை மேம்படுத்த அரசு சட்டம் கொண்டு வருகிறது. நல்ல சட்டங்கள் அத்தனையும் நாம் வரவேற்கிறோம். அதில் ஆட்சேபணை இல்லை. அவ்வப்போது ஏற்படுகிற வளர்ச்சிக்கேற்ப அந்த மாற்றங்கள் கொண்டு வரப் பட வேண்டும். மேலே கூறப்பட்ட இந்த மாதிரி நிலைமைகளுக்கு முடிவு கட்டக்கூடிய முறையிலே விரைவாக முயற்சிகளை எடுத்து அந்தக் கல்லூரிகளுக்கு சகல புகழையும் தேடித் தருகிற கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுப்பது கடமை என்று உணர்ந்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கிற முறையிலே காரியங்கள் ஆற்றப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு முக்கியப் பிரச்சினை, அதிர்ச்சி அடையச் செய்யக்கூடிய செய்தி என்னவென்றால், அந்த ஆசிரியர்களுடைய 'மூட்டா' ஸ்தாபனம் அதுபற்றி பகிரங்கமான அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிற்கும் தெரியும்படி ஆசிரியர்கள் மீது ரௌடி தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அது அந்த நிர்வாகத்தினுடைய செல்வாக்கிலே அந்தக் கல்லூரி முதல்வர்களாலே திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது. காரைக்குடி கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் நந்தகோபால் 10–10–83 அன்று கல்லூரி வளாகத்திற்குள்ளே ரௌடிகளால் தாக்கப்பட்டார். அன்று இரவு 7 மணிக்கு அந்த ரௌடிகள் அவருடைய வீடு புகுந்து தாக்கி அட்டகாசம் செய்திருக்கிறார்கள். அதைத் தடுத்த பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி தாக்கப்பட்டார். பேராசிரியர் மாணிக்கத்தின் வீட்டிற்குச் சென்று அவரை அடித்து விட்டு, பேராசிரியர் தாகப்பன் வீட்டிற்கு சென்று அவரைத் தாக்கி

மண்டையை உடைத்திருக்கிறார்கள். கல்லூரியின் முதல்வர் அவர்கள் ஏற்பாடு, அவருடைய நடவடிக்கைதான் இது என்று இன்றைக்கு ஆசிரியர்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறார்கள். அவர்மீது எடுக்கும்படியான நடவடிக்கை என்ன? நான் ஏற்கனவே சொல்லியிருக்கிற பழிவாங்கும் நடவடிக்கை மட்டு மல்ல, உயிருக்கே ஆபத்து என்ற நிலையில் ஆசிரியர்கள் சமுதாயம் முழுவதும் இன்று கொதித்து எழுந்து போராடும்படியான நிலைமை இருக்கிறது. கல்லூரிகளிலே, மனிதனுடைய அறிவுக் களஞ்சியங்களிலே கைபோட்டு அள்ளி எடுக்க ஆயிரக்கணக்கான வாலிபர்களும், மாணவர்களும் இருக்க, அவர்களுக்கு கல்வியைக் கொடுக்கவேண்டிய கல்வியாளர்கள் பயிற்சியைக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டால் என்னாவது? அவர்களுடைய உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்று சொன்னால், தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டால், தன்னாட்சி கல்லூரிகளுடைய, தன்னாட்சி என்பது சர்வாதிகாரத் தோரணைக்குப் போய், உயிருக்கே ஆபத்து என்ற நிலைமை வந்தால் இது சகிக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமையிருக் கிறது. இந்த நிலைமைகள் இன்றைக்கு கல்லூரிகளில் எங்கும் இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இவைகளுக்கு எல்லாம் முடிவு காணுகின்ற வகையிலே அரசு விரிவான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். அந்த மாதிரி நிலைமைக்கு இடம் வைக்காமல், விதிமுறைகள் இருக்க வேண்டும். அதை நடத்தி வைக்கும்படியான, அதனுடைய பொறுப்பாளர்கள் இருக்கிறார்களே, அவர்களும், இதிலே ஜவாப்தாரி என்ற அளவிலே சட்டங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பயப்படுவார்கள். இல்லை என்றால், இந்த தன்னாட்சிக் கல்லூரிகள் எல்லாம் இப்படித்தான் இருக்கும். என்னைக் கேட்டால் இந்த தன்னாட்சி முறையை எடுத்துவிட வேண்டும். இது ஒரு சாபக்கேடு மாதிரி வளர்ந்து கொண்டு வருகிறது. இது ஒரு பெரிய ஏகபோக முதலாளிகளுடைய பெரு வியாபாரமாக ஆகிக்கொண்டு வருகிறது. அதற்குப் பணம் வாங்குவது, முறைகேடு செய்வது எல்லாம் பலபக்கம் இருக்கிறது. நான் சொல்வது அதனுடைய நடவடிக்கைகள் இப்படி போய்க் கொண்டிருக்கிறதனால் இதற்கு ஒரு முடிவு கட்டுகின்ற முறையில் ஒரு ஆல் காம்ப்ரஹென்சிவ் பில்லை இந்த அவைக்கு முன்னால் கொண்டு வந்து அமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய மதுரை காமராசர், சென்னைப் பல்கலைக் கழகங்களின் திருத்த மசோதாவின் மீது சில கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்ல விழைகிறேன். இங்கே சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய பதிவாளரைப் பற்றிய குற்றச்சாட்டுகளை எல்லாம் அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய [illegible] சிண்டிகே





[illegible]ப்பினர் என்ற முறையிலே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான்கூட சென்ற ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது இந்தப் பல்கலைக் கழகத்திலே இருக்கக் கூடிய பதிவாளர் அவர்கள் குறிப்பாக ஆதி திராவிட மாணவர் களுக்கு வழங்கப்படுகின்ற அரசு மானியத் தொகைகளை ஒழுங்காக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு குற்றச்சாட்டுக்களை என்னைப் போன்ற எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய பிறகும் கூட இன்று வரையில் இந்தப் பதிவாளர் மாற்றப்படாமல் இருக்கிறார் என்று சொன்னால், அவர் நீக்கப்படாமல் இருக்கிறார் என்று சொன்னால் எங்களைப் போன்றவர்களுக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் பல்வேறு பல்கலைக்கழகங்களைக் கொண்டு வந்தி ருக்கிறார்கள். இன்றைக்கு அந்தச் சட்டங்களை எல்லாம் திருத்துகின்ற வேளையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சொல்வது எல்லாம் ஒரு முழுமையான வெள்ளைக்காரன் காலத்திலே உருவாக்கப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய சட்டமாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அதனுடைய வழித்தோன்றலாக இன்றைய தமிழக அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய புதிய பல்கலைக் கழகங் களாக இருந்தாலும் சரி, அவைகள் எல்லாம், அந்த சட்டத்தின் [illegible] உடைசல்களை வைத்துக்கொண்டு இன்றைக்கு ஒட்டோ [illegible] என்ற திருத்தங்களைக் கொண்டு வருவது மட்டும் தானோ இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதை நான் [illegible] சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு [illegible] கல்லூரிகளில் ஆசிரியர்கள் போராட்டங்களை [illegible] கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு [illegible] மாணவர்களும் அங்கே இருக்கக்கூடிய நான்-டீச்சிங் [illegible] சொல்லக்கூடிய மற்ற ஊழியர்களும் போராட்டம் [illegible] என்று [illegible] நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்கு எல்லாம் [illegible] காரணம் என்ன? இன்றைக்கு மாண்புமிகு [illegible] துரைமுருகன் அவர்கள் சொன்னதைப்போல், [illegible] அதிகார துஷ்பிரயோகம் ஆகியவைகள் [illegible] இன்றைக்கு பல்கலைக் கழகங்களிலே புரையோடிக் [illegible] இருக்கின்றன. இவைகளை எதிர்த்து ஒரு காலத்தில் [illegible] படிக்கக்கூடிய மாணவர்கள் போராடினார்கள். [illegible] போராட்டத்தை திசை திருப்புவதற்கு ஜாதி வர்ணங்கள் [illegible] ஆனால் இன்றைக்கு அந்த நிர்வாகங்களை [illegible] ஆசிரியர்கள், மாணவர்கள் இருக்கக்கூடிய [illegible] பெரும் போராட்டம் நடத்திக் [illegible] இருக்கிறார்கள். அப்படி ஒன்றுபட்ட போராட்டம் நடக்[illegible] இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசாங்கம் காலத்திலே [illegible]

இந்தப் பிரச்சினைகளைப் போக்குவதற்கு பதிலாக ஒன்றுபட்டு போராட்டங்களை நடத்துகின்ற ஆசிரியர்களுடைய சங்கத்தை உடைக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கேகூட பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கின்றபோது கல்வி அமைச்சர் அவர்கள் இந்தக் கல்லூரிகளில் தன்னாட்சி உரிமை பற்றி, அட்டானமஸ் காலேஜஸ் விஷயத்தில் தலையிட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் நியமனத்திலிருந்து, நாளை பரீட்சைக்கு திட்டங்களை உருவாக்குவது வரை பல்வேறு துறைகளிலும் இந்த தன்னாட்சி அதிகாரம் கொடிகட்டி பறந்து வருகிறது. கல்லூரிகளில் இன்றைக்கு, அரசாங்கத்தினுடைய சட்டங்களுக்கு மாறாக மட்டும் அல்லாமல், நாட்டிலே இது வரையில் கடைபிடிக்கப்பட்டு வந்த கல்வி திட்டங்களுக்கும் மாறாக, அவர்களே சொந்த கல்வித் திட்டங்களை உருவாக்கக்கூடிய ஒரு மோசமான நிலைமையை ஏற்படுத்திக் கொண்டுவருகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

பல்வேறு கல்லூரிகளிலே, சாதி சமய, மத, இன வேறுபாடற்ற சமுதாயம் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே அவைகளுக்கு மாறாக செயல்களை செய்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பலவிதமான குற்றங்கள் இன்றைக்கு நம் நாட்டில் இருக்கும் கல்லூரி வளாகங்களுக்குள் நடைபெற்று வருகின்றது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் நேர்வுப் பட்டியல் போடுவதானாலும் சரி, ஆசிரியர்கள் நியமனம் ஆனாலும் சரி, பல்கலைக் கழகங்களில் இன்றைக்கு முறைகேடுகள் தலைவிரித்தாடுகின்றன. எம்.ஏ.,எம்.எஸ்.சி. என்று படித்துப் பட்டம் பெற்றவர்கள் எம்.எட்., வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய பிரச்சினையாக நாட்டிலே உருவாகி வருகிற நேரத்திலே, தன்னாட்சி பெற்ற இப்படிப்பட்ட கல்லூரிகளில், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, தங்களுடைய ஜாதிக்காரர்களுக்கு, தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தினால், மற்றவர்கள் எல்லாம் தகுதியின்மை என்ற பெயரால், வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறார்கள்.

சென்ற ஆண்டில்கூட சென்னையில் கோட்டைக்கு முன்னால் மிகப் பெரிய உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல வாக்குறுதிகளை அவர்களுக்கு வழங்கினார்கள். அவைகள் இன்றுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லி கல்வி இயக்குநர் அவர்களுடைய அலுவலகத்திற்கு முன்னால் நாடு தழுவிய போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார்கள்.



அது மட்டுமல்லாமல் இன்றைக்கு கல்லூரிகளில் பல்வேறு விதமான ஒழுக்கக்கேடுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக படிக்கின்ற மாணவர்களிடத்திலேயிருந்து வாங்கக்கூடிய பல்வேறு வகையான பீஸ்களைப்பற்றி எல்லாம் குறையாக எடுத்துச் சொல்லி, அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகள் எழுவதை முழுமையாக நீக்கவேண்டும் என்று சொன்னால் பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடிய சட்டங்களை முழுமையாக மாற்ற வேண்டும். அது மட்டும் அல்ல, கல்லூரிகளில் தன்னாட்சி முறைகளை ஒழித்து, அதற்காக மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை சொல்கிறபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து, சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக மதுரை பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய பால்வண்ணன் என்று சொல்லக்கூடிய துணை இயக்குநர் அவர்கள் மீது கூட பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவரை, அமைச்சருக்கு வேண்டியவர் என்றோ அல்லது அரசாங்கத்திற்கு வேண்டியவர் என்றோ, ஏதோ முறையில் காப்பாற்றி வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் போகிற விதத்திலே முழுமையாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த திருத்த மசோதாவிலே, தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் மீது பேசிய பேச்சுக்களை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுவதுமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள், மிகவும் பொறுமையாக. முதலிலே நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன். ஆனால் இந்த மன்றத்திலே இந்த மசோதா மீது பேசப்பட்ட பேச்சுக்களையும், கூறப்பட்ட வார்த்தைகளையும் கேட்டபோது, உண்மையிலேயே இந்த மசோதாவைக் கொண்டு வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த அளவு வேதனைப்படுவாரோ, அந்த அளவுக்கு அவரோடு சேர்ந்து நானும் வேதனைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர் வழக்கறிஞர் நண்பர் துரைமுருகன் அவர்கள் (குறுக்கீடு)—என்னைவிட இளைஞர்—மிக நன்றாகப் பேசினார்கள்.(குறுக்கீடு) என் வயதோடு ஒப்பிடும்போது அவர் இளைஞர், மற்றபடி அவரும் வயது முதிர்ந்தவரே. கடந்த ஆண்டு, சகோதரர் உமாநாத் அவர்களும், சகோதரர் துரைமுருகன் அவர்களும், ஏனைய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லியும் இன்றுவரையில் என்ன காரணங்களினால், அவைகள் தீர்க்கப்படாமல் இருந்தன என்பது

எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக தம்முடைய பதிலில் அதை விளக்குவார் என்று நம்புகிறேன். துரதிருஷ்டவசமாக இதில் எனக்கும் பங்கிருக்கிறது. இந்த சென்னைப் பல்கலைக் கழகத்திலே முதல் தடவையாக ஒரு தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் துணை வேந்தராக நியமிக்கப்பட்டதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டவன் அரசாங்கத்தை. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு இவ்வளவு பொறுப்பற்ற முறையிலே இருக்கவேண்டிய அவல நிலைக்குக் காரணம் என்ன? துணை வேந்தரா அல்லது ரிஜிஸ்திராரா? அல்லது வேறு யாருமா? அல்லது அரசாங்கம் இதற்கு மறைமுகமாக பொறுப்பா என்பதைத் தெள்ளத் தெளி வாகச் சொல்லத் தவறினால் கல்வியமைச்சர் அவர்களும் ஆட்சி யாளர்களும் ஒரு நல்ல காரியத்தைச் செய்து—தாழ்ந்த சமுதா யத்தைச் சேர்ந்த ஒரு மகனுக்குப் பொறுப்பைக் கொடுத்து— இப்போது குற்றச்சாட்டு வருகிறபோது விளக்கம் தர தவறு வார்களேயானால் இந்து மதமும், இந்து சமுதாயமும் அவர் களுக்கு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த தண்டனையை இன்னும் நாங்கள் அனுபவிக்கவேண்டிய நிலைதான் இருக்கிறது என்று அச்சப்பட வேண்டிய நிலை இருப்பதாக எங்களுக்குக் கவலை வருகிறது. அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1923 ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக் கழகச் சட்டம் வந்தாலும்—நான் பிறந்த வருடத்தில் தான் இந்தச் சட்டம் வந்தது—வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து உத்தியோகத்திலே கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ முறை, வகுப்புரிமை 150 ஆண்டு களுக்குப் பிறகும் இன்றைக்கும்கூட அந்த விகிதாச்சாரம் கொடுக்கப்படவில்லை. இத்தனை குற்றச்சாட்டுகளும் கடந்த 3 ஆண்டுகளாக நடந்ததா இல்லையா என்பதை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பார்க்க முடியும். அவர்கள் திறமை உள்ளவர்கள், நல்ல எண்ணம் உள்ளவர்கள், தம்முடைய காலத்திலே இந்தக் குற்றச்சாட்டுகள் வந்திருப்பதால் அதற்கு [illegible] சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆண்டு களிலேகூட இன்றைக்கும் கூட இந்த சமுதாய மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் அரசாங்கச் சட்டப்படி கிடைக்க வேண்டியவை கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, இன்னொன் றையும் நான் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் துணை வேந்தராக இருந்தார்கள். அந்த சமயத்தில் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ரீடர்கள், மற்ற உத்தியோகங்களில் இருக்கிறவர்களுக்கு அரசாங்கத்தைக் கேட்டோ கேட்காமலோ அரசாங்க உத்திரவு பெற்றோ பெறாமலோ சம்பளம் உயர்த்தப்பட்டது யு.ஜி.சி. விதிகளின் பிரகாரம். ஆனால் கொடுத்த சம்பளத்தை துணை வேந்தர் திரு. சாந்தப்பா காலத்திலே திரும்பக் கட்ட வேண்டு மென்று உத்திரவு போட்டு ரெக்கவரி செய்யக்கூடிய பெரும் சுமையை அவர்கள் இன்றைக்கு சுமந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்க உத்திரவு காரணமா அல்லது சிலர் சொல்கிறார்களே





வைஸ்-சான்சலர் இந்த அக்கிரமத்தைச் செய்திருக்கிறார் என்று அந்தக் காரணமா? சிலர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அரசாங்கத்தின் மீது குறை சொல்கிறார்கள். அரசாங்க உத்தரவுப்படி கொடுக்கப்பட்ட அதிகச் சம்பளத்தை திரு. ஜி. ஆர். தாமோதரன் காலத்திலே கொடுக்கப்பட்ட அதிகச் சம்பளத்தை அரசாங்க உத்தரவு காரணமாக துணைவேந்தர் பெயரால் வசூலிக்கப்படுகிறதா அல்லது அவர்களே இஷ்டப்பட்டு செய்கிறார்களா? என்று விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செமஸ்டர் முறையில் மார்க்குகள் போடப் படுகின்றன. அதிலே குறைபாடுகளுக்குக் காரணம் கம்பியூட்டர் சென்டர்தான் வருகிற குறையா அல்லது அதற்கும் பணம், பதவி, அல்லது எங்களைப்போன்ற பாவச் செயலைச் செய்கின்ற அரசியல்வாதிகள் காரணமா என்பதைப் புரிந்து கொள்வதற்காக கல்வியமைச்சர் அவர்கள் அனுபவம் மிக்கவர்கள், தாழ்த்தப்பட்ட பிற்பட்ட சமுதாயத்தின் துயரங்களைத் தெரிந்தவர்கள்— விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளைக்காரன் காலம் முதல் இன்றைய தினம் வரையில் லஞ்சம் வாங்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற ஒரே ஒரு துறை கல்வித்துறை என்ற பெயர் போய் சகோதரர் திரு. ரமணி அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் இது ஒரு வியாபாரத் துறையாக, முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தோடு இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், மைனாரிட்டி யின் பெயரால் அது மாநில அரசின் எல்லைக் கோட்டிற் குட்பட்டதாக இருந்தாலும் சரி, மத்திய அரசின் எல்லைக் குட்பட்டதாக இருந்தாலும் சரி எந்த எல்லைக்கோட்டிற் குட்பட்டதாக இருந்தாலும் மாநில அரசின் தன்னாட்சி பெற்ற [illegible] அரசாங்கப் பள்ளிகள், தனியார் கல்வி [illegible] எதுவாக இருந்தாலும் தவறுகள் நடக்கிறபோது [illegible] கவனிக்காததால் வருவதா? [illegible] நல்ல பெயர் கெட்ட பெயராக [illegible] என்ன காரணம்? அமைச்சரவர்கள் ஏன் கவனிக் [illegible] விட்டார்கள்? பல்வேறு காரணங்களாலா வேலைப் பளு [illegible] நிலைமையா என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களுக்குப் போக வேண்டிய நிலைமையிலே அரசாங்கத் தரப்பிலே வாதாடுகிற வழக்கறிஞர்கள் ஏன் போக [illegible] அவர்கள் போக மறுக்கிறார்களா? அல்லது அவர்களே தெரிந்தே போகவில்லையா? அல்லது அந்தச் சமயத்திலே வீவிலே இருந்தார்களா? என்ன காரணம், ஏன் போகவில்லை, அப்படிப் பட்ட அவர்கள் மீது நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது?

(பிற்பகல் 1-00)

இப்படி எல்லாம் அரசாங்கத் தரப்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு இருந்தும் கூட தெரிந்தே அரசாங்கத் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகாமல் இருப்பது ஒரு கடுமையான

தவறாகும். அவர்கள் யாருக்கோ துணையாக யாருடைய சம்மதத்திற்காகவோ இந்தப் பாவமான காரியத்தை செய்து இருக்கிறார்கள் என்றுதான் அதற்கு பொருள். அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மேல் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு எல்லாம் மேலாக கல்வித் துறையைச் சார்ந்த காரியதரிசி அவர்கள் இது சட்டத்திற்கு புறம்பாவது. இது நியாயம் அற்றது. இதற்கு என்ன பதில் என்று கல்வித்துறை செயலாளர் அவர்கள் கேட்டு அந்த செயலாளருக்கு தக்க பதிலும் கொடுக்காமல் அவரின் கட்டுப்பாட்டுக்கு கீழ் மட்டத்தில் இருப்பவர்களான பேராசிரியர், ஆசிரியராக இருந்தாலும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதை தடுக்கவில்லை. யார்மூலம் அந்த நீதிமன்றத்திற்கு சென்றார்கள். அந்த வைஸ்சான்சிலருக்கு தெரிவிக்கப்பட்டதா? அரசிடம் அனுமதி கேட்கப்பட்டதா? அரசு அனுமதி கொடுத்ததா? எப்படி செய்றார்கள். இவைகள் எல்லாம் கேட்டும், இவ்வளவு தூரம் அவர்கள் சென்ற போது அரசு வழக்கறிஞர்கள் எப்படி கோர்ட்டுக்கு போகாமல் இருந்தார்கள். இவைகளை எல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரசாங்கக் கல்லூரிகள் நடக்கின்ற இடங்களிலே, இது இந்த மசோதாவுக்கு சம்பந்தம் இல்லை என்றாலும் கல்வித்துறை சம்பந்தமாக இருப்பதாலும் கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. பல்வேறு கல்லூரி களிலே சவுத் ஆற்காடு கடலூரில் எடுத்துக் கொண்டாலும், செங்கற்பட்டு பொன்னேரியில் எடுத்துக் கொண்டாலும், சென்னையில் பல்வேறு கல்லூரிகளை எடுத்துக்கொண்டாலும், இராமநாதபுரம் திருப்பத்தூரில் சீதை ஆசி ஆறுமுகம்பிள்ளை கல்லூரியைஎடுத்துக்கொண்டாலும்,மூன்றுவிதமான ஆஸ்ட்டல்கள் நடத்த நாம் ஏன் இடம் கொடுக்க வேண்டும். ஒன்று ஜெனரல் ஆஸ்ட்டல், இன்னும் ஒன்று பி.சி. ஆஸ்ட்டல், இன்னும் ஒன்று எஸ்.சி. ஆஸ்ட்டல் இருக்கின்றன. இவ்வளவு தொல்லைகள் இல்லாமல் ஒரு கல்லூரிக்கு ஒரு மாணவர் விடுதி என்று நடத்த நாம் முயற்சி எடுத்து அந்த எண்ணங்களை போக்கவேண்டும். ஏன் என்றால் ஜாதிச் சண்டைகள் ஒரு காலத்தில் கிராமத்தில் தோன்றியது போய் இன்றைக்கு கல்லூரி அளவில் ஜாதிச் சண்டைகள் தோன்றுகின்றன. மாணவர்கள் கொலை செய்யப் பட்டு இருக்கிறார்கள். அது எந்த மாணவராக இருந்தாலும் அது யார் தவறு செய்து இருந்தாலும் சரி இவைகளுக்கு எல்லாம் இடம் கொடுக்காமல் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு உத்திரவு போட்டிருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்சி., பி.எச்.டி., எம்.பி.ஏ., பி.எஸ்.சி., (அக்ரி) இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டும் கூட கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஒழுங்காக அவர்களுக்கு அட்மிஷன் கொடுக்கவில்லை. உதாரணமாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சுமார் 25



ஆண்டுகளாக நான் செனட் மெம்பராக இருக்கிறேன். 3 தினங்களுக்கு முன்பு அங்கு செனட் மீட்டிங் நடந்தது. இது பிரைவேட் பல்கலைக் கழகமாக இருந்தாலும்கூட அமைச்சர் அவர்கள் அதன்மீது இரக்கத்தோடு அந்தக் கல்லூரிகளை உன்னிப்பாக கவனித்து வந்தவர். அந்த இடத்தில் செனட் கூட்டம் நடக்கிறது. நான் செனட்டுக்கு எழுதினேன். இந்த ஆண்டில் எம். ஏ., எம். பி. ஏ., பி. காம்., எம். காம். இப்படி இவைகளுக்கு எல்லாம் எத்தனை பேர் மனுக்கள் செய்தார்கள், எத்தனை பேருக்கு கொடுத்தீர்கள்? எத்தனை பேருக்கு கொடுக்கவில்லை? கொடுக்காததற்கு என்ன காரணம்? பின்தங்கிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சட்டப்படி கொடுக்காததற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் சொல்கிறார்கள், சிண்டிகேட்தான் சுப்ரீம். அவர்கள் சொல்வது தான் பைனல். செனட்டில் இதை எழுப்பக்கூடாது என்று சொன்னார்கள். நான் சொன்னேன். அரசாங்கம்தான் உங்களை பிறகு கேள்வி கேட்க வேண்டிய நிலை வரும் என்று. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் நீங்கள் எவ்வளவு வேகமாக இருந்தாலும் உண்மையாக இருந்தாலும் உண்மையாக குற்றங்கள் செய்கிறவர்களை நாம் உடனடியாக கண்காணித்து சட்டரீதியாக எடுக்க வேண்டியதில் காலதாமதத்தை செய்ததால் அதில் இரக்கத்தை காட்டுவதாலோ, என்ன காரணத்தினாலோ கால தாமதம் ஏற்படுகிறபோது தவறு செய்கிறவர்களுக்கு இடம் அளிக்கிறது. ஆகவே இந்த நிலைக்கு இடம் கொடுக்கவேண்டாம் என்பதை நான் சொல்லிக் கொண்டு ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைக்கின்ற வகையில் நான் இங்கே குறிப்பிட்டதை போல அவர்களுக்கு கொடுத்த சம்பளத்தை திரும்ப வாங்குவது என்பது என்ன நிலை என்பது தெரியவில்லை. அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஒரு முழுமையான சட்டமாக கொண்டுவர வேண்டும். அந்த முழுமையான சட்டம் இருந்தால்தான் அவ்வப்போது நடக்கின்ற நிலைமைக்கு ஏற்ப நல்ல காரியங்கள் செய்கின்றபோது அரசு உத்தியோகங்கள் செய்கிறவர்களுக்கு நல்லது என்று சொல்லி நான் இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன் வடிவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற ஒரு மகத்தான ஆதரவிற்கு நான் முதல் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மீது தங்களது கருத்துக்களைச் சொல்ல முன்வந்த உறுப்பினர்கள் இந்தத் திருத்தச் சட்டமுன் வடிவிற்கு அப்பாலும் போய் தங்களது கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும், பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவில் அவர்கள் தங்களது கருத்துக் களைக் கூற விரும்பிய நேரத்தில் அதைத் தடுக்காமல் நான் அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்ததற்குக் காரணமே என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கோ அல்லது பல்கலைக்

கழகத்திலே பணியாற்றுகின்ற ஒருவரைப் பாதுகாப்பதற்கோ அல்ல. கூறப்படுகின்ற கருத்துக்களை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள், எந்த உணர்வோடு அந்தக் கருத்துக்களைக் கூறுகின்றார்களோ, அந்த உணர்வை செயல்படுத்த வேண்டுமென்ற ஒரு உணர்விலேதான் நான் அந்தக்கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களே, நீங்கள் இவைகளின்மீது எல்லாம் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், அதிலே உள்நோக்கம் அடங்கி உள்ளது என்று சொன்ன நேரத்திலே கூட, நான் கோபப்படாமல் அல்லது ஆத்திரப்படாமல் இருந்ததற்குக் காரணம், அவர்கள் மனதார எனக்கு அதிலே பங்கு உண்டு என்று நிச்சயமாக நினைக்க மாட்டார் என்ற நல்ல உணர்விலேதான். இருந்தாலும் அவர்கள் ஆத்திரத்திலே பேசுகிறார்கள். அங்கே பல்வேறு நிலைகளில் ஏதோ முயற்சி எடுத்து, அது நடைபெறாத நேரத்தில் ஆத்திரப்பட்டு அவர் பல்வேறு கருத்துக்களைக் கூறுகிற நேரத்தில் எது, எதற்கோ தொடர்புபடுத்தி, என்னை, அதில் பங்குள்ளவன் என்று சொல்ல முன்வந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதிலும் குறிப்பாக, பல்கலைக் கழகம் என்பது அரசினுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாக இருக்கிறது என்பதும், அதிலே பொறுப்பிலே இருக்கின்றவர்கள் பல காரியங்களைச் செய்கின்றபொழுது, அதிலே குறிப்பாக, கட்டிடங்கள் கட்டுவது போன்ற காரியங்களைச் செய்யும்போது, கான்ட்ராக்ட் விடுகிறார்கள் என்பதும், அந்த கான்ட்ராக்ட் எடுத்துக் கொண்டவர்கள் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள் என்பதும் அதிலே நடைபெறுகின்ற ஒருசில நிலைமைகளை வைத்துக்கொண்டு அதிலே, மேலேயிருக்கிற ரிஜிஸ்திராரை சம்பந்தப்படுத்தி, அவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லி, அதிலே நடவடிக்கை உடனடியாக எடுக்காத காரணத்தாலே, என்னைச் சம்பந்தப்படுத்தி, இப்படிப் பேசுவதன் மூலமாக அவர் தன்னுடைய ஆத்திரத்தைத் தெரிவித்துக் கொண்டார் என்றுதான் நிச்சயமாக என்னாலேகூற முடியுமே தவிர ,ஆதாரத்தோடு ஒரு புகாரைச் சொன்னதாக நான் நினைக்கவில்லை. அவர் ஆதாரத்தோடு சொல்வார்களானால் அதற்கு தக்க நடவடிக்கை எப்பொழுதும் எடுக்கலாம். நான் அதற்குப் பின்னால் வருகிறேன்.

முதலிலே ரிஜிஸ்திரார்மீது இந்த அவையிலேயும் மேலவையிலேயும் குற்றச்சாட்டுகள் வந்த நேரத்தில் அதைப்பற்றி நான் விசாரித்தபொழுது, அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லையென்று சொன்ன நேரத்திலே மட்டும், இந்த அவையின் முன்னோ, அந்த அவையின் முன்னோ, நான் கொண்டுவந்திருக்





கிறேனே தவிர, ஆதாரம் இருக்கிற நேரத்தில், அந்தக் குறிப்பிட்ட ஒரு பதவியிலே இருக்கின்றவரைப் பாதுகாப்பதற்காக நான் பிரத்தியேகமான எந்த முயற்சியும் செய்யவில்லையென்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். உதாரணத்திற்கு அவருடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டபோது, ஈரோட்டிலே கொண்டாடினார்கள். அவருடைய சொந்தக்காரர்கள் கொண்டாடினார்கள். சொந்தக்காரர்கள் மாலை மரியாதை போடும்போது, அதிலே ஒரு மாலை அம்மன் காசு 1/2 பவுனிலே, 1 பவுனிலே, 50 காசு செய்யலாம். அப்படி காசுகளைச் செய்து ஒரு கயிற்றிலே ஒரு இன்சுக்கு ஒரு காசை வைத்து, ஒரு மாலை போட்டிருக்கிறார்கள். இது ரிஜிஸ்திரார் அவர் சார்பிலே சொன்னது. ஆனால், சட்டசபையிலும், மேலவையிலும், வெளியிலேயும் சவரன் மாலை போடப்பட்டது, 50 சவரனோ, 60 சவரனோ உள்ள மாலை போடப்பட்டது என்ற பல புகார்களைச் சொன்னார்கள். வெளியேயும் சொன்னார்கள் இங்கேயும் பேசினார்கள்; அங்கேயும் பேசினார்கள். ஆனால், இதுதான் அவர் சார்பாக எனக்குச் சொல்லப்பட்டது. எனக்குப் போடப்பட்டது இந்த மாலைதான். என்னிடத்திலே இல்லை, அது ஈரோடு கல்லூரியிலேதான் இருக்கிறது என்று சொல்லி, அந்த கல்லூரி பிரின்சிபாலை வரவழைத்து, அந்த மாலையைக் கொண்டு வரச்சொல்லி அந்த பிரின்சிபாலே என்னிடத்திலே கொண்டுவந்து காட்டினார். அதைத்தான் மேலவையில் ஆற்காடு வீராசாமி அவர்கள் உறுப்பினராக இருக்கும்போது நான் காட்டினேன். இங்கே காட்டுகின்ற ஒரு வாய்ப்பு கிடைக்காத காரணத்தால், இங்கே விவாதம் நடந்ததற்குப் பிறகு அங்கேவிவாதம் நடந்ததால் அங்கே கொண்டு போய் காட்டினேன்.

இன்னொன்று, அவர்கள் கொடுத்தார்கள். நான் காட்டினேன் என்பது மட்டும் அல்ல. அதைப்பற்றி நான் விசாரித்தேன். யாரை விசாரித்தேன் என்றால், அந்த விழாவில் கலந்துகொண்ட முன்னாள் துணைவேந்தர் திரு. சுந்தரவடிவேலு அவர்களையே விசாரித்தேன். அவரே சொன்னார். ஆமாம், அந்த மாலைதான் போட்டார்கள். வேறு ஒரு மாலையோடு சேர்த்து அதைப்போட்டு, பிறகு கழட்டும்போது அதையும் கழட்டி கீழே போட்டு விட்டார்ர்கள். பிறகு யாரோ எடுத்துக் கொடுத்ததற்குப் பிறகு தான் அந்த மாலை போட்டது எனக்குத் தெரிந்தது என்று சொன்னார். ஆக, இப்படி ஒரு புகாரைச் சொல் அந்தப் புகாருக்கு ஒரு பதிலை ரிஜிஸ்திரார் சொல்லும்போது, அரசு அதிலே எந்த அளவிற்கு அவர்மீது வந்தப் புகாரை அரசு நம்ப முடியும் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக சொந்தக்காரர் நடத்துகிற ஒரு விழாவில் அவர்கள் போட்டார்கள் இவர் வாங்கினார் என்கிறபோது, இந்த நேரத்திலே அவர் இருக்கிற பதவியை வைத்து, அதை ஒரு ஊழலாக, இலஞ்சமாகச் சொல்லிக் கொண்டு வருகிற பொழுது தான், சாதாரண ஒன்றை,ஒரு நிகழ்ச்சியை பூதாகாரமாக ஆக்கி, சட்டசபையிலே பாதுகாப்பற்ற ஒருவரைப் பழி வாங்குகிற நிலையைக் காட்டுவதைப்போல் அமைந்துவிடுகிறது.

(பிற்பகல் 1-10)

அதற்காகத்தான் நான் அந்த மாலையைக் காட்டினேனே தவிர, நிச்சயமாக அவர் தவறு செய்திருந்து, அவர் தவறு செய்தது எனக்கும் தெரிந்திருந்து, அவரை பாதுகாக்கிற முயற்சியிலே நான் ஈடுபட்டு இருந்தால் இந்த சபையை அவமதிக்கிற ஒரு குற்றத்திற்கு நான் ஆளாவேன். நிச்சயமாக அந்தக் காரியத்தை நான் செய்யமாட்டேன்.

திரு. அ. ரஹ்மான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் திரு. துரைமுருகன் அவர்கள் எழுப்பிய முதல் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்கிறார்கள். அந்த சி. ஐ. டி. ரிப்போர்ட்டிலே இதுபோன்று பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் அத்தனையையும் தவறானவை என்று அமைச்சர் அவர்கள் சமாதானம் அடைந்து விட்டார்களா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

திரு. ஏ. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். இங்கே சொன்னபோது அதை விசாரிக்கிறேன் என்று சொன்னார்கள். பிறகு கவுன்சிலில் பேசுகிறபோது இப்போது கொடுத்த எக்ஸ்பிளனேஷனைக் கொடுத்தார்கள். செகண்ட் டிஸ்கஷன் இன்னொரு செஷனில் வருகிறபோது கவர்ன்மெண்ட் ஆர்டர் பண்ணிய சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலே 50 குவார்ட்டர் சாவரின் மாலை போட்டதாக நான் படித்தே காட்டினேன். அப்போது நீங்கள் மறுக்கவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அளவைச் சொல்லவில்லை. அந்த மாலையை எடுத்து உறுப்பினர்களுக்கு காட்டினேன். அதைத்தான் சொல்கிறேன். இந்தக் குற்றச்சாட்டிற்கு விளக்கம் தருகிற நேரத்தில் வேறு யாராவது சேர்த்திருந்தால் அதையும் நான் மறுக்கிறேன் என்று உறுப்பினர்கள் தயவுசெய்து எடுத்துக் கொள்ள வேண்டாம். குறிப்பிட்ட நிலையைச் சொன்ன காரணத்தாலே நான் விளக்கம் தருகிறேன். செய்திருக்கிறாரா, இல்லையா என்பதற்கு—மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் நாங்களே விசாரிப்பதற்கு முயற்சியை எடுத்திருக்கிறோம்.

திரு. துரைமுருகன் : சவரின் மாலை அவரின் சொந்தக் காரர்கள் கொடுத்தார்கள் என்று விசாரித்ததிலே அவர்கள் சொன்னார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நாங்கள் அவர் மீது குற்றச்சாட்டைச் சொல்கிறோம். அவர் அதற்கு டிபன்ஸ் கொடுக்கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் பதிலை விட, நம்முடைய சர்க்கார் சி.ஐ.டி. கொடுக்கிற ரிப்போர்ட்டைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே என்ன கொடுக்கிறார்கள்



'tThiru Purushothaman Proprietor of New Burns Elec ricals, Madras a contractor of the Madras Universitypresen ed tohim50 quarter sovereign valued at Rs. 800./-during this f nc ion... என்று சொல்கிறார்கள் இன்னும் சொல்லப்போனால் நம்முடைய நரசிம்மன் இருக்கிறார்; நம்முடைய ஸ்பெஷல் சி.ஐ.டி. ரிப்போர்ட்டைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடத்திலே கொடுத்தது; நான் மேலவையில் அந்த மாலையை காட்டியதைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்னிடத்திலே ஈரோடு கல்லூரித் தலைவர் கொண்டுவந்து கொடுத்து, நான் மேலவையிலே காட்டினேன். நான் பார்த்ததில் அதைச் சொல்லிக் கொண்டிருக் கிறேன். அதைத்தான் என்னால் சொல்ல முடியுமே தவிர, சி.ஐ.டி. எதைப் பார்த்தார், என்ன சொல்கிறார் என்பதை என்னால் சொல்ல முடியாது. (குறுக்கீடு) டினை பண்ணவில்லை என்றால் என்னிடம் கொடுத்ததை நான் காட்டினேன் என்றுதான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரியாததை பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. இதற்கு முன்னால் திரு மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் துணை வேந்தராக இருந்த போது இதேபோல் சிண்டிகேட்டிலே புகார் செய்து, பலரும் சொல்லி, அவர்கள் ஒரு கமிட்டி அமைத்து, அந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லையென்று சொன்னதாக எனக்கு செய்தி சொல்லப் பட்டது. ஆகவே தொடர்ந்து 5, 6 ஆண்டுகளாக இந்தப் பிரச்னை அந்தப் பல்கலைக்கழகத்திலே இருந்துக் கொண்டிருக் கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகத்தில் பணி புரிகின்றவர்கள் இதுபோன்ற தவறு செய்கிறபோது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போதிய அதிகாரம் இல்லை யென்ற வகையிலே காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தான் விஜிலென்ஸ் கமிஷனுடைய—பல்கலைக் கழகத்திலே பணி புரிகின்றவர்களாக இருந்தாலும்—அந்த விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்றுச் சொல்லி ஒரு உத்தரவைப் போட்டோம். சி.ஐ.டி. ரிப்போர்ட் ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்கிற குற்றச்சாட்டுக்களானாலும், அல்லது தனிப் பட்ட முறையிலே புகார்கள் வந்தாலும், விஜிலென்ஸ் கமிஷனுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து விசாரிக்க வேண்டும் என்றுதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இந்த நடவடிக்கை நாங்கள் எடுத்திருப்பதால் நாங்கள் யாரையும் பாதுகாக்க விரும்ப வில்லை என்பது மட்டுமல்ல, யார் மீதும் ஆத்திரப்பட்டோ அல்லது அன்பு காட்டியோ ஒரு காரியத்தையும் செய்யவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ளலாம். பல்கலைக் கழகத்தில் யார் தவறு செய்திருந்தாலும் அது எங்களது கவனத்திற்கு வரும் பொழுது விசாரித்துப் பார்த்து, தவறாக இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இருக்கிறோம் என்பது நாங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளின் மூலமாகத் தெரிந்திருக்கும். நான் இப்பொழுது சொல்வதன் மூலமாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

விஜிலன்ஸ் கமிஷனில் அதிகாரத்திற்கு இவைகளை உட்படுத்தலாம் என்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறபொழுது இடைரென்று கோர்ட்டிலே விண்ணப்பம் போட்டு தடை செய்கிறார்கள். இப்படி தடை செய்கின்ற பெரியவர் யார் தரியுமா? மா. செல்வராசன் என்கின்ற பேராசிரியர். யார் இந்த மா. செல்வராசன் என்று கேட்டால், பெட்டால் யூனிவர்சிட்டி டீச்சர்ஸ் அசோசியேஷனுடைய தலைவர். நீங்கள் இதைத்தான் கவனிக்க வேண்டும். பதிவாளருக்குத் துணையாக யார் போகிறார்கள்? கல்வியமைச்சரோ அல்லது கல்வித்துறை அதிகாரிகளோ, கல்வித்துறை செயலாளரோ அல்ல. அந்தப் பல்கலைக் கழக ஆசிரியர் கழகமே இதற்குத் துணையாகப் போயிருக்கிறது என்ற வெட்கக் கேட்டைத்தான் நான் சொல்கிறேன். இதைவிட வேறொரு வெட்கக்கேடும் இருக்கிறது.

சிண்டிகேட் உறுப்பினர்களுக்கு அந்த அசோசியேஷன் தேநீர் விருந்தொன்றை ஹேமமாலினி கல்யாண மண்டபத்தில் நடத்தியது. அந்தத் தேநீர் விருந்திற்கு சிண்டிகேட் மெம்பர்கள் போகிறார்கள். இனிப்பு சாப்பிடுகிறார்கள், காரம் சாப்பிடுகிறார்கள், காப்பி சாப்பிடுகிறார்கள். அப்பொழுது, எங்களுக்கு தேநீர் விருந்து வைக்கிற சங்கம் உடனடியாக அந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு இந்த விசாரணையை நடத்துவதற்கு உதவி செய்ய வேண்டும். இல்லையென்றால் உன்னுடைய இனிப்பும் வேண்டாம், காரமும் வேண்டாம், காப்பியும் வேண்டாம் என்று ஒரு வார்த்தை சொல்லுகின்ற அந்த உணர்வு சிண்டிகேட் உறுப்பினர்களுக்கு வராமல் போனதற்கான காரணம் என்ன என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களிடத்திலே நான் கேட்கிறேன். அப்படி அவர்கள் அந்த இடத்தில் கேட்கவில்லை. நண்பர் செல்வராசன் அவர் களே, இவ்வாறு செய்யுங்கள் என்று அந்த இடத்தில் கேட்க வில்லை.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிண்டிகேட் உறுப்பினர்களுக்கு ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது. தனிப் பட்ட மா. செல்வராசன் என்ற மனிதன் கொடுக்கவில்லை. ஆசிரியர் மன்றத்தின் சார்பில் எல்லோருக்கும் ஒரு வரவேற்பு கொடுத்தார்கள். அதற்கு எல்லோரும் போயிருந்தோம். அதற்குப் பழைய சிண்டிகேட் மெம்பர்களும் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்திலேயே நான் சொன்னேன், இந்தப் பல்கலைக் கழகத்தில் பல திமிங்கிலங்கள் இருந்துகொண்டிருக்கின்றன, அந்தத் திமிங்கிலங்களையெல்லாம் வெளியேற்றுவதற்கு இந்த ஆசிரியர் சங்கம் உடன் இருக்க வேண்டுமென்று நான் சொன்னேன்.





நான் அமைச்சரவர்களைக் கேட்க விரும்புவதெல்லாம்' மா. செல்வராசன் போட்டதைப் பற்றி நீங்கள் சொன்னதால் கேட்கிறேன், அந்தப் பல்கலைக் கழகத்தின் மீது என்கொயரி கமிஷன் வர வேண்டுமென்று சொல்கின்ற அந்த ஜீ.ஓ. வின்படி ஏன் செய்யாமல் இருக்க வேண்டும்; நான் முன்பு படித்துக் காட்டியது போல, சர்க்கார் வக்கீல் அந்த ஸ்டேயை வெக்கேட் செய்யாமல் இவ்வளவு காலதாமதம் செய்வதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு ஒழுங்காக நடந்திருக்கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் விவரமாகச் சொன்னார்கள். இப்பொழுது என்னை அவர் சம்பந்தப்படுத்தி கடைசியிலே ஒரு வார்த்தையைப் பிரயோகம்செய்ததால்தான் இந்தப் பிரச்னை வருகிறது. இல்லையென்றால் துரைமுருகன் அவர்கள் இனிப்பு சாப்பிட்டதைப் பற்றியும், காரம் சாப்பிட்டதைப் பற்றியும், காப்பி சாப்பிட்டதைப் பற்றியும் சொல்ல வேண்டிய அவசியம் வரவில்லை. அந்த அளவிற்குக் கீழே போக வேண்டிய அவசியமில்லை.

நான் இப்பொழுது கேட்கும் கேள்வி, இவ்வளவு ஆத்திரப் படுகின்ற தாங்கள், இவ்வளவு ஆர்வத்தைக் காட்டுகின்ற தாங்கள், ஏன் அந்த செல்வராசனைக் கூப்பிட்டு, உடனடியாகப் போய் அந்த வழக்கை வாபஸ் வாங்கு, அவ்வாறு வாபஸ் வாங்கி இந்த விசாரணைக்கு ஏற்பாடு செய் என்று சொல்லி யிருந்தால் என்ன? அவ்வாறு சொல்லியிருந்தால் சாதாரண விசாரணை கூட அல்ல, விஜிலன்ஸ் கமிஷன் விசாரணையேகூட நடைபெறும்; போலீஸ் சி.ஐ.டி. யின் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு செய்வதை யார் தடுக்கிறார்கள்? அப்படித் தடுக்கின்ற வர்களோடு யார் கூடிக் குலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் உணரும். எனவே, இதற்குக் காரணம் நாங்கள் அல்ல, அல்ல, அல்ல என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, என்னைவிடப் பெரிய பொறுப்பிலே அமைச்சரவர்கள் இருக் கிறார்கள், அவர்தான் இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் புரோ சான்சலர். அவரே கூப்பிட்டு, ஆசிரியர் மன்றத்தின் தலைவராக இருக்கிறாய் நீ, இப்படி பல்கலைக் கழகத்தைச் சீர்திருத்தப் போகிறோம். எனவே உடனடியாக அந்த ஸ்டேயை வாபஸ் வாங்கு என்று ஏன் கேட்டிருக்கக் கூடாது? அந்த ஸ்டேயைப் பற்றி எங்கள் செக்கரட்டரி சொல்லிவிட்டார். ஆனால், அதைச் செய்யாதது சட்டத் துறைதான் என்று இப்பொழுது சட்ட அமைச்சர் பொன்னையன் அவர்கள்தான் தவறுக்குப் பொறுப்பு என்று சுட்டிக்காட்டியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தவறு அல்ல, ஒட்டுவாரு நிறையிலேயும் வழக்கறிஞர்கள் பல வழக்குகளை நடத்தும்பொழுது ஏற்படக் கூடிய சில நிலைமைகளைத்தான் நாம் பார்க்க வேண்டும். அதற்காக நாங்கள் அந்த அளவிற்கு இல்லை என்று சொல்லும் பொழுது இன்னொரு அமைச்சரைப் பற்றிச் சொன்னதாகச் சொல்வது என்பது வேடிக்கைக்காக வேண்டுமானால் இருக்கலாம்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது எந்த வழக்கு என்ற தகவலைக் கொடுப்பார்களேயானால் நல்லது. ஏனென்றால் ஒன்றல்ல, இரண்டல்ல ஆயிரக்கணக்கான வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு ஸ்டே கேட்கிறார்கள். ஸ்டேயை வெக்கேட் செய்ய வேண்டும் என்று பெட்டிஷன் போடுகிறோம். அப்படி பெட்டிஷன் போடுவது ஒரு முறை, இரு முறை அல்ல. இரண்டு மூன்று ஆண்டு காலமாக பல முறை ஸ்டே வெக்கேட் பண்ணுவதற்கு ஸ்டே வெக்கேட் பெட்டிஷன் போட்டால் கூட அதை எடுத்து நடத்தி முடிக்கவே 2 ஆண்டு, 3 ஆண்டு என்று உயர்நீதிமன்றத்தில் ஆகிவிடுகின்றது, பல காரணங்களால். எனவே அது எது என்பதைத் தனியாகப் பார்த்து நான் நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட ஒரு நபரிடம் ஒரு பல்கலைக்கழக பேராசிரியரிடம் இந்த அளவுக்கு நெருங்கிப் பழகுகின்ற நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் இன்றைக்குக் கூட கேட்கலாம் அல்லது நாளைக்குக் கூட கேட்கலாம், வழக்கை வாபஸ் வாங்கினால் இவ்வளவு பெரிய காரியமே நடந்துவிடும் போல் இருக்கின்றது, எனவே இதற்கு நீரும் துணையாக இருக்க வேண்டாம், உம்மோடு சேர்ந்து நானும் துணையாக இருப்பது போல் மக்கள் நினைக்க வேண்டாம், எனவே இந்த அரும் காரியத்தை செய்து என் மீது சந்தேகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நண்பர் துரைமுருகன் அவர்கள் கேட்பார்களேயானால் அது எவ்வளவு நல்லதாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இண்டர்வீன் பண்ணுகிறேன் என்று தப்பாக நினைக்க வேண்டாம். திரு. செல்வராஜன் என்பவர்தான் அந்த அசோசியேஷன் ப்ரெசிடெண்ட் என்பது அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னதால்தான் எனக்குத் தெரியும்.



I will verify, as I do not know.

அடுத்த கொஸ்டின் வருகின்றது. கோர்ட்டுக்கு போனபோது ஸ்டே என்கிற போது கவர்ன்மெண்ட் வக்கீல் ஆஜர் ஆகவில்லை என்பதும், மேலும் போன போதும் அவர் ஆஜர் ஆகவில்லை என்பதும் அதற்கும் மேலே போன போது நீட்டிக்கலாம் என்று சர்க்கார் சார்பாகச் சொல்லப்பட்டது. எனவே எஜுகேஷன் டிப்பார்ட்மெண்ட் அந்த ரெஸ்பான்ஸிபிளிட்டியிலே இருந்து தப்பிக்க முடியாது. இவ்வளவு முக்கியமான ஒரு விஷயத்திலே கவர்ன்மெண்ட் வக்கீல் ஆஜர் ஆகாததால் கவர்ன்மெண்ட் விருப்பத்திற்கு மாறான ஒரு முடிவு வந்தது என்ற நிலைமை ஏற்பட்டபோது இதைமானிட்டர் பண்ணக்கூடிய ரெஸ்பான்ஸிபிளிட்டி உங்களுடைய டிப்பார்ட்மெண்ட்டுக்கு இருக்கின்றது. வக்கீல் ஆஜர் ஆகவில்லை என்கிறபோது டிப்பார்ட்மெண்ட் என்ன செய்தது? அதற்கும் மேலே போன போது ஆஜர் ஆகவில்லை என்றபோது டிப்பார்ட்மெண்ட் என்ன செய்தது? அதற்கும் மேலே கவர்ன்மெண்ட் ப்ளீடர் போய் நீட்டிக்கலாம் என்று சொன்னபோது டிப்பார்ட்மெண்ட் என்ன செய்தது?

How did they discharge their responsibility?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, வழக்கறிஞர் ஆஜர் ஆகவில்லை என்பதோ, இது போன்ற நிலைமைகள் ஏற்படுவதோ இந்த ஒரு வழக்கில் மட்டும் இல்லை வேறு பல வழக்குகளிலும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இது போன்ற பல வழக்குகள் இருக்கின்றன, மைனாரிட்டி இன்ஸ்டிட்டியூஷன் என்பதைப் பொறுத்தவரையில் ஒரு வழக்கைப் போட்டு அது 6, 7 ஆண்டுகளுக்கு மேலாக எடுக்கப் படாமல் இருக்கின்றது. நாங்கள் அதுகுறித்து சொல்லிக்கொண்டு தான் இருக்கிறோம். எனவே இதிலேயும் அதைப்போன்று நாங்கள் எங்களுடைய பொறுப்பை நிறைவேற்றிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் வேண்டும் என்ற தவறான முறையில் அந்த வழக்கறிஞர்கள் நடந்திருப்பாரேயானால், அப்படிப்பட்ட நிலைமைஇருக்குமேயானால்அதற்குதக்கநடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் முயற்சிப்போம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் சிண்டிகேட் கூட்டத்திலே நடைபெற்றது பற்றி நாங்கள் விசாரித்ததில், ரிஜிஸ்டிராரைப்பற்றி விசாரித்ததில் அங்கே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் விசாரிப்பதற்கு முன்னதாகவே அவரை முதலிலே சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று கேட்டு பல கருத்துக்களைச் சொல்லி அதிலே ஆணித்தரமாக திரு. துரைமுருகன் அவர்கள் இருந்த காரணத்தால்தான் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் அதற்குப் பிறகு விசாரிப்பதற்கு அவர்கள் ஒரு குழு போட்டிருக்கிறார்கள் என்பதைத் துரைமுருகன் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். சிண்டிகேட் எடுத்த முடிவுப்படி அல்லது எடுக்கின்ற முடிவுப்படி அந்த விசாரணையை அவர்கள் நடத்தி அதிலே ஏதாவது

அவர்கள் மீது குற்றம் இருப்பது நிரூபிக்கப்பட்டால் தக்க நடவடிக்கையை சிண்டிகேட் தாராளமாக எடுக்கலாம்; சஸ்பெண்ட் செய்யலாம்; டெர்மினேட் செய்யலாம்; எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கலாம்: போலீஸில் கூட யுனிவர்சிட்டி சார்பாக வழக்கைப் போடலாம்; அதிலே எந்த விதமான ஆட்சேபணையும் எங்களுக்கு இல்லை.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, சிண்டிகேட் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சிண்டிகேட்டிலே இருக்கின்ற 7 உறுப்பினர்களோ, அல்லது 6 உறுப்பினர்களோ அவர்கள் எல்லாம் கவர்ன்மென்ட் நாமினீஸ். எனவே அவர்கள் கவர்மென்டினுடைய வியூவைத்தான் ரெப்ரசன்ட் பண்ணுகிறார்கள். எனவே இவ்வளவு பெரிய சீரியஸ் மேட்டர் வந்தபோது சஸ்பெண்ட் செய்யக்கூடாது என்று கை தூக்கினார்களே, கவர்ன்மென்டினுடைய வியூ அதுதானா? அல்லது உங்களுடைய வியூவிற்கு மாறாக அவர்கள் கை தூக்கினார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது இங்கே பேசப்பட்டாலும் இந்த இரண்டு நாட்களாக பத்திரிகையிலே வந்த செய்திகளிலேதான் விவரங்கள் இருக்கிறதே தவிர அங்கே சிண்டிகேட் கூட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் எழுதிக் கொடுத்ததில் இந்த விவரங்கள் இல்லை. பிரைமா ஃபேஸி என்ற வகையிலே அதாவது சிமெண்ட் இருக்கின்றது என்றால் அதிலே இவ்வளவு குறைந்திருக்கின்றது, அல்லது இதிலே ஒன்றும் இல்லை என்று தெளிவாக எழுதிக் கொடுத்திருந்தாலாவது அதைப் போய் பார்த்துவிட்டு வந்து அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் பிரைமா ஃபேஸி எதுவும் இல்லாமல் சஸ்பெண்ட் செய்துவிட்டால், அதன் காரணமாக பிறகு அவர்கள் கோர்ட்டுக்குப் போனால், அவ்வாறு இல்லை என்று தீர்ப்பாகின்ற போது அது மேற்கொண்டு நடக்கின்ற காரியங்களைக் குந்தகப்படுத்திவிடும். எனவே அதைப் பார்க்கின்ற அடிப்படையில்தான் செய்வார்கள். ஆனால் மறுபடியும் விசாரிக்க குழு போட்டிருக்கிறார்கள். அங்கே அந்த மூட்டைகளைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து அவர்கள் என்ன செய்ய வேண்டுமோ அந்த காரியத்தைச் செய்வார்கள்.

திரு. துரை முருகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிண்டிகேட் முடிவு பற்றி, நேரடியாக அல்ல, கேட்டுத்தான் தெரிந்து கொண்டு இருக்கவேண்டும். ரிஜிஸ்டிராரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று நான் அங்கே சொன்னபோது, ஏற்கனவே ரிஜிஸ்டிரார் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை— அமெனிடீஸ் செண்டரில் நடந்த ஊழல், அரசாங்கம் போட்ட விசாரணைக்குழு, அரசாங்க விஜிலென்ஸ் என்கொயரி நடத்த வேண்டும் என்ற முடிவிற்கு வந்து இருப்பதால் அந்த ஜி.ஓ. வின் அடிப்படையிலும். ஏற்கனவே பல ஊழல்கள் புரிந்துள்ளதன்



அடிப்படையிலும், சிண்டிகேட் மீட்டிங்கை மிஸ்யூஸ் செய்து இருப்பதாலும், அவரை இப்போதே சஸ்பெண்ட் செய்ய வேண்டும், அதற்கு அடிஷனல் தான் இந்த சிமெண்ட் ஸ்காண்டல் என்றும் சொன்னேன். அந்த அடிப்படையிலும் சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று சொன்னேன்.

சிவர் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அப்போது நம்முடைய செக்ரடரி கிளியராகச் சொன்னார். கோர்ட்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. 'சிண்டிகேட் ஹேஸ் காட் பவர்ஸ்' என்று சொன்னார். அப்போதே அவரை சஸ்பெண்ட் செய்யலாம் என்று சொன்னார். அப்போது நான் கேட்டேன். அரசாங்கம் போட்ட ஜி.ஓ.-வின் அடிப்படையிலேயே பிரைமா பேசி கேஸ் இருக்கிறது. அது குறித்து சர்க்கார் ஆணையிலேயே குறிப்பிடப்பட்டு இருப்பதால், அதிலே பிரைமா பேசி கேஸ் இருப்பதால், அவரை 'சஸ்பெண்ட் பெண்டிங் என்கொயரி' என்று சொன்னேன். அதற்கு அடிஷனல்தான் சிமெண்ட் ஸ்கேண்டல். (குறுக்கீடு.)

கமிட்டி எதற்காகப் போட்டு இருக்கிறார்கள் என்றால், எனக்கு வந்த தகவல் படி, அந்த மூட்டைகள் இருக்கிறதா என்று பார்ப்பதற்குத்தான் போட்டு இருக்கிறார்கள். அப்போதே நான் சொன்னேன். இதிலே பெரிய அளவிலே சம்பந்தப்பட்டவர் தான் இந்த வையாபுரி. இந்த வையாபுரிதான் அவருக்கு துன் மந்திரி என்றும் சொன்னேன். இதற்கு எல்லாம் மொத்தத்திற்கும் ஆல் இன் ஆல் அவர்தான். அவரைப்போய் தலைவராகப்போட்டு அதிலே காலேஜியேட் டைரக்டரையும் உறுப்பினராகப் போட்டு, ஒரே ஒரு எலெக்டெட் மெம்பர் நாராயணசாமியையும் போட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை என்றால் மூட்டை சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு வருவதுதான். அவர்களுக்கு ரெக்டிபை செய்ய வேண்டிய வேலை இல்லை. எப்படி சிமெண்ட் வந்தது, எப்போது வந்தது என்று அவர்கள் பார்க்கவேண்டியது இல்லை. இதிலே அமைச்சருக்குக் கூட தவறான தகவல் கொடுத்து இருக்கலாம். ஏனென்றால் நான் நேற்று ராத்திரி அவர்கள் அனுப்பிய லெட்டரைப் பார்த்தேன்.

இதிலே இரண்டாவது அன்கான்ஸ்டிடியூஷனல் காரியம் என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு கமிட்டி போட சிண்டிகேட் வி.சி.—க்கு பவர்ஸ் கொடுக்கவேண்டும். தென் ஒன்லி வி.சி. ஆக்ட் செய்யவேண்டும். அப்படிப்பட்ட பவர் வி.சி.—க்கு சிண்டிகேட் கொடுக்கவில்லை. கொடுக்காத பவரை எடுத்துக்கொண்டு வி.சி. ஆக்ட் செய்தது அன்கான்ஸ்டிடியூஷனல் என்பது என்னுடைய வாதம்.

ரெஷல்யூஷனாகக் கொடுங்கள் என்று கேட்டார்கள். எந்த அடிப்படையில் சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று கேட்டார்கள். நான் உடனே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று

லிஸ்ட் போட்டு எழுதிக்கொடுத்தேன். அதற்குப் பிறகு நான் ஒரு டிசென்டிங் நோட் கொடுத்தேன். அந்தக் கூட அமைச்சர் அவர்கள், புரோ–சான்சலர், என்ற முறையில் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு துரை முருகன் அவர்கள் அல்லது அவருடைய கருத்தை நம்புகிறவர்கள் எதிர்பார்ப்பது விசாரிக்க வேண்டும் என்பது தான். அதற்காக கமிட்டி போட்டு இருக்கிறபோது அந்தக் கமிட்டி விசாரிக்கக் கூடாது என்ற கருத்தை இப்போது நாம் சொல்வது நல்லதல்ல. அதுமட்டுமல்ல, அடுத்த சின்டிகேட் கூட்டத்திலேயே கூட நீங்கள் அதிலே தவறு இருந்தால் தாராளமாகப் பேசலாம், செய்யலாம். இது ஒரு சாதாரண புகார் அல்ல. ஏறக்குறைய 25 இலட்சம் பெறுமானமுள்ள சிமெண்ட் தொடர்புடையது. ஆகவே, இது ஒரு சீரியஸ்ஸான புகார். ஆகவே, இதை விசாரித்து கண்டுபிடிக்கவேண்டும்.

இது ஒரு சாதாரண காரியம்தான். ரிக்கார்ட்டுகளை அல்லது ஸ்டாக்கை வெரிபை செய்ய பொறுப்பு இருக்கிறது. அதற்குத் தான் கமிட்டி போடப்பட்டு இருக்கிறது. அதிலே பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாராயணசாமி இருக்கிறார், கல்லூரிக் கல்வி இயக்குநர் இருக்கிறார், தொழிற் கல்வி இயக்குநர் இருக்கிறார். மூன்றுபேரும் சேர்ந்து தப்பாகப் போவார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆகவேதான் அவர்கள் விசாரித்து, பின்னர் அங்கே ஒரு 1,000 மூட்டைகள் அல்லது 2,000 மூட்டைகள் காணவில்லை என்றால் உடனடியாக போலீஸுக்கே நாம் கம்ப்ளெயிண்ட் தரலாம். சம்பந்தப் வர்கள் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் மீது வழக்கு பட்டவார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு, பல்கலைக்கழகத்தில் இருந்து தந்த விளக்கத்தை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன். அதை நம்புவதும், நம்பாததும் உங்களைப் பொறுத்தது. ஆனால் நான் வந்து இருக்கும் தகவலைச் சொல்கிறேன். அது என்னுடைய கடமை என்று படித்துக் காட்டுகிறேன். இந்தக் கடிதம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வந்த ஒரு செய்திக்குப் பிறகு அவர்கள் எழுதிய கடிதம். அந்தக் கடிதத்தை அந்த நாளிதழ் போடவில்லை என்று கருதுகிறேன். அந்தக் கடிதத்தை வெளியிட வேண்டிய தார்மீகக் கடமை அந்தப் பத்திரிகைக்கு இருக்கிறது. அப்படிப் போடுவதன் மூலம் அவர்கள் பத்திரிகை தர்மத்தை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"Sir, I refer to your write up in today's (30-10-83) issue under the caption "Versity Registrar in Cement controversy". You have stated that the Registrar has proceeded on Medical leave in a cloud of controversy, etc. The fact is that the



Registrar has gone on leave for only ten days for health reasons. It is unfortunate that this should be clubbed with the motivated controversy raised at the Syndicate meeting on 24-10-83."

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன்அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் யூனிவர்சிட்டி பி.ஆர்.ஓ.விடமிருந்து வந்த கடிதத்தைப் படிக்கிறேன். அதையும் என்னையும் தொடர்பு படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Coming to the factual position of the imported cement purchased, I wish to place the following facts for the information of your readers.

Two consignments of 1,000 tonnes each was purchased from abroad for the construction of Non-Teaching staff Housing Colony at Palavakkam and for the construction of building for the Institute of Correspondence Course.

Over 2,000 tonnes of cement has been consumed for the Non-Teaching Staff Colony at Palavakkam. It includes total imported cement and the cement purchased from the local factories. While the work was in progress, shortage of cement was faced and the contractor was permitted to divert cement from his construction work elsewhere with a view to complete the houses in the colony without delay, so that the non-teaching staff could move to the New Colony by the begining of the academic year 1983-84. At some stages non-availability of cement was faced by the University. Therefore, the contractor was asked to divert his cement from some of his office works elsewhere and it was arranged under the supervision of the University Site Engineer. Accordingly, the contractor utilised 4,650 bags by diversion and this is recorded in the relevant books of the work.

For the Institute of Correspondence Education building so far 145 tonnes have been issued to the work. The balance of 655 tonnes is stocked in the following godown. A.C. Collage Science block 330 tonnes, University Chepauk Campus 175 tonnes, Gandhi Nager godown 350 tonnes. The stock in these three godowns are kept under lock and key under the seal of the Assistant Executive Engineers in charge of these godowns. The Registrar becoming the custodian of these cement bags is a myth. It will thus be seen, that the controversy raised is not based on facts but motivated by malicious propaganda gimmick. The report that the University cement has been diverted to Neelankarai is not only false but also mischievous.

The construction work for Institute of Correspondence Education was awarded by the Syndicate after wide publicity in the Newspapers inviting tenders and on the recommendation of the Building Committee consisting of the Director of Technical Education as Chairman, The Chief Engineer (Buildings) Public Works Department, The Vice-Chairman, the Architect, the University Executive Engineer, the Director of Institute of Correspondence Education and the Registrar as members

I am not dealing with the G.Os referred to in the write up as they are all sub judice on account of the defamation cases filed by the Registrar against some individual persons and Newspapers and certain matters are pending in the Madras High Court

I request that this may kindly be published in your next issue இது அங்கேயிருந்து அவர்கள் பத்திரிகைக்கு தெரிவித்த விளக்கம். அதைத்தான் படித்தேன். இது என்னுடைய விளக்கம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விளக்கத்தை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

திரு. ரா. உமாநாத் : இந்த விளக்கத்திலிருந்தே நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக கன்ட்ரோல் சிமின்ட் வாங்கியிருந்தால், அதை டைவர்ட் பண்ணி வேறு ஒரு பர்ப்பசுக்காகப் பயன்படுத்துவதாக இருந்தால் அதற்கு கன்ட்ரோலருடைய பெர்மிஷன் வாங்க வேண்டும். இன்ன வேலைக்கு இதை யூஸ் பண்ணுகிறோம் என்று தெரிவிக்க வேண்டும் நாங்கள் இதற்காக சிமின்ட் வாங்கினோம், இன்ன காரணத்தால் இதற்கு யூஸ் பண்ணப்போகிறோம் என்று தெரிவித்ததாக இந்த விளக்கத்தில் இல்லையே.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்தின்படியே 'நான்-டீச்சிங் ஸ்டாஃப் காலனி' கட்டி முடிப்பதற்கு சிமின்ட் பற்றாக்குறை ஏற்பட்டது; வேறு காரியங்களுக்கு என்று வைக்கப்பட்டிருந்த சிமின்டை பயன்படுத்திக்கொள்ளுமாறு கான்ட்ராக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்; அதன்படி கான்ட்ராக்டர் தன்னிடம் இருந்த சிமின்டைப் போட்டு கட்டியிருக்கிறார். மறுபடியும் இங்கே சிமின்ட் வந்தவுடன் கான்ட்ராக்டர் போட்ட சிமின்டை எடுத்துக் கொண்டார். இது நடைமுறையில் இருந்துவரும் வழக்கம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு.) அதாவது கரஸ்பான்டன்ஸ் கோர்ஸ் பில்டிங் கட்டுவதற்கும் நான்-டீச்சிங் ஸ்டாஃப் காலனி கட்டுவதற்கும் வாங்கிய சிமின்ட். இந்த சிமென்ட் வருகிற வரைக்கும் அவர்களுக்கு சிமென்ட் இல்லாத காரணத்தால், கான்ட்ராக்டர் தனது சொந்த சிமென்டைப் போட்டு கட்டியிருக்கிறார். அதற்குப் பிறகு அவர் எவ்வளவு சிமென்ட் போட்டாரோ அந்த வேலைகளுக்காக, அவ்வளவு சிமென்டையும் இதிலே இருந்து எடுத்துக்கொண்டிருக்கிறார். வாங்கிய சிமென்ட் இந்த இரண்டு வேலைகளுக்கும்தான்.



திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இது முதலிலேயே பல்கலைக் கழகத்திலே இருந்து கொடுத்தது, என்னை இதில் சம்பந்தப்படுத்தாதீர்கள் என்று. ஆனால் அமைச்சர் என்ற முறையிலே மட்டுமல்லாமல், அவர் புரோ-சான்சலர் என்ற முறையிலேயும் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நான்-டீச்சிங் ஸ்டாப் குவார்ட்டர்ஸ் பாலவாக்கத்திலே கட்டப்படுகிறது. இந்த சிமென்ட் வருவதற்கு முன்னால் எச்.சி.கே. ஷெட்டி என்ற ஒருவர் கட்டுகிறார். நமக்கு மார்ச்சிலே 1,000 டன் வருகிறது. அப்போதே 80 சதவிகிதம் கட்டி முடிக்கப்பட்டது. முதலிலே சொன்னேன். இந்த மாதிரி எதுவும் வரும் என்றுதான் முதலிலேயே சொன்னேன். கட்டி முடிக்கப்பட்டு மேலே வர்ணம் தீட்டப்படுகின்ற நிலையில்தான் இருந்தது. சீலிங் மட்டும் போட வேண்டும். அந்த சீலிங்லேயும் இந்த சிமென்ட் யூஸ் பண்ணவில்லை. அவர் சொல்கிறார், Over two thousand tonnes of cement have been comsumed for the Non-teaching staff colony at Palavakkam. 2,000 டன் சிமென்ட் நான்-டீச்சிங் ஸ்டாப் குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கு பயன்படுத்தப் பட்டது. இங்கேயிருந்து ஆயிரம் டன் போகிறது. அங்கே ஏற்கெனவே ஆயிரம் டன் இருக்கிறது. ஆக 40 ஆயிரம் மூட்டை இருக்கிறது. அதற்காகத்தான் உமாநாத் கேட்டார், வேறு காரியத்திற்கு பயன்படுத்த வேண்டுமென்றால் கண்ட்ரோலரிடம் பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று. 80 சதவீதம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் செனட் உறுப்பினர் என்ற முறையில் உங்களுடைய கவனத்திற்கு பொறுப்போடு கொண்டுவர விரும்புகிறேன். அந்த ஆயிரம் டன் போய் சேர்ந்திருக்காது என்பது ஒன்று. இரண்டாவது நீங்களே படித்தீர்கள். for the Institute of Correspondence course Education building work so far 145 tonnes of cement have been issued. இந்த இரண்டாவது, ஷிப்மென்ட் யாரிடம், புருஷோத்தமனிடம். ஜூலை 7 ஆம் தேதி. ஆனால் இந்த வந்தது எப்போதென்றால், புருஷோத்தமனுக்கு சிண்டிகேட் ஐ.சி. பில்டிங் கட்டுவதற்கு கொடுக்கிறதென்றால் ஆகஸ்ட் எப்போது பெர்மிஷன் ஜூலை கடைசியிலே கூட்டம் நடந்து இரண்டாவது வாரத்தில். ஜூலை போவதற்கு லேட்டாகும். முதல் வாரத்தில் மினிட் ஆகி பிறகு புருஷோத்தமனுக்குத் இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், போகிறோம் என்று நினைத்து தான் கான்ட்ராக்ட் கொடுக்கப் கொடுப்பதற்கு முன்னாலேயே அவருக்கு கான்ட்ராக்ட் ஆர்டர் கொடுத்திருக்க இந்த சிமென்ட்டைத் தூக்கி அவர் கையிலே யூனிவர்சிட்டிக்குப் போக வேண்டும். ஹார்பரிலிருந்து லாரி ட்ரிப் ஷீட் கொடுக்கிறார்கள். வேண்டுமென்று தான் முதலில் கேட்கிறார்கள். கேட்ட உடனே இங்கே அதற்கு 100 ரூபாய் இங்கே கொண்டு வந்த பிறகு லாரிகளை கொண்டு வந்தார்கள். திருப்ப வேண்டுமென்று எல்லாம் அண்ணா நகருக்கு சொன்னார்கள்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே நாம் விசாரணையை நடத்திக் கொண்டிருக்க முடியாது. இங்கே குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். விசாரணை செய்வதற்கு வேறு ஃபோரத்தைத் தான் பார்க்க வேண்டும். இங்கே குற்றச்சாட்டை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தால், விசாரித்து முடிவு எடுக்க முடியாது. அதிலே தீர்ப்பு கொடுக்க முடியாது.

திரு. துரைமுருகன்: இரண்டாவதாகச் சொன்னார் இந்தச் சிமெண்ட்டை எங்கெங்கே வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார். காந்திநகர் கொடவுனில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கும், எனக்கும் சம்பந்தப்பட்டதல்ல. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஷயம். அவர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவர் புரோ-சான்ஸ்லர் என்பதால் அவரிடம் கொடுத்த விளக்கங்கள் தவறாக இருந்தால் பல்கலைக் கழகத்தை விளக்கம் கேட்பார்கள். காந்திநகர் கொடவுன் என்பது புருஷோத்தமனுடைய வீடு. புருஷோத்தமனுடைய வீடு எப்படி யுனிவர்சிட்டி கொடவுனாகும். இது விசாரணையில் உள்ள கேள்வி......

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, சில விவரங்களை நான் தருகிறேன். நீங்கள் புகாரைச் சொன்னீர்கள். அதற்குப் பதிலாக எடுத்துக் கொண்டாலும் சரி, உங்களுக்கு மேற்கொண்டு தருகிற விளக்கங்கள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி. ஏனென்றால் சில சமயங்களிலே தவறான செய்திகளின் அடிப்படையில் கூட பேசுகின்றவர்களானால் மாற்றிக் கொள்வதற்கு இது உதவும் என்ற வகையில்தான். இப்போதும்கூட நாம் குழப்பிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது அவர்கள் ஒத்துக்கொண்டிருப்பது 2,000 டன் வந்தது. பாலவாக்கம் மகாபலிபுரம் ரோடிலேதான் இருக்கிறது. தயவுசெய்து இதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அங்கேதான் நான்-டீச்சிங் ஸ்டாப் காலனி கட்டப்படுகிறது. அங்கே காண்ட்ராக்டர் முதலில் ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் போட்டு கட்டியதால் இதற்கு வந்த சிமெண்ட்டை அவர்களிடத்தில் டைவர்ட் பண்ணிய நிலைமை இதிலே வருகிறது. இந்த சிமெண்டை வேறு வேலைக்கு டைவர்ட் பண்ணும்போது நாம் கேட்க வேண்டும்தான். ஆனால் இவர் சிமெண்ட்டை டைவர்ட் பண்ணவில்லை. வேறு ஒரு சிமெண்ட்டை அவர் டைவர்ட் பண்ணி, கட்டி, அந்தக் கடனுக்கு நம்முடைய சிமெண்ட்டை எடுத்துக்கொண்டார்கள் என்ற நிலைதான் இதிலே அவர்கள் சொல்கிற கருத்தாகும். ஆகவே இந்த விவரங்களை எல்லாம் இங்கே அவையின்



முன்னால் வைத்து இருப்பது என்பது இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளினுடைய உண்மை நிலைமையை அறிந்து கொள்வதற்கு உதவும் என்று நான் நம்புகிறேன். அடுத்து கமிட்டி போட்டு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எனக்கும் அதைப் பற்றி செய்தி வந்திருக்கிறது. அவர்கள் நல்லமுறையிலே விசாரித்து ஒரு ஆயிரம் மூட்டை இல்லை என்றாலும்கூட, நாம் உடனடியாக போலிசிலே கேஸ் கொடுக்கலாம். அதைத் தடுத்து நிறுத்த யாருக்கும் சக்தியில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து இங்கே அட்டானமஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். அதைப் பொறுத்து நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அட்டானமி என்பது, தன்னாட்சி உரிமை என்பது கல்வித்துறையில் வரவேற்கப்படவேண்டிய ஒரு அம்சமாகும். இந்தியாவிலே அதிகமான அளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுகிற மாநிலம் தமிழ்நாடுதான், 16 கல்லூரிகள் செயல்படுகின்றன; 4, 5 பாலிடெக்னிக்குகள் கூட தன்னாட்சியைப் பெற்றிருக்கின்றன. இதிலே எந்தத் தகராறும் எதுவும் வரவில்லை. அவினாசிலிங்கம் கல்லூரியிலேதான் ஒரு அதிகபட்சமான அளவிற்கு குற்றச்சாட்டு வந்தது, அதற்கு நாம் கமிட்டிகளைப் போட்டு துணை வேந்தருடைய அபிப்பிராயங்களை கேட்டு ஒரு ஆண்டுக்கு நீடித்து இருக்கிறோம். காரணம் அந்தக் கல்லூரியை வைத்து நாம் இந்தக் கொள்கையை நிர்ணயிப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல. நாமெல்லாம் விவாதித்துத்தான் முடிவு எடுத்தோம். ஆகவே அந்தத் தவறுக்கு என்ன காரணம் என்பதை நாம் பார்த்து, இன்னின்ன நிபந்தனைகளை இப்போது பல்கலைக் கழகங்கள் விதித்திருக்கின்றன. அந்த நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டு 1 ஆண்டுக்காலம் செயல்பட்டால்தான் அடுத்த ஆண்டு இந்த தன்னாட்சி உரிமை அவர்களுக்கு தரமுடியும். இதிலே நாம் பாதுகாப்போடு தான் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுகிறோம். இதிலே நல்லது விளைந்து கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய பொதுவான கருத்தாகும். அவர்களே பாடங்களை தீட்டுவதும். அவர்களே பாடதிட்டங்களை வகுப்பதுமான நிலைமையில் பல கல்லூரிகளில், தொழில் சார்பான அம்சங்களை எல்லாம் சேர்த்து மாணவர்களுக்கு ஒரு நல்ல கல்வி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய பொதுவான அபிப்பிராயமாகும்.

திரு. ரா. உமாநாத்: அட்டானமஸ் பற்றி சமீபத்திலே இந்த அவையிலே லாஸ்ட் செஷன் என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள், அட்டானமஸ் கொடுத்த பிறகு பல அனுபவங்களைப் பார்த்த பிறகு இந்த அட்டானமஸ் கொடுத்தது சரிதானா? என்பதை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைத்தான் நான் இப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதற்கு முன்னாலேயும் சொன்னேன். எந்தக் கல்லூரிகளிலே அட்டானமஸை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்து மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்வோம் என்று சொன்னேன். அதற்கேற்பதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நான் இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம் நாங்கள் ஆசிரியர்களிடம் பேசும்போதுகூட தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறோம். தவறுகளைத் தீர்க்க வேண்டும் என்ற முயற்சியை மேற்கொள்வதிலே அபிப்பிராய பேதங்கள் இல்லை. ஆனால் ஒரு தவறையோ, இரண்டு தவறையோ சுட்டிக்காட்டி ஒரு நல்ல கல்விக் கொள்கையை தூக்கி எறிய முனைவது என்பது நம்முடைய நாட்டுக்கும் நல்லது அல்ல, மாணவர்களுக்கும் நல்லதல்ல, ஆகவே மாணவர்களுக்கும் நாட்டுக்கும் எது நல்லது என்பதைப் பார்த்துத்தான் இதிலே நாம் ஆழ்ந்த ஒரு அக்கறை காட்டுகிறோமே தவிர, மேனேஜ் மெண்ட்டுக்கோ, அல்லது வேறு யாருக்கோ நாம் பரிந்து பேசவில்லை. ஆகவே அந்த அடிப்படையிலே நாம் மாற்றத்தைச் செய்யும்போது, நாங்கள் சொல்கிறபடி, அரசின் சார்பிலே சொல்கிறபடி, அட்டானமஸ் இருந்தால் அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அப்படி இல்லையே என்றுதான் அவர்கள் சொல்கிறார்களே தவிர, ஒரேயடியாக அட்டானமஸ் கூடாது என்று அவர்கள் என்னிடத்திலே அதுவரையிலும் சொல்லவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

குழுவினுடைய பரிந்துரைகளிலே அவர்கள் சில குறைகளைக் கண்டதற்குப் பிறகுதான் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கு. ரமணி: இந்த தன்னாட்சி நிலைமையைப் பற்றி பரிசீலிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட குழு சமர்ப்பித்திருக்கக்கூடிய அறிக்கை இன்றைக்கு வரையிலும் வெளியிடப்படவில்லை என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது வெளியிடப்பட வேண்டிய அவசியம் இல்லை. இப்போது அந்த அடிப்படையிலே தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது இது ஏன் எடுக்கப் பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

அதற்கு அடுத்து, காம்ப்ரஹென்சிவ் ஆக்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை எல்லாம் அறிகிறேன். உள்ளபடியே சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டில் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஒதுக்கி வைத்துவிட்டு நீங்கள் பார்ப்பீர்களேயானால் இதைவிட பயங்கரமான நிலைமை இருப்பதாகத்தான் நான் உணர்கிறேன். அங்கே ஒரு பல்கலைக்



கழகம் எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக அந்தப் பல்கலைக் கழகம் செயல்படுகிறதா என்ற சந்தேகத்தை நான் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறேன். வேறு பல இடங்களிலேயும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 76 துறைகளுக்கு மேலே இருக்கின்றன. எண்ணற்ற பேராசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகம் என்பது கல்லூரியிலே யிருந்து வேறுபட்டது என்பதும், ஒவ்வொரு துறையிலேயும் இருக்கக்கூடிய பேராசிரியர்களுடைய வேலை என்ன என்பதை நாம் நிர்ணயித்துப் பார்க்கின்றபோது, அவர்கள் பேப்பரை பிரட்யூஸ் பண்ணியிருக்கவேண்டும். கான்பரன்ஸ் அட்டெண்ட் பண்ணியிருக்கவேண்டும். செமினார் நடத்தியிருக்கவேண்டும், தங்களுடைய ஆய்வுக்கருத்துக்களை தந்திருக்க வேண்டும்; ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியிருக்கவேண்டும்; எம்.பில். போன்ற மாணவர்களுக்கு சொல்லித் தந்திருக்கவேண்டும் என்ற அடிப்படையிலே பார்க்கின்றபோது பெரும்பாலான அளவிற்கு அது நடைபெறுவது இல்லை என்பதுதான் எனக்கு தெரிய வருகிறது. ஆகவே அங்கேதான் நாம் அதைப் பார்க்கவேண்டும். அங்கே இருக்கிற ஒரு குறிப்பிட்ட புகாரையே நாம் பேசிக் கொண்டிருப்பதன் மூலமாக நடைபெற்று வருகிற மிகப் பெரிய குறைபாடுகளை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. என்னைப் பொறுத்தமட்டில், அதற்கு ஒரு முக்கியமான காரணமாக, பல்கலைக் கழகப் பேராசிரியர்களை அந்த நிர்வாகத்தில் பங்கு வகிக்கின்ற ஒரு ஏற்பாட்டை நாம் ஏற்படுத்தித் தரவில்லை என்பதால்தான் என்று கூறுவேன். அதை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, இப்போது வந்திருக்கிற பாரதியார், பாரதிதாசனார் சட்டங்களை வைத்துப் பார்க்கிற போது, அந்தச் சட்டங்களுக்குள்ளேயே பல மாற்றங்கள் தேவை என்பதும், அந்த மாற்றங்களை உடனடியாக கொண்டு வர வேண்டிய நிலையில் இருக்கிறது அரசாங்கம் என்பதும் உண்மை.

அதேநேரத்தில் பல்கலைக் கழகம் என்பது சமுதாய வளர்ச்சிக்காகவும், சமுதாய நலனுக்காகவுமே இருக்கிற ஒரு அமைப்பு. அங்கே இருக்கிற ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லாம், சமுதாயத்திற்கு பயன்படக்கூடியவர்கள் என்கிற அளவில் அதை நிரூபிக்கக்கூடிய அளவில் செயல்படவேண்டும். பல்கலைக் கழகம் என்பது ஒரு சாதாரண கல்லூரி போன்றது அல்ல என்பதற்கு அவர்கள் நிரூபணம் காட்டியாக வேண்டும். ஒரு பி.எச்.டி. பட்டம்கூட பெறாதவர்கள் அங்கே பேராசிரியர் களாக இருக்கிறார்கள். அவர்கள்தான் 1,100, 2,000 என்ற அளவில் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள்தான் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள்தான் அச்சுறுத்துகிறார்கள்.

தாங்கள் செய்ய வேண்டிய தார்மீக கடமையை இந்தச் சமுதாயத்திற்கு செய்யாமலேயே சம்பளத்தை மட்டும் அதிகமாக்கித் தரவேண்டும் என்று கேட்கிற சூழ்நிலை

இருக்குமேயானால் அதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பேராசிரியர்கள் கேட்கிற சலுகைகளைத் தர நாம் கடமைப்பட்டுள்ளோம் அவர்கள் கேட்கிற நியாயமான சம்பளத்தை தரவேண்டிய கடமை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்களா என்று பார்க்கிற பெரும் கடமையும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு அதிகமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் பல்கலைக் கழகங்கள் மட்டும் ஒழுங்காக செயல்பட்டிருக்குமேயானால், இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற எண்ணற்ற கஷ்டங்கள் இல்லாமலே இருந்திருக்கலாம். அரசியல்வாதிகளும், நிர்வாகிகளும், மற்றவர்களும் அதனிடம் கற்றுக்கொள்ளும்படி வழி காட்டியாக இருக்க வேண்டிய பல்கலைக் கழகமாக அது இல்லையே என்ற வேதனை எனக்கு இருக்கிறது.

ஆகவே, அதை எல்லாம் மனத்திலே வைத்துத்தான், இந்தச் சட்டத்திருத்தங்களை கொண்டு வர இருக்கிறோம், விரைவிலே கொண்டு வந்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆவலை பூர்த்தி செய்ய இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறிய புகார்களை இங்கே மட்டும் சொல்லவில்லை. இந்த புகார்கள் வேறு சில பத்திரிகைகளிலேயும் வந்திருக்கின்றன. என்னுடைய பெயரையும் அதில் சம்பந்தப்படுத்தி வந்திருக்கிற காரணத்தால், அது சம்பந்தமாக ஒரு வழக்கை நான் போடுகிற போது, மாண்புமிகு உறுப்பினர் வாய்தா வாங்காமல், ஒத்தி போடாமல், உடனடியாக ஒத்துழைப்பைத் தந்து அந்த வழக்கை நடத்துவதற்கு உதவி செய்யவேண்டும் என்று இந்த மன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக் கொண்டு, அனைவரையும் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் இந்த மன்றத்திலே சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறேன். பல்கலைக் கழக சிண்டிகேட்டில் எடுத்து வைத்திருக்கிறேன். இதில் என்னை சம்பந்தப்படுத்தி வழக்கு மன்றத்திற்கு வா என்று அழைத்திருக்கிறார்கள். நான் அவருக்கு முன்னாலே ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் இப்படிப்பட்ட ஒரு கமிட்டியை போட்டதனாலே ஒன்றும் நடக்காது. சி.பி.ஐ. விசாரணையைப் போடுங்கள் நான் இருக்கிறேன். ஆஸ்தான வித்வான்களை நீதிபதிகளாக போடாதீர்கள் என்று சொன்னேன். ஆனால் ஒன்றைச் சொல்கிறார் அமைச்சர். 'எனக்கு வாய்தா வாங்காமல் நான் வரவேண்டும் என்று' வாய்தா வாங்குவதையே பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருக்கிற உங்கள் முதலமைச்சரைப்போல், இந்த துரைமுருகன்..........(கூச்சல் குழப்பம்) (மணியடிக்கப் பெற்றது).



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சரை சொன்னதால், தயவுசெய்து, நானும் சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும். ஊழல் வழக்கு போட்டபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் 3 ஆண்டுக்காலம் ஒரு கிரிமினல் வழக்கிலே வாய்தா வாங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன காரணம் சொல்லி என்றால், 'ஐ யாம் நாட் எ பப்ளிக் சர்வெண்ட்'. சொன்னது யார் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி.........(கூச்சல் குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றன.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்; ''1983-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு, எண் 39/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### 5. அரசினர் தீர்மானம்.

#### பேரவை ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25 (1)-ன் படி பேரவை இன்று ஒத்தி வைக்கப் பெற்று மீண்டும் நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கூடலாம்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8–11–1983 காலை 10 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ). சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும், எதுவுமில்லை.

(ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

36. தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவின் நகலும் இணைப்பும் சட்ட மன்றப்பேரவை சட்ட முன் வடிவு எண். 36/1983),

37. தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1983).

38. தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு இந்து சமய— அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1983).

39. தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983).

40. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை) (மூன்றாவது பட்டியல்)."





### இணைப்பு. I

(244 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 124க்கான விடையைக் காண்க)

(அ) இல்லை. இந்த இதழ் இலாப நோக்கத்தோடு நடத்தப் படுவது அல்ல.

(ஆ) 'தமிழரசு' இதழின் தமிழ் பதிப்பு ஒரு வெளியீட்டுக்கு 45,000 பிரதிகளும், ஆங்கில பதிப்பு ஒரு வெளியீட்டுக்கு 3,700 பிரதிகளும் அச்சிட்டு விநியோகிக்கப் படுகின்றன.

(இ) 'தமிழரசு இதழ்' ஒன்று மட்டும்தான், தமிழ்நாடு அரசின் சார்பில் வெளியிடப்படும் அதிகாரப் பூர்வமான பொது அரசு இதழ். இதைத் தவிர, அரசின் பல்வேறு துறைகள் கழகங்கள், வாரியங்கள் ஆகியவைகளில் அந்தந்த துறை சம்பந்தப்பட்ட 'துறை இதழ்கள்' வெளியிடப்படுகின்றன. இவ்வாறு வெளியிடப்படும் துறை இதழ்களின் மொத்த எண்ணிக்கை 16. இவ்விதழ்களின் பெயர்களும் வெளியிடப் படும் மொழியும், அவைகளை வெளியிடும் துறைகளும் பின்வருமாறு:—

| வரிசை எண். | இதழின் பெயர். | வெளியிடப்படும் மொழி | வெளியிடும் துறை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மன்த்லி ரிபோர்ட்டர் (Monthly Reporter). | ஆங்கிலம் | வேளாண்மைத் துறை |
| 2. | நியூஸ் லெட்டர் (News Letter). | ஆங்கிலம் | உழவர் பயிற்சி நிலையம் உதக மண்டலம். |
| 3. | தமிழர் விளையாட்டு மடல் | தமிழ் | இளைஞர் விளையாட்டு பயிற்சி இயக்ககம். |
| 4. | கல்வெட்டு காலாண்டு | தமிழ் | தொல் பொருள் ஆய்வுத் துறை. |
| 5. | தமிழகக் கல்வி (Tamil Nadu Education). | தமிழ் | பள்ளிக் கல்வி இயக்ககம் |
| 6. | பொன்னியின் செல்வன் | தமிழ் | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, தஞ்சாவூர். |
| 7. | நியூஸ் லெட்டர் (News Letter). | ஆங்கிலம் | மாநில தொழில் அபிவிருத்தி நிறுவனம் (சிப்காட்) |

| வரிசை எண். (1) | இதழின் பெயர். (2) | வெளியிடப்படும் மொழி. (3) | வெளியிடும்துறை. (4) |
|---|---|---|---|
| 8. | உழைப்பவர் உலகம் | தமிழ் | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம். |
| 9. | தமிழ்நாடு லேபர் ஜர்னல் (Tamil Nadu Labour Journal) | ஆங்கிலம் | தொழிலாளர். ஆணையாளர். |
| 10. | தமிழ்நாட்டுக் காவலர் (Tamil Nadu Police Journal) | தமிழ் பதிப்பு (English Edition) | காவல் துறை |
| 11. | தீர்ப்புத் திரட்டு | தமிழ் | உயர்நீதி மன்றம் |
| 12. | குற்ற வழக்கு தீர்ப்புத் திரட்டு | தமிழ் | உயர்நீதி மன்றம் |
| 13. | மெட்ராஸ் ஜர்னல் ஆப் பிஷரீஸ் (Madras Journal of Fisheries) | ஆங்கிலம் | மீன் வளத்துறை |
| 14. | திருக்கோயில் | தமிழ் | இந்து சமய அற நிலையத் துறை |
| 15. | குடும்ப நலச் செய்திக் கதிர் | தமிழ் | மாநில குடும்பநல அமைப்பு |
| 16. | மின் குடும்பம் | தமிழ் | தமிழ்நாடு மின் வாரியம் |



## இணைப்பு III.

(..—ம்பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 3175க்கான விடையைக்காண்க)

### மாநில அரசால் வழங்கப்படும் சலுகைகள்.

1. மாநில அரசுப் பணிகளில் மாநில அரசு, உள்ளாட்சி மன்றங்கள், ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த (மாநில) தொழிற் பிரிவுகள், லிப்ட் இயக்குபவர் பதவிகள் அனைத்தையும் உடலூன முற்றோருக்கு ஒதுக்குக.

2. மாநில ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த (மாநில) உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் அறிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமை அளிக்கப்படுகிற முன்னுரிமை அளிக்கப்படாத பதவி காலியிடங்களுக்கு உடலூனமுற்றோரை நியமித்தல்.

3. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் வசிக்கும், வேலைதேடும் உடலூனமுற்றோருக்கு ஏற்ற பணியில் அவர்களை அமர்த்துவதற்காக அப்பகுதிகளில் உள்ள முக்கிய வேலை வாய்ப்பகங்களில் தனி வேலை வாய்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

தனிப்பட்ட தொழில் பழகுநர் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் தொழிலதிபர்கள் தங்கள் தொழிற் பிரிவுகளில் உடலூனமுற்றோரை நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளிக்கிறது. தொழிலதிபர் தனிப்பட்ட தொழில் பழகுநராக அமர்த்தியுள்ள, உடல் ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் திட்டத்தின்கீழ் தொழில் பழகும் முதல் 12 திங்களுக்கு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 150 பயிற்சி உதவித் தொகையை மாநில அரசு வழங்குகிறது.

5. செவிடராகவும், முடமாகவும் உள்ள பெண்டிருக்குப் பொம்மை செய்தல், தையல் வேலை, பூ வேலை, சுருக்கெழுத்து, தட்டச்சு போன்றவற்றில் சென்னை—17-லிலுள்ள மகளிர் சேவா மந்திரில் பயிற்சி உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்புகள், சென்னை-35, சமூகநல இயக்குநர் அலுவலகம் மூலம் நடத்தப்படுகின்றன.

6. சென்னை-4 சாந்தோமிலுள்ள வயது வந்த செவிடருக்கான பயிற்சி நிலையம், சென்னை-28 ஆந்திர மகிள சபை, சென்னை—88 காபிரியேல் புது வாழ்வு நிலையம், சென்னை—8 இந்திய செஞ்சிலுவை சங்கம், வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி, காட்பாடி ஆகிய இடங்களிலுள்ள ஸ்வீடன் செஞ்சிலுவை புதுவாழ்வுப் பயிற்சி நிலையங்கள் ஆகியவை தனிப்பட்ட

தொண்டு நிறுவனங்களில் சிலவாகும். அவை இம்மாநிலத்தின் உடலூனமுற்றோருக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் மிக முக்கியமான பயிற்சி நிறுவனங்களாகும்.

7. முட்டுக்காட்டில் செயல்பட்டு வரும் நவீன பயிற்சி உற்பத்தி நிலையத்தில் உடலூனமுற்றோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றனர். இப்பிரிவு சென்னை-35-லுள்ள சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகிறது.

8. பார்வையிழந்தோருக்குச் சிறுரகப் பொறியியல் தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகம் சிறுரகப் பொறியியல் பயிற்சி நிலையத்தை நடத்தி வருகிறது.

9. சென்னை-35-லுள்ள உடலூனமுற்றோருக்கான தனி வேலை வாய்ப்பகம் பார்வையிழந்தோர், முடவர் 16 பேருக்கு புத்தகம் கட்டும் தொழிலில் ஒவ்வொரு 6 திங்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக அரும் பொருட்காட்சியகத்தின் வளாகத்திற்குள் அரசினர் புத்தகம் கட்டும் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது.

10. பார்வையிழந்த செவிட்டுச் சிறார்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக தனிப் பள்ளி அமைப்பை அண்மை ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

11. மாநில அரசு ஓரளவு அரசுத் தன்மைவாய்ந்த (மாநில) அலுவலகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களில் ஐந்தாண்டு காலப் பணி முடிக்கும் செவிடர், சரியாக காது கேளாதவர்கள் ஆகியோருக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படும்.

12. வேலை தேடி தனிவேலை வாய்ப்பு அலுவலகங்களை நாடி வருகின்ற தகுதி வாய்ந்த வேலை வாய்ப்பு அவசியமான உடல் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் தனி வேலை வாய்ப்பு அலுவலகம் ரூ. 2 அல்லது ரூ. 3 நல உதவியாக அளிக்கின்றது.

13. சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகம் விளம்பரம் செய்யும் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் போது மாத குடும்ப வருமானம் ரூ. 20-க்கு மேற்படாத உடல் ஊனமுற்றோர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

14. வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நடத்தப்படும் நேர்முகப் பேட்டியில் வேலை தேடிவரும் உடல் ஊனமுற்றோருக்கு போக்குவரத்துச் செலவிற்காக நாளொன்றுக்கு நபருக்கு ரூ. 2 வீதம் கொடுக்கப்படுகிறது.



15. ஆதரவற்ற முடவர்கள், செவிடர்கள், பார்வையிழந்தோர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 முதியோர் ஊதியம் வழங்குகிறது.

16. எட்டு முதல் பத்து வயது வரையுள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகளைப்பராமரிக்க முன்வரும் தொண்டு நிறுவனங்களுக்கு குழந்தை ஒன்றுக்கு மாதம் ரூ. 30 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது.

17. விழியிழந்தோர் சென்னை நகர்ப்புற வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

உடல் ஊனமுற்ற வயது வந்தவர்கள், குழந்தைகள் ஆகியோரின் தேவைக்கும் தகுதிக்கும் ஏாலிபர், சக்கர நாற்காலிகள் மூன்று சக்கர சைக்கிள்கள் காது கேட்க உதவும் கருவிகள் ஆகியவற்றை தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை இலவசமாக வழங்குகிறது.

19. சென்னை-98, கருணாநிதி நகரிலுள்ள செயற்கை உடலுறுப்புகள் தயாரிக்கும் நிறுவனம் உடல் ஊனமுற்றோர்களுக்கு செயற்கை உடலுறுப்புகளை குறைந்த விலையில் பெற உதவுகின்றது.

20. சென்னை-35-ல் உள்ள சமூக நல இயக்குநர் அலுவலகம் சுயவேலைவாய்ப்புத்திட்டத்தின்கீழ் பெட்டிக் கடைகள் அமைக்க உடல் ஊனமுற்றோருக்கு உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்தின் மூலமாக உதவுகிறது.

21. உடல் ஊனமுற்றோரில் தகுதி வாய்ந்த தொழிலமைப்பாளர்கள் வணிகம் நடத்தவும் சுய வேலை வாய்ப்பின் மூலம் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் ரூ. 500 மானியம் வழங்குகிறது.

22. திறமை வாய்ந்த உடல் ஊனமுற்ற தையற்காரர்கள் சுயவேலை வாய்ப்பு முறையில் தையற் பிரிவுகளைத் தொடங்க சென்னை-35—ல் உள்ள சமூக நலத் துறை இயக்குநர் அலுவலகம் தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்குகிறது.

23. இந்தியாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகங்களும், கன்னிமரா பொது நூலகமும் தொழில் நுட்பத் தகவல் நூலகங்களும் தங்களது புத்தகங்களையும் பதிவேடுகளையும் சென்னை—35-ல் உடல் ஊனமுற்றோருக்காக உள்ள தனி வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு புத்தகம் கட்டும் பயிற்சி நிலையம் மூலமாக அந்நிலையத்தில் பயிற்சி முடித்த உடல் ஊனமுற்றோரைக் கொண்டு கட்டிக்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[1983 நவம்பர் 1

### மத்திய அரசால் வழங்கப்படும் சலுகைகள்.

1. மத்திய அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், அரசு (ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த) (மத்திய) நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள காலியிடங்களில் 3 சதவீதம் உடலூனமுற்றோருக்கு (செவிடர்களுக்கு 1 சதவீதம், பார்வையிழந்தோருக்கு 1 சதவீதம். முடவர்களுக்கு 1 சதவீதம்) ஒதுக்குதல்.

2. மத்திய அரசுப் பணிகளில் சி. டி. தொகுதி பணியாளர்களுக்கான பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட உடலூனமுற்றோருக்கு சென்னை—35 உடலூனமுற்றோருக்காக உள்ள தனி வேலை வாய்ப்பகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தனி மருத்துவக் குழு மருத்துவ பரிசோதனை செய்து இலவசமாக உடற்தகுதிச் சான்றிதழ் வாங்க உதவி செய்யப்படுகிறது.

3. இரயில்வேயில் உடலூனமுற்றோரை நியமனம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 3 சதவீதத்தை (எல்லா மத்திய அரசு அலுவலகங்களுக்கும் பொருந்தக் கூடிய சாதாரண சதவீதம்) 13 சதவீதம் உயர்த்துதல்—முடவர்களுக்கு 5 சதவீதம் பார்வையிழந்தோருக்கு 5 சதவீதம், செவிடர்களுக்கு 5 சதவீதம்.

4. மேற்சொன்ன இனத்தில் விவரித்துள்ளது போன்ற தொழில் பழகுநர் திட்டம் ஒன்றை இந்திய அரசு செயற்படுத்தி வருகிறது. தொழிலதிபரால் அமர்த்தப்பட்டு தொழிற்சாலையில் பயிற்சி பெறும் உடல் ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் இந்திய அரசு திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 பயிற்சி உதவித் தொகை அளித்து வருகிறது.

5. உடல் ஊனமுற்றோருக்கு சென்னை-32 கிண்டியில் உடலூனமுற்றோருக்காக செயல்பட்டு வரும் வாழ்க்கை தொழில் பயிற்சி நிலையத்தில் அறிவியல் முறையில் அவர்களிடம் எஞ்சியுள்ள திறமை குறித்து மதிப்பிட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவ வசதிகளும் அவர்களுக்குச் செய்துதரப்பட்டு அவர்களது புதுவாழ்வுக்காக வாழ்க்கைத் தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

6. மத்திய அரசுப் பணிகளில் கீழ் நிலை எழுத்தர் பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட உடலூனமுற்றோர் தட்டச்சில் திறமை பெற முடியாதவாறு கை ஊனமுடைந்தோராயிருப்பின் தட்டச்சில் தேறியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையினின்று அவர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது.

7. தொழில் பயிற்சி நிறுவனங்கள் நடத்தும் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புகளில் சேருவதற்கு உடலூனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

8. 24-40 வயது தொகுதியிலுள்ள உடலூனமுற்றோருக்கு அவர்கள் பள்ளிக் கல்வி, கல்லூரிக்கல்வி, உயர் கல்வியைத் தொடர்வதற்கு இந்திய அரசு தொடங்கியுள்ள படிப்புதவித் திட்டக்கின்கீழ் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது.



1983 நவம்பர் 1]

இரயில் கட்டணத்தில் ¼ பங்கு கட்டணம் செலுத்தி
9. இரயிலில் பயணம் செய்ய பார்வையிழந்தோருக்கு சலுகை
வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ மனைக்குச் செல்லும் உடல் ஊனமுற்
10. மருத்துவ வருபவர் இரயிலில் இலவசமாகப்
றோர்க்குத் துணையாக
பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

இந்திய எண்ணெய் கழகம் எண்ணெய் வணிகர்களை
11. நியமிப்பதில் உடல் ஊனமுற்றோருக்கு 2 சதவிதம் இடம்
ஒதுக்கியுள்ளது.

உடல் ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு அடிப்படை
12. யில் சொந்தத்தில் வாணிகம் செய்ய நாட்டுடைமையாக்கப்பட்ட
வங்கிகள் குறைந்த வட்டியில் கடனுதவி அளிக்கின்றன.

உடல் ஊனமுற்றோர்களை வேலைக்கமர்த்தும் தொழி
13. லதிபர்கள் வருமான வரியைக் கணக்கிடுகையில் தாங்கள் வரி
செலுத்தத்தக்க வருவாயில் அந்த ஆண்டில் அத்தகைய உடல்
ஊனமுற்றோருக்கு அளித்த மொத்தச் சம்பளத்தில் 11/3
பங்கைக் கழித்துக் கொள்ள அனுமதிக்கபடுகின்றனர்.

### மத்திய மாநில அரசுகள் இணைந்து வழங்கும் சலுகைகள்.

மத்திய, மாநில அரசு நியமன அதிகாரிகள் தம் கீழ் உள்ள
1. பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கையில் உடலூனமுற்றோருக்கு
முன்னுரிமை அளித்தல்.

மாநில, மத்திய அரசுப் பணிகளில் ஆட்களை நியமிக்கை
2. யில் உடலூனமுற்றோருக்கு வயது வரம்பைப் பத்தாண்டுகள்
தளர்த்துதல்.

உடலூனமுற்றோரை அதிக அளவில் பணிக்கமர்த்தியுள்ள
3. தொழிலதிபர்கள் ஒவ்வோராண்டும் மார்ச் திங்களில் நடை
பெறும் உலக உடலூனமுற்றோர் விழாவின் போது தேசிய மாநில
விருதுகள் வழங்கப்பட்டு பாராட்டப்படுகின்றனர்.

பார்வையிழந்தோர், செவிடர் முடவர், மனநிலை
4. குன்றியவர்கள், தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் ஆகிய
ஐந்து வகையினரால் ஒவ்வொரு வகையிலும் சிறந்து விளங்கும்
தொழிலாளருக்கு உலக ஊனமுற்றோர் நாள் விழாவின் போது
தேசிய மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன.

மத்திய அரசு நிறுவனங்களிலும் ஓரளவு அரசுத்தன்மை
5. வாய்ந்த (மத்திய அரசு) நிறுவனங்களிலும் பணிபுரியும் உட
லூனமுற்ற தொழிலாளர்கள், தமது அலுவலகங்கள் தொழிற்
சாலைகளுக்குச் செல்வதற்கு அல்லது பணிபுரியும் இடத்தை
அடைவதற்கு ஏற்படும் பயணச் செலவு குறித்து திங்கள் ஒன்றுக்கு
ரூ. 30 பயணப்படி பெறுகின்றனர். இந்திய உணவுக்கழகத்தின்
தொழிற் பிரிவுகளில் பணிபுரிவோருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 75
பயணப்படி அளிக்கப்படுகிறது.

## இணைப்பு III.

(.. ம்பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 10685-க்கான விடையைக் காண்க.)

1980–81 ஆம் ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 69 ஒன்றியங்களில் 5,336 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் 5,336.

| வரிசை எண். | வேலையின் பெயர். | எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள். | முடிக்கப்பட்ட வேலைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | இணைப்புச் சாலைகள் | 6,565.06 கி.மீ. | 6,590.96 கி.மீ. |
| 2 | சிறுபாலங்கள் | 3,044 | 3,044 |
| 3 | ஆதிதிராவிடர்களுக்கு மயானம் செல்லும் சாலை வசதி | 927.71 கி.மீ. | 927.71 கி.மீ. |
| 4 | சிறு பாசன மேம்பாடு | 1,023 | 1,023 |
| 5 | ஊரக மருந்தகங்கள் | 82 | 82 |
| 6 | தாய்சேய் நல விடுதிகள் | 237 | 237 |
| 7 | பள்ளிக் கட்டிடங்கள் | 950 | 950 |
| | மொத்தம் .. | 7,492.77 கி.மீ. நீளம் 5,336 எண்ணிக்கை | 7,518.67 கி.மீ. நீளம். 5,336 எண்ணிக்கை |

## இணைப்பு IV.

(.. ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 12022–க்கானவிடையைக் காண்க.)

(அ) சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 1979–80, 1980–81 ஆகிய ஆண்டுகளில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) வேறு தொழில் செய்பவர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகிறதா?

விடை—

(அ) ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது.

| 1979–80. | | 1980–81. | |
|---|---|---|---|
| மானியத்தொகை வழங்கப்பட்ட சிறு விவசாயிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மானியத் தொகை. | மானியத்தொகை வழங்கப்பட்ட சிறு விவசாயிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட மானியத் தொகை. |
| | ரூ. | | ரூ. |
| 443 | 2,08,961 | 823 | 2,87,318 |

(ஆ) ஆம். ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 3,500–க்கு மேற்படாமல் இருந்தால் அக்குடும்பத்தைச் சேர்ந்தோர் விவசாயம் அல்லாது வேறு எந்த தொழில் செய்பவர்களாக இருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் மான்யம் பெற தகுதியுள்ளவர்களாவார்கள்.

## இணைப்பு V.

(.. ம்பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண்.12363-க்கான விடையைக் காண்க.)

**1977 ஆம் ஆண்டிலிருந்து 1981 டி ம்பர் திங்கள் முடிய மாவட்ட வாரியாக கண் சிகிச்சை செய்தோர் விவரம்.**

| மாவட்டத்தின் பெயர். | கண் சிகிச்சை செய்தோர். | | | | |
|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சென்னை .. .. | .. | .. | 199 | 136 | .. |
| செங்கல்பட்டு .. .. | 1,400 | 706 | 904 | 1,111 | 1,798 |
| வட ஆற்காடு .. .. | 2,292 | 1,565 | 1,773 | 1,289 | 1,594 |
| தென்னாற்காடு .. .. | 2,123 | 1,111 | 269 | 2,094 | 1,643 |
| தர்மபுரி .. .. | 381 | 612 | 800 | 974 | 70[illegible] |
| தஞ்சாவூர் .. .. | .. | 1,431 | 93 | 1,594 | 1,286 |
| திருச்சி .. .. | 1,195 | 300 | 300 | .. | 1 774 |
| புதுக்கோட்டை .. .. | 29[illegible] | .. | 300 | 207 | 96 |
| மதுரை .. .. | 2,150 | 1,16[illegible] | 1,242 | 1,[illegible]40 | 1 485 |



இணைப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. | 566 | 1'334 | 860 | 1,489 | 1,417 |
| திருநெல்வேலி .. .. | 1,132 | 559 | 1,132 | 161 | 965 |
| கன்னியாகுமரி .. .. | .. | 175 | 173 | 130 | 153 |
| கோயம்புத்தூர் .. .. | 2,250 | 1,257 | 1,988 | 856 | [illegible]985 |
| சேலம் .. .. | 1,498 | 695 | 300 | 300 | [illegible]00 |
| நீலகிரி .. .. | 83 | .. | .. | .. | [illegible] |
| பெரியார் .. .. | .. | .. | .. | [illegible] | 1,461 |

V211,31 ( N83
N83.53.2 83
136059
600 008